
# யாழ்ப்பாணத்து மண்வாசனை



# யாழ்ப்பாணத்து மண்வாசனை

வண்ணை தெய்வம்

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ *யாழ்ப்பாணத்து மண்வாசனை* |
| ஆசிரியர் | ➢ வண்ணை தெய்வம் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2003 |
| பதிப்பு விவரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ மேப்லித்தோ |
| நூலின் அளவு | ➢ டெம்மி (14½ x 21½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 264 |
| **நூலின் விலை** | ➢ **ரூ. 100.00** |
| அட்டைப்பட ஓவியம் | ➢ சாய் |
| லேசர் வடிவமைப்பு | ➢ கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் சென்னை - 87. |
| அச்சிட்டோர் | ➢ பி.வி.ஆர். பிரிண்டர்ஸ் சென்னை - 14. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ **மணிமேகலைப் பிரசுரம்** சென்னை - 17. |




## உள்ளே...



| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 00 : | சமர்ப்பணம் - I | 5 |
| 01 : | கவிஞர் கந்தவனம் - *(கனடா) வாழ்த்துரை* | 6 |
| 02 : | திருமதி, பத்மாவதி சீவரட்ணம் - *(கனடா) வாழ்த்துரை* | 7 |
| 03 : | கலாபூஷணம். நவாலியூர் நா, செல்லத்துரை - *(யாழ்ப்பாணம்) வாழ்த்துரை* | 8 |
| 04 : | முல்லை அமுதன் - *(லண்டன்) வாழ்த்துரை* | 11 |
| 05 : | வண்ண வரிகள் - I | 13 |
| 06 : | மண் மறவா மனிதர்களில் சிலர் (செய்தி) | 19 |
| 07 : | ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை | 20 |
| 08 : | தனிநாயகம் அடிகள் | 21 |
| 09 : | கலையரசு சொர்ணலிங்கம் | 22 |
| 10 : | அமரர் ஜீ,ஜீ, பொன்னம்பலம் | 23 |
| 11 : | அமரர் எஸ்,ஜே,வி, செல்வநாயகம் | 24 |
| 12 : | கம்யூனிஸ்ட் மு, கார்த்திகேசன் | 25 |
| 13 : | புலவர்மணி மதுரகவி இளவாலை அமுது - ***லண்டன்*** | 26 |
| 14 : | **தமிழ்த்தூது** தனிநாயகம் அடிகளார் | 27 |
| 15 : | **கலைமாமணி** பெஞ்சமின் **இமானுவல்** - ***பிரான்ஸ்*** | 34 |
| 16 : | **வண்ணை** தெய்வம் - ***பிரான்ஸ்*** | 50 |
| 17 : | யாழ்ப்பாண**த்தில் திருவிழாக்கள்** | 58 |
| 18 : | **புனிதம் நிறைந்த யாழ்நகரின்** நல்லூர் **மண்** | 65 |
| 19 : | **கலைஞர்** ஏ. ரகுநா**தன்** - ***பிரான்ஸ்*** | 69 |
| 20 : | **கலைத்திலகம்** பெஞ்**சமின் வாழ்க** | 73 |
| 21 : | முக**த்தார்** எஸ். யேசு**ரட்ணம்** - ***பிரான்ஸ்*** | 78 |
| 22 : | இளவாலை | 81 |
| 23 : | மண்வாசனைக் **கவிஞர்** விக்கி நவரட்ணம் | 83 |
| 24 : | கவிஞர் மா,கி, கிறிஸ்ரியன் - ***பிரான்ஸ்*** | 88 |
| 25 : | திரு, சிவ. **தணிகாசலம்** - ***லண்டன்*** | 98 |

# உள்ளே...


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 26 : | திருமதி பத்மாவதி - *கனடா* | 103 |
| 27 : | என் இனிய இணுவில் | 104 |
| 28 : | சித்திரை மாதம் | 107 |
| 29 : | திரு.ஆ.க. மாணிக்கம் - *கனடா* | 110 |
| 30 : | அல்வாயூர் | 119 |
| 31 : | கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா - *டென்மார்க்* | 122 |
| 32 : | எங்கள் ஊர் வேலணை | 123 |
| 33 : | திரு. வேலுப்பிள்ளை - *கனடா* | 129 |
| 34 : | திரு. சதாசிவம்பிள்ளை - *கனடா* | 138 |
| 35 : | திருமதி. சுகந்தினி சுதர்சன் - *யேர்மனி* | 146 |
| 36 : | திரு. த. சதீஸ் பிரான்ஸ் | 151 |
| 37 : | திருமதி. விக்னா பாக்கியநாதன் - *யேர்மனி* | 156 |
| 38 : | திருமதி. நளாயினி தாமரைச்செல்வன் - *சுவீஸ்* | 158 |
| 39 : | திருமதி. சசி தவேந்திரன் - *யேர்மனி* | 160 |
| 40 : | திருமதி. விமலாவதி சிவனேசன் - *யேர்மனி* | 162 |
| 41 : | திருமதி. நிரஞ்சலா ரவிதரன் - *நெதர்லாந்து* | 164 |
| 42 : | திரு. இசிதோர் பெர்னாண்டோ - *பிரான்ஸ்* | 168 |
| 43 : | திரு. அகஸ்த்தியர் - *லண்டன்* | 173 |
| 44 : | பஞ்சமர்கள் படைத்த நாவலாசிரியர் | 177 |
| 45 : | அமரர் கிறெகரியின் நினைவில் நனைவோம் | 178 |
| 46 : | யாழ்ப்பாணச் சண்டியர் (க.ந. வேலன்) | 180 |
| 47 : | கீரிமலை (பாவை ஜெயபாலன்) | 186 |
| 48 : | சமர்ப்பணம் - II | 189 |
| 49 : | வண்ண வரிகள் II | 190 |
| 50 : | மண்ணின் பெயர் வரலாறு | 194 |
| 51 : | நான் இறவாதிருப்பேன்! | 263 |
| 52 : | நன்றிகள்! | 264 |




## சமர்ப்பணம்



**அமரர்கள்** : செல்லத்துரை தவவிநாயகம், கிறெகரி தங்கராஜா, **கீழ்க்கரவைப் பொன்னையன், ஆகியோருடன் வண்ணை தெய்வம்,**

**எனது முதலாவது கவிதைத்**தொகுப்பான ``விடிவை நோக்கி'' என்னும் கவிதை நூலை 1992ஆம் ஆண்டு ரஜனி பதிப்பகத்தார் வெளியிட்டனர்.

பாரிஸில் நடந்த அந்த வெளியீட்டு விழா வைபவத்திற்கு கலைஞரும், எழுத்தாளருமான, கீழ்க்கரவைப் பொன்னையன் அவர்கள் தலைமை தாங்க, நடிப்பிசைக்காவலர் திரு. கிறெகரி – தங்கராசா அவர்கள் முதல் பிரதியை விற்பனை செய்துவைக்க, குமார்ஸ் சொப் நிறுவனத்தாரின் தந்தையார் திரு. செல்லத்துரை – தவவிநாயகம் அவர்கள் பிரதியைப் பெற்று சிறப்பித்திருந்தார்கள்.

இன்று அந்த மூவரும் எம்முடன் இல்லை!

அமரர்களாகிப் போன –

திரு. செல்லத்துரை தவவிநாயகம்
திரு. டேவிட் கிறெகரி தங்கராஜா
திரு. கீழ்க்கரவைப் பொன்னையன்

ஆகிய மூவருக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

வண்ணை தெய்வம்

# வாழ்த்து!



கவிஞர் **வி. கந்தவனம்**
கனடா

*புதிய வாசனையிற் பூத்திருந்தாலும்
நிதியம் அன்ன நிகரில்லாச்
சொந்த வாசனையாகிய மண் வாசனையை
எந்த நாளும் மறவாதிருக்கப்
பந்த பாசம் நிலைத்து வளரப்
புத்தகப் பொலிவுடன் பதிந்து தந்த
வித்தகக் கவிஞர் வண்ணை தெய்வத்தின்
இந்த முயற்சி என்றும் பயனுறச்
சிந்தை மகிழ்ந்து வாழ்த்துகின்றேனே!*

அன்புடன்,

**29.10.02** **வி. கந்தவனம்**



# மண் வாசனை வீசட்டும்!

திருமதி சீவரட்ணம் – பத்மாவதி
கனடா

சித்திரைப்பூ சிரிக்கின்றது – இனி
செழுமைகள் கனியட்டும்
தித்திக்கும் என் தமிழே
தேசமெங்கும் முழங்கட்டும்!

வித்தகர்கள் பெருகட்டும் – புது
விடியல் இங்கு மலரட்டும்
நித்தம் வரும் யுத்தங்கள்
நெஞ்சதிரும் வெடிச் சத்தங்கள்
மறைந்தொழிந்து போகட்டும் – நல்ல
மானிடம் தழைத் தோங்கட்டும்!

குறைவில்லா வளம் யாவும் கொண்டு
நல்ல மண் வாசனை வீசட்டும்!
அமிழ்தில் இனிய எம் தமிழ் – இனி
அரியணையில் ஏறட்டும் – எம்
தமிழ்மொழியின் பெருமைகளோ
தரணி எங்கும் பரவட்டும்!
மலர்ந்து வரும் எம் தமிழ் ஈழத்தில் – நல்ல
நறுமணத்துடன் மண்வாசனை வீசட்டும்!

# வாழ்த்துரை

*கலாபூஷணம் – நவாலியூர்*
***நா. செல்லத்துரை** பி.ஏ.,*
*ஆத்திசூடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*



எமது மக்கள் மத்தியில் ஒரு பழமொழி வழக்கத்தில் இருக்கின்றது. அது – உப்பில்லாவிட்டால்தான் உப்பின் அருமை தெரியும், அப்பன் இல்லாவிட்டால்தான் அப்பனின் அருமை தெரியும் என்பார்கள்.

இது எவ்வளவு தூரம் உண்மை என்பதற்கு இந்த மண் வாசனை நூலும் ஒரு நல்ல உதாரணம்.

தம்பி வண்ணை தெய்வத்தை நான் இன்று நேற்று அறிந்தவன் அல்ல! சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னரே அவரை ஒரு கலைஞராக சந்தித்திருக்கின்றேன்.

நான் திருமணம் செய்து கொண்டதன் பின்னர் நாங்கள் இருவரும் ஒரே ஊருடையவர்களாக இருந்தபோதும், நான் பல வருட காலம் கண்டியில் கடமைபுரிந்ததால் எனது பக்கத்து வீட்டுக்காரனுடன் கூட அதிகம் பழக்கம் இல்லாதவனாக இருந்திருக்கின்றேன். ஆனாலும் கலைஞர்கள், எழுத்தாளர்களுடன் நெருக்கம் குறைந்ததில்லை. எனது ''தாய்நாடு'' என்னும் நாடகத்தில் இவர் நடித்ததின் மூலம் அந்த நெருக்கம் அதிகமாயிற்று என்று சொல்லலாம்.

அந்த நாட்களில் இவரே எழுதி சில நாடகங்களை இயக்கியிருக்கின்றார். ''சாட்டை'' என்றொரு சிறு சஞ்சிகையில் இவரின் எழுத்துக்களைப் படித்திருக்கின்றேன். அந்தச் சஞ்சிகையில் ஆசிரியர் வண்ணை தெய்வேந்திரம் என்று தனது பெயரை பதியவைக்கும் போதே தான் பிறந்த மண்ணின் மீது இவர் கொண்டுள்ள பற்றுதலை என்னால் புரிய முடிந்தது.



இந்த மண்வாசனை என்ற நூலினில் புலம் பெயர்ந்தாலும பிறந்த மண்ணின் மீது கொண்ட பாசம் மறவாத இதயங்கள் எத்தனையோபேர் இருக்கின்றார்கள் என்பதை என்னால் உணர முடிகின்றது.

இந்த நூலில் தாங்கள் பிறந்த மண்ணின் சிறப்புக்களை எழுதியவர்களை மட்டும் நான் கூறவில்லை. இவர்களைப் போல இன்னும் ஏராளமானவர்கள் வெளியில் சொல்ல, அல்லது எழுதும் வாய்ப்புகள் இல்லாவிட்டாலும் பிறந்த மண்ணைக் காதலித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை உணர்கின்றேன்.

இந்தப் பாசம் நீடிக்க வேண்டும். இந்த உறவு தொடர வேண்டும். இந்த அன்பு நிலைக்க வேண்டும்.

நாங்கள் எல்லோரும் மீண்டும் குழந்தைகளாகமாறி பிறந்த மண்ணிலே புழுதி அளைந்து விளையாட வேண்டும்.

இதுபோன்ற இன்னும் பல நூல்கள் வரவேண்டிய அவசியம் எங்கள் மக்கள் மத்தியில் இருக்கின்றது. சில வேளை இனி வருகின்ற நூல்களில் இன்னும்பல வரலாற்றுத் தகவல்கள் இணைக்கப்பட்டு அதிக தகவல்களுடன் யாராவது படைத்தால் அது இன்னமும் வரவேற்கப்பட வேண்டியதே.

மின்சார விளக்குகள் வந்தபின்னர் குப்பிவிளக்குகளைப் பார்த்து இது விளக்கு இல்லை என்று சொல்லிவிட முடியாது. அந்த குப்பி விளக்கிற்கும் ஒரு வரலாறு இருக்கின்றது அல்லவா? வண்ணை தெய்வத்தின் மண்வாசனை நூலும் அந்த வரலாறுகளின் ஒரு பதிவாகவே இருக்கும்.

இந்த நேரத்தில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது உறவுகளுக்கு நான் சொல்ல ஆசைப்படுவது –

நீங்கள் பிறந்த மண்ணின்மீது நீங்கள் கொண்டுள்ள காதல் திருமணத்தில் மலரும்.

நீங்கள் காதலித்துக் கொண்டிருக்கும் மண்ணில் விரைவில் நீங்களும், நாங்களும், ஒரே குடும்பமாக இணைந்து வாழ்வோம். அந்த நம்பிக்கை எனக்கிருக்கின்றது. அப்பொழுது மண்வாசனை என்னும் தலைப்பில் இன்னொரு புதிய வரலாறு எழுதுவோம்.

இப்பொழுது இந்த மண்வாசனை நூலை உருவாக்கிய தம்பி வண்ணை தெய்வத்திற்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்,

நவாலியூர் **நா. செல்லத்துரை**



# வாழ்த்துரை

## முல்லை அமுதன்

*லண்டன்*



முல்லை அமுதனுடன் **வண்ணை தெய்வம்**

குத்து, கிழி, தூக்கி எறி... வேர் மட்டும் இன்னமும் உன்னிடமே இருப்பது போல...

புலம் பெயர் சூழலில் இயந்திர நெருடலில் குளிர் முட்களின் வலிகளுக்கு மத்தியிலும் மண்வாசனையை இன்னமும் சுவாசித்துக் கொண்டிருப்பதால்தான் என்னைப் போல மண்ணை நேசித்துக் கொண்டிருக்கும் திரு வண்ணை தெய்வத்தின் முயற்சி பாரியதுதான். வாழ்த்தவும் வேண்டும், பாராட்டவும் வேண்டும்.

திசை நொறுங்கி திக்கெட்டும் சிதறுண்டு போன நம் இனத்தின் நெஞ்சிலும் மண்வாசனை தொட்டுச் செல்ல வேண்டுமென்பது இவரின் முயற்சியில் தெரிகின்றது.

இலக்கியத்தில் புதிய முயற்சி இது.

நான் அறிந்த வரையில் எனது நூலகத்தில் இருக்கும் கோப்பாய், அக்கரைப் பற்று வரலாறு, புத்தளம் பற்றிய நூல், காரைநகர் வரலாறும் தொன்மையும், வன்னி மான்மியம், யாழ்ப்பாண மான்மியம், பண்ணாகம் மான்மியம், மட்டக்களப்பு மான்மியம், திருக்கோணமலை வரலாறு, யாழ்ப்பாண வரலாறு, போன்று மண் வாசனை சொல்லும் இந்நூல் பகுதி ஒன்றுதான்.. பல பகுதிகளாகவும் பல பதிப்புகளாகவும் வர வேண்டும்.

வாழ்ந்த மண்ணைப் பற்றிய பூர்வீகம் தெரிந்தவர்கள், எங்கள் மண்ணின் சிறப்புகள் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என விரும்புபவர்கள் அனைவரும் இந்த பாரிய முயற்சிக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். உங்களின் துரித ஆதரவுடன்தான் அடுத்த மண்வாசனை நூலும் தங்கள் கரங்களில் தவழும்.... நெஞ்சம் கமழும்.

நன்றி,

**முல்லை அமுதன்**

லண்டன்
10.10.02



# வண்ண வரிகள் - I

**நாம்** விதைக்கின்ற விதைகள் எல்லாம் விருட்சங்கள் ஆகிவிடுவதில்லை.

ஆனால் இங்கு நான் விதைத்திருக்கின்ற ''மண்வாசனை'' என்கின்ற இந்த விதை நிட்சயம் விருட்சமாக உருவெடுக்கும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கின்றது.

நாம் பிறந்து வளர்ந்து மண்ணின் நறுமணங்களை எமக்குப் பின்னால் வரும் எமது சந்ததியினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு இலட்சியமாகவே கருதி வருடக் கணக்காக எடுத்த முயற்சிதான் ''மண்வாசனை'' என்னும் இந்த நூல்.

நான் எண்ணியவை யாவும் முழுமையாக இந்த நூலில் பதியவைக்க முடியவில்லை. ஆதலால்தான் இந்த நூலுக்கு பாகம் ஒன்று என முத்திரை குத்தியிருக்கின்றேன். அடுத்து வரும் பாகங்களில் ''மண்வாசனை கலைஞர்கள்'' ''மண் மறவா மனிதர்கள்'' ''மண்ணின் மரகதங்கள்'' என பல வாசங்கள் விரிந்து நிற்கும்.

வேலிகளற்ற மாந்தோப்பில் கைக்கெட்டிய தூரத்திலேயே குலை, குலையாக பிஞ்சுகள், காய்கள், கனிகள், என பலவகையாக தொங்குவதைப் போல இந்த முதல் பாகத்தில் 23 பேர் தாங்கள் புழுதி அளைந்து விளையாடி, தாம் வளர்ந்து வந்த மண்ணை ஒரு புதுமணப் பெண்ணை அலங்கரிப்பதைப் போல அழகுபடுத்தியிருக்கின்றார்கள்.

எழுத்து என்பது ஊற்றெடுத்து, வெள்ளமாக பெருக்கெடுத்து பின்னர் வற்றிப் போகின்ற நீரைப் போன்றது அல்ல! இந்தத் தொகுதியில் எழுதியிருக்கின்ற பலருக்கு இது திருமணத்தின் முதலிரவுக் காதலைப் போன்றது. இன்னும் சிலர் பல பிள்ளைகளைப் பெற்றெடுத்த குடும்பத் தலைவர்களைப் போல தங்கள் எழுத்துக்களில் வார்த்தை ஜாலங்களைக் காட்டியிருக்கின்றார்கள்.

ஆனால் இவர்கள் அனைவரும் இந்த நூலுக்கு வாசம் கொடுத்தவர்கள் என்ற காரணத்தால் எனது மதிப்பிற்குரியவர்களாகவும் இருக்கின்றார்கள்.

காலத்தின் வேகத்திற்கு தாக்குப்பிடித்துக் கொண்டு இன்னமும் காலத்தோடு பயணம் செய்வது எது? பதிவுகள்! உண்மையின் பதிவுகள்!! எங்கள் மண்ணின் நினைவுகளை பதிவுகளாக்குவதில் பங்களித்த அந்த இதயங்களுக்கு எனது நன்றிகள்.

உண்மைகளைப் பதியவைப்பதில் அப்படி என்ன திறமை இருக்கின்றது? கற்பனைக்கு அங்கு என்ன வேலை இருக்கின்றது? இப்படியெல்லாம் யாராவது கேட்கலாம்!

வீரத்தின் சின்னங்களையும், வரலாற்றின் நினைவுகளையும் கல்வெட்டுக்களைப் போல அழியாமல் சுமந்து நிற்பது இந்த பூமிப் பந்து அல்லவா!? அந்த மண்ணின் சிறப்புக்களை எழுதுவதற்கு கற்பனை எதற்கு? மண்ணின் சிறப்புக்களை எழுதுவதற்கு கற்பனை வந்தால் பூக்களுக்கு வர்ணம் கொடுப்பது போல பொருத்தமற்றதாக இருக்கும்.

ஒரு நாட்டை இன்னொரு நாடு போரினால் வென்று விடலாம்! ஆனால் அந்த நாட்டு மண்ணின் சிறப்புக்களை, அந்த மக்களின் கலாச்சாரங்களை அவர்களால் அழித்து விட முடியுமா? ஆபிரிக்காவை ஐரோப்பியர்கள் நாநூறு ஆண்டுகளாக தங்களது ஆதிக்கத்தில் வைத்திருந்ததாக வரலாறு



கூறுகின்றது! இருந்தாலும் ஆபிரிக்க மக்களின் கலாச்சாரத்தை ஐரோப்பியர்களால், மாற்றிவிட முடியவில்லை! அழித்துவிட முடியவில்லை!! இன்று ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்துவரும் ஆபிரிக்க மக்கள் வீதிகளில் நடமாடும்போதும்கூட தங்கள் நாட்டு கலாச்சார உடைகளுடனேயே நடமாடுகின்றார்கள். இதன்மூலம் அவர்கள் ஐரோப்பிய மக்களுக்கு சொல்லிக் கொள்வது — நாநூறு ஆண்டுகள் என்ன நாலாயிரம் ஆண்டுகள் ஆனாலும் தேசத்தை நேசிக்கும் எந்த மக்களும் தங்கள் கலாச்சாரங்களை மறந்து விட மாட்டார்கள்; இழந்துவிட மாட்டார்கள் என்பதுதான்.

இத்தாலியர்கள் தங்கள் மொழியை இசை மொழி என்கின்றார்கள். ஆங்கிலேயர்கள் தங்கள் மொழியை வணிக மொழி என்கின்றார்கள். பிரெஞ்சுக்காரர்களோ தங்கள் மொழியை காதல் மொழி என்கின்றார்கள். இவைகளுக்கெல்லாம் எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல எங்கள் தமிழ்மொழி.

ஒரு காலத்தில் ஆங்கிலேயர்கள் சொல்லிக் கொள்வார்களாம் எங்களுடைய சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்த்தமிப்பதே இல்லை என்று. நாங்களும் அதேபோல சொல்லிக் கொள்வோம் இன்று உலகம் முழுவதும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற மொழி எது? என்று கேட்டால், அது எங்கள் தமிழ் மொழி என்று பெருமையாகச் சொல்லுவோம்.

இன்று எமது மண்ணில் நகரங்கள் மட்டுமல்ல ஏராளமான கிராமங்கள்கூட விளையாட்டு மைதானங்களைப் போல யுத்தத்தினால் சிதையுண்டு தரைமட்டமாகிப் போயிருக்கலாம்! ஆனால் அந்த மண்ணின் வரலாறுகள், நினைவுகளை, அழித்துவிட முடியுமா? இன்று எங்கள் தேசத்தின் சில பாகங்கள் சேறும் சகதியுமாக நாறிக் கொண்டிருந்தாலும் அந்த மண் தனது காலத்தில் வீசிய

நறுமணங்கள் எங்கள் நினைவுகளை விட்டு அகன்றுவிடப் போவதில்லை. அதற்கு ஒரு சான்றாக இந்த மண்வாசனை நூலும் இருப்பதினால். மண்ணை நேசிக்கும் அனைவருமே மகிழ்ச்சியடைவார்கள்.

எங்கள் மண்ணின் நறுமணங்களை இதற்கு முன்னர் ''நனவிடை தோய்வோம்'' என்னும் பெயருடன் எங்கள் மண் மறவாத எழுத்தாளர்களில் ஒருவரான எஸ்.பொ. அவர்களும், ''மலரும் நினைவுகள்'' என்னும் பெயரில் யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியலை எழுத்தாளர் வரதர் அவர்களும் மிகச் சிறப்பாக எழுதியிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் எழுதிய விடயங்களே வேறு. அவர்கள் தங்களது பார்வையில் அன்றைய யாழ்ப்பாணத்தை, யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்திருந்தார்கள். ஆனால் இது மண்ணின் சிறப்புக்களையும், வரலாறுகளையும் பதிய வைத்திருக்கின்றது.

மண்ணைத் தொடாத நதிகள் கடலைச் சென்றடைய முடியுமா? அது போல மண் வாசனை இல்லாத எழுத்து என்பது வேரறுக்கப்பட்ட மரங்களைப் போன்றது. இங்கு எழுதியிருப்பவர்களில் பெரிதாகப் பள்ளிப் படிப்பை அறியாத பத்மாவதி அம்மா அவர்களுடைய சந்தத் தமிழ் மண்ணின் சிறப்புக்களைப் பற்றிக் கூறும் போது தமிழ் சாகசம் புரிகின்றது.

கவிஞர் மா.கி. கிறிஸ்றியன் அவர்களின் எழுத்துக்களோ வாலிப வேங்கைகளின் தோள்களைப் போல வைரம் பாய்ந்து நிற்கின்றது. அது போல வேலுப்பிள்ளை ஐயா அவர்களின் எழுத்தின் ஒவ்வொரு வரிகளும் கன்னிப் பெண்களின் இடைகளைப் போல கவர்ச்சியாக கச்சிதமாக இருக்கின்றது. எங்கள் முகத்தார் யேசுரட்ணம் அண்ணன் அவர்கள் கிராமத்துத் தமிழில் எழுதி அரங்கேற்றிய பல நாடகங்களை நேரில் பார்த்திருக்கின்றேன், வானொலிகளில் கேட்டிருக்கின்றேன். அந்தத் தமிழை ரசிக்கும் போது, சுவைக்கும் போது காற்றுக்கு, தென்றல் தமிழ் சொல்லிக் கொடுப்பது போன்றிருக்கும். இங்கு அவர் எழுதிய மண்வாசனை பூக்கடை ஒன்று நந்தவனமாகியிருப்பது போலத் தோன்றுகின்றது.



இப்படியாக ஒவ்வொருவருடைய எழுத்துக்களிலும் தனித் தனிச் சிறப்புக்கள் குவிந்தே கிடக்கின்றன.

இன்று உலகெங்கும் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள் அடுத்த நாட்டு அரசியலையும், சங்கதிகளையும் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருக்கின்றோம்! ஆனால் தாய் மண்ணில் வாழ்ந்த காலங்களில் பக்கத்து ஊரின் சிறப்புக்களைப் பற்றிக்கூடத் தெரியாதவர்கள் எம்மத்தியில் ஏராளம்பேர் உண்டு. அவர்களுக்கெல்லாம் இந்த ''மண்வாசனை'' தேனமுதம். இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கின்ற புதிய பரம்பரையினருக்கோ இந்த நூல் பெரிய பொக்கிசமாகவே இருக்கும். இது எனது நம்பிக்கை வார்த்தைகள் மட்டுமல்ல; சத்தியவாக்கும் கூட!

வாசனையும், வர்ணங்களும் நிறைந்த பலவிதமான பூக்களைப் பறித்தெடுத்து மாலை தொடுப்பதைப் போல பல கரங்களின் உதவியுடன் இந்த ''மண்வாசனை'' என்னும் நூல் மாலையாகத் தொடுக்கப்பட்டிருக்கின்றது. பார்த்துவிட்டுச் சொல்லாமல், படித்து விட்டு இந்த மாலையின் அழகை எமக்கு எடுத்துச் சொல்லுங்கள். அடுத்து வரும் பாகங்களுக்கு அவை விழுதுகளாக இருக்கும்.

அன்புடன்

**வண்ணை தெய்வம்**

## திரு. வண்ணை தெய்வம் எழுதி வெளிவந்த ஏனைய நூல்கள்

1. *விடிவை நோக்கி* - கவிதைத் தொகுதி, ரஜனி பதிப்பகம் பாரீஸ், 1992
2. *கலைப் பாதையில் இவர்* - நடிப்பிசைக் காவலர் கிறெகரி தங்கராசா அவர்களின் கலைத்துறை வரலாறு, ரஜனி பதிப்பகம் பாரீஸ், 1993
3. *கதாநாயகன்* - கலைமாமணி பெஞ்சமின் இமானுவல் அவர்களின் கலைத்துறை வரலாறு, ரஜனி பதிப்பகம் பாரீஸ், 1994
3. *கலைத்துறையில் இரு மலர்கள்* - திருமதி நீலாட்சி, திருமதி வளர்மதி துரைஸ் ஆகியோரின் கலைச்சேவையை பாராட்டி நந்தினி பதிப்பகம் பாரீஸ், 1995
4. *விடிவை நோக்கி* (இரண்டாம் பதிப்பு), கவிதைத் தொகுப்பு, ரஜனி பதிப்பகம் பாரீஸ், 1997
5. *கொந்தல் மாங்காய்* - உருவகக் கதைகள், மணிமேகலைப் பிரசுரம் சென்னை, 1999
6. *கலைப்பாதையில் கிறெகரி தங்கராசா* (இரண்டாம் பதிப்பு), நடிப்பிசைக் காவலர் கிறெகரி தங்கராசா அவர்கள் அமரத்துவம் அடைந்த பின்னர் வெளியிட்ட இரண்டாம் பதிப்பு, ரஜனி பதிப்பகம் பாரீஸ், 2000
7. *பொல்லாத மனிதர்கள்* - சிறுகதைத் தொகுப்பு, மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 2000
8. *வானலைகளில் எங்கள் கவிதைகள்* (பாகம் 1), பாரிஸ் A.B.C தமிழ் ஒலி வானொலியில் கவிஞர்கள் சங்கமத்தில் கவிபாடிய கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு, மணிமேகலைப் பிரசுரம், 2001
9. *வானலைகளில் எங்கள் கவிதைகள்* (பாகம் 2), பாரிஸ் A.B.C தமிழ் ஒலி வானொலியில் கவிஞர்கள் சங்கமத்தில் கவிபாடிய கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு, நந்தினி பதிப்பகம் பாரீஸ், 2001
10. *எடுத்துக்காட்டாக விளங்கிய நாகேந்திரம் குடும்பம்* - வண்ணை தெய்வம் அவர்களின் குடும்ப வரலாறு, மணிமேகலை பிரசுரம் சென்னை, 2002

*வெளிவர உள்ள நூல்*

**தாயக தரிசனம் :** இரண்டு வயதில் தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து இருபது வயதில் மீண்டும் தாயகம் சென்று திரும்பிய கௌதமன். தெய்சியா ஆகிய இருவரினதும் தாயக தரிசன நிகழ்வுகளின் தொகுப்பு (லண்டனில் இருந்து வெளிவரும் புதினம் பத்திரிகையில் பதினெட்டு வாரங்களாக தொடராக வந்த கட்டுரைகளின் தொகுப்பு)



# யாழ்ப்பாணத்து மண்வாசனை

## மண் மறவா மனிதர்களில் சிலர்...

*இன்று எம் தாய்மண் காப்பதற்காய் ஒரு தர்ம யுத்தமே நடந்து கொண்டிருக்கின்றது. பல ஆயிரக்கணக்கான உயிர்கள் இந்த வேள்வியிலே அந்த மண்ணுக்கே விதையாகி விட்டார்கள். அந்த மண்ணும், அம் மண்ணில் வாழ்கின்ற மக்களும்மட்டுமல்ல உலகெங்கும் வருந்தி வாழ்கின்ற மனிதத்தை நேசிக்கும் நல்ல இதயங்களும் மறந்து விடப் போவதில்லை.*

*அதே போன்று எமக்கு முந்திய பரம்பரையில் தோன்றி, எமது மக்களுக்காக, மொழிக்காக, கலை, கலாச்சாரங்களுக்காக வாழ்ந்து மடிந்த சில மனிதர்களை மறந்து விடாமல் இருப்பதற்காக அவர்களின் உருவப்படங்களை இங்கு பதிவு செய்துள்ளோம்.*

*இவர்கள் தாங்கள் வாழ்ந்த காலங்களில் மக்களால் மதிக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்தார்கள். இன்னும் மறக்கப்பட முடியாதவர்களாகவே இருக்கின்றார்கள். நாளைய எமது சந்ததியினர்களும் தெரிந்து கொள்ளப்பட வேண்டியவர்களும் கூட.*



# ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

பதினெட்டாம் நூற்றாண்டில் ஈழத்திருநாட்டில் பிறந்த மகா புலவர் கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள்.

ஆசுகவி என்னும் பட்டத்திற்கு உரியவரான இவர் கவிஞர் மட்டுமல்ல; உன்னத உரைநடை கர்த்தா. அஞ்சாமை மிக்க பத்திரிகையாளர். சிறந்த சரித்திர ஆய்வாளர். உயர்ந்த சைவத் தொண்டர். ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, மலேயா போன்ற தேசத்துப் பெரியார்களாலும் ''வித்தகர்'' என பாராட்டப்பட்டவர்.

'சுதேச நாட்டியம்' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து நடாத்தி வந்த இவர் எழுதிய ''யாழ்ப்பாண வைபவ கௌமுகி'' என்ற நூல் மிக அரிதாகவே கிடைக்கின்றது. கதிரமலைப் பேரின்பக் காதல், மேலைத் தேய மதுபான வேடிக்கைக் கும்மி, உரும்பிராய் கருணாகர விநாயகர் தோத்திரப் பாமாலை ஆகியன இவர் எழுதிய நூல்களாகும். பொருளழகும், சொல்லழகும் மிக்கவை. இவரைப் பற்றிய சிறப்புக் கட்டுரை ஒன்றையும் இந்நூலில் பதிவு செய்திருக்கின்றோம்.

✪



# தனிநாயகம் அடிகள்



தமிழ் அன்னையே கைஅசைத்துப்
பாராட்டக்கூடிய பணியைச் செய்தவர்
தவத்திரு தனிநாயகம் அடிகள்
திசைகள் எல்லாம் தமிழர் சிறப்புக்களை விதைத்தவர்
உலகத் தமிழ் மாநாட்டின் சிற்பி
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்
என்று பாரதி கண்ட கனவை நிறைவு
செய்யத் துடித்த துறவி.

இவர்பற்றி பல்கலைமணி இளவாலை அமுது அவர்கள் எழுதிய டுரை உள்ளே...

✪



## கலையரசு சொர்ணலிங்கம்

ஈழத்தின் நாடகத்தந்தை என அனைவராலும் மரியாதையாக மதிக்கப்படும் சொர்ணலிங்கம் ஐயா அவர்கள் நவாலியை பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவருடன், கலைப் பணியாற்றியவர்களும், பழகியவர்களும் இன்று மிகச் சிலரே எம் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

நாடகத் தந்தை கலையரசு அவர்களை எங்கள் மண்ணும், மக்களும் மறந்துவிடக்கூடாது என்பதை மனதில் கொண்டு இவரின் புகைப்படத்தை இங்கு பதிவு செய்துள்ளோம்.

இவரைப் பற்றிய கட்டுரை ஒன்றும் உள்ளே பதிவாகியிருக்கிறது.

✪





## ஜீ.ஜீ. பொன்னம்பலம்

சட்டங்களைச் சதிராடிய மன்னனிவன்!
சாட்சிகளைச் சிதறடிப்பதில் விண்ணனிவன்
சட்டங்கள் பொன்னனைக்கண்டு பயந்தது
சட்டசபையோ பொன்னனின் பேச்சால் நிமிர்ந்தது!

ஆங்கிலம் பொன்னனின் நாக்கில் சதிராடியது!
அதுவே பொன்னம்பலத்தின் பலமாகியது!
ஐம்பதுக்கு ஐம்பதே தீர்வென்று முழக்கமிட்டான்
ஐ.நா. வரை சென்று இதற்காகக் குரல் கொடுத்தான்!

தமிழன் என்று சொல்லடா!
தலை நிமிர்ந்து நில்லடா!
இதனை தாரக மந்திரமாய் கொண்ட தலைவன்
தமிழர்களின் பலமாய் நின்ற தலைவன்!

உலகம் வியந்த சட்ட மன்னன்
தமிழ் மண் மறவா காங்கிரஸ்த் தலைவன்
ஜீ.ஜீ. பொன்னம்பலம்!



## எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

தமிழினத்தின் மறுமலர்ச்சிக்காய் வந்தார் தந்தை
தமிழீழக் கோரிக்கையைத் தந்தார் தந்தை

செல்வா டட்லி ஒப்பந்தம்!
செல்வா பண்டா ஒப்பந்தம்!
எல்லாம் சுயாட்சிக் கோரிக்கைதான்!
செல்வா கேட்டது சமஷ்ட்டிதான்!


தமிழினம் மறவா மா, மனிதர் தந்தை
தமிழர்கள் மனங்களில் நிறைந்தவர் தந்தை
தள்ளாடும் வயதிலும் தாம் கொண்ட கொள்கையில்
தள்ளாட்டம் இல்லாமல் வாழ்ந்தவர் தந்தை.

ஜனநாயகம் காக்க நாயகமாய் இருந்தார்
அகிம்சை காத்த நாயகனாய் வாழ்ந்தார்.
தந்தை செல்வா
தமிழரசுக் கட்சியின் தலைவர் மட்டுமல்ல!
தமிழீழத்தின் தேசத்தந்தையும்
தந்தை செல்வநாயகமே!

✪



## கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்



சமத்துவம், சோஷலிசம், கம்யூனிசம் என்று பலர் வாய் நிறைய பேசுவார்கள்! வாய் கிழியப் பேசுவார்கள்! ஆனால் குறைவாகப் பேசி, பேசியதை பேசியபடியே வாழ்ந்தும் காட்டியவர் திரு. மு. கார்த்திகேசன் மாஸ்ற்றர் அவர்கள்.

இவர் அரசியலினால் எந்தப் பதவியையோ, எந்த விதமான பயன்களையோ பெற்றவர் அல்ல! ஆனால் இவரை குருவாக மதித்து அரசியல் படித்த பலர் நல்ல பயன்களை அடைந்திருந்திருக்கின்றார்கள்.

சமத்துவத்தின் நாயகனாய்
சமூக நீதிக் காவலனாய்
சகலருக்கும் தோழனாக வாழ்ந்த
எங்கள் கார்த்திகேசன் மாஸ்ற்றர்
எங்கள் மண்மறவாத மா மனிதர்களில் ஒருவர்.

✪

# மதுரகவி - இளவாலை அமுது



அமுது ஐயாவிற்கு அறிமுகம் தேவையில்லை. எங்கள் மண்ணில் வாழ்ந்து மறைந்த தமிழ் அறிஞர்களுடன் பக்கத்தில் இருந்து பார்த்துப் பேசி பழகியவர்களில் மிகக் குறிப்பிடத்தக்க சிலரே இன்று எம்மோடு வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களில் அமுது ஐயாவும் ஒருவர்.

இவர், மாதா அஞ்சலி, நெஞ்சே நினை, காக்கும் கரங்கள், இவ்வழிச் சென்ற இனிய மனிதர்கள், அமுதுவின் கவிதைகள், அன்பின் கங்கை அன்னை திரேசா, மடுமாதா காவியம், ஆகிய நூல்களை எழுதியிருக்கின்றார்.

மடுமாதா காவியம் நூலுக்காக, புனித பாப்பரசர் அவர்கள் பாராட்டுப்பத்திரம் வழங்கி கௌரவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய தமிழ்ப்புலமைக்காக அண்மையில் பாப்பரசரிடம் இருந்து மிகப்பெரிய விருது ஒன்று (செவிலியர்) கிடைத்திருக்கின்றது. விருதுக்கு நிகரான இந்த விருது அறுபது வருடங்களுக்கு பின் இரண்டாவது தடவையாக ஒரு தமிழருக்கு கிடைத்திருக்கின்றது.

தற்பொழுது அமுது ஐயா அவர்கள் -

லண்டனில் இருந்து E.K. ராஜ கோபால் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் புதினம் பத்திரிகையில் இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் என்னும் தலைப்பில் தனது மனதில் நிற்கும் மனிதர்களைப் பற்றி எழுதி வருகின்றார். தமிழறிஞர் தனிநாயகம் அடிகளாரைப் பற்றி அமுது ஐயா அவர்கள் எழுதிய இந்தக் கட்டுரையை இந்நூலில் பதிய வைப்பதில் பெருமைப்படுகின்றோம். இந்த இனிய மனிதருடன் பழகும் வாய்ப்புக் கிட்டியது எனக்குக் கிடைத்த பாக்கியம்.

✪



# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்

யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த தமிழ் மேடை, பரமேஸ்வராக் கல்லூரி! இன்று அந்த மண்ணிலேதான் யாழ் பல்கலைக் கழகம் வேர்விட்டு எழுந்து விருட்சமாகி நிற்கிறது.

அடிகளாரே!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு உங்களுடைய தமிழ்ப்பணி என்ற தேர் புறப்பட்டு, அந்த மேடையில் தோன்றியது!

ஆயிரக் கணக்கான கண்கள் இமை மூட மறந்து உங்களையே உற்றுப் பார்த்தன.

வெங்கல நாதம் போன்ற குரல், கூச்சம் அறியாத பேச்சு, முக வசீகரம், சொல்லழகு, கருத்துக்குவியல், பல மொழி அறிவு, பல்வேறு நாடுகளுக்கும் சென்ற அனுபவம் எல்லாம் உங்கள் கன்னிப் பேச்சு குருத்துகள் விட்டன!

மறக்க முடியாத வாசகங்கள் வாயால் உதிர்ந்தன.

ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும்,

இலத்தின் சட்டத்தின் மொழி என்றும்,

கிரேக்கம் இசையின் மொழி என்றும்,

ஜேர்மன் தத்துவத்தின் மொழி என்றும்,

பிரெஞ்சு தூதின் மொழி என்றும், கூறுவது ஒரு புடை ஒக்குமெனின் தமிழ் இரக்கத்தின் மொழி என்று கூறுவது இனிது பொருந்தும்.

பக்தியின் மொழி என்று கூறலுமாம்.

இரக்கமும், பக்தியும் மனம் உருகுவதால் தோன்றும் பண்புகளெனக் கண்டு கொள்க.

தமிழ் இரங்குவது போல வேறெம்மொழிகளிலும் இரங்குவது அரிது.

இதைக் கேட்ட காதுகளில், தேன் வெள்ளம் பாய்ந்தது.

கைதட்டிய ஓசையில் கட்டிடம் அதிர்ந்தது.

இந்தப் பேச்சு 1951இல், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் இடம்பெற்றது. அவ்வேளை தலைமை தாங்க வேண்டிய சொல்லின் செல்வர் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை மேடைக்கு வரத் தாமதமாயிற்று. எனினும் அவர் மேடையில் தோன்றி தனிநாயகத்துக்கு ஒரு சபாநாயகம் தேவையில்லை என்றதும், சபை ஆரவாரத்தில் குலுங்கியது.

தொடக்கத்தில் கலை பாலம் கட்ட முனைந்த பெரியோர் பலருடன் யானும் இந்த நிலத்துக்கு வந்துள்ளேன். அன்று சேது என்னும் அணை கட்ட உதவிய சிறு அணிலைப் போல, சங்க இலக்கியம் என்ற தண் கடலில் மூழ்கி, ஆராய்ச்சித் துறை என்னும் அழகிய கரையின் மணலிலே புரண்டு, என்மீது அரிதாய் ஒட்டிய சிறு மணல் மணிகளை இங்கே சிதற விரும்பினேன்! என்று உங்கள் பேச்சு ஆரம்பமாகியது. இது கம்பனின் அவை அடக்கம்போல, களிப்பூட்டும் உவமையாகும்.

பல நூற்றுக்கணக்கான தமிழ் நெஞ்சங்கள், உங்கள் உரையை அன்றுதான் முதன்முதலில் கேட்டன.

இவன் இதற்கு முன்னரும் உங்கள் தேன் ஒலியைக் கேட்டு சிந்தையைப் பறிகொடுத்தவன்.

நீங்கள் பிறந்த ஊர் நெடுந்தீவு. ரோமாபுரியில் உயர் படிப்புக்களை நிறைவேற்றிக் கொண்டு, குருப்பட்டம் என்னும் திருப்பட்டம் பெற்ற பின், சொந்த ஊரில் கால் வைத்தீர்கள்.

அங்கே அமைந்த அழகுப் பந்தலில் புன்னகை பொங்க எழுந்து நின்று நீங்கள் உரைத்தவை, இலங்கையின் நெஞ்சுக்குச் சொன்ன நீதி வாசகங்கள்.



சில ஆண்டுகளில் பின்னர், பண்டாரநாயக்காவுக்கு நீங்கள் எழுதிவெளியான பகிரங்கக் கடிதம், அவர் மகள் சந்திரிக்காவின் கண்ணைக் கூடப் பறித்து விட்டதெனலாம். நிற்க,

நெடுந்தீவின் பெரு விழாவில் ஒரு வாழ்த்துமடல் அளித்தார்கள். அதிலே நெடுந்தீவின் புற உருவப் படத்தை வரைந்து, கரையோரமாக நெடுந்தீவின் பசுக்கூட்டங்கள், குதிரைக் கூட்டங்கள், வெடியரசன் கோட்டை, ஆலயங்கள், காடுகள், எல்லாம் அழகு மயமாக வரையப்பட்டு இருந்ததை மறக்க முடியவில்லை.

சித்திரமேடை மாணிக்கத்தம்பி என்பாரின் கைவரிசை அது! அதில் வரைந்த வாசகங்களை முத்துப் போல, இவன் கையே எழுதியிருந்தது.

பிரான்ஸிஸ் சேவியர் என்பதுதான் உங்களது இளமைப் பெயர்.

நீங்கள் தமிழ்ப் பணியில் சிறப்புற்று இருந்தாலும் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றிருக்கவில்லை.

யாழ், சம்பத்திசிரியார் கல்லூரியில் கற்று வந்த நாட்களில், ''ஆங்கிலத்தில் பேசு!'' என்று சுவர்களுக்கும், தூண்களுக்குமே கட்டளையிடப் பெற்றிருந்தது. எனவே, உங்கள் தமிழ் மொழிப் பற்றின் வேர்களுக்கு இளமையில் தண்ணீர் வார்க்கப்படவில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், தமிழ் வெள்ளத்தில் புரண்டீர்கள்!

ரோமாபுரியில் 43 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களோடு கற்று வந்தபோது, நாடு இனம் மொழி என்பவற்றில் அளவற்ற பற்றுக் கொண்டதாக நீங்கள் குறிப்பிட்டிருப்பது உண்மையே!

ரோமாபுரியில் வீரமாமுனிவர் கழகத்தைத் தொடக்கி, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்!'' என்ற தமிழர் பண்பாட்டுக்கு அத்திவாரமிட்டீர்கள்.

''தமிழன் தன் மொழியைக் காதலிப்பது போல, வேறு எவரும் தம் மொழியைக் காதலிப்பதில்லை. தமிழ்ப் புலவர் தம் மொழியைப் போற்றுவது போல வேறு எந்த இலக்கியத்திலும் யாரேனும் தம் மொழியைப் போற்றி இருப்பதைக் கண்டிலேன்!'' என்று நீங்கள் கூறுவது ஆராய்ச்சியில் கடைந்து வந்த அமுதங்களன்றோ!

உலக அண்டங்களில் நீங்கள் கால் பதியாத நாடுகள் இல்லை. 47 பல்கலைக் கழகங்களில் உரையாற்றி, ''மேல் நாடுகளில் வெளி வந்த இந்திய இலக்கிய வரலாற்று நூல்களில் தமிழ் இலக்கியங்கள் பற்றிய கருத்து எதுவும் இல்லை; ஒரு சொல்லேனும் இல்லை. இந்திய நாட்டில் இந்திய கலைஞர்கள் எழுதிய இலக்கிய வரலாற்று நூல்களிலும், தமிழுக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை. இந்தியப் பிரதமர் நேரு எழுதிய நூல்களிலும் தமிழுக்கு ஒரு துளி மதிப்பும் அளிக்கப்படவில்லை!'' என்ற செய்திகளை நீங்கள் சொல்லித்தான் தமிழ் உலகம் அறிந்தது!

இந்திய இலக்கியப் பண்பினை அறிய வடமொழி இலக்கியப் பயிற்சியே போதும் என்றிருந்த கருத்தை மேல்நாடுகளில் மாற்றி அமைக்க நீங்கள் செய்த பணி, என்றும் நினைவு கூரத்தக்கது.

தமிழர் பண்பாடு என்ற ஆங்கில முத் திங்கள் வெளியீடு, 15 ஆண்டுகளாக வெளிவந்தது. சங்க நூல்களில் புதைந்து கிடந்த பரந்த உலக மனப்பான்மையை உலகுக்கு எடுத்து ஓதி வந்தீர்கள். விருந்தோம்பல், ஈகை, 'தனக்கென வாழா பிறர்க்குரியாளன்' என்ற கோட்பாடு, மானமென்றால் உயிரையே கொடுக்கும் ஒப்பற்ற பண்பு, உயர்ந்தவற்றைச் சிந்திக்கும் இயல்பு என்பவை எல்லாம் உங்கள் எழுத்திலும் பேச்சிலும் நிறைந்து வழிந்தன.

தமிழ் ஆராய்ச்சி என்பது, தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஆராய்வதுதான் என்ற கருத்து நம்மிடை நெடுங்காலமாக நிலவியது.

அடிகளார் இக் கருத்துக்கு முழுக்கு போட்டு விட்டார்!

தமிழ் மக்கள் வரலாறு, தமிழ் மக்கள் சமயம், தத்துவங்கள் தொல் பொருள் இயல், பிற நாட்டுத் தொடர்பு, தமிழர் பண்பாடு, தமிழர் கலைகள்



மொழியியல் என்று பல்வேறு திசைகள் தமிழாராய்ச்சியில் இடம்பெறச் செய்தார்.

அடிகளார் மலேஷியா பல்கலைக் கழகத்தில் கலைத் துறையின் பீடாதிபதியாக இருந்த வேளை, டில்லி மாநகரில் தமிழ் பேரறிஞர்கள் ஒன்று கூடினார்கள். உலகம் தழுவிய தமிழ் அமைப்பு ஒன்று உருவாக வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தார் அடிகளார். அதன் பயனாக, 1964 இல் உருவானதே, உலகத் தமிழாராய்ச்சி மன்றம்.

முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மன்றம் மலேஷியாவில்தான் பூத்துக் குலுங்கியது.

மலேஷியப் பிரதமரே வாயார வாழ்த்தினார்.

அரசியல் ஞானியும் பேராசிரியருமான ஏ.ஜே. வில்சன் அவர்கள், அடிகளாரை நாட்டுப் பற்று நாயகம் என்றும், அறிவுக்களஞ்சியம் என்றும், குரு மணி என்றும் குறிப்பிடுகிறார்.

''கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தமிழுக்காக அளவிடற்கரிய பணியாற்றியவர்களில் தனிநாயகம் அடிகளை விஞ்சியோர் எவரும் இல்லை!'' எனப் பேரறிஞர் குலேந்திரன் அவர்கள் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர் பட்டப் படிப்பின் கற்கை நெறிக்கு விரிவுரையாளராக இருந்தபோது, 1958இல் அங்கே சென்று மண்டபத்தில் தமிழ் நூல்களில் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்தி வைத்தார்கள். இலங்கையின் பல முனைகளிலும் இருந்து ரசிகர்கள் வந்தார்கள். மானிப்பாய் டாக்டர் கிறீன் எழுதிய வைத்திய நூலும் அங்கு இடம்பெற்றிருந்தது. புத்தகப் பூஞ்சோலை என்று அடியேன் வீரகேசரியில் ஒரு கட்டுரையும் எழுதியிருந்தேன்.

இலங்கையில் முதன்முதலாக நடைபெற்ற புத்தகக் கண்காட்சி இதுவே என்று எண்ணுகிறேன். கண்டறியாத பல நூற்றுக் கணக்கான நூல்கள். அங்கே கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

1958இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விழா ஒன்று நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

திறந்தவெளி அரங்குக்கு எதிர்பாராதவாறு சன வெள்ளம் அலை மோதியது.

வட்ட வடிவாக கீழ் நோக்கிப் போகும் அந்த அரங்கில் மட்டுநகர் வந்தாறு மூலைக் கலாசாலையின் நாட்டுக் கூத்தும், நாத சின்னம் தவில் மேதைகள் பத்மநாதன், தெட்சணாமூர்த்தி என்பாரின் இசை விருந்தும், வேறு பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற இருந்தன.

விழா பிற்பகல் 6.30க்கு ஆரம்பமாக வேண்டும்.

பிற்பகல் 5.30 மணிக்கு தமிழ் சங்கத் தலைவர் இரத்தினம் அவர்கள் என்னை அழைத்தார்.

''ஓடி வாரும்! மகாகந்தைக்கு அவசரமாகப் போக வேண்டும்!''

''அப்படி என்ன நடந்தது?'' என்றேன் நான்.

''தமிழ் விழாவுக்கு ஆயிரக்கணக்கில் வருகிறார்கள். அதில் முக்கால் பேருக்கு தமிழே விளங்காது. ஆங்கிலத்தில் ஒரு ஆரம்ப உரை நிகழ்த்த வேண்டும். அதற்கு தனிநாயகம் அடிகளாரை உடனே அழைத்து வருவோம். அவரைவிட வேறு ஒரு தகுதியானவர் இல்லை!'' என்றார்.

இருவரும் புறப்பட்டோம். அடிகளார் குளியல் அறையிருந்து தலை துவட்டியபடி வெளியே வந்தார். நான் நிலைமையை விளக்கினேன்.

''எவ்வளவு நேரம் உரையாற்ற வேண்டும்? சிறப்பாக என்னென்ன இடம்பெற வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''எல்லாம் உங்கள் எண்ணப்படி நடக்கட்டும்!'' என்றேன்.

அனைவரும் பாராட்டிப் புகழும் ஆங்கிலப் பேச்சுத் தென்றலாய் வீசியது!



அடிகளாரின் மகாகந்தை இல்லமே ஒரு புத்தகக் காடு!

வாசிக்கும்போது அவருக்கு பிடித்ததை எழுதி ஒரு பெட்டிக்குள் போட்டு வைக்கும் பழக்கம் அவரிடம் இருந்தது.

ஒரு முறை இக்காலப் பாடல்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். மரபுக் கவிதைகள், புதுக் கவிதைகள் பல அங்கே கிடந்தன. சிலவற்றை அடியேன் வாசித்தேன்.

''வெறும் வசனங்களாயிருக்கின்றன. கற்பனையோ நயமோ கருத்தோ பல பாடல்களில் இல்லையே!'' என்றார் அடிகளார்.

''பாரதிக்கு மண்டபம் கட்டியவர்கள் இவர்களுக்குக் கிடங்காவது வெட்டி விடவேண்டும்!'' என்றேன்.

அடிகளாரது சிரிப்பு அடங்கச் சில நிமிடங்களாவது சென்றன!

புலவர் அரியநாயகம் அவர்கள் அடிகளார்மீது அளவற்ற அன்பு கொண்டவர்.

நெடுந்தீவில், அடிகளாரது உருவச் சிலையை நிறுவியதோடு, 'தமிழ்த் தூது' என்ற நூலை மீளப் பதிப்பித்து, அடிகளார் சேவையை அறிய ஆவன செய்கிறார்.



## கலைமாமணி பெஞ்சமின் - இமானுவல்

*(பிரான்ஸ்)*

ஆறு தலைமுறைகளுக்கு மேலாக ஒப்பனைக் கலை புரிந்து வரும் திருமிகு - பெஞ்சமின் அவர்களின் புதல்வர் தான் இமானுவல் அவர்கள்.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் அருட்தந்தை மரியசேவியர் அடிகளார் அவர்கள் யேசுவின் திருப்பாடல் காட்சியை நாடகமாக அரங்கேற்றிய போது அந்த நாடகத்தில் யேசுநாதராக நடித்த இமானுவேலின் நடிப்பும், வேடப் பொருத்தமும், நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களைக் கவர்ந்து விட அன்று முதல் இவரை அனைவரும் ஆண்டவர் என்றே அழைக்கின்றார்கள். இவர் சிறந்த நடிகர் மட்டுமல்ல, சிறந்த ஒப்பனைக் கலைஞரும் கூட. அந்த வகையில் நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களுடன் பழகும் வாய்ப்பு இவருக்கு கிடைத்திருக்கின்றது. இவர் பிறந்த திகதியும்...

அந்த அனுபவங்களை நினைவில் நிறுத்தி கலையரசு ஐயா அவர்களைப் பற்றிய இந்தக் கட்டுரையையும், மடுமாதா என்னும் மண்வாசனை கட்டுரையையும் எழுதியுள்ளார்.



## ஈழத்து நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம்



சகல ஜீவ ராசிகளின் ஆத்மீக உணர்வின் வெளிப்பாடே கலை! இக் கலைக்கு மனித ஜீவன்கள் மட்டுமே பரிணாமம் கொடுத்து, மெருகூட்டி வளர்த்து உன்னத கலையாக உலகில் போற்றிப் பேணும்படியாக வளர்த்து உள்ளார்கள்.

நமது தமிழர்களைப் பொறுத்த மட்டில் நாடகம், நாட்டியம், இசை, ஓவியம், சித்திரம் போன்ற கலைகளில் தலைசிறந்து விளங்கிய பல கலைஞர்கள் வாழ்ந்து மடிந்தாலும் இன்னமும் மக்களால் மறக்கமுடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

எனக்குத் தெரிந்த வரையில் ஈழத்து நாடகக் கலைக்கு தந்தையாக விளங்கியவர் திருமிகு கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களே!

இவர் பல கலைஞர்களுக்கு குருவாகவும், ஆசானாகவும் விளங்கியவர். இவருக்கும் எனக்கும் இருந்த தொடர்புகள் பற்றி உங்களோடு சிறிதளவில் பகிர்ந்து கொள்ள முனைகின்றேன்.

எனக்கு பத்து, அல்லது, பன்னிரண்டு வயது நடைபெறும் காலத்தில் நாடகம் சம்பந்தமாகவும், ஒப்பனை, மேடை அலங்காரம்

போன்றவற்றை ஒழுங்கு செய்வதற்காகவும் கலையரசு ஐயா அவர்கள் அடிக்கடி எங்களது இல்லத்திற்கு வருவதுண்டு.

1959ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு அண்ணன் ரகுநாதன் அவர்கள் நடித்த 'தேரோட்டி மகன்' நாடகத்தில் ஐயா அவர்கள் ''சகுனி'' பாத்திரம் ஏற்று நடித்திருந்தார். (பிற்காலத்தில் இதே சகுனி பாத்திரத்தை அண்ணன் ரகுநாதனுடன் இணைந்து நானும் நடித்தேன் என்பதை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.) அந்த நாடகத்தினை ஐயாவே நெறிப்படுத்தியிருந்தார். அதன் மூலமாகத்தான் எனக்கு அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்களுடன் அவர் மீது மரியாதையும் ஏற்படலாயிற்று.

பின்பு பற்பல நாடகங்களில் பலதரப்பட்ட வேடங்களில் எல்லாம் தோன்றி நடித்திருக்கின்றார். பல நாடகங்களை நெறிப்படுத்தி இருக்கின்றார். முக்கியமாக பாடசாலைகளில் நடைபெறும் நாடகப் போட்டிகள், கலை விழாக்கள், போன்வற்றை எந்த வகையில் நடாத்த வேண்டும்? என்றெல்லாம் ஆலோசனைகள் வழங்குவார்.

இவரது இல்லம் நவாலியில் இருந்தது. நவாலியில் இவர் வாழ்ந்த காலங்களில் குறிப்பாக மானிப்பாய், நவாலி ஆனைக்கோட்டை, தாவடி போன்ற இடங்களில் பல கலைஞர்கள் உருவாவதற்கு இவரே காரண கர்த்தாவாக விளங்கியுள்ளார்.

இவரைப் பற்றி அதிகம் தெரிந்த அண்ணன் ரகுநாதன் அவர்கள் பல பத்திரிகைகளில் இவரைப் பற்றி விரிவாக எழுதியிருக்கின்றார்.

நான் வாலிபனாக இருந்த காலங்களில் இவருக்கு நானும் ஒப்பனை செய்துள்ளேன் என்பதனைப் பெருமையுடன் கூறுகின்றேன். முக்கியமாக இவர் தனியே தோன்றி நடித்த 'ஷேக்ஸ்பியரின்' (Merchent of Venice) - மேச்சன்ற் ஓஃப் (f) வெனிஸ் என்னும் நாடகத்தில் (Shilock) செயிலொக் என்னும் பாத்திரம்தான் இவர் நடித்த வேடத்தில் சிறந்த வேடமாகும் என்பது எனது எண்ணம். இந்த வேடத்திற்கு ஆரம்பகாலங்களில் எனது தந்தையார்தான் இவருக்கு ஒப்பனை செய்வார். தாடி மீசை எல்லாம் ஒட்டி அசல் கிழவனாக தோன்றுவார்.



ஒருநாள் ஐயா அவர்கள் எனது தந்தையிடம் சொன்னார், ''பெஞ்சமின்.. இன்று உனது மகன் எனக்கு ஒப்பனை செய்யட்டும்'' என்று. எனது தந்தையும் சம்மதித்துவிட்டார். நான் பயந்து பயந்து ஒப்பனை செய்தேன். தாடி, மீசை எல்லாம் ஒட்டியபின் ''ஐயா சரியாக இருக்கின்றதா என்று பாருங்கள்'' என்றேன். அவர் இருக்கையை விட்டு எழுந்து முன்னால் உள்ள கண்ணாடியில் சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றார். பார்த்த பார்வை மாறாமலேயே எனது தந்தையைக் கூப்பிட்டு ''பெஞ்சமின்.. இனிமேல் உனது மகன்தான் இந்த நாடகத்திற்கு ஒப்பனையாளன்'' என்றார்.

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்திற்காக இரண்டு தடவைகள் ஐயா அவர்களுடன் நான் யாழ்ப்பாணத்தில் இருந்து இரயிலில் பயணம் செய்திருக்கின்றேன். அந்த சந்தர்ப்பங்களில் நடிப்பு பற்றியும், அதன் நுட்பங்கள் பற்றியும், தனது நாடக அனுபவங்கள் பற்றியும் எனக்கு எடுத்துக் கூறுவார். இவையெல்லாம் எனது முன்னேற்றத்தின் படிக்கற்களாக நான் கருதி வருகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களில் நடைபெறும் நாடகங்கள் கலை விழாக்களில் இவரைப் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள அழைப்பதற்காக நான் அடிக்கடி இவரது இல்லத்திற்கு செல்வதுண்டு. திரு வண்ணை தெய்வம் அந்த நேரத்தில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றிய ''சாவுக்கு சவால்'' நாடகத்திற்கு ஐயா அவர்களே பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். அந்த நாடகத்தில் நான் தந்தை பாத்திரத்தில் நடித்திருந்தேன்.

கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்கள் குழந்தை உள்ளம் படைத்தவர். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். உரையாடும் பொழுது அவருடைய பேச்சில் நகைச்சுவை கலந்திருக்கும். சிரிப்புக் கதைகள் கூறுவதில் அவருக்கு நிகர் அவரே! ஒரு சமயம் மானிப்பாய் ஓரியண்டல்ஸ் ஆதரவில் திருக்கோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு ''தேரோட்டி மகன்'' ''இன்ப நாள்'' ஆகிய நாடகங்களை

மேடையேற்றுவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து பேருந்து ஒன்றில் பயணம் செய்தோம். பிரயாணம் செய்யும் பொழுது பலரும் பலவிதமான நகைச்சுவைக் கதைகளைக் கூற, பயணம் சந்தோஷமாகப் போய்க் கொண்டிருந்தது. பாதிப் பயணத்திலேயே எல்லோரும் களைத்துவிட்டார்கள். அதன் பின்புதான் ஐயா அவர்கள் தனது சிரிப்புக் கதைகளை சொல்ல ஆரம்பித்தார். பிரயாணம் எப்படி முடிந்தது என்பதே தெரியவில்லை. அவ்வளவு சுவாரஸ்சியமாக இருந்தது அவருடைய நகைச்சுவைக் கதைகள். அந்தப் பயணம் மகிழ்ச்சியாக அமைய ஐயா அவர்களும் ஒரு காரணமாக இருந்தார்.

ஒரு முறை யாழ் நகர மண்டபத்தில் இடம் பெற்ற ''இன்பநாள்'' நாடகத்திற்காக எனது தந்தையார் ஒரு வீட்டுக் காட்சியை அமைத்திருந்தார். நாடகம் ஆறு மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஐயா அவர்கள் இரண்டு மணிக்கே மண்டபத்திற்கு வந்துவிட்டார். ஐயாவைக் கண்டதும் எனது தந்தையார் ஐயாவைக் கூட்டி வந்து மேடையின் முன்திரையை நீக்கி இந்த வீடு எப்படி இருக்கின்றது? என்று கேட்டார்.

ஐயா அவர்கள் ஐந்து நிமிடங்கள் ஆடாமல், அசையாமல், அதனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு ''பெஞ்சமின், இந்த வீட்டை மிக அழகாக அமைத்திருக்கின்றாய். இந்த இரண்டு சுவர்களிலும் இரண்டு படங்கள் மாட்டி இருந்தால் இன்னும் அழகாக இருக்கும்'' என்றார். உடனே எனது தந்தையார் ''கொஞ்சம் பொறுங்கோ ஐயா'' எனக் கூறி விட்டு மேடைக்குப் பின்புறம் சென்றார். ஒரு பால்ப் பேணியை எடுத்து அதற்குள் கறுத்த பவுடரைப் போட்டு சிறிது தண்ணீர் ஊற்றிக் கலக்கினார். பின்பு இரண்டு வெள்ளைப் பேப்பரைச் சதுரமாக வெட்டி அந்தப் பேப்பரில் தனது சுட்டு விரலால் கரைத்து வைத்திருந்த கறுத்த மையில் தொட்டுத் தொட்டு ஏதோ கீறினார். அந்த பேப்பரை மேடையில் அமைக்கப்பட்டிருந்த வீட்டின் சுவர்களில் ஆணியால் தைத்துவிட்டு மீண்டும் ஐயாவைக் கூப்பிட்டு ''இப்பொழுது பாருங்கள் ஐயா'' என்றார்.

அந்தப் படங்களில் ஒன்றில் கடலில் பல வள்ளங்கள் போய்க்கொண்டு இருப்பதைப் போலவும், மற்ற படத்தில் பெரிய




மலையில் இருந்து நீர்வீழ்ச்சி விழுந்து கொண்டிருப்பதைப் போலவும் கீறப்பட்டிருந்தது. கலையரசு அவர்கள் எனது தந்தையைக் கட்டித் தழுவி, ''பெஞ்சி, நீ இந்தியாவில் பிறந்திருந்தால் உனது நிலையே வேறு! ஆனால் நீ, இங்கு பிறந்தபடியால் எங்களைப் போன்ற கலைஞர்களின் ஆத்ம பூரணமான வாழ்த்துக்கள்தான்'' என்றார். எனது கண்கள் நிறைந்த நீரோடு நீங்காத நினைவாக நிலைத்து நிற்கும் நிகழ்ச்சி இது.

1971ஆம் ஆண்டு நடைபெற்ற எனது திருமண விழாவிற்கு அழைப்புக் கொடுப்பதற்காக ஐயா அவர்களின் இல்லத்திற்கு சென்றிருந்தேன். அவர் வெளி விறாந்தையில் போடப்பட்டிருந்த சார்மனைக் கதிரையில் படுத்திருந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். நான் வாசலில் நின்று ''ஐயா'' என்றேன். அவர் ''யார் அது?'' என்றார். ''பெஞ்சமினின் மூத்த மகன்'' என்றேன். ''ஆ..ஆ... உள்ளுக்கை வா'' என்றார். உள்ளே சென்றதும் தனக்கு முன்னால் இருந்த நாற்காலியில் அமரவைத்து ''என்ன விடயம்?'' என்று வினவினார். ''ஐயா எனக்கு திருமணம் நடக்கப் போகின்றது; நீங்கள் வந்து எங்களை ஆசீர்வதிக்க வேண்டும்'' என்றேன். அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஒரு பெரிய கலைஞனின் மகனாகப் பிறந்த உனது திருமணத்திற்கு நிட்சயம் வருவேன் எனக் கூறி எனக்குப் பல அறிவுரைகள் வழங்கினார். அவரது அறிவுரைகளில் ஒரு வசனம் அடிக்கடி நினைவிற்கு வரும். அது ''இந்த உலகத்தில் வாழும் மனிதர்களில் கலைஞன்தான் ஆத்மீக மனமகிழ்ச்சியுடன் வாழ்கின்றான்'' என்பது.

எனது திருமணத்தின் மூன்றாம் நாள் எனது இல்லத்திற்கு வருகைதந்த ஐயா அவர்கள் எங்களை வாழ்த்தியதுடன் அன்பளிப்பும் தந்திருந்தார். எனது மறக்க முடியாத நாட்களில் இதுவும் ஒன்று.

அந்த மாபெரும் கலை மேதையுடன் பழகிய நாட்கள் நான் பேறு பெற்ற நாட்கள் என்றே கருதுகின்றேன்.

நான் புலம் பெயர்ந்து வந்து யெர்மனியில் இருந்த பொழுது அவரது மரணச் செய்தியை எனது தந்தையார் மூலம் கேள்வியுற்று கலங்கி நின்றேன்.





நிகழ்வுகள் பல உள்ளன! இவை அனைத்தும் எனக்கு ஆத்மீக மகிழ்வூட்டும் நிகழ்வுகள். அடிக்கடி எனது மனதிலே நிழல் படங்களைப் போல காட்சி அளிக்கின்றன.

எனது புலம் பெயர் வாழ்விலே என் மனதிற்கு ஆத்மீக திருப்தியைக் கொடுப்பவை இந்நிகழ்வுகளும், நினைவுகளுமே!

இவற்றுள் எனது மனதில் மிகவும் பிடித்த காட்சி மருதமடு, மாதா திருப்பதியிலே நடைபெறும் திருவிழாக் காட்சி.

ஆடி மாதம் இரண்டாம் திகதியும்! ஆவணி மாதம் பதினைந்தாம் திகதியும்! நடைபெறும் திருவிழாக் காட்சிகளை வர்ணிக்க வார்த்தைகளைத் தேட வேண்டும்! முதலில் மடு, மாதா குடியிருக்கும் தேவாலய சுற்றாடலை மனக் கண்முன் கொண்டு வருவோம்.

கானகத்தின் நடுப்பகுதியிலே அமைந்திருக்கும் அந்த தேவாலாயம். அதனைச் சுற்றி நாற்புறமும் அகன்ற வீதிகள். யாத்திரிகள் தங்குவதற்கான சின்னச் சின்ன வீடுகள். தேவாலயத்திற்கு அருகில் ஆலய மணிக்கூண்டு மண்டபம். ஆலயப் பின்புறம் சிறிய வைத்தியசாலை ஒன்று. வலது புறம் தபாற்கந்தோர்... ஒரு சாப்பாட்டுக்கடை. இதுதான் சாதாரண நாட்களில் தேவாலயம் அமைந்திருக்கும் சூழல்.

ஆடி மாதம் 2ஆம் திகதி நடைபெறவிருக்கும் திருவிழாவிற்கு இரண்டு வாரங்கள், ஒரு மாதத்திற்கு முன்பாகவே யாத்திரிகள் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடத் தொடங்கிவிடுவார்கள். சிறிய சிறிய கூடாரங்கள் அமைத்து, அங்கு தங்கி மடுத்தாயிடம் தங்களது மனச்சுமைகளைக் கூறி ஆறுதல் பெறவும், கருணைமிகு மாதா தங்களுக்கு செய்த உதவிகளுக்கு நன்றி செலுத்தவும் அந்த மக்கள் தங்களைத் தயார் செய்யத் தொடங்கிவிடுவார்கள்.

அதே வேளை அங்கு வந்து தங்கியிருக்கும் மக்களுக்கு உணவு, மற்றும் சமையலுக்குத் தேவையான பொருட்களை விற்பதற்கான கடைகள் மடுத்திருப்பதியில் இருந்து ஏழு மைல்களுக்கு அப்பாலுள்ள இறக்கம் என்னும் இடத்திலேயே அமைந்திருந்தன. மக்கள் தமக்குத் தேவையான பொருட்களை அங்கு சென்றே வாங்கி வருவார்கள்.

திருநாள் நெருங்க நெருங்க மக்கள் திரள் திரளாக வந்து கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கான சகல வசதிகளையும் தேவாலய நிர்வாகம் மிகச்சிறப்பாக செய்திருப்பார்கள்! போக்குவரத்து வசதி, அவசர வைத்தியசேவை, மற்றும் பாதுகாப்புச் சேவை, போன்ற எல்லா வசதிகளையும் கோவில் நிர்வாகத்தினர் செய்து வைத்திருப்பார்கள்.

திருவிழா அன்று மடுத்திருப்பதியைப் பார்த்தால்! சொர்க்க லோகமோ? என்று பிரமிக்கும் அளவிற்கு மக்கள் பெரும் திரளாக கூடியிருப்பார்கள். ஆலயத்தில் குருவானவர்கள் ஆராதனைகளை நடாத்திக் கொண்டிருப்பார்கள்.

பெருநாள் அன்று காலை மேற்றிராணிமார் உட்பட பல குருமார்கள் சேர்ந்து திருப்பலி நிறைவேற்றுவார்கள். திருப்பலி முடிவுற்றதும் மடு, மாதா திருச்சுரூபம் தேவாலயத்திற்கு முன்பாக பவனியாக கொண்டு செல்லப்பட்டு, பின்பு கோவிலிலே அமைக்கப்பட்டிருக்கும் மேடையிலே திருச்சுரூபம் வைக்கப்படும். அப்போது குருவானவர் மன்றாட்டங்களையும்! மாதாவின் இறுதிப் பிரியாவிடைச் செபத்தையும் மிக உருக்கமாகச் சொல்லுவார். அந்த மன்றாட்டச் செய்திகளையும், இறுதிச் செபத்தையும் இன்று நினைக்கும் பொழுதும் எனது கண்களில் கண்ணீர் கசிகின்றது.

தேவாலயத்திற்கு முன்பாக மக்கள் திரளாக அமர்ந்திருக்க! குருவானவர் பிரியாவிடைச் செபத்தை வாசிக்கும் பொழுது அங்கு கண்ணீர் சொரியாத மக்களே இருக்கமுடியாது. செபம் நிறைவுற்றதும் குருவானவர் மாதாவின் திருச் சுரூபத்தால் ஆசீர்வதிப்பார். அந்த நேரத்தில் மகிழ்ச்சி மேலீட்டால் தங்கள் கரங்களைத் தட்ட அப்பொழுது எழும் கர ஓசை விண்ணில் பட்டு எதிரொலிப்பது போல இருக்கும்.

திருவிழா நிறைவுற்றதும் மக்கள் மகிழ்ச்சியுடன் காணிக்கை கொடுப்பார்கள். இதற்கான கியூ வரிசை கடைத்தெருவில் இருந்து இறைச்சிக்கடை, மாம்பழக்கடை, ஒடியல் பனங்கட்டிக்கடை விளையாட்டுப் பொருட் கடைகள் என நீண்டு குதூகலமான கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.



இது போலவே ஆவணிமாதம் 15ஆம் திகதி நடைபெறும் திருவிழாவும் சிறப்பாகவே இருக்கும். ஆடித் திருவிழாவைவிட ஆவணித் திருவிழாவிற்கே மக்களின் வருகை மிக அதிகமாக இருக்கும். காரணம் பாடசாலை விடுமுறைக் காலம் என்பதால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன், குடும்பமாக கூடியிருப்பார்கள்.

மொத்தத்தில் மடுத் திருப்பதி ஜாதி, மத, வேறுபாடுகள் இன்றி அனைத்து மக்களும் ஒற்றுமையாக ஒன்றுகூடி, மகிழ்ச்சியாக மன நிறைவோடு மாதாவிடம் மன்றாடி வேண்டி வழிபட்ட அந்தத் தாயின் மண், இன்று சுவையிழந்து! சோபைபிளந்து! கானகத்தோடு கானகமாக மாறிக்கிடக்கின்றது. அந்த மடுமாதாவின் ஆலயமும், அந்த புனித மண்ணும், இன்றும் எனது கண்களில் தோன்றி கண்ணீரைக் கசியவைக்கின்றது.

அந்த மருத, மடு மாதாவின் திருவிழாக் காட்சி! எம்போன்றவர்களுக்கு நித்திய கானல் நீர்தானா?

# ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை



ஈழம் தந்து பெருமை கொண்ட புலவர்களில் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையும் ஒருவர். நகைச்சுவையும் கருத்துச் செறிவும் கொண்ட பாக்களையும் நூல்களையும் உரைகளையும் மக்களுக்கு அளித்த மகாமேதை.

இவர் ஈழத்தில் உள்ள வயாவிளான் எனும் கிராமத்தில் ஆயிரத்து எண்ணூற்றி அறுபதாம் (1860) வருடம் திரு. கந்தப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியினர்க்கு மகனாகப் பிறந்தார். மிகச் சிறுவயதிலேயே அஞ்சா நெஞ்சத்துடன் நகைச்சுவையாகவும் சிலேடையாகவும் பேசுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். இவற்றைக் கண்ணுற்ற அவரின் ஆசிரியர்கள், "வரும் காலத்தில் இவன் பெரும் புலவனாக வருவான்" என்றனர். பெரியோர்கள் ஆசியும் பலித்தது. புலவனாகியதுடன் தமிழே தன் மூச்சென இறுதிவரை வாழ்ந்தார்.

யாழ்ப்பாண வைபவ கௌமுகி, அழகம்மா கும்மி, கதிர்காம வேலவர்மேல் பக்திக் கவிகள், கருணாகரனின் ஊஞ்சல் பாட்டு, என



பல பாக்களையும் நூல்களையும் எழுதியதுடன் சுதேச நாட்டியம் என்ற புதினத்தாளையும் தன் சொந்த அச்சுக் கூடத்திலேயே நடத்தி வந்தார்.

திருவேலுப்பிள்ளை எழுதிய நூல்கள் கொழும்பு யாழ்ப்பாண பல்கலைக் கழக நூல் நிலையங்களில் மட்டுமல்ல சென்னை பல்கலைக் கழக நூல் நிலையத்திலும் மக்கள் பாவனைக்காக இன்றும் பேணிக் காக்கப்படுகின்றது. எழுதுவது மட்டுமின்றி தமிழில் எங்கு பிழையிருப்பினும் அதை திருத்தம் செய்யவும் தயங்கமாட்டார். இதனால் 'கண்டனத்தில் வல்லோன்', 'கல்லடியான்' எனக்கூறி நண்பர்கள் மகிழ்ந்தனர். இதற்கு ஓர் சிறிய உதாரணம்.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் ஓர் குளம். இதில் அழகிய மீன்கள் துள்ளி விளையாடும். இம்மீன்கள் அழிந்து போகாவண்ணம் பாதுகாக்கும் பொறுப்பு மாநகரசபை காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்குளத்தில் உள்ள மீன்களை ஒருவராலும் பிடிக்க முடியாதென பெரிய அட்டை ஒன்றில் எழுதி குளத்தருகே நின்ற மரம் ஒன்றில் அதை மாட்டியதுடன் தம் பொறுப்பை செவ்வனே செய்தோம் என்ற மனநிறைவில் நகர காவலர்கள் இறுமாந்திருந்தனர்.

ஒருநாள் அவ்வழியே போய்க் கொண்டிருந்த பிள்ளையவர்கள் மரத்தில் என்ன அறிவித்தல் போடப்பட்டிருக்கிறதென்பதை அறியும் ஆவலுடன் அருகில் சென்று வாசித்தார். இதயம் சுருங்கும் வேதனையடைந்தார். நல்ல நம் தமிழை நம்மவரே கொலை செய்கிறார்களே.. இவர்களுக்கு நல்ல புத்தி புகட்ட வேண்டுமென யோசித்தவர் வந்த தன் வேலையையும் துறந்தார்.

கடைக்குச் சென்று மீன்பிடிக்கும் தூண்டில் ஒன்றை வாங்கி வந்து குளத்திலுள்ள மீன்கள் சிலவற்றைப் பிடிக்கத் தொடங்கினார். விஷயம் அறிந்த காவலர்கள் ஓடோடி அவ்விடம் வந்தனர். "ஏய்! ஏய்! நீ யார்.. படிக்காத முட்டாளா? மரத்தில் உள்ள அறிவித்தலை பார்க்கவில்லையா? மடைத்தனமான வேலை செய்கிறாயே" என அதட்டினர். "அவ் அறிவித்தலைப் பார்த்தபடியால் தானே மீன்களைப் பிடிக்கிறேன்; என்னால் முடியும்" எனச் சொல்லிவிட்டு தன் கருமமே கண்ணாயினார் பிள்ளை அவர்கள்.

காவலர்களுக்கோ சினம் தலைக்கேறியது. தொடர்ந்து ஏசியதுடன் அவரைக் கைது செய்யவும் முயன்றனர். தான் கூறியதின் அர்த்தம் அவர்கள் மரமண்டைகளுக்குப் புரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டவர், அவர்கள் மீன் பிடிக்க முடியாதென எழுதிப் போட்டிருப்பது தவறெனவும் மீன் பிடிக்கக் கூடாதென எழுதிப் போடும்படியும் விளக்கமாக எடுத்துக் கூறினார். தம் பிழையை உணர்ந்த காவலர்கள் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதுடன் அவர் முன்னிலையிலேயே திருத்தமும் செய்தனர். தமிழ்த் தாயின் தொண்டை, தான் செவ்வனே செய்த திருப்தியுடன் பிள்ளையவர்கள் வீடு போய்ச் சேர்ந்தார்.

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை கண்டனத்திற்கு வல்லோன் என்பதை விளக்கமாக அறிந்தோம். அவர் சிலேடையாகப் பேசுவதிலும் திறமையுள்ளவர். அதாவது ஒரு சொல்லில் இரு கருத்துக்கள் வைத்துப் பேசுவதிலும் வல்லவர். இதற்கு உதாரணமாக -

செல்வம் கொழிக்கும் சிங்கப்பூரில் தர்மலிங்கம் என்று ஒரு செட்டியார் இருந்தார். இவர் தவில் வித்துவான். கலைவாணி தன் கருணைக் கடாட்சத்தை இவர்பால் தாராளமாக வீசியதால் இந்நிலையில் மிகவும் திறமையாக விளங்கினார். பல கச்சேரிகள் ஓய்வின்றி செய்தார். பெண்கள்தான் பொறாமை போட்டியில் சளைத்தவர்கள் அல்லவே! நாமகளுக்குக் குறைந்தவளா நான்? என்ற அகந்தையில் பூமகளும் தன்னுள் பார்வையை தர்மலிங்கம் செட்டியிடம் தாராளமாகவே தவழவிட்டாள், பின் என்ன? கலைச் செல்வத்துடன் பொருட் செல்வத்தையும் சேர்த்துக் கொண்டார் செட்டியார்.

தேவியர் இவரிடம் காட்டிய கருணையை இவர் மக்களிடம் காட்டவில்லை. தானம் தருமம் செட்டியாருக்கு கசந்தது. ஏழை எளியவர்க்கு உதவுவது வெறுப்பை ஊட்டியது. இதனால் ' கலைவாணன், தவில் மேதை, இசை மன்னன்' எனப் புகழ்ந்த மக்கள் ' கர்மி, உலோபி, கயவன்' என இகழவும் தவறவில்லை.

''தண்ட வருவோரை கண்டிக்க தளரா மனம் அருள்வாய் பராபரமே'', என ஓர் அட்டையை எழுதி தன்னிடம் தர்மமோ நன்கொடையோ உதவியோ கேட்டு வருபவர்களிடம் காட்டி அவர்களை அனுப்பிவிடுமாறு செட்டியார் தன் பணியாளரிடம் பணித்திருந்தார்.



சிறப்புமிக்க சிங்கப்பூரின் அழகைக் கண்டு ரசிக்கவும் தன் உற்றார் உறவினரைப் பார்த்து வரும் ஆவலிலும் வேலுப்பிள்ளை சிங்கப்பூர் போயிருந்தார். இவர் நடாத்திய சுதேச நாட்டியம் என்ற பத்திரிகையை சிங்கப்பூரிலுள்ள அனேக தமிழர்கள் மாதச் சந்தா வருடச் சந்தா எனப் பணம் கட்டி வரவழைத்து வாசித்தார்கள். இவர்களில் தர்மலிங்கமும் ஒருவர். செட்டியார் ஒரு வருஷகாலமாகப் பத்திரிகையின் பணத்தை அனுப்பவில்லை. வந்த இடத்தில் அவருடன் பேசலாம், பணத்தையும் பெற்றுக் கொள்ளலாமென யோசித்த பிள்ளை, செட்டியார் வீட்டிற்குச் சென்றார்.

அழைப்பு மணியை அழுத்தினார். பணியாள் என்ன வேண்டுமென வினவினான். உன் எசமானரைக் காணவந்தேன் என்றார். ''அவர் இப்போ இங்கு இல்லை உமக்கு என்ன வேண்டும்'' எனக் கேட்டான். ''என் பத்திரிகையின் பணம் வாங்க வந்தேன்'' எனப் பதில் கூறினார். பணம் வாங்க வந்தேன் என்ற சொல் கேட்டதும் பணியாள் மிகவும் சுறுசுறுப்புற்றான். விரைந்து சென்றவன் வேகமாக அறிவித்தல் பலகையுடன் வெளியே வந்தான். அதைப் பிள்ளையிடம் கொடுத்து வாசித்துவிட்டு உடனே போய்வரும்படி கூறினான். வாசித்தவர் மிகவும் வெட்கமும் வேதனையும் அடைந்தார். செட்டியாரின் கர்வத்தை அவர் பாணியிலேயே அடக்க விரும்பினார். முள்ளை முள்ளால் எடுப்பதென முடிவும் செய்து கொண்டார்.

''தட்டியுண்ணும் செட்டியிடம்
தண்டுபவர் இங்கிருந்தால்
மட்டி அவர் என்றெல்லோ
மதிப்பேன் பராபரமே''

என அவர் அறிவித்தலின் அடியிலே எழுதி, ''உன் துரை வந்ததும் மறவாமல் கொடுத்துவிடு'' எனக் கூறிவிட்டுப் போய்விட்டார். செட்டியார் வீடு திரும்பியதும் ''இலங்கையில் இருந்து வேலுப்பிள்ளை என்பவர் பணம் வாங்க வந்திருந்தார். அறிவித்தலைக் காண்பித்தேன். ஏதோ எழுதித் தந்துவிட்டுப் போய்விட்டார்'' எனக் கூறிய பணியாள் பணிவுடன் கொடுத்தான்.

வாசித்தவரின் உள்ளம் கொதித்தது. உடல் வியர்த்தது. மீசை துடித்தது. கண்கள் சிவந்தன, கோபம் தலைக்கேற தன் வழக்கறிஞரை வரவழைத்தார். ''என்னை அவமதித்து இகழ்வாக எழுதிய பிள்ளைமேல் மானநஷ்ட வழக்கு போட்டு உடனே நீதிமன்றத்தில் நிறுத்தும்'' என உத்தரவிட்டார். பணத்தால் பண்ணமுடியாததும் பாரினில் உண்டோ? வழக்கறிஞரின் துரித நடவடிக்கையால் பிள்ளையவர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார்.

வந்த இடத்தில் இவருக்கு இப்படியான ஓர் நிலை ஏற்பட்டு விட்டதே என்ற வேதனையுடன் உற்றார் உறவினரும், எதிரி மிகவும் புத்தி சாதுர்யமுள்ளவராமே? வழக்கு பார்க்க நன்றாயிருக்குமே! என்ற ஆவலில் மற்றோருமாக சிங்கப்பூர் நீதிமன்றம் நிரம்பி நின்றது. நீதிபதி ஆசனத்தில் அமர்ந்ததும் செட்டியாரின் சட்டத்தரணி தன் கட்சிக்காரரை பிள்ளையவர்கள் அவர் வீட்டிலேயே தட்டித் தின்னி என மிகவும் இகழ்வாக எழுதி வைத்துவிட்டதாகவும் இதற்கு மானநஷ்டமாக இரண்டாயிரம் 2000 வெள்ளிகளை செட்டியாருக்குக் கொடுப்பதுடன் மன்னிப்பும் கேட்டுக் கொள்ள வேண்டுமெனவும் வேண்டினார்.

பிள்ளையவர்களிடம் கேட்கப்பட்ட போது தான் வந்த இடத்தில் இப்படியான ஓர் நிலமை ஏற்பட்டமையால் சட்டத்தரணி ஒருவரை வைத்து வாதாட தன்னிடம் போதிய பணமில்லாதபடியால் தன் வழக்கைத் தாமே வாதம் செய்ய அனுமதி தரும்படி நீதிபதியிடம் தாழ்மையாகக் கேட்டுப் பெற்றும் கொண்டார். பிள்ளையவர்கள் ஒருமுறை எல்லோரையும் சுற்றிப் பார்த்து சிறு புன்னகையுடன், ''கனம் நீதிபதி அவர்களே! நான் திரு தர்மலிங்கத்தை இகழ்ந்தோ கேலியாகவோ எதையும் எழுதவில்லை. 'தட்டி உண்ணும் செட்டி' எனக் குறிப்பிட்டது. தவிலைத் தட்டி அதனால் வரும் வருமானத்தில் உண்பது. செட்டியார் தவில் தட்டித்தானே உழைக்கிறார். அத்துடன் தண்டவருவோரை தண்டிப்பேன் எனவும் அறிவித்தலில் எழுதியிருந்தார். என் பத்திரிகையின் ஒரு வருஷப்பணம் இன்னும் செட்டியாரிடம் பாக்கியுள்ளது. இவரிடம் யாரும் தண்டப் போவார்களா? அப்படிப் போவோரை மட்டிகள் என்றே மதிப்பிட்டேன். இதில் என்ன தவறு? ஏதோ நான் தகாததை எழுதிவிட்டேன் என்று என்மேல் கோபிக்கவோ, நீதிமன்றம்வரை என்னை இழுத்தடித்து



தேவையற்று சிரமம் தரவோ எக்காரணமும் இல்லையே!?' என மிகவும் வினயமாக விளக்கினார்.

கூடியிருந்த மக்களின் ஆரவாரமும் சிரிப்பொலியும் அடங்கியபின் திரு. வேலுப்பிள்ளையின் விளக்கத்தை பரிசீலனை செய்தளவில் அவர் வாதம் சரியெனவும் அவர் நிரபராதியெனவும் தீர்ப்பளித்து நீதிமன்றம் அவரை விடுதலை செய்வதாகவும் அவரின் பத்திரிகையின் பணத்தை தர்மலிங்கம் உடனே கொடுக்க வேண்டும் எனவும் நீதிபதி தீர்ப்பை வாசித்தார். இருகரம் கூப்பி நீதிபதிக்கு நன்றி தெரிவித்த பிள்ளை கூண்டிலிருந்து புறப்பட்ட புலியென வெளியில் வந்தார். உற்றாரும் உறவினரும் உவகையுடன் பெருமை பொங்க பிள்ளையை அணைத்துக் கொண்ட அதே வேளையில், அவமானம் தாங்காத தர்மலிங்கம் செட்டியார் பத்திரிகையின் பணத்தையும் கட்டிவிட்டு குனிந்த தலையுடன் எதிர்ப்பக்கம் சென்றார். புத்திமான் பலவான் ஆவான்.

**திருமதி – R. சிவலிங்கம்**
*(கனடா)*

இலக்கிய ஆர்வம் உள்ளவர்கள் மட்டுமல்ல நகைச்சுவை உணர்வு உள்ளவர்களும் திருமிகு ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களை தெரிந்திருப்பார்கள். ஆனால் அவரைப் பற்றிய பூர்வீகம் அனேகமானவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

யேர்மனியில் வாழ்ந்துவரும் திருமதி சாந்தினி - வரதராஜன் அவர்கள் ஆசுகவியைப் பற்றி அறிந்திருக்கும் (கனடாவில் வாழும்) திருமதி சிவலிங்கம் அவர்களின் தொடர்பை எனக்கு ஏற்படுத்தித் தந்தார். இவர் எனக்கு ஆசுகவி அவர்கள் எழுதிய 'யாழ்ப்பாண வைபவ கௌமுகி' என்ற நூலையும் அனுப்பி ஆசுகவியின் வரலாற்றுக் கட்டுரையை அனுப்பி வைத்ததுடன் அவுஸ்த்ரேலியாவில் வாழ்ந்து வரும் தனது சகோதரி திருமதி தங்கராசா - புஸ்பராணி அவர்களின் தொடர்பை ஏற்படுத்தித் தர அவர்கள் ஆசுகவியின் இந்தப் புகைப்பட நகலை தந்துதவினார். இவர்கள் மூவருக்கும் எனது நன்றிகள்.

# மண் வாசனை

மழைக்கு முன்னம் மணக்கும் புழுதிமணலைப் போல நான் பிறந்து ஓடி விளையாடி படிந்து வளர்ந்து பாவலன், கலைஞன் என மற்றவர்களால் மதிக்கப்பட்டவன், நான் பிறந்த மண்ணைப் பற்றி எழுதப் போகின்றேன் என்ற எண்ணத்துடன் பேனாவை எடுத்ததுமே எனக்குள் ஒரு பேரானந்தம்!

விறகை வெட்டினால் சத்தம் வரும். வீணையை தட்டினால் நாதம் வரும், இது சத்தமா? அல்லது நாதமா? என்று நீங்கள்தான் கூறவேண்டும்.

வண்ணார் பண்ணை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று யாழ் மாநகரத்தின் நான்கின் ஒரு பகுதியை தனதாக்கிக் கொண்டிருந்தாலும் வண்ணார் பண்ணை முழுவதற்கும் சொந்தம் கொண்டாடி நான் இந்த கட்டுரையை எழுதவில்லை. வண்ணார் பண்ணை கிழக்கின் ஒரு எல்லையில்தான் எனது இல்லம்.

எனது வீட்டிற்கு ஒருவீடு தள்ளி வடக்கு புறமாக கால்களை வைத்தால் கொக்குவில் கிராமசபையின் எல்லை. கிழக்குப் பக்கமும் அப்படியே 'தந்தை இல்லம்' என்ற என் வீட்டிற்கு முன்னால் உள்ள வீதியைத் தாண்டி கம்பீரமாக உயர்ந்து நிற்பது கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் மதிற்சுவர்கள்.

காற்சட்டைக்கு, சரியாக பொத்தான் பூட்டிக் கொள்ளாமல், இழுத்து முடிந்து கொண்டு திரிந்த காலங்களில் இந்த தொழில் நுட்பக் கல்லூரி காணியில் சிறுவர்களுடன் சேர்த்து கள்ளன், பொலிஸ், விளையாடிய காலங்கள்... அங்கு நின்ற பனை மரங்களில் இருந்து விழும் பனம் பழங்களை நண்பர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு எடுத்து சுட்டு சுவைத்து தின்ற நாட்கள்... இவைகள் இனி நான் அனுபவிக்க முடியாதவை.



என் மண்ணை விட்டு வெளி நாடு என்று நான் புறப்பட்ட நேரத்தில் இந்த பனை மரங்கள் எல்லாம் இல்லை! பனை மரங்கள் நின்ற இடத்தில் கல்லூரியின் கட்டிடங்கள் நிமிர்ந்து நின்றன. இன்று அவையும் இருக்கின்றவோ? சிதைந்து விட்டனவோ நானறியேன்.

1958-ல் யாழ் கச்சேரி முன் சத்தியாக்கிரகம் இருந்த நேரத்தில் இதே தொழில் நுட்பக்கல்லூரி இலங்கை ராணுவத்தின் ஒரு முகாமாக மாறியிருந்தது.

''ஆமிக்காரர்கள் பொல்லாதவர்கள், சிங்களவர்கள் இரக்கமில்லாதவர்கள்; கண்ட பாட்டுக்கு சுடுவாங்கள்.'' இப்படி எல்லாம் கூறி எங்கள் பெற்றோர் இராணுவத்துடன் எங்களை நெருங்கவிடாது எச்சரித்துக் கொண்டிருந்த நேரத்தில் நான் கேள்விப்பட்டதற்கு எதிர் மறையாக தமக்கு தெரிந்த அரைகுறை தமிழில் எம்மோடு உரையாடி, தமது உணவுகளில் எமக்கும் வழங்கி எம்மோடு அன்பாக பழகிய அந்த இராணுவத்தினரைப் பற்றி நினைக்கும் போதும்... இன்று ராணுவத்தினர் இரக்கமின்றி செய்யும் கொடும் செயல்களை கேள்வியுறும் போதும் என் நெஞ்சம் கனக்கின்றது.

வண்ணார் பண்ணைக்குள் அடங்காவிட்டாலும் எனது வீட்டில் இருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கும் அந்த கல்லூரி... நான் படித்த அந்த கல்லூரி... இன்று பல்கலைக் கழக வளாகம் என்ற பெருமையுடன் இருக்கும் அன்றைய பரமேஸ்வராக் கல்லூரி. இதுவும் வண்ணார் பண்ணை கிழக்கின் எல்லையைத் தாண்டி திருநெல்வேலிக்குள் அடங்கினாலும் எங்கள் மண்ணிற்கு வாசம் சேர்ப்பவைகளில் இவைகளும் அடங்கும்.

இந்தக் கல்லூரி உருவாக்கிவிட்ட, அறிஞர்களும் விளையாட்டு வீரர்களும் மிக மிக அதிகம்.

இந்தக் கல்லூரியின் அதிபராக நீண்ட காலம் கடமையாற்றியவர் திரு சிவபாத சுந்தரம் அவர்கள். திரு ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் வலது கரம் என்று கூட இவரைக் கூறுவார்கள்.

சிவபாத சுந்தரம் பரமேஸ்வராக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய காலங்கள் கல்லூரியில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலங்கள்.

இவர் எனது வீட்டிற்கு அண்மையில் வசித்ததால் எங்கள் மண்ணோடு சேர்ந்து எனது எழுத்தும் வாசம் பெறுகின்றது.

நான் கல்லூரிக்கு செல்வதற்காக இராமநாதன் வீதியால் செல்லும் போது இடையில் வருகின்றது கலட்டி சந்தி. இந்த சந்தியில் இருந்து தெற்கு பக்கம் செல்லும் வீதி பிறவுண் வீதி. அப்படி ஒரு பெயர் அந்த வீதிக்கு எப்படி வந்தது என்று இன்னும் எனக்கு தெரியவில்லை; ஆனாலும் அது புகழ் பெற்ற வீதி.

அந்த வீதியில் முதல் வருவது ஒரு வண்ணாங்குளம்... அருகில் ஒரு... கோவில், பெரிய தம்பிரான் கோவில் என்று கூறுவார்கள். ஆடைகளின் அழுக்கை அகற்றி வெண்மைப்படுத்தும் அந்த தொழிலாளர்களின் களைப்பை போக்க தங்கும் ஒரு மடம் போலவும் அந்த ஆலயம் விளங்கும்.

இன்னும் சிறிது தாண்டிப் போனால் சந்திரா பெனியன் கொம்பனி, அடுத்து யாழ்ப்பாணத்தில் பிரபலம் வாய்ந்த கல்லூரிகளில் ஒன்று இந்து மகளிர் கல்லூரி.

இப்படி சொன்னால் பலருக்கு தெரியாது... மழைத் தண்ணீரில் கடுதாசிக் கப்பல் விட்டு விளையாடும் சிறுவர் முதல் பள்ளிக் கூட வாசனையே தெரியாத கூலி வேலை செய்யும் கிழவர்கள் வரை, ''லேடிஸ் கொலிஜ்'' என்று தான் சொல்லுவார்கள்.

மணம் கமழும் எங்கள் மண்ணிற்கு வாசனைப் பொருளாக இந்த பெண்கள் இந்துக் கல்லூரியும் இருக்கின்றது.

காலை எட்டு மணியென்றால் பிறவுண் வீதியால், வெள்ளை சட்டை அணிந்து பச்சை கோடுகள் போட்ட ரை கட்டி குழந்தையை



நோகாமல் இறுக்க அணைத்து வைத்துக் கொள்ளும் தாயைப் போல மார்போடு புத்தகங்களை அணைத்துச் செல்லும் மாணவிகளோடு, கண்ணுக்கு மையும், சொண்டிற்கு சிவப்பும் பூசி கலர் கலரான நாகரீக உடையணிந்து இவர்களோடு கலந்து செல்லும் (சந்திரா பெனியன் கொம்பனியில் வேலை செய்யும்) இளம் நங்கைகளும் நடந்து செல்ல... இவர்களை சைட் அடிப்பதற்கென்றே தினமும் வேலைக்கு போவர்களை போல வேறு பாதையால் செல்ல வேண்டிய இளைஞர்கள் எல்லாம் அந்த வீதியில் பல தடவை சுற்றி சுற்றி வரும் அந்த ஜொள் வடியும் காட்சியோடு... 'தங்களை திரும்பியும் பாராத இந்தப் பெட்டையள் லோங்ஸ் போட்ட பொடியனைப் பாத்து சிரிக்கிறாளவையே' என்று எரிச்சலில் சிக்குண்ட அந்த வீதியில் வசிக்கும் இளைஞர்கள். தாங்கள் ஏதோ. இராம அவதாரங்கள் போல நடித்து அந்த இளைஞர்கள் வெருட்டி விரட்டும் காட்சி... எத்தனையோ ஆண்டுகள் கடந்தாலும் என் கண்முன்னே இன்றும் திரைப்படம் போல ஓடுகின்றது!

இவை அந்த மண்ணிற்கு வாசம் தருகின்றதோ இல்லையோ நான் எழுதும் போது என் மனதிற்குள் இதமாக வந்து என்னை எழுது எழுது என்று தூண்டி உற்சாகப்படுத்துகின்றது; ஒரு சுகத்தை தருகின்றது.

இராமநாதன் வீதியின் கிழக்குப்பக்கம் இப்படியான வாசனைகளை கூறினால்... மேற்கு பக்கம் வந்தால் நாச்சிமார்கோவில் என்று பலராலும் அழைக்கப்படும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மாள் ஆலயம் உயர்ந்த கோபுரத்துடன் நிமிர்ந்து நிற்கின்றது.

இந்த ஆலயத்திற்கு முன்னே காங்கேசன் துறை வீதி...

காங்கேசன்துறை வீதியில் தெற்குபக்கமாக திரும்பினால் யாழ்ப்பாணம் நோக்கி நகர்கின்றது... தட்டா தெரு சந்திக்கு முன்பாக எங்கள் மண்ணில் உயர்ந்து நிற்கும் ஒரு பெரிய தொழிற்சாலை, மில்க் வைற் சோப் தொழிற்சாலை.

அந்த தொழிற்சாலையை சொல்லி பெருமைப்படுவதை விட அதன் அதிபர், வள்ளல், சிவனெறிச் செல்வர், திரு கனகராசா அவர்களும் அந்த மண்ணில் வாழ்கின்றார் என்பதில் எனக்கு மிகவும் பெருமை.

இவரை ஒரு தீர்க்க தரிசி என்று கூட சொல்லலாம். நீண்ட கால நோக்கோடு சிந்தித்து பனம் விதைகளை மக்களுக்கு இலவசமாக வினியோகம் செய்வார். தூர்த்த குளங்களை தூர் எடுத்து புதுப்பிப்பார். தனது செலவில், வாசகசாலைகள், ஆரம்ப கல்வி நிலையங்கள் வளர பண உதவி செய்வார்; பனை வளர்ப்போம் பயன் பெறுவோம் என்ற வாசகங்களுடன் பறக்கும் மஞ்சள் கொடி இவருடைய காரில் என்றும் பறந்து கொண்டிருக்கும். இந்த பெரியவரும் எங்கள் மண்ணிற்கு வாசனை சேர்க்கின்றார்.

தட்டாதெரு சந்திக்கு சற்று அருகில் புகழ்பெற்ற கெங்காதரன் வைத்திய சாலை. தட்டா தெரு சந்தியை தாண்டி போனால்... யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

இதற்கு மேல் நான் போகக் கூடாது.

ஆனால் இந்தக் கல்லூரியை பற்றியும் எழுதாது இந்தக் கட்டுரையை நிறுத்தவும் கூடாது.

பால் கறப்பதை ஒத்திவைக்க முடியாது; நாளைக்கு சேர்த்துக் கறந்து கொள்ளலாம் என்றால் முடியுமா? அது போன்றுதான் இதுவும்.

மிகச் சிறந்த கல்விமான் கனகலிங்கம் அவர்கள் பல வருடங்கள் இங்கு அதிபராக இருந்து பல மாணவர்களை இன்று உயர்ந்த நிலையில் இருக்க வழி சமைத்தவர்... மென் பந்தாட்டம், உதை பந்தாட்டம், இவைகளில் பல வருடங்கள், மாவட்ட ரீதியாக வெற்றிக் கிண்ணத்தை பெற்ற கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

திரு. கனகலிங்கம் அவர்களுக்குப் பின் வந்த அதிபர்களில் நான் குறிப்பிட்டுச் சொல்லி பெருமைப் படக் கூடியவர் திரு. மு. கார்த்திகேசன் அவர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் அத்திவாரக் கற்களில் இவரும் ஒருவர். திரு. பீட்டர் கெனமன், திரு. சண்முகதாசன் போன்ற பெரும் தலைவர்களுக்கு, மிகவும் நெருக்கமான நண்பர். சில காலம் யாழ் மாநகரசபை உறுப்பினராக இருந்தவர். இவர் யாழ் இந்துக் கல்லூரியின்



அதிபர் பதவியை ஏற்ற பின் அங்கு ஒரு புரட்சிகர மாற்றம் இடம் பெற்றது.

இதுவரை காலமும் ஒரு குறிப்பிட்ட இன மக்கள் மட்டுமே அங்கு கல்வி கற்க முடியும் என்ற தடையை அகற்றி அனைவருக்கும், இந்தக் கல்லூரி சமம் என்று அங்கு நடைமுறையில் இருந்த சாதி அமைப்பை உடைத்தெறிந்த பெரியவர்.

இவர் நான் பிறந்த மண்ணில் வாழ்ந்தது எமது மண்ணிற்கு வாசனை என்றால் எனது வீட்டிற்கு அருகில் இவர் வாழ்ந்தது எனக்கு பெருமை.

இவருடன் நீண்ட காலம் பழகுகின்ற சந்தர்ப்பம் கிடைத்ததால், பலவற்றை கற்க முடிந்தது, பல அறிஞர்களின் நட்பைப் பெற முடிந்தது.

அவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள் பிரபல எழுத்தாளர் கே. டானியல், மல்லிகை டோமினிக் ஜீவா, கம்யூனிஸ்ட் தோழர் வீ.ஏ. கந்தசாமி போன்றவர்கள்.

எங்கள் மண்ணில் பிறக்காவிட்டாலும், எங்கள் மண்ணில் இறக்காவிட்டாலும், இவர் எங்கள் மண்ணில் வாழ்ந்ததே எங்கள் மண்ணிற்கு வாசனைதான்.

யாழ் மாநகர சபை பத்து வட்டாரங்களாக இருந்த போது வண்ணார் பண்ணை கிழக்கை சேர்ந்த திரு. துரைராஜா மாநகர சபையின் மேயராக பல தடவை இருந்திருக்கின்றார். பின்பு, இருபத்து மூன்று வட்டாரங்களாக விரிந்த போது அதே மண்ணைச் சேர்ந்த புறக்டர் விசுவநாதன் அவர்கள் மேயராக பணியாற்றினார்.

இவையெல்லாம் எங்கள் மண்ணின் வாசனைகள்.

சிரித்திரன் சுந்தரனார் சிலகாலம் தமது அலுவலகத்தை வைத்து எங்கள் மண்ணிற்கு மணம் சேர்த்திருக்கின்றார்.

சிரித்திரன் அலுவலகத்திற்கு அருகிலேயே பிரபலம், வாய்ந்த சாராய வியாபாரக் கடை ஒன்றிருந்தது. அந்த கடை உரிமையாளரை

எல்லோரும் மாமா, என்றுதான் அழைப்பார்கள். அவரை பெயர் சொல்லி அழைப்பவர்கள் கூட வைரமுத்து மாமா என்றே அழைப்பார்கள்.

திரு. சுந்தரம் அவர்களுக்கு பல சமயங்களில் அந்த கடையின் வாடிக்கையாளர்களால் வரும் சத்தம் தொல்லையாக இருந்தாலும் சில சமயங்களில் நல்ல சிந்தனை மிக்க கருத்துக்களும் கிடைத்து விடுவதுண்டு.

ஒரு நாள் ஒரு 'குடிமகன்' நிறைய குடித்துக் கொண்டிருந்தார். அதற்கு அவர் ஒரு காரணமும் கூறிக் கொண்டிருந்தார் அது வினோதமானது. ''என்ரை மூத்தவன் இரண்டாம் தடவையும் எஸ்.எஸ்.சி சோதினையிலை குண்டடிச்சிட்டான். அந்தக் கவலையிலை குடிக்கிறன். இளைய பொடிச்சி முதல் தடவையிலேயே ஏழு பாடத்திலை பாஸ் பண்ணீட்டாள். அந்தச் சந்தோசத்திலை குடிக்கிறன்...'' என்று சொல்லிச் சொல்லி குடித்துக் கொண்டிருந்தார்.

இந்த சிரிப்பை எங்களுக்கு சொல்லி தானும் சிரித்த சுந்தரனார் அடுத்த சிரித்திரன் இதழில் இந்த சிரிப்பை சிந்தனைக்குரிய ஒரு கார்ட்டூனாக வரைந்திருந்தார். ஒருவர் இரண்டுகைகளிலும் சாராயப் போத்திலுடன் வருகின்றார். இன்னொருவர் ''என்னண்ண இண்டைக்கு இரண்டு போத்திலோடை'', என்று காரணம் கேட்க, இவர் சொல்கின்றார் ''இது மூத்தவன் சோதனையிலை பெயில் விட்ட கவலையை மறக்க, இது இளையவன் பாஸ் பண்ணின சந்தோசத்திலை.'' இப்படி ஒரு நல்ல சிந்தனையாளர் சிறிது காலம் எங்கள் மண்ணில் வாழ்ந்து விட்டு சென்றாலும், அவர் வாழ்ந்த காலங்களில் எழுந்த வாசங்கள் என்றும் எங்கள் மண்ணில் மணக்கும்.

யாழ் வின்சர் தியேட்டர், சாந்தி தியேட்டர் போன்ற பட அரங்குகளைக் கட்டிய திரு. பேரம்பலம் J.P. யாழ் நகரில் உயர்ந்த கவர்ச்சிகரமான கட்டிடங்களான ஆர்.ஜி. பில்டிங்ஸ் போன்ற கட்டிடங்களைக் கட்டிய திரு. தம்பிராசா, போன்றவர்கள் பிறந்த மண். சிறந்த மேடை பேச்சாளர் வண்ணை ஆனந்தன், யாழ்ப்பாணத்தில் மிகப்புகழ் பெற்ற கண்ணன் கோஸ்ட்டி கண்ணன், இரட்டையர் கோஸ்ட்டி அப்பி, பபி போன்ற இசைக்கலைஞர்கள் பிறந்து இன்றும்



எமது மண்ணிற்கு வாசம் சேர்த்துக் கொண்டிருக்கும் கலைஞர்களை தாங்கிய மண் எங்கள் மண்.

நவாலியில் பிறந்து எங்கள் மண்ணில் வாழ்ந்து எம் மண்ணிற்கு வாசம் சேர்த்த கலைஞர் சாகித்திய மண்டல பரிசு பெற்ற எழுத்தாளர் கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரை அவர்களாலும் எம்மண்ணிற்கு வாசனை உண்டு.

நாடக கலைஞர்கள் கலைக் காவலர் சி. தர்மலிங்கம், திரு இரா. பற்குணம், திரு. கிருஸ்ணமூர்த்தி, திரு V.T. அரசு போன்றவர்களால் வண்ணை மண்ணிற்கு மட்டுமல்லாமல், இந்த வாசங்கள் பரந்து விரிந்து கொடுத்ததை முகர்ந்தவர்கள் பலர் அறிவார்கள்.

எந்தன் மண்ணை அதன் வாசனையை எழுத எழுத அதன் வாசங்கள் என் சிந்தனையை சிலிர்க்க வைக்கின்றது.

ஒவ்வொரு மண்ணிற்கும் ஒரு வாசம் இருக்கத்தான் செய்கின்றது.

எனக்கு தெரிந்தது இவ்வளவுதான்.

தெரியாதது எவ்வளவோ?

இன்று எமது மண் வாசங்களை இழந்திருக்கலாம்; ஆனால் இந்த வாசங்கள் உதிர்த்த காலங்கள் மறப்பவைக்கு அப்பாற்பட்டது.

மீண்டும் அந்த வாசம் மணக்கும்!

எமது மண்ணின் வாசனையால் எமது மனங்கள் செழிக்கும்.

அந்த நாளுக்காக காத்திருப்போம்.''

**வண்ணை தெய்வம்**



# யாழ்ப்பாணத்தில் திருவிழாக்கள்

பொழுது சாயச் சாய நீளமாகிக் கொண்டு போகும் நிழல்களைப் போல... காலம் கடந்து போகப் போக நான் பிறந்த மண்ணின் நினைவுகளும் நீண்டுகொண்டே போகின்றது.

எவ்வளவு ஆனந்தமான நிகழ்வுகள்! எத்தனை ஆனந்தமாய் வாழ்ந்த மக்கள்! நாளை சாவை எதிர்நோக்கிக் காத்திருந்த கிழங்கள் கூட ஆனந்தமாய் வாழ்ந்து கொண்டிருந்த அன்றைய நாட்கள்!

வருடம் முழுவதும் மழை பொழிவதில்லைதான். ஆனால் வருடம் முழுவதும் சூரியன் உதிக்கின்றான்! வருடம் முழுவதும் காற்று வீசிக்கொண்டே இருக்கின்றது! அதுபோல நாம் பிறந்த மண்ணில் வருடம் பூராவும் ஆலயங்களில் திருவிழாக்கள் நடந்துகொண்டேயிருந்தன!

மக்களுக்கு தெய்வங்களின் மீது எவ்வளவு பக்தி! மதங்களால் மக்கள் வழிபடும் தெய்வங்கள் வேறு வேறாக இருந்தனவே தவிர எந்த மத மக்களிடமும் தெய்வ பக்தி குறைந்து நின்றதில்லை.

ஓலைக் குடிசையானாலும் சரி! ஓட்டு வீடானாலும் சரி! கடவுளின் படங்கள் இல்லாத இல்லங்களே இல்லை. அதுமாத்திரமா? ஊரில் பிரபலமான பெரிய கோவில்கள் இருந்தாலும் ஒவ்வொரு வீதிகளுக்குள்ளும் அங்கு வாழ்கின்ற மக்கள் தங்களுக்குள்ள குலதெய்வத்திற்கு சின்னதாகவாவது ஒரு கோவில் கட்டி வழிபட்டு வந்தார்கள்.

ஆலயங்களில் மூன்றுகாலப் பூசைகள் நடைபெற்றாலும் வருடத்தில் ஒரு தடவை நடைபெறும் திருவிழா நாட்களெல்லாம் அந்தந்த ஆலயங்களைச் சுற்றியுள்ள இல்லங்களில் எல்லாம் திருவிழாக்களாகத்தான் இருக்கும்.



மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட தெய்வத்தின்மீதுதான் பக்தி இருந்தது என்று ஒரு கட்டுப்பாடு இருந்ததில்லை. நல்லூர்க் கந்தனுக்கும் விரதமிருப்பார்கள்! நயினை நாகபூஷணி அம்மனுக்கும் விரதமிருப்பார்கள்! அதன் பின்னர் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மனுக்கும் விரதமிருப்பார்கள்! எல்லாம் அம்மன்தானே! ஒரு அம்மனுக்கு விரதம் இருந்தால் போதும் என்று அவர்களது மனங்கள் திருப்திப்பட்டுக் கொள்வதில்லை!

ஒரு ஊரிலேயே அம்மன் கோவில், பிள்ளையார் கோவில், அன்னமார் கோவில், காளிகோவில், வைரவர் கோவில், இப்படி எத்தனை கோவில்கள் இருக்கும்? அதிலும் ஒரு தெய்வத்தின் பெயரிலேயே பல கோவில்கள்! குறிப்பாக அம்மனின் பெயரில்... வீரமாகாளி அம்மன், காமாட்சி அம்மன், நாகபூஷணி அம்மன், மாரியம்மன், பன்றித்தலச்சி அம்மன், இப்படியாக இந்தப்பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

அதுபோல காவடிக் கந்தன், அலங்காரக் கந்தன், கோவணக் கந்தன், இப்படியாக கந்தனின் அவதாரங்களும் மிக மிக நீளமானவையே!

இதுபோல கிறிஸ்த்துவ மக்களுக்கும் மடு மாதா, அடைக்கல மாதா, கொலை விலக்கி மாதா, என்று மாதா பல பெயர்களில் பல ஊர்களில் இருந்தாலும் உற்சவங்கள் எந்தக் கோவிலில் நடந்தாலும் எல்லா மக்களும் அந்தந்த ஆலயங்களில் ஒன்றாகக் கூடிவிடும் அந்த அற்புதக் காட்சியைக் காணுகின்றபோது ஏற்படுகின்ற ஆனந்தத்திற்கு அளவே கிடையாது.

முஸ்லீம் மக்களின் பக்தியை வெறும் எழுத்தில் சொல்லிவிட முடியாது! மதியம் பன்னிரண்டு மணிக்கு பள்ளிவாசலில் குரான் ஓதும் சத்தத்தைக் கேட்டதும் அவர்கள் என்ன வேலையைச் செய்து கொண்டிருந்தாலும் முழங்காலில் நின்று அல்லாவைத் தரிசிப்பதை மட்டும் விட்டுவிடமாட்டார்கள்.

இந்த நினைவுகள் எல்லாம் வெறும் நினைவுகள் அல்ல! எம் நெஞ்சங்களை விட்டு அகலாத கல்வெட்டுக்கள்.

இனி திருவிழாக் கோலங்களைத் தரிசிப்போம்.

பூ மலரும்வேளை அழகானது! பூ, சொரியும் வேளையும் அழகானதுதான்! அதுபோல ஆலயங்களில் வழமையான நாட்களைவிட திருவிழாக் காலங்களில் காலையானாலும் சரி, மாலையானாலும்சரி, ஆலயச் சுற்றாடல்கள் தூய்மையானவையாக இருக்கும். மக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

இந்த மக்களை பலவிதமாக பிரித்துக்கொள்ளலாம்! எப்படி? குறிப்பாக நல்லூர்க் கந்தசாமி கோவிலை எடுத்துக்கொள்வோம். திருவிழா நடைபெறும் அந்த இருபத்தைந்து நாட்களும் அந்த மண் எத்தனை லட்சம் மக்களைச் சுமந்திருக்கும்!? ஏன்... கோடியைத் தாண்டியிருக்கும் என்றுகூடச் சொல்லலாம்!

இதில் எத்தனை விதமானவர்கள் உண்மையான தெய்வபக்தியோடு வந்தவர்கள் என்று ஒரு கணக்கெடுத்தால் பத்து வீதமானவர்கள்கூடத் தேறமாட்டார்கள்! அவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் ஐம்பது வயதைத் தாண்டியவர்களாகவே இருப்பார்கள்! கந்தப்பெருமான் வீதிவலத்திற்காக வெளியே வந்து காட்சி கொடுக்கும் போது அரோகரா என அனைவரும் ஒருமித்துக் குரல்கொடுக்கும் அந்த நேரத்தில் அவர்களின் முகங்களில் மலரும் மகிழ்ச்சியை வர்ணிப்பதற்கு வார்த்தைகளைத் தேடி எடுக்க வேண்டும்!

திருவிழாக்காலங்களில் ஆலயச் சுற்றாடல்களில் மட்டுமல்ல, சுமார் இரண்டு மைல் சுற்றளவிற்கு மழைக்காலங்களில் முளைவிட்ட காளான்களைப்போல புதிதாக முளைத்திருக்கும் காப்புக்கடைகள், கரும்புக்கடைகள், கடலைக்கடைகள், ஐஸ்க்கிரீம் கடைகள், பலூன் கடைகள், பாத்திரக் கடைகள், இப்படி பலவிதமான கடைகள் விதவிதமாக இருக்கும். திருவிழாக்காலங்களில் இந்த நடமாடும் வியாபாரிகளின் மகிழ்ச்சி அளவெடுத்துச் சொல்லிவிட முடியாது.



இந்த வியாபாரிகளுக்கு மட்டும்தான் திருவிழாக் காலங்கள் மகிழ்ச்சியான காலங்கள் என்றில்லை! இந்த வியாபாரிகளுக்கென தங்கள் வீட்டு வளவுகளில் சிறு சிறு இடங்களை ஒரு மாதகாலத்திற்கு வாடகைக்குக் கொடுத்து பணம் சம்பாதித்துக்கொள்ளும் காணிச் சொந்தக்காரர்களின் மகிழ்ச்சியும் வித்தியாசமானதே!

மக்கள் வங்கி போன்ற பெரிய அரச நிறுவனங்கள்கூட அந்த ஒருமாத காலத்திற்கு தற்காலிகமாக ஒரு கிளையை அங்கு உருவாக்கி புதிய வாடிக்கையாளர்களைத் தேடிக்கொண்டு மகிழ்ச்சிப்பட்டுக் கொள்வார்கள்.

வித, விதமான தங்களது உடைகளையும் நகைகளையும் மற்றவர்களுக்கு காட்டி விளம்பரப் படுத்திக்கொள்வதற்காக வரும் வயதுப் பெண்களின் மகிழ்ச்சி! தங்களிடம் சொந்தமாக நகைகள் இல்லாவிட்டாலும் இரவல் வாங்கியணிந்து அழகுபார்ப்பவர்களின் மகிழ்ச்சி! இவர்களுக்கு மத்தியில் இவர்களை ரசிப்பதற்கென்றே வட்டமடிக்கும் வாலிபர்களின் மகிழ்ச்சியோ இரட்டிப்பானது.

காதலர்களுக்கோ பறவைகளின் வேடந்தாங்கல் போல உருவாகும் அந்தத் திருவிழாக் காலங்கள்! புதிதாக உருவாகும் பலசோடிக் காதலர்கள்! தூது செல்லும் காகிதப்புறாக்கள்! அம்மா மகளை கவனமாக கையைப்பிடித்து அழைத்துச் சென்றாலும் அம்மாவிற்குத் தெரியாமல் மகளின் அடுத்த கைக்குள் காதல்கடிதம் கொடுத்துச் செல்லும் வாலிபர்களின் மகிழ்ச்சிக்கும் எல்லையுண்டோ!?

வயிற்றுப் பிழைப்பிற்காக மந்திரம் தந்திரம் என்று மாயாஜால வித்தை காட்டுபவர்களும்! கிளிச்சோதிடம், ரேகைச்சோதிடம், கணனிச் சோதிடம், என்று இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி பணம் பண்ணி மகிழ்பவர்களும் உண்டு.

இவர்கள் மட்டுமா? பிற் பொக்கற் கொள்ளையர்கள், பிள்ளைகளை கடத்தி நகை பறிப்பவர்களும் மகிழ்ச்சியாகத்தான் உலாவுவார்கள்! மாட்டிக்கொண்ட பின்னர் அவர்களின் மகிழ்ச்சி வேறுமாதிரி இருக்கும்!

பிச்சைக்காரர்களுக்கும் இந்தத் திருவிழாக் காலம் மகிழ்ச்சியைக் கொடுக்கத் தவறுவதில்லை. நூற்றுக்கணக்காக வரிசையில் இருக்கும் பிச்சைக்காரர்களில், வேடம் போட்டு, நடித்துப் பிச்சையெடுப்பவர்களே அதிகம்! அடுத்தவர்களை ஏமாற்றியதில் அவர்களுக்கும் மகிழ்ச்சிதான்.

திருவிழாக்கள் ஆலயத்திற்கு ஆலயம் வித்தியாசமானதாகவே இருக்கும். முருகனின் பெயரில் பல ஆலயங்கள் இருந்தாலும் திருவிழாக்களின் வழிமுறைகள் மாறுபட்டதாகவே இருக்கின்றன! கதிர்காமத்தில் கந்தன், நல்லூரில் கந்தன், மாவிட்டபுரத்தில் கந்தன், சன்னதியில் கந்தன், இப்படிப் பல இடங்களில் கந்தனின் ஆலயங்கள் இருந்தாலும் ஒவ்வொரு ஆலயத்திலும் வேறு வேறு சிறப்புக்கள் இருப்பதாக பக்தர்கள் சொல்லிக் கொள்கின்றார்கள்.

சன்னதிக் கந்தனைக் காவடிக் கந்தன் என்பார்கள். திருவிழாக் காலங்களில் பக்தர்கள் சன்னதி முருகனுக்கு காவடி எடுப்பதைப் போல வேறு எந்த ஆலயங்களிலும் காண முடியாது! அதிலும் பல பக்தர்கள் தங்களை வருத்தி எடுக்கும் தூக்குக்காவடி, ஆட்டக்காவடி, போன்றவை மிகவும் வேதனை கொடுக்கக்கூடியவை.

நல்லூர்க் கந்தனை அலங்காரக் கந்தன் என்பார்கள். ஆம் முருகப்பெருமான் அலங்கரித்து வீதிவலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

கதிர்காமக் கந்தனை மக்கள் வழிபடும் முறையே மாறுபட்டது. எனது பாட்டனார் காலத்தில் நேர்த்தி வைத்து திருவிழாக் காலத்திற்கு மூன்று மாதகாலத்திற்கு முன்பாகவே பாத யாத்திரையாக செல்பவர்களும் ஏராளமானவர்களாம். நடந்து செல்பவர் ஆனாலும் சரி, வாகனங்களில் செல்பவர்கள் ஆனாலும் சரி கதிர்காமப் பயணத்திற்கு முதல்நாளே விரதம் இருக்க ஆரம்பித்துவிடுவார்கள். பின் ஆலய தரிசனம் முடிவடைந்து வீடு வந்து அன்னதானம் கொடுத்து விரதத்தை முடித்துவைத்த பின்னர்தான் அசைவ உணவு உண்பார்கள்.

குதிரை முகம் நீக்கி மனித முகத்தை அருளியதாக வரலாறு கூறும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலும், அதனை அண்டியுள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும் மிகவும் பிரசித்தி பெற்றவை.



ஆடி அமாவாசை தினத்தில் தந்தையை இழந்தவர்கள் கீரிமலைக் கேணியில் தீர்த்தமாடி விரதம் அனுஸ்ட்டிப்பது வழமை. அன்றையதினம் கீரிமலைக் கேணி மட்டுமல்ல அதனை அண்டியுள்ள கடற்கரையெங்கும் மனித தலைகளாகவே காட்சியளிக்கும்!

இப்படியாக பக்தி பரவசிக்கும் திருவிழாக்களும், இவைகளுக்கு எதிர்மாறாக ஆடு, கோழி, போன்றவற்றை பலிகொடுத்து நடக்கின்ற திருவிழாக்களும் உண்டு! நவாலி, சுன்னாகம், காங்கேசன்துறை, போன்ற இடங்களில் இப்படி வேள்வி நடைபெறும் ஆலயங்கள் பிரசித்தியானவை. அதிலும்கூட போட்டிகளும் உண்டு! யாருடைய ஆடு மிகப்பெரியது, அதிக நிறையானது என்பதில் பலர் பந்தயம் வைத்துக் கொள்வார்கள். இந்தப் போட்டிக்குரிய ஆடுகள் அன்றையதினம் மணப் பெண்ணைப் போல அலங்கரிக்கப்பட்டு மாலை அணிவித்து பலி கொடுக்கப்படும் இடத்திற்கு மேளதாளங்களுடன் அழைத்துவரப்படும். தங்களுடைய ஆடு ஒரே வெட்டில் தலை துண்டிக்கப்படாவிட்டால் அவர்களுக்குள் வெட்டுப்பாடு ஏற்படுவதும் உண்டு.

அரசாங்கம் சட்டரீதியாக இதனைத் தடை செய்திருந்தாலும் இந்த மாதிரியான பூசைகளில் நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் இன்றைக்கும்கூட அரசாங்கத்திற்குத் தெரியாமல் இந்த வேள்வித் திருவிழாக்களை நடத்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

விரதம் இருந்து வழிபடும் முறையில் இந்துக்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் அல்ல முஸ்லீம் மக்கள். ரம்ஜான் காலங்களில் நாற்பத்தியொரு நாட்கள் அதிகாலையில் பிறை கண்டபின் ஒரு நேர உணவு மட்டுமே உண்பார்கள். குரானுக்கு அவர்கள் கொடுக்கும் மரியாதையோ மிக உயர்வானது.

கிறிஸ்த்தவ மக்கள் ஆண்டவருக்கு மட்டுமல்ல, ஆலயக் குருக்களுக்கும்கூட பக்தி கலந்த மரியாதையை அதிகம் கொடுப்பார்கள். தாங்கள் உண்பதை மறந்தாலும் ஆலயப்பூசைகளில் கலந்துகொள்ளத் தவறவே மாட்டார்கள்.

பெரியவெள்ளி, உதிர்த்த ஞாயிறு, பாலன் பிறப்பு, (நந்தார்) போன்ற விசேஷ தினங்களில் கிறித்தவ மக்களை அவர்களின் இல்லங்களிலேயே பார்க்கமுடியாது! அனைவரும் ஆலயத்தில்தான் இருப்பார்கள்.

பொதுவாக எல்லா மத ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களும் சிறப்பாகவே இருக்கும். இந்தத் திருவிழாக்களைப் பற்றி இன்னும் நிறைய எழுத இருக்கின்றது. சொல்லப்போனால் திருவிழாக்களைப் பற்றி தனியாகவே ஒரு புத்தகம் எழுதலாம்.

இசைக் கச்சேரிகள், சின்னமேளங்கள் வைத்துச் சிறப்புப்பெறும் ஆலயங்களும், நாதஸ்வரக் கச்சேரி, கதாப்பிரசங்கங்கள் என பக்திக்கு முதலிடம் கொடுக்கும் ஆலயங்களும், ஏராளமான சிகரங்கள் வர்ண லைற் சோடனையுடன் இந்தியாவில் இருந்து பிரபலமான பாடகர்களை அழைத்து நடைபெறும் வியக்கவைக்கும் திருவிழாக்களும் இந்தப் பகுதியில் விபரமாக எழுதப்படாதவை.

இந்த மண்வாசனை நூலுக்கு திருவிழாக்களின் சிறப்புகளும் இடம் பெற வேண்டும் என்பதற்காக சுருக்கமாக சுவையாக முடித்திருக்கின்றேன்.



# புனிதம் நிறைந்த யாழ்நகரின் நல்லூர் மண்

சிகரத்தில் இருந்தாலும் சரி! பள்ளத்தில் உருண்டாலும் சரி! எனக்கு தலைச்சுற்றல் வந்ததில்லை! எந்த நேரத்திலும் பழையனவற்றை நான் மறந்து விடுவதில்லை. ஐரோப்பாவிற்கு வந்து இருபது வருடங்கள் ஓடிவிட்டன! ஆனாலும் இன்று, எனக்குப் பக்கத்தில் இருப்பவர்களைவிட, நான் பிறந்த மண்ணில் அன்று எனக்குப் பக்கத்தில் இருந்தவர்கள் இன்னமும் எனது இதயத்தில் இருக்கின்றார்கள். சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் பலரை நினைவு கூர்ந்திருக்கின்றேன்.

மண்வாசனை என்னும் இந்தப் பகுதியில் எனது இதயத்தில் முதலில் இடம்பிடித்தது ''நல்லூர் கந்தன் ஆலயம்.'' தொடர்ந்து இந்தப் பகுதியில் அறிஞர்கள் பலர் தாங்கள் பிறந்த மண்ணின் வாசங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வார்கள்.

''நல்லூர்'' அந்த கந்தன் ஆலயம் மட்டுமல்ல! ஆலய சுற்றாடலை அடைந்ததுமே எம்மையறியாமலேயே எமக்குள் ஒரு பக்தி உண்டாகும்! அப்படியான ஒரு புனித இடம் அது.

உற்சவம் நடைபெறும் அந்த இருபத்தைந்து நாட்களும் இலட்சக்கணக்கான மக்களை தன்பால் ஈர்த்து வைத்திருக்கும் ''நல்லூர்க் கந்தன்'' என்னையும் ஈர்த்ததில் விந்தையென்ன இருக்கமுடியும்!

ஒரு முப்பது வருடங்கள் பின்னோக்கிச் சென்று நல்லை மண்ணின் வாசத்தை முகர்கின்றேன்.





என்னால் முடிந்த அளவு சுருக்கமாக, சுவையாக, எழுத முயற்சிக்கின்றேன்.

''நல்லூர் கந்தன் ஆலயம்'' நான் அறிந்தவரை இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களிலே மணித்துளியும் தப்பாது குறித்த நேரத்தில் பூசைகள் நடைபெறும் ஒரு ஆலயமென்றால் அது ''நல்லைக் கந்தன்'' ஆலயம்தான்!

உயர்ந்த ராஜகோபுரத்தின் உச்சியில் ஓம் முருகா என்று ஒளிவிடும் வாசகங்கள், அழகான மணிமண்டபம், முன்னே கந்தன் பவனிவரும் ரதத்தின் வசந்த மாளிகை, இடதுபக்கத்தில் கந்தனின் இன்னும் சில வாகனங்களின் இல்லங்கள், வலது பக்கத்தில் நாவலருக்கு ஒரு மணி மண்டபம், அருகே தீர்த்தக்குளம், பின்வீதிக்கு மிக அண்மையில் மணி ஐயர் அவர்களின் மண்டபம்... இப்படி ஆலயத்தைச் சுத்திவர புனிதம் நிறைந்த மண்டபங்களும், இல்லங்களுமே! உற்சவக்காலத்தில், தினமும் விரதமிருந்து அதிகாலை நான்கு மணிப் பூசையில் இருந்து மணி ஐயரின் கதாபிரசங்கத்துடன் அர்த்தசாம பூசையையும் தவறாது தரிசித்து கந்தனின் அருளுக்காக தவம் கிடக்கும் பழசுகளும்! வாழ்க்கையில் வெற்றிப்படிகளில் கால்பதிப்பதற்காக! தங்களது எதிர்காலம் செழிப்போடு இருக்க வேண்டும் என்ற ஏக்கத்தோடு தங்களது வசதிக்கு ஏற்ற வகையில் தினத்திற்கு, தினம் விரதமிருந்து திருப்திப்பட்டுக்கொள்ளும் நடுத்தரங்கள்! ஒரு பவுசுக்காக! விரதமாக நடித்துக் கொள்ளும் இளசுகளும் சங்கமிக்கும் ஒரு வேடந்தாங்கல்தான் நல்லூர்!

முருகபக்தர்களுக்கு அருள் கிடைக்கின்றதோ! இல்லையோ? வாலிப பக்தர்களுக்கு நிட்சயம் அருள்கிடைக்கும்! கண்களால் கதை பேசுவதும்! பெற்றோர்களுடன் செல்லும்போதே கடிதம் மாற்றிக் கொள்வதும்! சந்திப்பதற்காகவே கந்தனின் வீதியிலே குந்தியிருக்கும் வாலிபங்களையும் அங்கு தினமும் காணலாம்.

கடலை வியாபாரிகள் முதல், காப்பு வியாபாரிகள் வரை, உடல் இல்லை தலைபேசுகின்றது! என்றும்! அதிசயமாக எங்கோ இரண்டு தலையுடன் பிறந்த நாயைக் கொண்டுவந்து சின்னக் கூடாரத்துக்குள் வைத்து ''இரண்டு தலை நாய் கண்ணடித்துக் கூப்பிடுகின்றது'' என்று

கூறி பத்துப், பத்து சதமாக பிடுங்கிக்கொள்ளும் ஏமாற்றுப் பேர்வழிகளுக்கும் திருவிழாக் காலம் கொண்டாட்டம்தான்.

இவை மட்டுமா? பாவாடையோடு திரிந்த பதினைந்து வயதிற்கும் உட்பட்ட பருவமங்கைகள்! முதன்முறையாக உடுக்கத்தெரியாமல் சேலையுடுத்து நடப்பதற்கு சிரமப்பட்டாலும் பெரிய பெண்களாட்டம் பந்தா காட்டிக் கொள்வதும்! வீடு திரும்பும்பொழுது அவிழ்ந்த கொய்யகத்தை ஒரு கையால் அள்ளிக்கொண்டு வருவதும் அற்புதமான காட்சிகள் (இவர்களை வாலிபர்கள் 'எல் போர்ட்', என்று கிண்டல் செய்வதுமுண்டு)

அதுபோல அன்றுதான் வேட்டி கட்டி, சட்டை போடாமல்! மேலில் சால்வையோடும் கொஞ்சம் வசதியுள்ளவர்கள்! சால்வையை இடுப்பில் கட்டி பொக்கிளில் புலிப்பல்லு முட்டும் டைமன் சங்கிலி போட்டு பந்தா காட்டிவரும் காளைகளும் நிறையவே உண்டு!

ஐஸ்ப்பழக்கடையில் இருந்து அலுமேனியக் கடைவரை களைகட்டும். கன்னியர்க்கு கையைப்பிடித்து காப்புப் போட்டுவிடும் கடைக்காரர்களின் குறும்பு! பெற்றோர்களைத் தவறவிட்ட குழந்தைகளின் அழுகுரல்களை ஒலிபெருக்கியில் ஒலிக்க வைத்து சிரித்துக்கொண்டிருக்கும் தொண்டர்கள்! சனக்கூட்டத்தைப் பயன்படுத்தி நகைகளை பறித்தெடுக்கும் திருடர்கள்! இப்படி எத்தனை எத்தனையோ! இவைகள் இன்னமும் எனது மனதிற்குள் ரீங்காரமிட்டவண்ணமே இருக்கின்றது.

பூங்காவனத் திருநாளுக்கு மறுநாள் கடைகளை மூட்டைகட்டிப் புறப்படும் வியாபாரிகள், யாராவது காசைத் தொலைக்கமாட்டார்களா? என்ற ஏக்கத்துடன் வீதிகளில் தேடி அலையும் அயல்ச்சிறிசுகள், துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மாநகரசபைப் பணியாளர்கள், களை இழந்து கிடக்கும் ஆலயவீதிகள், இவைகளையெல்லாம் இனி எப்பொழுது பார்க்கப் போகின்றோம்? பல்லாயிரம் மைல்களை கடந்து வந்து இன்று எங்கள் சொந்த மண்ணின் வாசங்களை சொல்லி மகிழ்வதிலேயே இன்பம் காணவேண்டியவர்களாகிவிட்டோம்! கண்டுகொள்கின்றோம்.

✪





# கலைஞர் ஏ. ரகுநாதன்

**(பிரான்ஸ்)**

அண்ணன் ரகுநாதன் அவர்கள்
ஈழத்தின் நாடகத் தந்தை கலையரசு
சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் மாணவர்களில் இன்று எங்களோடு இருப்பவர்.

ஈழத்து தமிழ்த் திரைப்படத் துறையின் வழிகாட்டிகளில் ஒருவர்.

ஈழத்துத் திரைப்படங்களான கடமையின் எல்லை, நிர்மலா, தெய்வம் தந்த வீடு போன்ற திரைப்படங்கள் உருவாவதற்கு மூலகர்த்தாவாக இருந்ததோடு அப்படங்களில் நடித்தும் இருக்கின்றார்.

மிகப் புகழ் பெற்ற நாடகமான தேரோட்டி மகன், இவருக்கு புகழ் சேர்த்துக் கொடுத்த நாடகங்களில் ஒன்று. இலங்கையில் இருந்து கலைச் செய்திகளை மட்டும் தாங்கி வந்த நிழல் பத்திரிகைக்கும், பாரிசில் இருந்து வெளிவந்த பாரிஸ் முரசு பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்திருக்கின்றார். ஐரோப்பாவிலும் பல சின்னத் திரைப்படங்களை நெறிப்படுத்தியிருக்கின்றார்.

அது மாத்திரமல்ல ''எனக்காகப் பூக்கும்'' என்னும் நாவலையும் எழுதி வெளியிட்டிருக்கின்றார்.

இத்தனை சிறப்புக்களுக்கும் உரியவரான அண்ணன் ரகுநாதன் அவர்கள் நான் விரும்பிக் கேட்டதற்கிணங்க வண்ணை பத்திரிகைக்கு

ஈழத்துக் கலைஞர்களைப் பற்றியும், ஒப்பனைத் திலகம் பெஞ்சமின் அவர்களைப் பற்றியும் எழுதிய கட்டுரைகளை இம்மண் வாசனையிலும் பதிய வைத்திருக்கின்றேன்.

## 20ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் வளர்ந்த கலைகள்

மொழிக்கு முன் பிறந்தது கலை (அபிநயம்) என்பர் ஆன்றோர்கள். அந்தக் கலைகளில் பல கிளைகள்.

எந்தக் கலையும் மக்களை மகிழ்விப்பவையே. அதுதான் கலைகள் வாழ்வதன் அடிப்படை., ஆராதிக்கப்படுவதின் சூத்திரம்.

நடனம், நாடகம், இசை, திரைப்படம், என அவை விரியும். இதில் தலையானது நாடகம் எனலாம். ஏனெனில் மற்றெல்லாக் கலைகளையும் தன்னுள் அகம் கொண்டது நாடகக் கலை. அதன் விஞ்ஞான வடிவம் தான் திரைப்படக் கலை.

அப்படிப்பட்ட நாடகக் கலையில் கூத்து, இசை நாடகம் , வசன நாடகம், நவீன நாடகம், எனப் பல பெரும் பிரிவுகள் காலத்திற்கேற்ப பரிமாணங்களை எடுத்து வளர்ந்து வந்துள்ளன.

ஈழத்தில் இருபதாம் நூற்றாண்டின் மையப்பகுதியில் இக் கலைகள் மிகச் சிறப்பாக துளிர்த்து படர்ந்து இன்னும் ஒரு கால் நூற்றாண்டில் நாம் கலை வழியில் தனித்துவம் படைப்போம் என்று இறுமாந்திருந்தோம்! அதற்குச் சான்றாக இலக்கியத் துறையில் மிகச் சிறப்பான தனித்துவம் வாய்ந்த எழுத்தாளர்களும் விமர்சகர்களும் எம்முள் திகழ்ந்தார்கள்.

கலை வளர்ப்பதற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கலாநிதி வித்தியானந்தன் போன்றவர்களும் கலையில் புடம் போட்டார்கள். எந்த ஒரு நாட்டிலும் கலையும், இலக்கியமும், இணைந்து வாழ்ந்தால்தான் அவை சிறக்கும். இது சரித்திரம். நல்ல கலைகளுக்கு மூலாதாரம் இலக்கியம் தான்.

அப்படி அக் காலகட்டத்தில் வளர்ந்து நிமிர்ந்த ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு முதுகெலும்பாக முற்போக்கு எழுத்தாளர்கள் திகழ்ந்தார்கள்.



டானியல், கணேசலிங்கம், எஸ். பொ. கைலாசபதி, டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், அகஸ்த்தியர், கனக செந்தில்நாதன், மு. கனகராஜன், கவிஞர் கந்தவனம், சாந்தன், நீர்வை பொன்னையன், கமால்தீன், என இது பெருவரிசைப்படும்.

அதேபோல கலையின் மூத்த பிரிவான நாட்டுக்கூத்தில் பூந்தான் யோசப்பு, மௌனகுரு, சிலுவைராசா, என ஒரு வரிசையும்; இசை நாடகத்தில் சி.ரி. செல்வராசா, நடிகமணி வி.வி. வைரமுத்து, மாசிலாமணி, சின்னையா தேசிகர், ஜெயராஜா, கன்னியா பரமேஸ்வரி, ராஜலக்ஸ்மி, சரவணமுத்து, பொன்னுச்சாமி, சோமு, வடிவேலு, ரத்தினம், என ஒரு பெரு வரிசையும்;

வசன நாடகக் கலைகளில் கலையரசு சொர்ணலிங்கம், சரவணமுத்து, சானா, விதானை செல்வரட்ணம், எஸ்.ரி. அரசு, லடீஸ் வீரமணி, ரொசாரியோ பீரிஸ், ஜனம் பிரான்சீஸ், கே.எஸ். பாலச்சந்திரன். சிவா சிவபாலன், கண்டி விஸ்வநாதராஜா, சங்கானை யோகநாதன், ஜவாஹர், ஏ. ரகுநாதன், சின்னமணி, பற்குணம், ராம்தாஸ், செல்வசேகரன், அப்புக்குட்டி ராஜகோபால், நாச்சிமார் கோவிலடி ராஜன், சுப்புலக்ஷ்மி காசிநாதன், ராஜேஸ்வரி, மணிமேகலை, விஜயஸ் பீற்றர், ஆனந்தராணி சண்முகம், செல்வி ஜெயந்தி, என ஒரு பெரு வரிசையும்;

நவீன நாடகத்தில் தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், சுஹேர் ஹமீட், பாலேந்திரா, அருட்தந்தை சவுரிமுத்து, என ஒரு பெரு வரிசையும்;

திரைப்படத்துறையில் கிருஸ்ணகுமார், வேதநாயகம், சுண்டுக்குழி சோமசேகரன், ஏ. ரகுநாதன், ஸ்ரீசங்கர், உதயகுமார், என ஒரு பெரு வரிசையும்;

இசைத்துறையில் சிறு நகரங்கள் கிராமங்கள் எல்லாம் இசை மழையாக, இசை விழாவாக, சண்முகரத்தினம், பரம் தில்லைராஜா, திசநாயகம் போல், சங்கீதபூஷணம் குலசீலநாதன், கருணாஹரன், பொன் சுந்தரலிங்கம், என ஒரு பெரு வரிசையும்;

நாட்டியத் துறையில் சுப்பையா மாஸ்றர், திரிபுரசுந்தரி, லீலா கந்தையா, கிருஷாந்தி சேனாதிராஜா, லீலா நாராயணன், என ஒரு பெருவரிசையும் -

அடடா! ஈழத்தமிழன் அன்றைய காலகட்டத்தில் கலைப் பூங்காவில்தான் வாழ்ந்தான்! கலைதான் அவனது சுவாசம் என்றே கூறவேண்டும்.

எத்தனை கலைஞர்கள்! எத்தனை இசைஞர்கள்! கலை பயில எத்தனை பள்ளிக்கூடங்கள்! எத்தனை நாடக மன்றங்கள்! அன்று ஈழத் தமிழனின் இரவெல்லாம் இசையாக, நாடகமாக, நாட்டியமாக, விழாக்களாக, இவைக்கெல்லாம் வளர்ப்பிடமாக கோவில் உற்சவங்கள், அதில் கண்கவர் சிற்ப வேலைப்பாடுகளுடன் புனிதம் மிக்க கலைகள், அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் ஈழத்தின் கர்நாடக சங்கீதத்தின் அடி நாதமாக நாதஸ்வரக் கச்சேரிகள். கம்பீரமான முருகையாவில் ஆரம்பித்து அளவெட்டி பத்மநாதன், பஞ்சாபிகேசன், பாலகிருஸ்ணன், ஆறுமுகம்பிள்ளை, கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி, நாச்சிமார் கோவிலடி சின்னராசா. கணேசன், பழனி, எனத் தவில் மேதைகளும் தமிழ் மண்ணின் இசையாய், சுவையாய், காற்றெல்லாம் சங்கீதமாய், திரும்பிய இடமெல்லாம் கலை மழையில் நனைந்து கிடந்தார்கள் ஈழத்துத் தமிழர்கள்.

அப்படி தேனாக கலை பெருக்கெடுத்தோடிய நாட்கள் எனது மனக்கண்ணில் தோன்றி ஆனந்தப்பரவசத்தை ஏற்படுத்துகின்றன.

அந்த வசந்த கால நாட்கள் மீண்டும் மலரும், எங்கள் மண்ணில் நாமெல்லாம் மீண்டும் ஒன்றுகூடி எமது கலைப் பணியைத் தொடர்வோம் என்ற உணர்வான நம்பிக்கையோடு காத்திருக்கின்றேன்.

✪



# கலைத்திலகம் பெஞ்சமின் வாழ்க



நெத்தியில் ஒரு சிவப்புப் பொட்டு. தமிழ்ப் பெண்களின் தனிப் பெரும் உரிமையான மாங்கல்யத்தைக் குறிக்கும் சின்னம் அது. அதையே தனது தொழிலுக்கு மங்கலமான ஆரம்பமாக தனது சுட்டுவிரலால் தனக்கு முன்னே அமர்ந்திருக்கும் நடிகனின் நடு நெற்றியிலே வைத்து ஒரு நாடக அரங்கேற்றத்தின் பணிகளை ஆரம்பித்து வைப்பவர் ஒரு ஒப்பனைக் கலைஞர் என்றால் அது மிகையல்ல!

ஒரு நாடகத்தின் நாயகர்களின் குணாம்சங்களைக் குறிக்கும் குறியீடுகளான பாத்திரங்களை இவன் நல்லவன். இவன் கெட்டவன், இவன் மூர்க்கன், அவன் வயோதிபன், என அந்த நடிகன் பார்வையாளர்முன் வந்து நின்றவுடனேயே அறமுகப்படுத்திவிடும் பெருமைக்கு முதல் காரணமாக அமைபவன் ஒப்பனைக் கலைஞனே.

வேஷப் பொருத்தமும் ஒப்பனையும் சரியாக அமைந்துவிட்டால்! ஒரு நடிகனுக்கு ஐம்பது மதிப்பெண்கள் தானாகவே கிடைத்துவிடும். மிகுதிக்குத்தான் அவன் தனது திறமையைப் பயன்படுத்த வேண்டும் என்பார் எங்கள் ஈழத்தின் கலைக்குரு கலையரசு கே. சொர்ணலிங்கம் ஐயா அவர்கள்.

அந்த ஒப்பனைக் கலையை ஆறு தலைமுறையைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான கலைஞர்களுக்கு நேர்த்தியாகச் செய்துவந்த - செய்து வருகின்ற ஒரு ஒப்பற்ற ஒப்பனைக் கலைஞர்தான் சாமுவேல் பெஞ்சமின் அவர்கள்.

இப்பெரும் கலைஞரை 1947ன் நடுப்பகுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக இல்லப் போட்டிகளில் நண்பர்கள் என். கனகரத்தினம் நற்குணசேகரம் ஆசிரியர் எஸ்.ரி. சாறி ஆகியோருடன் அறிந்தவன் நான்.

''வாரும் தம்பி'' என்னும் அன்பு வார்த்தையைத் தவிர வேறெந்த வித்தகச் செருக்கும் காட்டாது. தமது கலையை மிக இயல்பாகச் செய்து முடித்துவிட்டு அடுத்தவருக்கு மாறிவிட்டார். அனுபவக்குறைவால் அடுத்து என்ன செய்வதென்று தெரியாது திகைத்துக் கொண்டு நின்ற என்னைப் பார்த்து ''கண்ணாடியிலை பாரும் நல்லாயிருக்கு'' என்று கூறிவிட்டு தனது வேலையில் கவனமாகிவிட்டார்.

பிறப்பால் இல்லாது நட்பாலேயே மச்சானாகிவிட்ட சக கலைஞனிடம் கண்ணாடியை கெஞ்சிக் கேட்டு வாங்கி ஒரு தடவை எனது முகத்தைப் பார்த்தேன். கர்வம் என்னும் சொல்லுக்கு தமிழாசிரியர் கே.கே. நடராஜா அவர்கள் கற்றுக் கொடுத்த அர்த்தத்தை கண்ணாடியில் என் முன் தெரிந்த நான் அறியாத அந்த அழகான முகத்தில் புரிந்து கொண்டேன்.

அப்பொழுதே அவருக்குத் தலை நரைத்திருந்தது. அது அனுபவத்தால்தான் என்று இப்பொழுது விளங்கிக் கொள்கின்றேன். பின்னர் எத்தனை நாடகங்கள்! வாரம் ஒரு நாடகம். வீரசிங்கம் மண்டபம் என்னும் ஒரு கலையரங்கு யாழ்ப்பாணத்தில் அமைந்ததற்கு மூல வேராக இருந்தவர் மானிப்பாய் பொ. செல்வரத்தினம் என்னும் பெருமகனே ஆவார்.

வாரம் ஒரு நாடகம் என கலை சொரிந்த அந்த நாட்கள்.. கலையரசு ஐயாவும். செல்வரட்ணம் அண்ணாவும், நானும் திருவாளர் பெஞ்சமினும் சந்திக்காத வாரங்கள் இல்லையெனும் அளவிற்கு கலைத்துறையில் வாழ்ந்தோம்.



திரு. பெஞ்சமின் அவர்கள் வெறும் ஒப்பனையாளராக அல்லாது, காட்சிச் சோடனையாளராக வந்து சீன் கட்டிவிட்டு காசு வாங்கிவிட்டு போகிறவர் மட்டுமல்ல! அந்த நாடகத்தையே தன்னுடையதாக எண்ணி அதனுடன் இரண்டறக் கலந்துவிடும் மகா கலைப்பித்தர்.

காட்சிக்கு ஏதாவது இல்லாவிட்டால் தன்னுடைய மரப்பெட்டிக்குள் குடைந்து எடுத்து தேவையான பொருளை உயிர்ப்பித்துவிடும் பிரம்மா அவர்.

அந்த இனிய நாட்களை! கலைஞர்களாக, கலை என்னும் ஒரே சிந்தனையுடன் வாழ்ந்த அந்த வரலாற்று நாட்களை!

இப்பொழுது நினைத்தால் அந்த இனிமையான நினைவுகளுடனேயே இறந்திருக்கலாமே! என்ற ஏக்கம்தான் மிஞ்சுகின்றது.

பெஞ்சமின் வெறும் ஒப்பனைக் கலைஞர் மட்டுமல்ல! மாபெரும் சித்திரக்காரர்! சிற்பி! விமர்சகர்! அத்துடன் மிக நல்ல மனிதர்! நட்பிற்கும், அன்பிற்கும், உண்மைக்கும், தலைவணங்கும் உயர் குணங்கள் கொண்ட பெருமகன்.

இப்பொழுதும்கூட, அவர் என்னுடன் பழகிய பாங்கு எனக்குப் புரியவில்லை! என்னுடன் நண்பராகப் பழகினாரா? சகோதரனாகப் பழகினாரா? தந்தையாக அரவணைத்தாரா? என்னைத் தனது உயிர்போலவே நேசித்தாரா?

என்னைப்பற்றி யாராவது தவறாகச் சொன்னால்கூட வெகுண்டெழுந்துவிடும் அளவிற்கு நேசம் பாராட்டினார். பல்லாயிரக்கணக்கான கலைஞர்களின் முகந்திருத்தி ஒளி கொடுத்த அந்தக் கலைஞனின் மேன்மையான அன்பைப் பெற்றதை இந்த நிமிடம்கூட பெருமையாகவும் பேருவகையாகவும் கருதுகின்றேன்.

என்னை மட்டுமல்ல! கலையை நேசித்த எல்லோரையுமே அவர் நேசித்தார். கலைக்காக வாழ்ந்த எங்கள் கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களை இவர் மனதால் வணங்கினார். கலை நடத்தும் அரங்குகள், கோவிலுக்கு ஒப்பானவை என்பார். ஐயாவும் பெஞ்சமின் என்றால் சேர்த்தணைத்துத் தழுவிக் கொள்ளாத குறைதான்!

நாடகம் தயாரானவுடன் முதல் அழைப்பு பெஞ்சமினுக்குத்தான். வடக்குக் கிழக்கு மட்டுமல்ல! கொழும்பு கண்டி மாத்தளை எங்கும் எனது நாடகங்களின் வெற்றிக்கு பெருமளவு துணையாக நின்றவர் இந்த மாபெரும் ஒப்பனைக் கலைஞர் பெஞ்சமின்தான்.

நாடகத்தின் தரத்திற்கு உழைக்கும் நாம் வியாபார வித்தைகள் தெரியாதவர்கள்! கவிதை, இலக்கியம், ஹாஸ்யம், சமூகம், சமயம், நவீனம், வெளிநாட்டு நாடகங்கள், என பல சுவையான நாடகங்களை! அரங்கேற்றியிருக்கின்றோம். அதிலும் என் நண்பன் சுஹேர் ஹமீட்டுடன் இணைந்து என் இரண்டாவது கலைக் களமான கொழும்பில் பணியாற்றிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு தனது மகன் இமானுவலுடன் சீன், செற்., ஒப்பனை, என தனது பணத்திலேயே வந்து பணியாற்றியபின் முடிவில் நாடகவசூல் சரியாக அமையாத காலங்களில் எங்காவது மாறிப் பணத்தை கொடுத்தனுப்புவோம் என யோசித்துக் கொண்டிருக்கும் போது "எங்களுக்கு ரிக்கற்றை வாங்கித் தந்தால் போறம்! மற்றதெல்லாம் பிறகு பாப்பம்" என தன்னை ஒரு தொழிலாளியாகக் கருதாமல் பெருந்தன்மை மிக்க ஒரு கலை வள்ளலாக வாழ்ந்து காட்டியவர் பெஞ்சமின் அவர்கள்.

தத்துவங்களை மேடையிலே கணீரென முழங்கும் பெரும்பான்மையானோர் அதற்கேற்ப தாம் வாழ்ந்து காட்டுவதில்லை. ஆனால் பெஞ்சமின் அவர்களோ கலைஞனாக, கலைக் காவலனாக, வாழ்ந்த முழு மனிதன்.

இலங்கையின் சாகித்திய அகாடமி இவரை, இவரது சேவையை சென்ற ஆண்டு கௌரவித்து ஈழத்தின் ஐந்து தலைமுறைக் கலைஞர்களைப் பெருமைப்படுத்தி இருக்கின்றது.



காலம் தாழ்த்தி என்றாலும் அவர்கள் செய்த இந்த அரும்செயல் தமிழ் கலையையே கௌரவித்ததற்குச் சமம்.

அவரும், அவரின் மகன்களும் எனக்கு ஒப்பனை செய்துள்ளார்கள். அவரின் மூத்தமகன் இமானுவல் எனது நாடகங்களில், சின்னத்திரைப் படங்களில் எல்லாம் இணைந்து நடித்த பெரிய கலைஞன். உலகெல்லாம் வணங்கும் யேசுபிரான் பிறந்ததினமான டிசம்பர் இருபத்தைந்தில் பிறந்து அதே யேசுநாதர் பாத்திரத்தில் திருமறைக்கலா மன்றத்தில் திரு சவுரிமுத்து அடிகளாரின் நெறிவாழ்க்கையில் தமது நடிப்பால் மிளிர்ந்து ஆண்டவர் என்னும் பெயரை தனக்கு நிரந்தரமாகப் பெற்றவர்.

ஈழத்தின் கலைக்குடும்பத்தின் தலைமகனாக இன்றுவரை கலைப்பணியாற்றும் கலைஞர் பெஞ்சமின் அவர்களுக்கு வாழ்த்துக்கூறி வைக்க, அவர்பற்றி எழுத நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

வாழ்க. பல்லாண்டு; வளர்க கலை.

**ஏ. ரகுநாதன்**



# முகத்தார்
# எஸ். யேசுரட்ணம்

*(பிரான்ஸ்)*

*இவர் ஒரு சாதனையாளர்! ஆம் இலங்கை வானொலியில் இவரின் எழுத்து இயக்கத்தில் உருவான 'முகத்தார் வீடு' என்ற நாடகம் 565 வாரங்கள் ஒலிபரப்பாகி சாதனை படைத்தது! (இந்த சாதனை இன்றளவும் யாராலும் முறியடிக்கப்படவில்லை.)*

*இவை தவிர ஏராளமான வானொலி மேடை நாடகங்களை எழுதி, நடித்து, இயக்கியிருக்கின்றார்.*

*இவரின் முகத்தார் வீடு நாடகம், நூலாகவும், குறும்படமாகவும் வெளிவந்திருக்கின்றது.*

*தற்பொழுது பாரிசில் இருந்து இருபத்து நான்கு மணி நேரமும் ஒலித்துக் கொண்டிருக்கும் A.B.C தமிழ் ஒலி வானொலியின் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகவும் இருக்கின்றார்.*

*வயதால் மட்டுமல்ல, உடலாலும், தளர்ந்திருக்கும் இந்த நேரத்திலும் கலைப் பணிக்காக நேரம் காலம் பாராது உழைக்கும் இவரின் கடமை உணர்வு அனைவரையும் வியக்க வைக்கும்.*

*முகத்தார் ஐயா அவர்கள் தான் பிறந்த இளவாலை மண்ணின் சிறப்புக்களை தனக்கே உரித்தான வகையில் முத்தாக பதிவு செய்து வைத்திருக்கின்றார்.*





இளவாலை புனித அன்னம்மாள் பேராலயம்




இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரிச் சின்னம்




இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடமகா வித்தியாலயச் சின்னம்

மண்வாசனை

# இளவாலை

வங்கக் கடலலைகள் தாலாட்டுப் பாடிவரும், தங்கத் தேர் போன்றது, நம் தேசம், தமிழ் ஈழம்! வடமாகாணத்தை நடுநாயகமாகக் கொண்டு, வடமராட்சி வட்டமைப்பிற்குள், பண்டத்தரிப்புக் கோவிற்பற்று, சிறுவிழான் இறையினுள், மையங்கொண்டு, பல சிற்றூர்களை உள்ளடக்கிய பேரூர், இளவாலையம்பதி என்றழைக்கப்படும் இளவாலை.

இளவாலைக்கென்று அலாதியான தனித்துவம் மட்டுமல்ல, சங்கையான வரலாற்றுப் பெருமையுமுண்டு. பல கல்விமான்கள், கவிஞர்கள், கலைஞர்கள், ஆன்மீகத் தொண்டர்களை வலம்வர உருவாக்கிய தனிப்பெருமையும் இளவாலைக்குண்டு.

ஆண்டு 1946, கல்லூரிக்காலம், என், தமிழ், இலக்கண, இலக்கிய ஆசான், என் கலைவாழ்க்கைக்கு வித்திட்ட வித்தகன், ''பொடி மாஸ்ரர்'' என்று செல்லமாக அழைக்கப்படும் ஆசிரியர் எஸ். பஸ்த்தியாம்பிள்ளை அவர்களிடம், வகுப்பறையில் ஓர்நாள் கேட்டேன், ''சேர்! இளவாலை என்னும் பெயர், இடுகுறிப்பெயரா இல்லை, காரணப் பெயரா'' என்று. புன்முறுவலுடன் கூறினார் ''குடுகுடுவென, மூன்று காலில் நடக்கும் வயோதியர்கள் கூட, இளமையாகவே காட்சியளிப்பர். அதேபோன்று, கூனிக்குறாவிய தாய்க்குலம் கூட, வாலைக்குமரிகள் போன்று கவர்ச்சியாயிருப்பர்; அதனாலே, இள+வாலை = இளவாலை என பெயர் பெற்றது என்று சிலேடையாகவே கூறினார், ஆசிரியர்.



முக்கனிகள் ஆலவட்டம் எடுக்கும், பேரூர் இளவாலை - மண்ணை, அறியாதவர்கள், தெரியாதவர்கள் இருக்கவே முடியாது. புகழ் பூத்திருக்கும், புனித ஹென்றி அரசர் கல்லூரி, திருக்குடும்பக்கன்னியர் மட மகா வித்தியாலயம் என, கல்விக்கரை காட்டும் கலங்கரைத் தீபங்கள் இருமருங்கும் புடை சூழ, அதன் நடுவே எழுந்தருளியிருக்கும், புனித அன்னம்மாள் பேராலயம், அமைந்திருப்பது, விந்தையிலும் விந்தையே! இதற்கு மகுடம் வரைந்தாற்போல், இளவாலையை மையமாகக் கொண்டு, எட்டுத் திக்கும், சுற்றியிருக்கும் சிற்றூர்களின் பன்னிரெண்டு சிற்றாலயங்களும், பேராலயத்தின் ஆன்மீகப் பாசறைகள்!

இளவாலையை, இங்கிருந்து ஒருமுறை இரைமீட்டுப் பார்க்கிறேன். இளவாலை மண் தந்த முக்கனிகளை ஒரு தடவை மனதால் சுவைத்துப் பார்க்கிறேன். கதலி, தேன் கதலி, சுவந்தன கப்பல், இதரை, செவ்வாழை, மருத்துவவாழை, ஆனைவாழை, பச்சை நாடான், பூவாழை, பண்டிவாழை, வெண்மொந்தன், சாம்பல்மொந்தன், கைவிரல்களின் எண்ணிக்கைகளையும் மிஞ்சி விடுகிறது வாழை இனம்! கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், செம்பாடு, அம்பலவி, விலாட், பாண்டி, மல்கோவா, கிழிமூக்கு, கொட்டக்காச்சி, புளிமாங்காய், கைவிரல்களின் எண்ணிக்கைக்குள் அடக்கிக் கொள்கின்றது, மாவினம்!! மாப்பிலாக்காய், தேன்பிலாக்காய், சக்கைப்பிலாக்காய், கூழன்பிலாக்காய், ஈரப்பிலாக்காய் என ஓர் கை விரல்களுக்குள் சங்கமமாகின்றது பலாக்காய் இனம்!!!

இளவாலை மண்வாசனைக்கு, முக்கனிகள் மட்டும் கட்டியம் கூறவில்லை. இன்னும் ஏராளமான இயற்கை வளங்கள் நிரம்பியுள்ள பேரூர் இளவாலை! சொல்லின் செல்வர் கவிமணி இளவாலை அமுது அண்ணா அவர்கள், இளவாலையைப் பற்றி, தாம் புனைந்த பல கவிதைகளில், ஒன்றில் ஓரிடத்தில் கூறுகின்றார், ''உண்மையை உரைப்பேன், உனக்கொன்று சொல்வேன், வளம் பெருக்கி வாழ்ந்த ஊர் இளவாலை! தேங்காய் வீழ்ந்தால் மாங்காய் சிதறும்; பலாக்காய் வீழ்ந்தால் பாக்குப் பிஞ்சுகள் சொரியும். முற்றத்து வாழைமரங்கள் சுற்றத்துக்குக் கைநீட்டும்; வெற்றிலைக் கொடிகள் முருக்க மரத்தில் முதுகு சொறியும்; குலைகளின் பாரம் தாங்காது, திராட்சைக் கொடிகள் நெழிந்து வளையும்;

கொட்டுப்பனைகளை விட்டுப் பிரிந்த கிளிக் கூட்டங்கள், நெல் அறுத்த வயல்களிலே, பூபாளம் பாடும்; மரவள்ளிக்கிழங்கும் மண்வளம் பேசும், கல்லூரியும் கன்னியர் மடமும், அண்டிவந்த ஆயிரம் ஆயிரம் குருவிகளுக்கு, அபயமளித்த ஆலமரங்கள், இளவாலையின் தீபங்கள் இவை. நாடு தந்த வளமையும், கோயில் தந்த குளிர்மையும், கல்வி தந்த திறமையும் இளவாலையின் வேர்கள், விலாசங்கள் என்கிறார் கவிமணி இளவாலை அமுது அண்ணா அவர்கள்.

இளவாலை மண்ணை, மீண்டும் ஒருமுறை முத்தமிடத் துடிக்கிறேன். இளவாலையை நினைத்து மக்கள் விடும் பெருமூச்சு பாரிய வெளிச்சங்களையும் அணைத்துவிடும். இருந்தாலும் திசை ஒன்று தெரிகின்றது. திடமாகப் பதிகின்றது கண்ணீரைக் கடலாக்கி, கனவுகளைப் படகாக்கி, தொடரும் பயணத்தில் கரை தெரிகின்றது, விடிவெள்ளி ஒளிர்கின்றது. இளவாலையில் மீண்டும் கால்பதிக்கும் காலம் விரைவாக நெருங்குகின்றது. பீரங்கிகளின் உறுமல், நின்றுவிடும்; கடல் அலைகள் தாலாட்டும்!

மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்புகின்றன. நாமும் வீடு திரும்புவோம்! இளவாலை இருகரங்களையும் விரித்து எம்மை வரவேற்கும், திலகமிடும்!

இளவாலை மண்ணுக்குச் சொந்தக்காரரில் ஒருவன் ''முகத்தார்'' எஸ். ஜேசுறட்ணம்.



# மண் வாசனைக் கவிஞர் விக்கி நவரட்ணம்

*(சுவீஸ்)*



மண் வாசனைக் கவிஞர் என என்னால் அன்பாக அழைக்கப்படுபவர்.

இவருடைய கவிதைகளில் யாழ் மண்ணின் வேர்களின் வாசனை கூட மிளிர்ந்தே நிற்கும்.

இக்கவிஞர் மண்ணைப் பாடுகின்றார். மரம், செடி, கொடிகளையெல்லாம் பாடுகின்றார்; மக்களைப் பாடுகின்றார்; மாவீரர்களைப் பாடுகின்றார். பாடுகின்ற பாடல்களில் எல்லாம் யாழ்ப்பாணத்துச் சொல் மிளிரப் பாடுகின்றார். பிறந்த மண்ணை நேசிக்கும் இவர் ஒரு மண் வாசனைக் கவிஞரே!

அண்மையில் ''ஆகாய கங்கை'' என்னும் கவிதைத் தொகுப்பை தந்திருக்கின்றார்.

இந்தக் கவிதையும் எங்கள் A.B.C தமிழ் ஒலியின் கவிஞர்கள் சங்கமத்தில் ஒலித்த கவிதையே!

## மல்லிகையின் மணத்தை விஞ்சி நிற்கும், மண்ணின் நறுமணம்!

மகரந்தத்தின் கனத்திலேயே
மலர்ந்து விடும் மலர்களைப் போல்
மனதில் ஊறும் மண்வாசனை எண்ணங்களால்
எரிதணல் கனலில் குளித்துக் கரையேறிய
பட்டுப்பூச்சிகளில் ஒன்றாகிய - நான்
கருவறை இருட்டை விட்டே

வெளிச்சத்தில் மிதந்தபோது
உயிரின் வேருக்கு கொஞ்சம் ஈரம் கொடுத்து
என் மனதும், உடலும் சந்திக்காத
வாழ்க்கையைத் தந்த மண் வாசனையை
என் கவலை நதிகளில் தேக்கிவைத்த
கண்ணீர்க் குமிழ்களால் கரைத்து எழுதுகிறேன்.

அந்தி மாலைப்பொழுதோடு தொலைந்து போன
சூரியனைத் தேடிய இரவு
விழுந்து கொண்டிருக்கும் நிலவைக்கண்டு
விழித்துக்கொண்ட இளங்காலைப் பொழுதை
தினம் எனக்கு
வானம் அறிமுகம் செய்துதந்த யாழ் மண்.

மண்ணையே பார்த்துக் கொண்டிருக்கும்
நிலவு மங்கை முகம் பார்த்து தினம்
நலம் விசாரித்து நின்ற நாட்கள் நினைவில் நிற்கின்றன.

ஓடியே நான் மகிழ்ந்த முற்றத்து மண் புல்லும்- என்
கால் பட்டு நசிந்தாலும் நிமிர்ந்து நின்று
நிலா வெளிச்சம் பார்க்கும் வாசமுள்ள மண்.

ஒளிந்து விட்ட கருமேகத்தை காற்று இழுத்து வந்து
போர்த்து நின்ற போது தேம்பி அழுத நீர்த்துளிகள்
வெம்மை நிலத்தை கரைத்தெழுந்த புழுதி வாசம்
நுகர்ந்து பார்த்து மகிழ்ந்தவன் - நான்!

பாடசாலை சீருடையோடு பருவநயம் சிந்திவர
புத்தகங்கள் சுமந்து,
சித்திரம் போல் மண்ணளந்தே
கல்லூரிவரை கால்நடை பயின்ற
தளிர்ச்சிட்டுகள் பூம்பாதம் நோகாமல்
நடந்திங்கே தேன்சிட்டுக் கண்களால்
இமைகள் பூக்கப்பார்க்க பொங்கிவந்த காதலை
காளையர் தொட்டிவிட்டு, தோரணங்கட்டி
பார்த்து மகிழ்ந்த வாசமுள்ள மண்.

வானம் பார்த்து நின்ற கிணற்றுநீரில்
பறந்து வந்த காக்கையினம் எச்சமிட்டுச்செல்ல



சின்னச்சின்ன தேன் குருவிகள்
உயரப்பறக்கும் வானம்பாடி
கூவித்திரியும் குயிலினங்கள்
பேசப்பழகும் தென்னங்கிளியும், பனங்கிளியும்
செண்பகமும், மரங்கொத்தியும், ஊர்க்குருவியும்
மண்ணில் புரண்டெழும் புணிலும்
மரத்தில் தாவும் அணிலும்
சத்தமெழுப்பிச் செல்லும் ஓசைகள் - என்
செவிக்கு இன்பமாய் சாமரம் வீசிச்செல்ல
சிறகுகள் இல்லாப் பறவையாய் நானும் ஓடியே மகிழ்ந்த மண்.

நல்லரு நூல்கள் நால்வகையும் தேக்கி வைத்தே
எத்தனை, எத்தனை, எழுத்தாளர்களை
எத்தனை, கவிஞர்களை தத்தெடுத்தே
அறிவுப்பசியடக்கி இலக்கிய உலகம் உலவவிட்ட
தென்கிழக்காசியாவின் பென்னம்பெரிய நூல்நிலையமாய்
கலைமகள் சிலையுடன், யாழ் பொது ஜன நூல்நிலையமென
பெயர் தாங்கி நின்றே இலக்கியப் புகழெடுத்த மண்.

இலக்கிய உலகில் கரம் தொடுத்து விளையாடிய
பொன்னுத்துரை, மல்லிகை, ஜீவா, டானியல்,
கார்த்திகேசு, இவர்களோடு நடிப்புலக மேதைகள்
டிங்கிரி சிவாவும், கிறகெறி தங்கராஜாவும்
நடை பயின்றதெங்கள் யாழ்மண்.

ஜாதிகள் இல்லையடி பாப்பா
குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
என்றே ஜாதித்தூறல்களை அளிக்க முயன்றவன்
பாட்டுக்கொரு புலவன் பாரதி
ஜாதிகள் இங்குண்டு பாரீர் என்றே
வில்லூன்றி மயானத்தில் வெடி தாங்கி
உயிர் துறந்த முதலி சின்னத்தம்பியும்
விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளா
விரல் நகம் கூட தீண்டாமை - என்ற
வலியை மறக்கும் சக்தி எனக்குண்டு - அதன்
முதல் அடியை ஏற்றுக்கொண்டால்
ஒரு சரித்திரம் தொடங்குமென்றெண்ணிய

சுன்னாகம் தோழர் நாகரத்தினமும்
குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லியே
குடிசையும் எரிப்பவர் இங்குண்டு பாரீர் என்றே
நிகழ்கால நிராகரிப்பையும்,
நாளைய நம்பிக்கையையும் தாங்கியே
என்று மடியும் இந்த ஜாதி வெறி
எத்தனை ஆண்டுகள் உயிர் வாழும் இந்த ஜாதி
என்றிங்கு கேள்விக்கணைகள் தொடுத்த
தோழர் எம்.சி. சுப்பிரமணியமும்
வாழ்ந்து மறைந்த
வாசமுள்ள மண் யாழ்மண்.

ஆடத்தெரியும், பாடத்தெரியும், என்றிங்கு
பொப்பிசை மன்னன் நித்தி கனகரத்தினமும்
பொப்பிசை சக்கரவர்த்தி ஏ.ஈ மனோகரனும்
கண்ணன் கோஸ்டியும் ஏறி நின்றே
இசை முழங்கிய திறந்த வெளி அரங்கும்
அரசாங்கத்திற்கு அடித்த ஆராய்ச்சி மணியோ?
உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்தியே
உறைந்த இரத்தக்களமாய் குளிர்ந்து கிடந்தே
சோகத்தில் புதைந்தெழும்பி, தாலாட்டுப் பாடிய
வீரசிங்கமண்டபம் எழும்பி நிற்கும்
ரோசமுள்ள மண் யாழ்மண்.

ஐந்து தேர் பவனி வரும் வண்ணை சிவன்கோவிலும்
தினம் அதிகாலை வேளையில் சுப்பிரபாதம் பாடியே
துயில்விட்டெழுப்பிடும் வண்ணை பெருமாளும்
கோட்டை முனியப்பரும், அத்தியடிப் பிள்ளையாரும்

மன்னர்கள் கட்டிய இந்தக் கோவில்களில்
கல்லெல்லாம் சிற்பமான மண் வாசனை மண்ணதில்
சின்னச்சின்ன ஆசைகளில் சிம்மாசனமிட்டு
இவர்கள் தோண்டித் துரவி நீர்தேக்கிவைத்த
குளங்களின் அலைகளில் மிதந்து வரும்
காற்றின் ஓசையை சங்கீதமாய் ரசித்தவன் - நான்

பேருந்து ஊர்ந்து வந்தே நிரையிட்டு நிற்க
அறிமுகமில்லாப் புதுமுகங்கள் திரண்டு வந்தே



திரையரங்கை நோக்கியோட
மணிக்குரல் மணியாக வர்த்தக விளம்பரம் ஒலிபரப்ப
மகாத்மா காந்தி, திருவள்ளுவர், ஔவை - என
சிலைகளை தாங்கி நிற்கும் வீதிகள் எல்லாம்

சலசலவென வாகன இரைச்சல் ஒலிக்க
திக்குத்திக்காய் காய்த்துக் குலங்கிய
மா, பலா, வாழை இவையுடன்
நால்வகை மரக்கறியும் சேர்ந்தங்கே
ஒற்றைத்திருக்கலில் வந்தங்கே
பொல பொலவென குவிய
ஓட்டி, ஓரா, விளைமீன், நண்டுசுறா, பாரை - என
பண்ணைக்கடல் மீன்கள் பொழுதோடு வந்து சேர
பெரிய கடைச்சந்தையதை
மனித நதி ஊர்ந்து வந்தே நுகர்ந்து செல்லும்
நெய்தல், மருதம், சார்ந்த
வாசமுள்ள மண் எங்கள் யாழ்மண்.

வானுயர்ந்து நிற்கும் மணிக்கூண்டுக் கோபுரத்தில்
வருடமொருமுறை இரு கல்லூரி கொடி பறக்கும்
முற்றவெளி மண்ணதில் பரியோவான் பந்தெறிய
மத்திய கல்லூரி துடுப்பெடுத்தாட
அம்பலவாணர் அடிக்கின்ற சிக்ஸ்சரை
நிரம்பி நின்றே கைகொட்டி வரவேற்கும் ஜனத்தோடு
பச்சை நிறப்புல்லுக் குளத்து மீனும் ஒரு முறை
துள்ளிப்பார்த்து மறையும் அங்கே.

இத்தனை இனிய சுகமுடன் - அங்கே
மாமரத்து நிழலதிலே, பனை ஓலைப்பாய் அதை விரித்தே
மெல்ல உடலதை சாய்த்து கண்ணுறங்கச் சுகம் தந்த
எங்கள் மண் வாசமதை எப்படி எடுத்துரைப்பேன்!

**விக்கி. நவரடணம்**
சுவிற்சர்லாந்



# கவிஞர்
# மா.கி. கிறிஸ்ரியன்

யாழ்ப்பாணத்துக் கடலோரப் பகுதியான குருநகர் தந்த இலக்கிய நண்பர் இவர். இலக்கியத்தை இதய சுத்தியோடு நேசிப்பவர்.

கவிதை, கட்டுரை, விமர்சனங்கள், சிறுகதை, குறுங்கதை என சகல துறைகளிலும் தனது பேனாவை உலவவிட்ட இவர் விரைவில் நாவல் ஒன்றினையும் வெளியிட இருக்கின்றார்.

ஏற்கனவே உயிர்ப்பில், வீணாகிப் போகாத நாட்கள் ஆகிய கவிதைத் தொகுப்புகளையும் திருப்பம் என்னும் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டிருக்கின்றார்.

பல நாட்டுக் கூத்துக்களை எழுதி இயக்கியிருக்கின்றார். இங்கு குருநகரின் சிறப்பை கடல் மணம், மணக்க எழுதியிருக்கின்றார்.

## எழில்பொலியும் குருநகர்

யாழ்ப்பாணத்தில் பழமையில் ஊறிப்போன அழகான ஊர் குருநகர். கடல்மீன்களின் வகைவகையான சுவையில் மிதமிஞ்சி மகிழ்ந்த மக்கள். ஒல்லாந்தர் கட்டிய கோட்டையின் அழகு மிளிர்ந்திருக்கும் கடலும் கடல்சார்ந்த நெய்தல் நிலமக்கள் சின்னலைகள்



சிணுங்கும் பெண்கடல். தென்னைகளின் நிரைவில் தென்றல் தழுவ அம்பாவின் ஆர்ப்பரிப்பு தென்னங்கீற்றுகளின் தாலாட்டித் தவழும் நகர். கத்தோலிக்க மதப்பற்றில் பக்தி முத்திப் போனவர்கள். அழகான ஊரில் திரும்புகின்ற திசையெல்லாம் வான்முட்டும் கோபுர அழகோடு காட்சிதரும் ஆலயங்கள். மகிழ்ச்சி பொங்கும் திருவிழாக்கள்.

வருட ஆரம்பத்தில் புதுமைமாதா திருவிழா. வாழ்வின் ஆரம்பம் தாய் - அத்தாயின் திருவிழா முடிந்தால், உத்தரியமாதா திருவிழா, அடுத்து அடைக்கலமாதா திருவிழா. இது முடிந்தால் புனித யாகப்பர் திருவிழா. இதைவிட தீவுகளில் குடிகொண்ட புனிதர்களின் திருவிழாக்கள் இத்திருவிழாக்கள்தான் காதலருக்கும் இந்திரவிழாக்களாகும்.

வலைப்பின்னல்போல் கிடக்கும் குருநகரின் வீதிகள், குறுக்கு ஒழுங்கைகள் அழகாகத் தோற்றமளிக்கும். திட்டம் போட்டு அமைப்பாகவும் - ஒழுங்காகவும் திறந்த பெருவெளிகளும் அகன்ற ஒழுங்கைகளையும் கொண்டு சீர்பெறத் தோற்றம் காணப்படும் நகர். வீட்டு வளவுகளில் தென்னை நிரைகளும் - வேலிப்பூவரசுகளும் - சண்டிமரங்களும் - புளியமரங்களும் நிழல்பரப்பிச் - சுகமளிக்கும் வேப்பமரங்களின் அழகோடு துலங்கும் நகர்.

பிரதான வீதியைப் பார்த்து மணிக்கூட்டு கோபுரம். ஆழ்கடல் ஓடித் துறைநாடி வர ஒளிகாட்டும் கலங்கரை விளக்குப் போன்ற சிலுவை ஒளிகாட்டி வான்முட்டும் கோபுர அழகுடன் நம்பிக்கை தெய்வமாக பல நூற்றாண்டு கண்ட ''யாகப்பர் ஆலயம்'' ஊர்மக்களின் காவலர். இவருடைய திருவிழாக்காலம் குருநகர் மக்களுக்கு மகிழ்ச்சி பொங்கும் காலம் ஆடிமாதம் இருபத்தைந்து. இவர்களுடைய ஆதிபத்திய தொழில் கரைவலைத்தொழில். உயர்ந்த வீரமும் - ஆற்றல்மிக்க அறிவுத் திறனும் மிகுந்தோங்கும் தொழில். நவீனரக இயந்திரங்கள் இல்லாத காலத்தில் பாய்மரப் படகுகளில்தான் இத்தொழிலை மேற்கொண்டனர்.

இன்று மீன்பிடித் தொழிலாளர்கள் தமது தொழிலை நைலோன்வலை அறக்கொட்டிவலை போன்ற நவீன சாதனங்களின் மூலம் செய்து வருகின்றார்கள். ஆனால் இந்த நவீன சாதனங்கள் வருவதற்கு முன்னம் எம் மூதாதையர் கரைவலைத் தொழிலை

''என்ஜின்'' துணையின்றி தமது உடல் வலிமையையும் ஆய்ந்த நீர் காற்றுத் திறன்கொண்ட நுட்பத்தோடு மேற்கொண்டனர். அன்று பழைய தலைமுறையினரில் மிகவும் பலம் பொருந்தியவர்களே இத்தொழிலை ஆற்றக்கூடியவர்களாக இருந்தனர். பயிலுப்பதற்கு முன்னர் படகைச் செலுத்தும் வேளை காற்று வெளிக்கொண்டு வேகமாக வீசும் இடம்வரை அப்பாரிய படகை ''வலிஞ்ச மரக்கோல்கள்'' மூலம் தாங்குவார்கள். அவ்வாறு தாங்கும் போது அணியத்து மரக்கோல் வைப்பவரும், ''கடையால்'' மரக்கோல் வைப்பவரும் மிகவும் பலசாலிகளாக இருப்பர். காற்றிற்கும் - கடலலைக்கும் எதிராகத் தாங்க இவர்களால்தான் முடியும். ''ஆள்'' இளக்காரங்கண்டால் தோணி திந்தலை பாயும். (ஆளை இடங்கண்டால் தோணி மிதக்கும்) இப்படியாக வீர செயல்களின் போதும் வலை வளைக்கும் போதும் கூட்டாகச் சேர்ந்து பாடிய பாடல்களைத் தான் ''அம்பா'' என அழைத்தார்கள். இப்படியான அருமையான பாடல் பல இன்று வழக்கில் இல்லாது போனது மனதுக்கு மிகுந்த கவலையாகும்.

1953களில் இடம்பெற்ற மீன்பிடி அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக குருநகர் மக்களுக்கு இயந்திரப் படகுகள் அளிக்கப் பட்டதுடன் நைலோன்வலையும் வழங்கப்பட்டது. யாழ்மாவட்டத்தில் இந்த ஆழ்கடல் தொழிலை முதல் முதலில் அறிமுகப்படுத்தி செயல்பட்டதும் குருநகரில்தான். காலம் செல்லச் செல்ல இம்முறையைப் பலரும் பின்பற்றத் தொடங்கினர். தொழில்கள் யாவும் இயந்திர மயமானது. அந்தக்கால முறையில் என்றும் மறக்கமுடியாத சம்பவங்கள் இன்றும் நெஞ்சத்தைத் தொடும். இம்மீனவர்கள் முதலில் தொழிலுக்குச் செல்லும்பொழுது. ''பாலை தீவிற்கு'' செல்வது வழக்கம். இங்கு செல்லும் கரைவலைமாந்தர் இத் தீவின் வெண்மணல் தரையில் எந்த அவசரமானாலும் ஓடிச் செல்ல மாட்டார்கள்! தமது காலடிகளையும் கைகளால் அழித்தே வருவார்கள். இச்சம்பவத்தை அவர்களது அம்பாப் பாடல் மூலம் அறியலாம். இதிலும் மேலான நற்பழக்கம் ''தூசண'' வார்த்தைகள் எதுவும் பேசமாட்டார்; அம்பாவைப் பாருங்கள்...

''ஏத்தேத்து லைலா கரவலைக்கு
ஏசுநாதர் லைலா படிதருவார்
பார்த்துத்தான் லைலா வளையுமண்ணே



பாலைதீவு லைலா பாடாகத்தான்
படியளப்பார் லைலா என்றுவந்தேன்
பாலைதீவு லைலா கரையையண்டி
அழியழித்து லைலா வந்தேனையா
ஆதரிப்பீர் லைலா எங்களையும்!''

இப்படியாக தங்களது இஸ்டதெய்வங்களை வேண்டுதலோடு நிற்கும் கத்தோலிக்கர் இத்தொழிலின் கஸ்டம் களைப்பு கடுப்புக்கொள்ளும்போது களைத்த குரல் உரத்துக் கேட்கும்.

''பெற்றாளே றோசா பாவியென்னை
விட்டாளே றோசா கரைவலைக்கு''

இப்படியாக இத்தொழில் மாந்தரின் பிறப்பிடம் குருநகர். பெற்றதாயை நொந்தாலும் வீடுவந்ததும் அதையெல்லாம் மறந்து தங்களது வீரத்தைச் சொல்லிவைப்பர். மனைவிமாருடன் காதல் களியாட்டங்களில் கஸ்டத்தை மறந்திருப்பர். திரும்பவும் கடல்மடியில் கவனம் செல்லும்.

பல கல் தொலைவில் ஆழம் தெரியாத கடலில் இந்தப் படகுகளைச் செலுத்திய நெய்தல் நிலத்தான், கடலரசன் எனப் பாராட்டப்பட்டவன். இவர்கள் கடற்கரையில் வாழ்ந்த காரணத்தால் - கரையான் - கரையாள் - கரையாளன் எனப்பெயர் பெற்றான். இங்கு போற்றத்தக்க பெயர் ''கரையாளன்'' குருகுலம் என்பதேயாகும். இவர்கள் தொழில் ஈடுபாடு முடிந்து ஓய்வுநாட்களில் போர்த்தேங்காய் அடித்தல் - கோழிப் போர் பார்த்தல் - காற்றாடி விடுதல் - சிறுவர் முதல் பெரியவர்கள் வரை கவண் கல் வீசுதல் போன்றவற்றில் ஈடுபடுவர். கடல் அலைகளைக் காலால் மிதிப்பர். கொடி பறக்கவிட்டு மகிழ்வர். பொது இடங்களில் கூடிப் பலவிதமான முன்னேற்ற விடயங்களை விவாதம் புரிவர். பாமரமக்களின் பல்கலைக் கழகமான நாட்டுக் கூத்துக்களை வருடம் தப்பாது மேடையேற்றுவர். தென்மோடிக் கூத்தின் முன்னோடிகளும் இம்மக்கள் கலைஞர்களே. நாடகங்கள் திரைப்படக் காட்சி பார்ப்பர். மெய்வல்லுனர் போட்டிகளை உயர்வாக மதித்ததோடு சிறந்த வீரர்களாகவும் திகழ்ந்தனர். உதைபந்தாட்டத்திலும் அதியுன்னத

நிலையில் இருப்பவர். இவ்வூரவர் அதிகம் ஆசிரியராகப் பணி புரிகின்றனர். புவியியல் - கணக்கியல் - சரித்திரப் பாடங்களை படிப்பிப்பதில் தேர்ச்சியில் உயர்ச்சி பெற்றவர்கள். விளையாட்டு ஆசிரியர்களாக உள்ளனர். மருத்துவர், பொறியியலாளர் பலர்.

இக்கலைப்பூமி மக்களுக்கும் மலையாளத்துப் பழக்க வழக்கங்களுக்கும் ஒற்றுமையுடையதாக இருப்பதும் மனம்கொள்ளத்தக்கது. இதில் ஒன்று பெண்கள் வீட்டிலிருக்கும் போது உடுத்தும் ஆடை முறை. அதிகமானவர்கள் சறம், பிளவுசுடன், காட்சி கொடுப்பர். இதுவும் வீட்டு வளவுக்குள் வாசல் முன்பாகத்தான் இவர்களது தோற்ற மேனியைக் காணலாம். வெளியில் எப்போதும் சேலை உடுத்திக் கொண்டு தான் செல்வார்கள். வையில் சாறியில் (நூல்சேலை) அதிகம் நாட்டம் உள்ளவர்கள். பேச்சு வழக்கில் சில அம்சங்களை இனம் காணலாம்... அவரட்ட - இருக்கைக்க - ஏன்ரா அப்பயேல்ல - பறையிறான் - மண்டாடிமார் - தண்டயல் என்பன நோக்குதற்குரியது.

யாழ்ப்பாணம் மாநகரசபை சந்தியால் திரும்பினால் நீளும் கடற்கரைவீதி. நடந்து வந்தால் முதலில் அலுபாந்தி. இவ்விடத்தில் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் நாகபட்டினம் - இராமேஸ்வரம் இருந்துவரும் ஓடுகள் - சக்கரை - புகையிலை என்பன பாதுகாப்பாக வைப்பதற்காக அமைக்கப்பட்ட இடம் அலுபாந்தியென அழைக்கப்பட்டது. இத்தோடு குருநகர் துறைமுகம் யாழ்ப்பாணத்தின் பெரும் துறைமுகமாகும். இதற்கொரு காரணம் உண்டு.

தமிழகத்திலிருந்து வரும் ''டிங்கிகள்'' தோணிகள். நாம் அன்று கப்பல்கள் என்று இவற்றைத்தான் கண்டுகளித்தோம். இத்துறைமுகத்தில் நூற்றுக்கணக்கில் வந்து தரித்துநிற்கும். இந்தத் துறைமுகத்தை அண்டிய தெருக்களுக்கு கிட்டங்கித்தெரு - புகையிலைக்கிட்டங்கி எனும் பெயர்கள் ஊரவரால் வழங்கப்பட்டது. அண்டையில் பெரிய மரக்காலை. அரசாங்கத்தின் சொத்து. இக்காலை மருங்கிலும் தெருக்களின் ஓரங்களிலும் செழித்து நின்ற அலரி மரங்களும், கட்டைச் செவ்விள தென்னைகளின் நிரையும் தோணிகள் மூலம் கொண்டுவந்து கும்பம் - கும்பமாகக் கொண்டு வந்து பறிக்கப்பட்டுக் காட்சி கொடுக்கும்



குருமணல் கும்பங்களில் குழந்தைகள் வீடுகட்டி விளையாடுவர். காதலர்களும் பெரியவர்களும் மகிழ்ந்திருக்கும் காட்சி இன்றும் மறக்க இயலாத மாட்சியதாகும்.

மஞ்சள் வெய்யில் மறையும் செக்கர் வானத்தில் ஆதவன் மறையும் செம்பழம்போன்ற காட்சியை பாலத்துக் கட்டில் நின்று மகிழ்ச்சி பொங்க மக்கள் ரசிப்பார்கள்.

பாலத்திலிருந்து இருமீற்றர் தொலைவில் ஒரு சிறுப்பிட்டி துறைமுகத்திற்கு அழகு கொடுக்கும். இன்னும் ஒருகல் தொலைவில் இருக்கின்றது. ''சிறுத்தீவு'' லூர்த்து மாதா எழுந்தருளிய ''கேபி'' அங்குள்ளது. இத்திருவிழாவுக்கு சின்னஜெற்றி பெரிய ஜெற்றியிலிருந்து சிறிய வள்ளங்களில் இத்திருவிழாவுக்குச் செல்வார்கள். குமரிகளைக் குதூகலத்தில் ஆழ்த்தும் ஆனந்தமான வள்ளத்துப்பயணம்.

காகம் கரையும் வேளையிலும் பறவைகள் கீச் கீச் என்று குரல் கொடுக்கும் இளம்காலை வேளையிலும், தென்னங்கீற்றுகளின் ஊடாக கதிரவனின் கதிர்கள் பாய்ந்து வரும் அழகொளியும் மனதைக் கவரும். தெருக்களும் ஒழுங்கைகளும் ஊரை அழகு செய்ததுடன் பரந்த வெளிகளும் சிறந்து விளங்கியது. பிற்காலப் பகுதியில் சந்திக்கொரு தேனீர்க் கடைகள் காட்சி சாலை கடைத்தெருப்போல் காட்சி கொடுத்தது. இரண்டு பாடசாலைகள் கண்ணான கல்வியை கற்பதற்கு. கலைக்குக் கரைகண்ட கடல் அலைகள் கொஞ்சும், நகர் மக்களுக்கென்று கலையரங்கம் உண்டு. சன சமூக நிலையம் உண்டு. பிற்காலத்தில்தான் உழைப்பால் உருவானது விளையாட்டு மைதானம். இம்மக்களிடையே கலை - இலக்கிய நாட்டுக்கூத்துப் படைப்பாளிகள் பலர் தாய்மண்ணிலும் இன்று புலத்திலும் புகழ்பெற்று விளங்குகின்றார்கள். வந்தாரை வரவேற்று உபசரிக்கும் பண்புகொண்டவர்கள். இவ்வூர்மக்கள் கல்வியறிவில் பின்தங்கியவர்கள் என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. இவர்கள் பின்கண்ட இத்தொழிலால் பிடிக்கப்படும் தொன்கணக்கான கட்டாப்பாரைகள் கருவாடாகி தென்மாகாணங்களுக்கு அனுப்பப்படும்.

ஐஸ் மீன்களும் லொறிகளில் நாளுக்கு நாள் அனுப்பப்படும். இதற்கென ஒரு ஐஸ் தொழிற்சாலையும் இயங்குகின்றது. கடற்தொழிலாளிகளால் காலையும் - மாலையும் கலகலப்பான ஊர்.

வாடைக் காற்றின் காலத்தில் குருநகர் துறைமுகத்தைப் பார்ப்பதற்கு பலகோடிக் கண்கள் நிலைகுத்தி நிற்கவேண்டும். பங்குனிமாதத்துப் புளுக்கத்தோடு அலைகடல் நீரோட்ட நீந்தலில் மீன்துள்ளும். மீன்படும் இடந்தேடி படகுகள் ஓடும். ஓட்டத்தில் போட்டியிருக்கும். ஓடும் படகுகளின் இயந்திர இரைச்சலையும் - குதிரைவேகத்தையும் இக்காலங்களில் குருநகர் துறைமுகப் பாலத்துக் கட்டிலேறி நின்று பார்த்தால் நெடுமூரல் பாச்சலாய் மனசு துள்ளும். கண்கொள்ளாக் காட்சியது. இதனால்தான் பேராசிரியர் அருட்தந்தை மரியசேவியர் அவர்கள் இப்படிப் பாடினார் போலும்.

''அலைகடல் ஆளும் எங்கள் வீரம் - இன்பக்
கலைவடிவில் வாழும் நெஞ்சம் ஈரம் ஈரம்
வானில் உள்ள மீன்கள் இனத்தைப்
படித்துப் பார்க்கலாம் - கடல்
வாழும் அமுதமீன்கள் தரத்தைச்
சுவைத்துப் பார்க்கலாம் - ஏலை
ஏலோம் என்று இசைக்கும் குலத்தை
நுரையில் பார்க்கலாம்.''

மேலும் குருநகர் சமூகத்தின் பூர்வீகத்தை கரையூர் - குருகுலம் எனும் ஆதாரங்களை ஆதாரத்துடன் குறிப்பிட்டுக் காட்டுகிறார் மு. புஸ்பராஜன். அந்தக் குறிப்புகளை இங்கு குறிப்பிடுவதில் இக்கட்டுரைக்கு வலுச்சேர்க்குமென சிலகுறிப்புகளை தருகிறேன்.

இன்று குருநகர், கரையூர் அல்லது குருவூர் என்று அழைக்கப்படும் பகுதி, யாழ்ப்பாணத்தின் பழைய அரசர்கள் காலத்தில் கரையூர் என்று அழைக்கப்பட்டது. இன்றைய யாழ் மாநகரசபையின் வரைபடத்தில் எல்லைகளைவிட அன்றைய ஒல்லாந்தர் கால வரைபடங்களில் கரையூர் கிழக்கில் நல்லூரையும், தெற்கில் சுண்டிக்குளியையும், வடக்கில் வண்ணார்பண்ணையையும் எல்லையாகக் கொண்டிருந்தது. இதனுள்ளே பெரிய கோவில், குருமடம்,



சம்பத்தரிசியார் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், அடைக்கலமாதா கோவில், சந்தியோகுமையோர் கோவில், யாழ் மத்திய கல்லூரி, நீதிமன்றம், கோட்டை ஆகியன இவற்றை உள்ளடக்குகிறது. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் இதைப் பறங்கித்தெரு என்றனர். (Earliest Duch Topographical Map (1720) In land, Maps & Surveys P142 by brohier and paulusz publish 1951)1.

இன்று ஒல்லாந்தர் கால வரைபடத்தையும் மாநகரசபையின் வரைபடத்தையும் மீறி கிராமிய வழக்கில் ஒரு குறிப்பிட்ட சமூக மக்களின் நிலப்பகுதியை அர்த்தப்படுத்துகிறது.

எப்படியிருந்த போதிலும் குறிப்பிட்ட சமூக மக்கள் வதியும் இந்நிலப்பரப்பிற்கு கரையூர் என பெயர் குறிப்பிடப்பட்டதிலும் வரலாற்று ரீதியான அர்த்தம் இருக்கிறது. கரையூர் என்றால் கரைநிலம் அல்லது குருநிலம். இதுவே ஆதிக் கௌரவர்களின் தாயகமாகும். இதையே சூளாமணி நிகண்டு கரையார்களின் பூர்வீக நாடு குருநிலம். இதுவே பண்டையகால பூர்வீக சத்திரியர்களின் நாடு. காசிச் செட்டி ஏற்றுக்கொள்வது போன்று இன்றைக்கும் அவர்கள் குருகுலத்தார் என்றே யாழ்ப்பாணத்தில் அழைக்கப்படுகின்றனர். (F. Gazeteer P 235)2.

மகாபாரதத்தில் காணப்படும் இச்சத்திரிய பாரம்பரியங்கள் தூரத்தே வாழும் இக்குழுவினரிடையே நிலவியது ஒரு தற்செயலான சம்பவம் அல்லவே. பக்கம் சார்ந்த எழுத்தாளர்களும் இதையே உறுதிப் படுத்துகின்றனர். காசிச்செட்டி தன்னுடைய கசற்றியரில் (பக்.235) இவர்களைப்பற்றி நன்மையாகச் சொல்லாவிட்டாலும் சூடாமணி நிகண்டு கூறுவதை ஏற்றுக்கொள்கிறார். கரையார்களின் ஆதி வதிப்பிடம் பண்டைய சத்திரியர்களின் நாடான குருநாடே. இன்றும் அவர்களில் சிலர் யாழ்ப்பாணத்தின் குருநிலம் என்றே அழைக்கிறார்கள்.

இம்மக்கள் தமது வம்சக் கொடியாக மகரக் கொடியை கொள்கின்றனர். இதைத் தமது இராஜரீகத்தின் அடையாளமாகக் கருதிக்கொள்கின்றனர்.

இந்திய மகாராஜாக்களின் அரச பவனிகளின் போது மகரக்கொடி எடுத்துச் செல்லப்பட்டது. இந்து புராணங்களில் சிவன் தனது

அவதாரங்கள் ஒன்றினுள் : குருகுல சம்பந்த பரதர் கோமான் அதிராசன் (மகாராஜா) மகளை மணம் முடிக்கப் போகும் பொழுது மகரக் கொடியையும் தம்முடன் எடுத்துச் சென்றார் என்று குறிக்கப்படுகிறது. மகரம் என்றால் யானையின் தந்தத்தையும், சிங்கத்தின் கால்களையும், பன்றியின் காதையும், மீனின் உடலையும், வெளித்தெரியும் பற்களையும், குரங்கின் கண்களையும், அழகான தோகையையும் கொண்ட ஒரு கடற் பிராணியாகும். பிரபஞ்சங்களின் ஆளுமையை அடையாளங்கள் மூலம் காட்டுவதே அதுவாகும். மீன் ஒரு அரச அடையாளமும் குருகுலத்தார் அடையாளமும் ஆகும். விஷ்ணு புராணத்தில் குருநாடு யமுனா கங்கா பாயும் இடைவெளியுள்ள நிலமாகும். இது ஒரு மீன் வடிவத்திலுள்ளது. இதுவே கௌரவர்களின் வேதகால இருப்பிடமுமாகும். வட இந்தியாவின் குருகுல வம்சத்தோடு உறவு கொண்ட தென்னிந்திய பாண்டிய அரசர்கள் இதைத் தம் அடையாளமாகக் கொண்டதனால் மீனவர்கள் என்று அழைக்கப்பட்டனர். மணிப்புறாவின் குருகுல அரசனான அடுத்தி (ADITTI) கங்கா மாதாவின் கரையோரங்களில் வசிக்கும் நம் எல்லோருக்கும் மகரம் எங்கள் குருகுல வம்சத்தின் அடையாளம் அல்லவோ என்கிறார். (வலைவீசு புராணம்) 4.

குருநகர் மக்களின் கோயிலான சந்தியோகுமையோர் ஆலயத்தின் குருமனையிலுள்ள வண மறுவோ (FR. Mauroit) அடிகளின் உருவப் படத்தின் பின் ஒரு மகரக் கொடி இருந்ததைப் பலரும் அறிவர். பின்நாளில் அமைக்கப்பட்ட குருநக் கலையரங்க முகப்பிலும் இம்மகரக் கொடி பொறிக்கப்பட்டுள்ளது.

பலவருட காலத்திற்கு முன்னர் கடல் அலையின் தாலாட்டு இப்போது காணப்படும் கடற்கரை வீதிவரையும் படர்ந்திருந்தது. இம்மக்களின் விருப்பத்திற்கிணங்க அண்டைய குற்றச் செயல்கள் புரிந்த ''மறியல்காரரைக்'' கொண்டு இண்டைய சின்னஜெற்றி - பெரியஜெற்றி பாலத்துக்கட்டு வரை மணல் கொண்டு நிரப்பினார்கள். இதனால் இடையில் ''றெக்களமேசன்'' என்று விலாசமிட்டனர். இந்தப் பெயர் மறையாமல் குருநகர் மூன்றாம் வட்டாரத்தில் இருக்கும் சனசமூக நிலையத்தில் காணலாம்.




இராவணன் இறந்த தனது தாயாரின் அந்திமக்கிரியைகளை நடத்துவதற்காக நிலத்தை தனது வாளால் ஏழு இடங்களில் குத்தி நீரூற்றைத் தருவித்தான். ஏழு வெந்நீர் ஊற்றுக்கள் தோன்றின. ஏழு கிணறுகளின் சூடும் ஏழுவிதமாக இருந்ததை இன்றும் நாம் காண்கின்றோம். இதுபோல் இந்த ஊருக்குள் ஒவ்வொரு பரந்த ஒழுங்கைகளுக்குள்ளும் ஏழு கேணிகள் மாநகர சபையால் கட்டப்பட்டு அவர்களாலயே பராமரிக்கப்பட்டன. அண்டைய அந்த மக்களுக்கு இந்தக் கிணறுகள் விதம் விதமாகக் குளிர்ச்சியைக் கொடுத்தது.

மறக்க நினைத்தாலும்  
மறக்க முடியாது - சுடர்ந்த  
மண்வாசனைச் சம்பவங்கள்  
மனதைத் தொட்டிக்கும்.

**கவிஞர் மா.கி. கிறிஸ்ரியன்**

18.08.2002

இக்கட்டுரைக்கு உசாத்துணை புரிந்தவை.  
1. தமிழர் நாகரிகமும் பண்பாடும்  
2. அம்பா - (மு. புஸ்பராஜன்)



## திரு. சிவ தணிகாசலம்

*(லண்டன்)*

மிகவும் பாராட்டுதலுக்குரிய தமிழ்த் தொண்டர். லண்டன் தமிழ் இலக்கிய மன்றத்தின் அமைப்பாளர். சிறந்த சைவத் தொண்டர். நல்ல மேடைப் பேச்சாளர். நட்பைப் பேணிக் காப்பதில் நல்ல மனிதர். தமிழ் வளர்க்கும் அறிஞர்களின் நட்பைத் தேடித் தேடிப் பெற்றுக் கொள்வார்.

''வண்ணை'' இதழிற்கு மண்வாசனை பகுதிக்கு எழுதிய கட்டுரை இது.

## கலை மணக்கும் இணுவில்

நான் பிறந்த மண்ணின் வாசனையை, ஒரு மின்னலை, இங்கு ''வண்ணை''யின் வாயிலாக வடிக்க விழைகின்றேன். பொதுவாக ஆலயத்தில் நுழைகின்ற பொழுது மனிதனுக்கு ஏற்படக்கூடிய ஒரு உணர்வு இணுவில் மண்ணில் கால் பதிக்கும் போது ஏற்படும் என்பது எனது பணிவான கருத்து.

ஈழத்தின் யாழ்ப்பாணம் என்னும் வடகுலத்தின் இசைத்திலகமாக விழங்குவது இணுவில்.



அதிகமான இசைக் கலைஞர்களையும் அதியுயர்ந்த இசை மேதைகளையும் இசையுலகிற்கு அளித்த பெருமை இணுவில் மண்ணிற்குண்டு.

புகழ் வாய்ந்த இசை மேதாவிகள், பக்திமான்கள், பாவலர்கள், பண்டிதர்கள், உழவர்கள், உழைப்பு மிக்க செல்வச் சீமான்கள், விண்ணோங்கும் ஆலயங்கள், இசைக்கூடங்கள், அத்துடன் புகையிலையும், மரவள்ளிக்கிழங்கும், கீரையும், மிளகாயும், தக்காளியும், போட்டியிட்டுக் கொண்டு விளையும் சிவந்த மண் இணுவில் மண்.

நான் பிறந்த இணுவில் மண்ணைவிட்டு புறப்பட்டு பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன! இந்தப் பன்னிரண்டு இன்னும் ஓர் பன்னிரண்டை நினைக்க வைக்கின்றது! அது இணுவில் மண்ணில் அருளாட்சி செய்கின்ற இணுவில் ஸ்ரீ.பரராசசேகரப் பிள்ளையாரின் திருவிழாக்காலம்! அந்தப் பன்னிரண்டு நாட்களும் இணுவில் இந்திரலோகமாகக் காட்சி தரும்.

குழந்தைகள் தொட்டு முதியவர்கள்வரை விஷேச பக்தியுடன் இருப்பார்கள். இணுவிலில் வாழ்கின்ற மக்களெல்லாம் ஒன்றுகூடி ஆலயத்திற்கு செய்யும் தொண்டு பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்தும்! நாலூர் மக்களும் ஒன்றுகூடி திருவிழாவை கோலோகலமாகக் கொண்டாடுவார்கள். தேரில் இருந்து இறங்கி வினாயகப்பெருமான் ஆலயத்திற்குள் செல்லும் அந்தக் கண்கொள்ளாக் காட்சி, அப்பொழுது பக்தர்களிடம் இருந்து வரும் ''அரோகரா''ச் சத்தம் வானைப் பிளக்கும். ஆனந்தக் கண்ணீர் கண்ணை நிறைக்கும். வினாயகப் பெருமானுடைய பன்னீர் மழையில் மக்கள் நனைந்து மெய்சிலிர்த்து நிற்பார்கள்.

இன்னொருபுறம் தவில் நாதஸ்வரக் கானமழை, அருள்மிகு பக்திப்பாடல்கள் இவை எல்லாம் நெஞ்சை நிறைத்து நிற்கும்.

பக்தர்களின் கற்பூரச் சட்டியில் எழுகின்ற புகை இணுவில் மண்ணையே இருட்டித்து நிற்கும். காவடிகள் நல்லூரையும், சன்னதியையும் நினைக்க வைக்கும். அதனைத் தொடர்ந்து வரும் தீர்த்தம், பூங்காவனம், இணுவில் நகரத்தையே இசைவிழாக் காணச் செய்வன!

இசை நினைவுகள் எம்முடன் ஒன்றியவை. அன்று அந்த மண்ணில் இருந்து புலம் பெயர்ந்தவர்கள் இன்றும் பக்திமான்களாகவும்! ஏதோ ஒரு வகையில் அந்தப் பரராசசேகரனை தம்முடன் இணைத்துக் கொண்டு அன்புக் காணிக்கைகளைச் செலுத்தி அந்த மண்ணின் நினைவுகளைப் போற்றிய வண்ணம் வாழ்கின்றார்கள்.

இந்த வினாயகப் பெருமானை அடுத்து இணுவைக் கந்தன், சிவகாமி அம்மன், யாவரும் அந்த மண்ணை அருளாட்சி செய்கின்ற தெய்வங்கள். சிறந்த பக்தர்கள் என்பதனை புலம் பெயர்ந்த நாடுகளிலும் நிலைநாட்டியவர்கள் இணுவை மக்கள். சிறப்பாக இன்னுமொன்றைச் சொல்வேன் - திருமண வீடு என்றால் பிற ஊர்களில் கல்யாணச் சபை கலைந்தால் சோறு கறி கிடையாது. ஆனால் இணுவிலில் நடக்கும் கல்யாண வீடுகளில் எந்த நேரமும் கல்யாணச் சோறும் ஐவகைக் கறிகளும் அப்பட்மும் பாயசமும் காத்திருக்கும். மற்றும் இடங்களில் சோற்றுக்குப் பதில் பலகாரம் தான் என்பது எனது துணிவான கருத்து.

இந்த மண்ணனில் நான் வாழ்ந்த காலங்களில் அங்கு கண்டு அனுபவித்த காட்சிகளெல்லாம் எனது உயிர் மூச்சு உள்ளவரை நிலைத்து நிற்கும். இந்திய, இலங்கை ராணுவங்களின் கெடுபிடியால் மக்கள் வீடிழந்து பொருள் இழந்து ஓட்டாண்டிகள் ஆனபோது ஆயிரக்கணக்கான மக்கள் தங்கி உயிர்காக்க இடம் கொடுத்தது பரராசசேகரன் ஆலயம், ஆலயக் கல்யாண மண்டபம், இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, இணுவில் கந்தன் ஆலயம், ஆகியனவே. வானுற ஓங்கிய பரராச சேகரன் ஆலயத்திலும் கல்யாண மண்டபத்திலும் எத்தனையோ விபரித்துச் சொல்ல முடியாத அவல வாழ்வுகள்! இவை எல்லாவற்றையும் தாங்கித் தரித்து அருளாட்சி செய்கின்ற எம் இணுவை மண்ணை நினைக்கும் பொழுதெல்லாம் எனக்கு என்னை மிஞ்சிய ஓர் உணர்வு! நானும் அந்த மண்ணில் பிறந்தது எனக்கு ஒரு கொடுப்பினையே!

இசைத்துறையை எடுத்துக் கொண்டால் இணுவை மண்ணின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளலாம். இலங்கையின் இசைக் கலைஞர்களில் ஈழத்தின் புகழை இந்தியா மட்டுமன்றி உலகிற்கே



இவன்தான் என்று முடிசூடா மன்னனாக அகில உலகமே போற்றிய தவில்மேதை லயஞான குபேரபூபதி நாதலயத்தின் பிரம்மன் வி. தெட்சணாமூர்த்தி அவர்களை ஈன்ற பெருமை இணுவில் மண்ணுக்கே! அவரைத் தொடர்ந்து என்.ஆர். சின்னராசா, போன்ற இசைக் குருநாதர்களை வழங்கிய பெருமையும் எம் மண்ணிற்கு உண்டு.

வி. தெட்சணாமூர்த்தி, நாச்சிமார் கோவில் கணேச பிள்ளை, என்.ஆர். சின்னராசா ஆகிய மூவரும் இணைந்து வழங்கும் நாத லயத்தைக் கேட்பதற்கு ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்தும் இசை ஞானமுள்ளவர்கள் அணிதிரண்டு வருவார்கள்.

இந்த வரிசையில் தட்சணாமூர்த்தி அவர்களுடன் இணைந்து கொண்ட இணுவில் கே.ஆர். புண்ணிய மூர்த்தி அவர்களும் புகழ் பெற்ற தவில் மேதையே.

மதுரை மணிஐயர் அவர்களின் பாடலுக்கு வயிலின் இசை வழங்கி தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுக் கொண்ட ஆர். ராதாக்கிருஸ்ணன் அவர்களாலும் எம் மண்ணிற்குப் பெருமையே.

சென்ற ஆண்டு நான் தமிழகம் சென்றபோது ஏழிசை மாமணி ரி.எம். சௌந்தரராஜன் அவர்களைச் சந்தித்து பேசும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது அவர் மனந்திறந்து கூறினார், ''தனக்குப் புகழ் சேர்த்த பாடல்களில் ஒன்றும் தனது உள்ளத்தைத் தொட்டபாடலும் என்று'' அவர் சொன்ன பாடல் ''கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா'' என்ற பாடலாகும். அந்தப் பாடலை எழுதிய பெருங்கவிஞர் வீரமணி ஐயர் அவர்கள் அவதரித்த மண் இணுவில் என்பதனால் அதைக் கேட்டு நான் பரவசமடைந்தேன்.

புகழ் பெற்ற இசைமேதைகள் சீர்காழி எஸ். கோவிந்தராஜன், கே.பி. சுந்தராம்பாள் ஆகியோர் எமது ஆலயத்தைச் சுற்றி வந்து பாடினார்கள். இணுவில் கந்தனை வணங்கி திருப்புகழ் பாடிய மதுரை மணிஐயர் அவர்கள் கந்தன் அருளால் தனைமறந்து மயங்கி இணுவில் மண்ணில் சாய்ந்த காட்சியும் எனது மனதை விட்டு அகலாதவை. ''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே'' என்று தான்

பிறந்த மண்ணின் உரிமையைப் பாடியதோடு அந்த மண்ணின் புழுதியிலே வீழ்ந்துருண்டு மகாகவி பாரதி மகிழ்ச்சி கொண்டதுபோல ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணில் ஈடில்லாப் பக்தியை வைத்துக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் எனது நெஞ்சில் ஆழமாகப் பதிந்திருக்கும் என் தாய்மண்ணின் நினைவுகளின் ஒரு துளியையே இங்கு வடித்திருக்கின்றேன். இதனைச் சுவைக்கும் உங்கள் அனைவருக்கும் இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையாரின் திருவருள் கிடைக்க அவரை வேண்டி பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**இணுவில்**
**சிவ – தணிகாசலம்**



# திருமதி. பத்மாவதி – சீவரட்ணம்

***(கனடா)***



அம்மா, பத்மாவதி அவர்கள் ஒரு படிக்காத மேதை. இவர் எழுதுகின்ற கடிதங்களில் கூட தமிழ் அழகு நடமாடும்.

கடிதம் மூலமாகத்தான் இவரின் நட்பு எனக்குக் கிட்டியது. அதன்பின் தொலைபேசி மூலமாக மணிக்கணக்காக உரையாடுவோம். இவருடைய மகன் கலகலப்பு தீசன் என்றால் அன்று யாழ்ப்பாணத்தில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. ''கலகலப்பு'' என்ற நகைச்சுவைச் சஞ்சிகையின் ஆசிரியர் தீசனின் தாயார்தான் பத்மாவதி அம்மா.

இவர் பிறந்த இணுவை மண்ணின் சிறப்புக்களை தனது தமிழில் இவர் தந்திருப்பது படிப்பதற்கு உங்களுக்கு சுவையாகவும், வித்தியாசமாகவும் இருக்கும்.

# என் இனிய இணுவில்

என்னுடைய ஊர் இணுவையூர். இனிமையான ஊர். இணுவில் எம் ஊரைப்பற்றி நிறைய சொல்லலாம். இணுவையூரில் நிறையக் கோயில்கள் உண்டு. சிதம்பரவளவில் உறை சிவகாமி சுந்தரி அம்மன், காரைக்கால் சிவன் கோவில் பரராஜ சேகரப் பிள்ளையார், நொச்சி ஓலை முருகன், அருணகிரிநாத சுப்பிரமணியர், செகராஜ சேகரப்பிள்ளையார், கற்பக விநாயக கருணாகரப் பிள்ளையார் இளந்தாரியள், அன்னமகேஸ்வரன் ஆகிய கோயில்கள் உள்ளன.

இராமநாதன் கல்லூரி, அ.ம.த கலவன் பாடசாலை, சைவமகாஜனா, சைவப்பிரகாசா ஆகிய நான்கு பாடசாலைகளும் உண்டு.

மகப்பேறு மற்றும் நோயாளர்களுக்கு வைத்தியம் செய்ய பெரிய வைத்தியசாலை. நாம் சிறுவயதில் அங்கு இருந்த போது பாடசாலைபோன நாட்கள் எதுவித பயமும் இல்லாமல் கன்றுக்குட்டி போல துள்ளித்திரிந்த காலம். பாடசாலைவிட்டு வீடுவந்தால் நண்பர்களுடன் கூடி விளையாடியது, கோவிலுக்குப்போனது எல்லாம் ஒரு கனவுபோலத் தெரிகிறது. நிறைய விவசாயக் குடும்பம்தான். அந்தக் காலத்தில் நீர் இறைக்கும் இயந்திரம் இல்லை. துலா இறைப்புத்தான்.

அதிகாலை மூன்றுமணிக்கு கூக்காட்டி கூட்டு இறைப்புக்காரரை எழுப்புவார். அவர்களுக்கு சாப்பாடு இப்ப உள்ள மாப்பலகாரம் இல்லை. பழைய சாதம் குழையல்தான். அந்தத் தண்ணீரில் உப்புப்போட்டுத்தான் குடிப்பார்கள். விவசாயிகள் தங்கள் விவசாயப் பொருட்களை மாட்டு வண்டியில்தான் கொண்டு போவர். நாங்களும் வண்டியில் போன நாட்கள் உண்டு.

இணுவில் ஒரு தெய்வீகமானது. அங்கு நிறைய கலைஞர்கள், கவிஞர்கள், புலவர்கள், நாடக நடிகர்கள், தவில் நாதஸ்வர, வயலின்வித்துவான்கள், பூமாலை சோடனைக்காரர்கள் இருந்தனர். இணுவை அப்பரின் திருவருளால் மஞ்சம் 1902 ஆம் ஆண்டு உருவாக்கப் பெற்று



1908 ஆம் ஆண்டு கந்தசுவாமி கோயிலுக்கு கொடுக்கப்பட்டது. அருணாகிரிநாத சுப்பிரமணிய சுவாமி கோயிலில்தான் மஞ்சம் செய்தது. அதனால்தான் மஞ்சத்தடி என்ற பெயர்வந்தது.

நாடக நடிகர்கள் அனுமார் கதிர்காமர் நாரதர் முதலித்தம்பி, நம்பிராசன் பொன்னையா, ராசசிங்கன், நாகலிங்கம், பண்டாரக்கிழவன் கார்த்திகேசு, செல்லப்பா, தம்பையா, ஏரம்பர் - இப்படி எத்தனையோ பேர் நடத்திய நாடகங்களை பார்த்த நினைவு. இதெல்லாம் இணுவை அப்பர் கோயில் மஞ்சத்தடியில் பார்த்துக் கழித்த நாட்கள்.

தவில் தட்சணா மூர்த்தி, என்.ஆர். சின்னராசா, கணேசபிள்ளை, புண்ணியமூர்த்தி, சுந்தரமூர்த்தி, கோவிந்தசாமி, உருத்திராபதி, கோதண்டபாணி, மாசிலாமணி ஆகியோர் வித்துவான்கள். கோவில் திருவிழா ஒவ்வொரு கோயிலிலும் நடைபெறும்.

உருத்திராபதியின் மகன் ராதா கிருஷ்ணன் வயலின் வித்துவான் இவரும் உலகப் புகழ் பெற்றவர். எங்கள் கவிமணி வீரமணி ஐயா கற்பகவல்லி புகழ் அவரும் எம் இணுவைக்கு மகுடம் சூட்டியவர். இதைவிட படமாளிகை ஒன்று எம் இணுவை வர்த்தகப் பெருமகனால் ஸ்ரீகாலிங்கன் படமாளிகையும் உண்டு. 1952 ஆம் ஆண்டு முதல் முதலில் எம்.எம். தண்டபாணி தேசிகர் நடித்த திருமழிசை ஆழ்வார் படம் வந்தது. போய் பார்த்தோம். அந்த நாள் நினைவுகளை மீட்டுப் பார்க்கிறேன்.

நவராத்திரி முடிவில் சூரன்போர், அடுத்த நாள் சிவகாமி அம்மன் வாழைவெட்டுவதற்காக இணுவை முருகனிடம் போய்வாழை வெட்டி முருகன் வாசலில் களைப்பாற அம்மனை இறக்கி வைப்பார். சுவாமி அம்மன் கோவிலிலிருந்து புறப்படும்போது முன்னுக்கு கூத்துக்காரர், பொய்க்கால் குதிரை ஆட்டம், குரங்கு ஆட்டம், கிழவி கிழவன் ஆட்டம், நாரதர் ஆட்டம், அம்மனுக்கு முன் ஆடி ஆடிப்போவார்கள். ஒவ்வொரு வீட்டு முகப்பிலும் பந்தல்போட்டு உணவுவகைகளும் வைப்பார்கள். அம்மனுக்கு பின்னால் பஜனைக்கோஸ்டி. அதில் தியாகராஜா சுவாமிகூட்டத்தினர் ஒரே ஆரவாரம். அதில் கலந்து கொண்ட

நாட்கள். சுவாமி கோயிலை வந்தடைய அதிகாலை நான்கு மணியாகும். முன்பு எமது சிறிய வயதில் மின்சாரம் இல்லை. காஸ்விளக்கு தலையில் வைத்துக்கொண்டு வருவார்கள். இணுவில் சாத்திரம்மா அவர்தான் தன்முயற்சியால் அம்மன் கோயில் கோபுர வேலையையும், பத்ரகாளி வைரவ கோயிலையும் உருவாக்கியவர். அவர் பாக்கு உருட்டித்தான் சாஸ்திரம் சொல்லுவார். அதனால் அவரை பாக்குருட்டி அம்மா என்று அழைப்பர்.

காரைக்காலில் முன்பு மணியத்தார் வைத்தியம் செய்தவர். அதனால் அங்கு நிறையப்பேர் தங்கி வைத்தியம் செய்வித்து சுகம் பெற்றனர். இப்போது நாட்டுப்பிரச்சனையால் மக்கள் எல்லாம் சிதறிப்போய் வெளிநாடுகளிலும் வன்னி மாவட்டங்களிலும் வாழுகிறார்கள். மாலை ஆறு மணிக்கு மரதனாமட புகையிரத நிலையத்தில் மக்கள் கூட்டமாக கொழும்பு போவதற்கு முண்டி அடித்துப் போவார்கள். இப்போ தண்டவாளமும் இல்லை. புகையிரதமும் காணமுடியாது. மீண்டும் அப்படி ஒரு காலம் வருமா? அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே.

மீண்டும் யாழ்ப்பாணம் பழைய நிலைக்கு வரவேண்டும் என்ற ஆவல்தான். ஆனால் நான் மீண்டும் துள்ளிக் குதிக்க முடியாதே என்ற வருத்தம். ஏனெனில் எனக்கு வயது போய்விட்டது. இளமை மீண்டும் வராது. ஆனாலும் எம்மண்ணை நான் ஓடி ஆடிய எம்மண்ணை மீண்டும் முத்தமிட ஆசைப்படுகிறேன்.

நிறைவேறுமா? என் எண்ணம் நிறைவேறுமா? தெய்வமே பதில் கூறும் தாய் மண்ணே எங்கள் தாயகமே என் தாபமெல்லாம் தனித்தமிழீழமே. தாய் மண்ணே எங்கள் இணுவை மண்ணே.

*எம் மண்ணை நேசிக்கும்*

**திருமதி. பத்மாவதி சீவரட்ணம்**

*இணுவையூர்*



# சித்திரைமாதம்

*சித்திரைப்பூ சிரிக்கிறது - இனி*
*செழுமைகள் கனியட்டும்*
*தித்திக்கும் என் தமிழே*
*தேசமெங்கும் முழங்கட்டும்!*

*வித்தகர்கள் பெருகட்டும் - புது*
*விடியல் இங்கு மலரட்டும்*
*நித்தம் வரும் யுத்தங்கள்*
*நெஞ்சதிரும் வெடிச் சத்தங்கள்*
*மறைந்தழிந்து போகட்டும் நல்ல*
*மானுடம் தழைத் தோங்கட்டும்!*

*குறைவில்லா வளம் யாவும்*
*கொண்டு நல்ல மண் வாசனை வீசட்டும்!*
*அமிழ்தில் இனிய எம்தமிழே*
*அரியணையில் ஏறட்டும் எம்*
*தமிழ் மொழியின் பெருமைகளோ*
*தரணி எங்கும் பரவட்டும்,*
*நல்லபடி எம்தமிழீழத்தில் நல்ல*
*நறுமணத்துடன் மண்வாசனை வீசட்டும்!*

*திருமதி. பத்மாவதி*




அருள்மிகு இணுவைச் சிவகாமியம்மை திருத்தலத் திருக்கோபுரம்



அருள்மிகு இணுவைச் சிவகாமியம்மை மாநோன்புத் திருநாள்



இணுவில் அருள்மிரு கந்தசாமி கோவில்
இராச கோபுரபுனர் நிர்மாண கும்பாஅபிசேக
தினத்தில் வெளியிடப்பெற்றது 2-7-2001



உலகப் பெருமஞ்சம் இணுவைத்திருப்பதி

தமிழ்ச் சங்கம்
நூலகம்



# திரு. ஆ.க. மாணிக்கம்

**(கனடா)**

கனடாவில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையில் மண் வாசனை என்னும் இந்த நூல் வருவது பற்றிய செய்தியைப் படித்து இரண்டு கட்டுரைகள் அனுப்பிவைத்தார். இரண்டும் முத்தாக இருந்ததனால் இரண்டையும் பதிவு செய்துள்ளேன். வடமராட்சி, தமிழாசிரியர் சங்கத்தின் தலைவராகவும் பணிபுரிந்திருக்கின்றார்.

ஆசிரியருக்கே உரித்தான தமிழ் நடை இவருடைய எழுத்துக்களில் கரைபுரண்டோடுகின்றது.

## கிழக்கிலங்கையின் வேடந்தாங்கல்

என் இனிய நண்பர்களே! மீன்பாடும் தேன் நாடாம் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு வேடந்தாங்கல் உண்டு. பார்த்து வருவோம் வருகிறீர்களா? என்ன ஒரு புதுமையான அழைப்பு என்று ஆச்சரியமா? வேடந்தாங்கல் தென் இந்தியாவில் தமிழ் நாட்டில்தானே உள்ளது என்கிறீர்களா? ஆம் அது போல் எங்கள் திருநாட்டிலும் உண்டு. வாருங்கள் என்னுடன் உங்களிடமுள்ள நவீன மின்வலுக்கொண்ட புகைப்படக் கருவிகளுடன் பயணம் செய்வோம்.

மட்டக்களப்பிலிருந்து வடக்கே வாழைச்சேனையை அண்டிய பகுதியில்தான் கிழக்கின் வேடந்தாங்கல் என்ற பெயர் பெற்ற வாகனேரி அமைந்துள்ளது. இங்கேயுள்ள ஏரியை இலங்கையின் மற்றைய பெரும் குளங்களோடு ஒப்பிடலாம். ஆனால் இது ஒரு இயற்கையான ஏரி என்பதுதான் இதன் விஷேடம். கிழக்கு மகாணத்தில் பொழியும் மழை



நீரும் இயற்கையாகவே இதில் பெருகும் ஊற்று நீரும் சேர்ந்து பாரிய நீர்பரப்பாய்க் காட்சி தரும். இந்த ஏரியில் நீண்டு விரிந்து காணப்படும் நீர்பரப்பு பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தும். இதன் ஈரலிப்பினால் அயலில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கராவில் காடுகள் செழிப்புற்று வளர்ந்திருக்கும். காடுகளா? இவை என்று காண்போரை மூக்கின் மேல் விரல்வைக்கும் அளவிற்கு அடத்தியான வனம். இதன் சூழலில் வளர்ந்திருக்கும் காட்டு மரங்களில்தான் எத்தனைவகை! வானத்திற்கும் பூமிக்கும் பாதை சமைக்கிறோம் என்று ஓங்கி உயர்ந்த மரங்களின் கிளைகளால் விண்ணோடும் முகிலோடும் உறவாடும் காட்சிகள். இந்த வானுயர்ந்த மரங்களிடையே வலைப்பின்னல் போட்டு மறைத்திருக்கும் கொடிவகைகள் ஏராளம். இவை ஆதவன் ஒளியையும், வாயுதேவன் அசைவையும் தங்கள் அனுமதி பெற்றுத்தான் வனத்தினுள் புகமுடியும் என்று சவால்விடும் தோற்றம். சுருங்கச் சொன்னால் இங்கே பகலில் இரவைக் காணலாம். அப்படியான நெருக்கம்தான் இந்த வனப்பகுதி.

பலவித மிருகங்களும் பட்சிஜாலங்களும் குதூகலித்துக் குளம்மாளமிடும் இயற்கை நிலை. இங்குள்ள வானுயர்ந்த மரங்களின் மேற்பரப்பில் நெஞ்சை அள்ளும் வனப்புடன் தோன்றும் மலர்க்கொத்துக்கள் வானைத்தொடும் வாகை மரங்கள் இவற்றின் கிளைகள் முகில்கள் தேடிக் கையசைக்கும். சில மரங்கள் உருத்தெரியாமல் முழுமையும் சிவந்த மலர்தேராய்த் தெரியும். நீல மலர்க் குடையாய் ஒருவகை பழுப்பு நிறத் திரைச் சீலையாய் பல வகையான பூஞ்சோலையாய் காட்சி தரும் வேறொரு மரம். இத்தனை பெரிய வாவி இருப்பதே தெரியாமல் வளர்ந்து பருத்த மரங்களின் அரண் போன்ற காவல் கைகளை அகல நீட்டும் மருத மரமரங்கள், ஆல மரங்கள் போல் விழுது பாய்ச்சி ஊஞ்சல் ஆட்டும் ஒரு சிலவகை மரங்கள் பெரிய தாமரை இலைபோன்ற இலைகளுடன் ஒருவகைக்கொடி இப்பாரிய மரங்களில் படர்ந்து ஆங்காங்கே தங்கள் வெண்மையும் நீலமும் கலந்த குழாய்போன்ற பூக்களால் அலங்கரிக்கும். இப்பூக்களை காணும் தோறும் ஊரில் திருவிழாக்காலங்களில் தென்னை, பனைமரங்களில் கட்டிய ஒலி பெருக்கி குழாய்கள் மூலம் கேட்ட சங்கீத ஒலியும் நாதஸ்வர ஓசையும் நினைவுக்கு வரும். இயற்கையில் எத்தனை நிறங்கள் உண்டோ

அத்தனையும் இந்த மரச்சோலையில் மேற்பரப்பில் காட்சி தரும். சூரிய ஒளியும் இவற்றிற்கு மேலும் அழகு சேர்க்கும்.

இந்த வானுயர் சோலையில் எத்தனை விதமான பட்சி இனங்கள். இங்கே திடீரென ஒரு பறவையின் குரல் கேட்கும். நூற்றுக்கணக்கான பறவைகள் கண் இமைக்கும் வேளையில் மேலெழுந்து பறக்கும் காட்சி அருமையானது. மரங்களின் பூங்கொத்துக்கள்தான் இறைக்கை முளைத்து பறப்பது போன்ற தோற்றம். பூக்களுக்கும் பறவைகளின் நிறங்களுக்கும் வேறுபாடு இல்லாத இயற்கை அது. சூரிய ஒளி தணிந்திருக்கும் மாலை வேளையில் வனத்தின் ஒருபால் மழை முகில் கருக்கொண்டிருக்கும். இதன் எதிர்புறத்தில் வான் பரப்பில் வானவில் தோற்றம் தரும். அந்த வேளையில் வானவில்லில் காணுகின்ற வண்ண வண்ண நிறமெல்லாம் வந்து வந்து சரண்புகுந்ததோ இந்த வானுயர் வனத்தில் என்று எண்ணும் நிலைக்கும் வருவோம். இன்னும் வான்நோக்கி பறந்து செல்லும் பல வர்ணப்புள்ளினங்களின் மேல் வந்து உரசிய முகில் கூட்டம்தான் இந்த வானவில்லை பிரசவித்ததோ என்று எண்ணவும் தோன்றும். இந்த ஏரியை அண்டிய வனப்பகுதியைத்தவிர ஏனைய பகுதிகள் யாவும் தானிய வகைகள்தான். தானியங்கள் பொறுக்கி உண்ணும் நோக்குடன் நூற்றுக்கணக்கான கிளிகளும், மைனாக்களும் வான் வெளியில் வட்டமிடும் காட்சி கண்டு பரவசமடையலாம்.

பறவை இனத்தில்தான் எத்தனை வகை! கொக்குகள், 'நாராய் நாராய் செங்கால் நாராய்' என்ற கண்சிவந்த நாரைகள் மரக்கிளைகளில் உட்கார்ந்து உல்லாசமாய்ப் பாடும் ஒருவகை பட்சி. இதன் மூவர்ண வால் நீண்டு பெண்களின் தாவணித் தொங்கல்போல் தொங்கி காற்றில் அசையும். அரசர் முடி தரித்தது பேன்ற தலை மகுடத்துடன் கொர்வமாய் அங்கும் இங்கும் தாவித்திரியும். இன்னொரு பறவை தேரில் அசைந்தாடும் தோரணங்கள் போன்ற அழகுடன் காற்றில் ஊஞ்சல் ஆடும் கூட்டிற்குள் இருந்து அடிக்கடி வெளி உலகை எட்டிபார்க்கும் தூக்கணாங்குருவிகள். இவை அடிக்கடி தலைநீட்டி பார்ப்பது இன்றைய நவீன தொழில் நுட்பவியலாளர்கள் எவராயினும் தங்கள் கூட்டைப்போல் ஆக்க முடியுமா? என்று கேட்பது போல் இருக்கும். ஒரு கைக்குள்



மூடிவைத்திருக்கும் அளவுக்கு மிகச்சிறிய பறவை ஒரு இனம். கோலிக்குண்டுபோல் இருக்கும் இதை பலாக்கொட்டை குருவி என்பார்கள். குன்று மணிபோன்ற பள பளக்கும் கண்கள். சதா எந்த நேரமும் பாடிக்கொண்டும் கிளைக்குக்கிளை தாவிக் கொண்டும் உற்சாகமாய் திரியும். சுருங்கச்சொன்னால் கடற்காகம் கண்ணிக்காகம், கண்சிவந்த நாரையும், கொட்டுக்கிளிகளுடன். கோதாவாரிக்கிளிகளும், ஆகா என்னென்று சொல்வேன். இந்த அருமை சேர் வனத்தின் பெருமையை இன்று ஆகா என்னென்று சொல்வேன்? என்று வனத்தின் வனப்பைப் பாடிய அன்றைய நம் நாட்டு மேடைக்கூத்துப் புலவரின் வரிகள்தான் ஞாபகத்துக்கு வரும். இங்கே காணும் பட்சி இனங்களின் ஒரு பகுதி வேறு இடங்களில் இருந்து இயற்கையின் மாறுதலுக்கேற்ப பந்தங்களை பாதுகாக்கும் பொருட்டு இடம் பெயர்ந்து வந்து தற்காலிகமாக வாழ்வு நடத்தும் கோலங்களையும் காணலாம்.

இந்த புலம்பெயர்ந்து வரும் பறவை இனங்களை எண்ணும் போது எங்கள் பள்ளி நாட்கள் ஞாபகத்துக்குவரும். நண்பர்களோடு முழு நிலாக்காலத்தில் கீரிமலை கடலின் வெண்மணல் பரப்பில் இருந்து ரசித்த நேரம். முன்னால் எல்லையற்ற நீலக்கடல். அதைத் தூரத்தே முத்தமிடும் நீலவான்வெளி. இவை இரண்டையும் பால் போன்ற ஒளிவெள்ளத்தால் ஆட்சி புரியும் முழுநிலா. இந்த வேளையில் வடகோடிக்கரையில் இருந்துவரும் வெளவால்களின் படையெடுப்பு. இதுபற்றிய சர்ச்சை எங்கள் மத்தியில் நீண்டு மறுநாள் பள்ளியில் தீர்த்து வைக்கப்படும். இதற்கு விளக்கமும் தந்து முத்தாய்ப்பு வைக்கிறார் எங்கள் அன்புக்குரிய ஆசான் பண்டிதர் ஐயா அவர்கள். 'மரம்பழுத்தால் வெளவாலை வா' என்று கூவி என்ற பாடலின் கருத்து மூலம். பறவையினங்களின் புலம் பெயர்வு வாழ்வுபற்றிய ஆய்வையும் அறிவையும் புகட்டினார். பின் நாட்களில் பறவையியல் ஆராய்ச்சியாளர்களின் ஆய்வின்படி சில இனப் பறவைகள் இயற்கையின் மாறுதலுக்கேற்ப இடம்விட்டு ஊர்விட்டு ஏன் கண்டம்விட்டுக் கண்டம்பறந்துவந்து வாழ்ந்து திரும்புகின்றன என்று அறிந்தோம். இந்த ஏரியில் காணப்படும் கூழைக்கடா என்ற நீண்ட பெரிய கழுத்துடைய நாரைகள் சைபீரியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவைதான். அங்கு நிலவும் கடுங்குளிர் காரணமாய் புலம்

பெயர்ந்து வருகின்றன. பகலில் இரைதேடிச் சென்ற பறவைக் கூட்டம் மாலையில் இந்த ஏரியின் காடுகளுக்குத் திரும்பி வந்து தங்கள் உறவினரோடு போடும் ஆரவாரம் ஒரு சந்தைச் சந்தடிபோல் இருக்கும். இந்த வேளையில் புலம்பெயர்ந்து வந்த பறவைகளை வந்தேறு குடிகள் என்று மனிதர்கள் தங்கள் சகாக்களைப் புறக்கணிப்பது போன்ற நாடகமும் நடக்கும். கொத்தித்துரத்தும் வேலையும் நடக்கும். வந்தோரை வரவேற்று ஆதரிக்கும் பண்பையும் இந்தப் பட்சிக்கூட்டங்கள் புலம் பெயர்ந்து வந்த பறவைகளுடன் இணைந்து வர்க்கவிருத்தி காண்பதும் இயல்பாக நிகழும். இப்படி நிகழும் வர்க்கவிருத்தியின் பெறு பேற்றை அடுத்து வரும் காலபோகங்களில் இங்கு உலாவும் புதிய புள்ளினங்கள் மூலம் அறியலாம்.

கோடைகாலத்தில் இந்த ஏரியின் நீர்ப்பரப்பில் சிறிது மாற்றங் காணலாம். ஏரியின் கால்பங்கு புல்தரையாய்க் காட்சிதரும். மற்றைய முக்கால் பகுதியும் நீரின் ஆதிக்கம்தான். மதிய வெய்யிலின் தாக்கத்தினால் களைப்புற்று மூன்று நான்கு மான்கள் நீரருந்த ஏரியை நோக்கி ஓடிவரும். அவற்றின் பின்னால் பதுங்கிப் பதுங்கிவரும் ஒரு சிறுத்தை அப்பாவிகளான இந்த மான்களை வேட்டையாடிப் புசிப்பதற்கு இந்த வேளை ஒரு காட்சி அரங்கேறும். சதா ஏதோ ஒன்றைவாயில் கொறித்தபடி விளையாடும் அணில் பிள்ளை ஒன்று மான்களுக்கு நேரப்போகும் அபாயத்தை உணர்ந்ததுபோல் தன் நாலுகால்களையும் உயர்த்தி குஞ்சம் போன்ற வாலில் எழுந்து நின்று ஒரு அபாயச்சங்கொலிபோல் சத்தமிடும். இடைவிடாது தாவித்திரியும் குரங்கண்ணாவுக்கு அணில் பிள்ளையின் மந்திர ஒலி புரிந்துவிட்டது போலும். ஓடுங்கோ எதிரி வருகிறான் என்ற பொருள்படப்போலும் பெருங்குரல் எழுப்பிப் பித்துப் பிடித்தது போல் கத்தும். இயற்கையின் சிருஷ்டிகளுக்கு அம்மொழி புரியும் போலும். உடனே அந்த மான்கள் நான்கும் வாயுவேகம் மனோ வேகம் என்பது போல் ஓடி ஏரியின் மறுபுறக் காட்டிற்குள் மறைந்துவிடும். சிறுத்தைக்கும் இப்போது மனச்சோர்வும் ஏமாற்றமும்தான். இவர் ஆத்திரம் கொண்டாலும் அணில் பிள்ளையையும் குரங்கண்ணாவையும் எட்ட முடியாதுதானே. இன்று போய் நாளைவா என்ற நப்பாசையுடன் வெறுங்கையோடு திரும்புவார்.



இந்த மிருகராசிகளிடம் உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் படைத்துக்காக்கும் இயற்கை அன்னையை வியந்து இன்னும் சில காட்சிகளைப் பார்ப்போம்.

மாலையில் ஆதவனின் வெம்மை அடங்கியதும் குளத்து நீரில் படுத்து உல்லாசம் கொண்ட எருமைக்கூட்டம் பசி எடுக்க மேய்ச்சலுக்கு புறப்படும் காட்சி. நீர்வற்றிய பகுதிப்புல் தரையில் மேய்ந்த வண்ணம் பயணம் தொடரும். சொல்லி வைத்தால் போல் பறந்து வரும் காக்கைக்கூட்டமும் மைனாக்களும் எருமைகளின் முதுகில் இவை இலவசப்பயணம் செய்யும். இந்த எருமைகளின் குருதியை உறிஞ்சி வாழும் உண்ணிக்கிருமிகளை இந்த காக்கைகளும் மைனாக்களும் கொத்தி கொத்தி உண்டு எருமைகளுக்கு ஆறுதல் தருவதற்குத்தான் முதுகின்மேல் இலவச சவாரி. இங்கேயும் இயற்கை அன்னை இந்தச் சீவராசிகளுக்கு எவ்வளவு அன்னியோன்னிய உதவிகளை வழங்கியுள்ளார் என்று காண்கிறோம். மாலையில் கதிரவன் குடதிசையில் செல்லும் காட்சி எதிர்த்திசையில் மழைமுகிலின் அசைவு. இதனால் உண்டாகும் வானவில் காட்சி. இதைக்கண்டு களிப்பது போன்ற கானமயில்கள் சிலவற்றின் நடமாட்டம். மழை முகிலும் வானவில்லும் இந்தக் கானமயில்களை கவர்ந்தது போல ஏரியின் புல்தரை கானமயில்களின் சிங்கார நடனத்திற்கு மேடையாக மாறும். அற்புதம் பார்க்கலாம். இந்தக் கோல மாமஞ்ஞைகளின் மோகன நடனத்தில் இலயித்த நாமும் வேலோடு முருகனைப் பார்த்தோமா என்ற புனிதமான எண்ணம் தோன்றும்.

இன்னும் ஒரு பூரண நிலவில் நின்று ரசிப்போம். முழுநிலா தன் பால் போன்ற ஒளியால் ஆகாய எல்லை எல்லாம் ஆக்கிரமித்தது போன்ற ஒளிவெள்ளம். இந்த வேளையில் ஏரியின் புல்வெளிப்பக்கமிருந்து கருங்கல் குன்றுகள் போல் மூன்று நான்கு யானைகள் திமிர் நடைபோட்டு வரும் காட்சி. அதில் ஒரு (கொம்பன்) ஆண்யானை தலைமைதாங்கி முன்வரும். நிலவில் மயங்கும் கவர்ச்சி இந்த மிருகவர்க்கத்தையும் கவரும் போலும். முன்னேறி வந்த கொம்பன் யானை திடீரெனத் தும்பிக்கையை உயர்த்தி அட்டகாசமாய் பிளிறும். இச்செயலை அனுமதிப்பது போல் மற்ற யானைகள் தங்கள்

சுளகுக்காதுகளை முன்னும் பின்னும் வீசிக் கொண்டிருக்கும். இக் காட்சியைப் பார்க்கும்போது போர்க்களத்தில் போராடி வென்ற வீரன் ஒருவன் வெற்றிக்களிப்பால் மற்றைய வீரர்களுக்குச் சவால்விடும் பாவனைபோல் தெரியும். இப்படி எத்தனையோ அரிய இயற்கைக் காட்சிகளைத் தன்னகத்தே கொண்டதுதான் கிழக்கிலங்கையின் வேடந்தாங்கல் என்ற வாகனேரி.

என் இனிய நண்பர்களே இன்றைய நவீன வசதிகளுடன் செயல்படும் ஊடகவியலாளர்களே, இந்த ஏரியின் அணைக்கட்டில் ஏறிச் சிறிது தூரம் நடந்து வாருங்கள். நான்கு ஐந்து கனரக வாகனங்கள் ஒரே திசையில் ஒன்று சேரச் செல்லக்கூடிய அகன்ற வீதிபோன்றது தான் இந்த அணைக்கட்டின் மேற்பரப்பு. இதமான புல்தரை பாதையாய் அமைந்துள்ள இதில் நடந்து செல்லும் போது வனப்பகுதியில் வீசிவரும் தென்றல் ஏரியில் நீராடி எங்களைத் தழுவிச் செல்லும். இந்த இதமான வேளையில் தூரத்தே உள்ள தென்னந் தோப்பில் பாடும் குயிலின் கானத்தைக் காற்றலை கொண்டுவந்து மொழி பெயர்க்கும். இந்த இன்பமான வேளையில் மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? மேற்கண்ட இனிய அருங்காட்சிகளைக் காண உங்களை இட்டுச் சென்றது - யான் கண்டு கேட்டுப்பட்டு அறிந்த அனுபவத்தினால், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெருவாக்கின் நிதர்சனப் பொருள்தான். நம் முந்தையர் ஆயிரம் ஆண்டு வாழ்ந்தும் அன்னாரின் ஆக்கமும் அயரா உழைப்பும்தான் நாம் இன்று காணும் இந்த இயற்கையான ஏரியும் அதன் சுற்றாடலான வனப்பிரதேசமும். இதன் விலைமதிப்பற்ற வளத்தைப் பேண வேண்டிய கட்டாயதேவை பின் காலத்தில் எங்களை ஆளவந்த ஆங்கில அரசுக்கு இருந்தது. இந்த ஏரியையும், சுற்றாடல் மிருகவர்க்கம், பட்சி இனங்கள் யாவற்றையும் பாதுகாக்கும் பொருட்டு இப்பிரதேசத்தைப் பாதுகாப்பான சரணாலமாகப் பிரகடனப்படுத்தியது அரசு. கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி விவசாயத்திற்கு உறுதுணையான இந்த ஏரியைத் தனது நீர்ப்பாசனத் திட்டத்திற்குட்படுத்தியது. இதன் பொருட்டு இந்த ஏரிக்கு அண்மையில் ஒரு சுற்றுலா விடுதியை அமைக்கத் திட்டமிட்டனர்.



புல்லாய் பிறந்தால் விரைவில் மறைந்துவிடுவேன். ஆதலால் என்னை கல்லாய் படைத்து விடு இறைவா என்று வரம் வாங்கி வந்து நிமிர்ந்து உயர்ந்து நெடிதாய் காட்சி தருகிறான், ஒரு குன்றுத் தேவன். இது ஒரு தனியான கருங்கல்மலை. இதன் மீது அந்தச் சுற்றுலாமாளிகையை அமைத்தனர். தன் தோள்களில் சுமந்திருப்பது போல் இந்த மாளிகையைத் தாங்கி நிற்கிறது, அந்தக் குன்று. பாறை ஏரியின் அண்மையில் உயரமான இந்தக் குன்றின்மேல் அமைந்திருப்பதால் ஏரியையும் அதன் சுற்றாடலையும் இந்த மாளிகையிலிருந்தே முழுமையாக பார்த்து ரசிக்கும் வாய்ப்பு உண்டு. தங்கள் நிர்வாகத்திற்கு மாத்திரமின்றி விடுமுறை கால சந்தோஷப் பொழுது போக்கிற்கும் அத்தோடு சுற்றத்தவருடன் இந்த எழில்மிக்க இயற்கையைப் பார்த்து ரசிக்கவுமாய் இந்த மாளிகையை திட்டமிட்டு அமைத்தனர். விஞ்ஞானத்தில் வளர்ச்சி கண்ட ஆங்கில அரசு இவ்விடமுள்ள இயற்கை நிகழ்வுகளைப் பாதுகாப்பாகவும் வேறு தொல்லைகள் இல்லாமலும் கண்டு மகிழ்வதற்கு ஒருவழி செய்தது. இந்த ஏரியை நோக்கி அமைந்த மாளிகையின் சபா மண்டபத்துச் சாளரங்களுக்கு சாதாரண கண்ணாடிகளுக்குப் பதிலாக தூரநோக்கிக் கண்ணாடிகள் பதித்தார்கள். இதன் மூலம் வீட்டிலிருந்தவாறே இயற்கையை அனுபவிக்கும் பேறு பெற்றார்கள்.

சுதந்திர இலங்கையின் அதிகாரத் தொடக்கத்தில் இந்த வாகனேரியை அன்றைய பகுதியில் தென்னம் தோட்டங்களுக்கும் நெல்வயல்களுக்கும் உரிமையாளரான எனது உறவினரிடம் வேலையாளாக இருந்த எனக்கு அன்றைய நீர்ப்பாசன உயர் அதிகாரி நண்பரானார். இயற்கையைத் தெய்வமாக எண்ணும் எனக்கு அவர் தனது பொறுப்பில் இருந்த ஏரியையும் அதன் சுற்றாடலையும் சுற்றிக் காண்பிக்க தவறவில்லை. அத்துடன் இந்த சுற்றுலா மாளிகையிலிருந்து இந்தச் சாளரத்தின் வழியே வெளியில் அரங்கேறும் மேற்கண்ட காட்சிகளையும் கண்டு மனம் கொள்ளவும் வழி செய்தார். இவர் செங்காலடியை பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் அன்பர். இதற்கு மேலும் சகபாடியாய் வேலை செய்தவர் ஒரு உள்ளூர்வாசி. அவர் உண்மையில் கிழக்கு மாகாணத் தமிழ் வேடுவ இளைஞர். ஆறுமுகம் என்பது அவர்

பெயர். இயற்கையிலேயே திறன்கொண்ட வேட்டைக்காரன். பல நாட்கள் இந்த ஏரியையும் சுற்றாடலான வனப்பகுதியையும் கண்டு மகிழ்ந்த நாட்கள் நினைவில் நீங்காதவை. இவர்கள் இருவரும் எங்கிருந்தாலும் இவர்களை நன்றாக வாழவைப்பாய் அம்மா என்று அந்த இயற்கை அன்னையிடம் வேண்டுதல் செய்கிறேன்.

ஆகவே அன்பானவர்களே, எத்தனையோ அரசமன்றங்கள் யுத்தக் கெடுபிடிகளில் எல்லாம் சிக்கியிருக்கும் நம்நாட்டு நிலவரத்தில் வேடந்தாங்கலும் இன்று என்ன நிலைபரத்தில் இருக்கும் என்று சொல்ல முடியாவிட்டாலும் இயற்கை அன்னை தன் முழு எழிலுடன் இருக்கிறாள் என்பது உண்மை. இன்னும் அந்தச் சுற்றுலா மாளிகையும் அதன் சாளரத்தில் பொருந்திய தொலைப் பார்வைக் கண்ணாடிகளும் காலத்தின் கோலத்தினால் என்னவாகியிருக்கும் என்று திடமாக சொல்ல இயலாதுதானே. ஆனால் ஒன்றுமட்டும் அழியாத உண்மையாய் நிலைத்து நிற்பதுதான், ஏரியை காவல் செய்யும் குன்றுத்தேவன். இன்றைய நவீன உபகரணங்களுடன் நீங்கள் அந்தக் குன்றின்மேல் ஏறிநின்று அனைத்து இயற்கை வித்தைகளையும் உங்கள் கருவிகளுக்குள் அடக்கி விடலாம். அன்றைய ஆட்சியாளர்கள் தங்கள் இயற்கை ரசனையையும் ஆட்சி உரிமைகளையும் தங்களுக்குள் மாத்திரம் வைத்துவிட்டுப் போயினர். இலங்கை மாதாவின் புத்திரர்களான நீங்களும் நானும் அப்படியன்று. இந்த அதியுன்னத இயற்கைக் கருவூலத்தை நாங்களும் பருகி எண்ணற்ற உலகமக்களுக்கும் அறிவிப்பதன் மூலம் எங்கள் நாட்டின் பெருமையை அறியத்தருகிறோம். அத்துடன் சுற்றுலா என்னும் பெரும்பணம் ஈட்டும் தொழிலுக்கு உதவுவோம். வெளிநாட்டுப்பணம் நம் நாட்டுக்கு வருவதோடு நம் நாட்டு இயற்கை ரசிகர்களின் கவனத்திற்குத் தரப்படும் சேவையும் ஆகும். இதைத்தான் மேற்கண்ட காட்சிகளின் மூலம் என் இனிய நண்பர்களாகிய ஊடகவியலாளர்களையும் எம் மக்களையும் வேண்டி நிற்கிறேன்.

செய்வீர்களா? வருவீர்களா? அடுத்த முறை கிழக்கிலங்கையின் வேடந்தாங்கலுக்கு.

*வை. வேலுப்பிள்ளை*
கனடா



# அல்வாயூர்

தமிழகத்தின் வடபகுதியில் அமைந்திருப்பது யாழ்ப்பாணக் குடாநாடு. அதன் வடகிழக்குப் பகுதியில் இருக்கிற பருத்தித்துறைக்கு அயற்கிராமமாக அல்வாயூர் விளங்குகின்றது. அல்வாய்க்கு கரவெட்டி, துன்னாலை, புலோலி, கரணவாய் முதலிய கிராமங்கள் அயற்கிராமங்களாக விளங்குகின்றன. அல்வாய் பெரிய இடப்பரப்பையும் பல ஆயிரக்கணக்கான மக்களையும் கொண்டது. அதனால் அல்வாயூர் அல்வாய் தெற்கு, அல்வாய் வடக்கு, அல்வாய் கிழக்கு, அல்வாய் மேற்கு எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அரசநிர்வாகம் நடைபெறுகின்றது.

அல்வாய் வாசிகளின் பூர்வீக சமயம் சைவசமயம். அதன் ஒளிவிளக்காய் அல்வாயின் தென்பகுதியில் மாலிச்சந்திப் பிள்ளையார் ஆலயமும், வடபகுதியில் இம்பாசிட்டி விநாயகர் ஆலயமும், மத்தியில் வேவிலந்தை முத்துமாரிய அம்மன் ஆலயமும் உள்ளன. பலபாகங்களிலும் வாழும் மக்கள் திருவிழாக்காலங்களிலும் விசேட தினங்களிலும் பெருந்தொகையாக வருகை தந்து இறைவனைப் பிரார்த்தனை செய்து போவதைக் காணலாம். கிராமத்தின் இடையிடையே மக்கள் தங்கள் வசதிநோக்கி வைரவர் கோயில்கள் அமைத்தும் வழிபாடு செய்து வருகிறார்கள்.

அல்வாய் கிராமத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் கமக்காரர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் காலவளர்ச்சிக்கிணங்கப் பலர் உயர் கல்வி கற்று சட்டவல்லுநர்களாகவும், வைத்திய கலாநிதிகளாகவும், பொறியியலாளராகவும், ஆசிரியர்களாகவும், அரச உத்தியோகத்தர்களாகவும் வாழுகின்றார்கள். இன்று உலக மக்களால் போற்றப்படும் சட்டமேதை திருவாளர்

ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் அவதரித்ததும் அல்வாயூர்தான். அந்நியராட்சிக் காலத்தில் கிறிஸ்தவ பாடசாலைகள் நடைபெற்றன. அந்நிலையில் அல்வாயில் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ பாடசாலையில் படித்த மாணவர்களில் சிலர் மதமாற்றம் பெற்றுக் கிறிஸ்தவர்களாகி ஆசிரியர்களாகவும். அரச உத்தியோகஸ்தர்களாகவும் வாழ்ந்தார்கள். அந்தச் சூழ்நிலையை உணர்ந்த புலவர் பண்டிதர் க. சின்னத்தம்பி உபாத்தியாயர் அவர்கள் அல்வாய் தெற்குச் சைவப்பிரகாச வித்தியாசாலையை 1906 ஆம் ஆண்டு தனது சொந்த நிலத்தில் ஆரம்பித்து மாணவர்கள் மதம்மாறாமல் சைவசமயத்தவர்களாக வாழ வழிகாட்டினார்கள். திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட அப்பாடசாலையை பெரியாரின் விடா முயற்சியால் அரச அங்கீகாரம் பெற்று உயர்கல்வி வரை கல்வி கற்கக் கூடியவகையில் ஆக்கினார். அல்வாயில் பலரும் பார்த்து வியக்கக் கூடியவகையில் அவ் வித்தியாலயம் பிற்காலத்தில் தீவிரமாக வளர்ந்து அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயமாக இன்று விளங்குகின்றது. அவ் வித்தியாலயத்தில் சைவ ஆசாரங்களோடு கல்வி கற்ற பலர் ஆசிரியர்களாகவும் அரச உத்தியோகத்தர்களாகவும் பல இடங்களில் வாழுகின்றார்கள். அங்கு படித்தவர்கள் பலர் அயற் கிராமங்களிலுள்ள உயர் கல்விக் கல்லூரிகளில் கல்வி பயின்று பல்கலைக்கழகம் வரை சென்று பல துறைகளில் பட்டதாரிகளாகி இருக்கிறார்கள்.

அல்வாய்க் கிராமத்தின் ஒரு பகுதியில் கணிசமான அளவு அக்காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒரு சமூகத்தார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளும் படித்துப்பட்டம் பெற்ற பலர் இன்று வாழுகின்றார்கள். அதற்கு மூலகாரணமாய் விளங்குவது திரிசூரன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட தேவரையாளி சைவவித்தியாசாலை ஆகும். இந்த வித்தியாலயம் வளர்ந்து மாணவர்கள் உயர் கல்வியை மேற்கொள்ளக் கூடியவகையில் தேவரையாளி இந்துக்கல்லூரி என்ற பெயரோடு விளங்குகின்றது.

ஆரம்ப காலத்தில் கமக்காரராக வாழ்ந்தவர்களில் சிலர் இலங்கையின் பல பாகங்களுக்குச் சென்று வியாபாரத்தை மேற்கொண்டு நாடு போற்றக் கூடியவகையில் வர்த்தகர்களாக விளங்குகின்றார்கள்.



மக்களில் பலர் உலகின் பல பாகங்களிலும் செறிந்து இருப்பதால் அல்வாய்க் கிராமம் பலவகையில் முன்னேறி இருக்கிறது. நூல் நிலையங்கள் கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலம் மக்களுக்குப் பல கருமங்கள் நடைபெறுகின்றன. மாணவர்களின் வசதிகருதி அல்வாய் அம்பாள் வித்தியாலயம். அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் என்பனவும் இப்போது சேவையாற்றுகின்றன.

அல்வாய்க் கிராமம் கல்வியில் வளர்ச்சியடைய ஆரம்ப காலத்தில் வாழ்ந்த பண்டிதர் சின்னத்தம்பிப்புலவர், தலைமையாசிரியர் வ. ஆறுமுகம், கவிஞர் மு. செல்லையா ஆகியோர்களை நினைவு கூர வேண்டியது அல்வாய் மக்களின் கடமையாகும். விநாயக வழிபாட்டில் தீவிர பிரார்த்தனை செய்து வந்த சின்னத்தம்பிப் புலவர் பிள்ளையார் மேல் பதிகம் பாடி அரங்கேற்றியுள்ளார். எந்தவித மேலதிக ஊதியமும் பெறாமல் மக்களின் கல்வி வளர்ச்சியிலும் சைவசமய ஒழுக்கத்திலும் அக்கறை கொண்டு சேவை செய்த பெரியார்கள் எல்லோரும் எங்களால் நினைவு கூர்வதோடு போற்றப்பட வேண்டியவர்களாவர்.

நாங்கள் எங்கு வாழ்ந்தாலும் நாங்கள் அவதரித்த பொன்னாட்டை மறக்காமல் போற்றி வாழ்வதோடு எங்களால் இயலக்கூடிய பணிகளையும் உதவிகளையும் புரிந்து வாழ்வதே சாலச் சிறந்ததாகும்.

**ஆ.க. மாணிக்கம்**

முன்னாள் தலைவர்
வடமராட்சி தமிழாசிரியர் சங்கம்
இலங்கை.



# கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா

***(டென்மார்க்)***

*பிறந்த மண்ணின் பாசம் மறவாத சிறந்த கவிஞர் இவர்.*

*இதுவரை நான்கு கவிதைத் தொகுப்புக்களை எழுதி வெளியிட்டிருக்கின்றார்.*

*தாய்மண்ணில் வாழ்ந்த காலங்களிலும் சரி, புலம் பெயர்ந்து வேற்று மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இப்பொழுதும் சரி, தனது தாய் மண்ணையும், தாய்மொழியையும் மறவாது வாழ்ந்து கொண்டிருக்கின்ற இன உணர்வாளர் இவர்.*

*இதன் காரணமாகத்தான் தான் பிறந்த மண்ணான வேலணை என்னும் பெயரை தனது பெயருடன் இணைத்துக் கொண்டுள்ளார்.*

*வேலணை என்ற பெயருக்கு பலர் பலவிதமாக விளக்கம் கொடுத்திருக்கின்றார்கள். பொன்னண்ணா அவர்கள் கொடுத்திருக்கும் பெயர் விளக்கமும் அவைகளில் ஒன்றாகவே இருக்கின்றது. இனி வருங்காலங்களில் ஆராய்ச்சியாளர்கள்தான் சரியான விளக்கத்தை தரவேண்டும். கவிஞர் பொன்னண்ணா இந்தக் கட்டுரைமூலம், பிறந்த மண்ணின் உயர்வுக்கு காரணமாக இருந்தவர்களின் பெயர்களையெல்லாம் பதியவைத்து இந்நூலுக்கு சிறப்புச் சேர்த்திருக்கின்றார். வாழ்க இவர் தமிழ்ப் பணி!*



# எங்கள் ஊர் வேலணை

*யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே கிட்டத்தட்ட 10 மைற்கற்கள் தூரத்தில் உள்ளது வேலணை என்னும் கிராமம். இது சப்த தீவுகளில் ஒன்றாகும். இது ஒரு காலத்தில் அல்லைப்பிட்டி, மண்குப்பான், மண்டைத்தீவு போன்ற கிராமங்களை உள்ளடக்கி லைடன் தீவு என்ற பெயரில் விளங்கி வந்தது. இடைக்காலத்தில் மண்டைத்தீவு கடலால் சூழப்பட்ட கிராமமாய் இருந்ததால் தனியாக பிரித்து தனி கிராமச்சபையாக அமைக்கப்பட்டது. பின் அல்லைப்பிட்டி மக்களின் நீண்டகால வேண்டுதலின் பின் அல்லைப்பிட்டியும் தனிக் கிராமச் சபை நிர்வாகமாக மாற்றப்பட்டது. அதன் பின்புதான் வேலணை தனிக்கிராமமாக ஒன்பது வட்டாரங்களைக் கொண்ட ஒரு கிராமச்சபையாக வேலணை என்னும் பெயரில் விளங்கி வருகின்றது.*

*இந்த வேலணையின் எல்லைகள் கிழக்கு. மண்குப்பானில் பாதியும். மேற்கு சரவணையில் பாதியும், புளியங் கூடல் சுருவிலில் சில பகுதியையும், இணைத்து ஒரு எல்லையாகவும், நிர்ணயம் செய்து தனி கிராம அலகாக விளங்கி வருகின்றது. இதன் வடக்கு எல்லை ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் வடக்கு றோட்டு பெரு வெளி நிலப்பரப்பாகவும், தெற்கு புங்குடுதீவுப்பாதை கடல் பகுதிகளாகவும் எல்லை கண்டு நிர்வாகம் நடக்கின்றது. இங்கே வசித்த மக்கள் தொகை கிட்டத்தட்ட 1980 வரையில் பன்னீராயிரம் மக்கள் தொகையைக் கொண்ட கிராமமாக விளங்கி வந்தது. வேலன் என்ற பெயர் கொண்ட ஒரு பிரித்தானியன் இக்கிராமத்தை நிர்வாகம் செய்து வந்ததால் இதன் பெயர் வேலணை என்று வந்ததாக சிலரும், இல்லை கடல் எல்லைக்கடலில் ஒரு முருக வேல் வந்து அடைந்ததால் வேலணை என்ற பெயர் வந்ததாக வேறு சிலரும் சொல்லி வருகின்றார்கள்.*

*ஒல்லாந்தர் ஊர்காவற்துறையைக் கைப்பற்றிய பின்னர் தமது ஆட்சியை நிலை நிறுத்த எண்ணி வங்களாவடிச் சந்திக்கு கால் மைல்*

தூரத்தில் ஒரு கோபுரத்தைக் கட்டி கடலால் வரும் அன்னியரை கண்காணித்து வந்தனர். இக்கோபுரத்தின் சிதைவை இன்றும் காணலாம். வேலணை இன்று தீவுப்பகுதியின் மத்திய இடமாக திகழ்ந்து வருகின்றது. காரணம் நெடுந்தீவு மக்களும் புங்குடுதீவு மக்களும் நயினாதீவு மக்களும் புங்குடுதீவு யாழ்ப்பாண பாதையால் பிரயாணம் செய்தால் வேலணை ஊடாகவே செல்ல வேண்டும். அடுத்து அனலைதீவு எழுவைதீவு மக்கள் ஊர்காவற்றுறை வந்து யாழ்ப்பாணம் செல்வதென்றாலும் வேலணைக்கு வந்துதான் செல்லவேண்டும் என்ற நிலையில் பயணப்பாதை இருப்பதால் வேலணை ஒரு மத்திய இடமாக விளங்கி வருகின்றது.

வேலணையில் மூன்று மதத்தினரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்கு உதாரணமாக சாட்டிப் பகுதியில் கடற்கரை ஓரமாக உயர்ந்து விளங்கும் முஸ்லீம் மக்களின் வழிபாட்டு நிலையமான மசூதியும். கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டு நிலையமான சாட்டிமாதா கோவிலும், அதன் அருகில் உயர்ந்து நிற்கும் இந்துமத ஐயனார் ஆலயமும் மக்களின் பண்பட்ட வாழ்க்கை முறைக்கு உதாரணமாக திகழ்வதை இன்றும் காணலாம். வேலணையில் அன்று முதல் இன்றுவரை தமிழ் வளர்த்த பெரியார்களும் பண்டிதர்களும், வித்துவான்களும், புலவர்களும் பரம்பரையாக வாழ்ந்தார்கள் என்பதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் என்ற பெருமைக்கும் வேலணை காரணமாகின்றது. வேலணையின் வளர்ச்சியில் பலர் பின் கவனம் செலுத்தினாலும் ஆரம்பத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் சட்டசபையில் சபாநாயகராக இருந்தவரும் பிரபல சமூகசேவையாளருமான திருவாளர் சேர்.வை. துரைச்சாமி அவர்கள் பெரும்பணியாற்றினார். தனது சொந்த நிலத்தின் பெரும்பகுதியை பொதுச் சொத்தாக்கி மக்கள் நல சேவை நிலையங்கள் கட்டுவதற்கு பேருதவி புரிந்தார். அவரின் நல்ல பணிக்கான அத்தாட்சியாக வேலணை பிரசவவிடுதி, சரஸ்வதி பாடசாலை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கமத்தொழில் சேவைநிலையம் போன்ற இன்னும் பல கட்டிடங்கள் கட்டப்பட்ட காணிகள் திகழ்கின்றன. இதற்கு நன்றிக்கடனாக அவரின் நாமத்தை வேலணை மத்திய மகா வித்தியாலயமாக திகழ்ந்த பாடசாலைக்கு மக்கள் அவரின் பெயரைச்



சூட்டி துரைச்சாமி மகா வித்தியாலயம் என அழைக்கிறார்கள். இவரோடு இன்னுமொருவர் மாஸ்டர் மருதையினார் வேலணையின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்கள். இந்த இருவரும் முயற்சி எடுக்காது இருந்திருந்தால் இன்று வேலணை துரைச்சாமி மகாவித்தியாலயம் வேலணைக்கு கிடைத்தே இருக்காது என்பது உண்மை.

வேலணையின் வளங்கொடுக்கும் வளங்களாக பனைவளமும், விவசாயமும், கடல்தொழிலும், என்றென்றும் உறுதுணையாக விளங்கி வருகின்றன. தோட்டப்பயிரும் காசுப்பயிருமான புகையிலைப்பயிரே முன்னுரிமை பெறுகின்றது.

கல்வி வளர்ச்சிக்கு 9 வட்டாரம் கொண்ட வேலணைக்கு வட்டாரத்துக்கொரு பாடசாலையாக 9 பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்வியின் அவசியம்பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை வட்டார ரீதியில் உள்ள தமிழ்ப்பணியாளர்கள் கடமையாற்றியதின் பயனாக குறிப்பிட்ட கால எல்லைக்குள் அடுத்தடுத்து இரண்டு பேர் இந்த கிராமத்தில் பிறந்து படித்த இருவர் திருவாளர் வே.அ. கந்தையா பிரபல சட்டவாதி அவர்களும், திருவாளர் க.பொ. இரத்தினம் உலகத் தமிழர் சங்கத்தலைவரும், தமிழ்மறைக் கழகத் தலைவர் அவர்களும் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக செல்ல முடிந்தது. இன்று வேலணை மத்திய மகாவித்யாலயம் ஒரு தீவக தீபமாக தீவக மக்கள் அனைவருக்கும் கல்வியூட்டும் பாடசாலையாகவும், வேலணைக்கு மகாவித்தியாலயம் கிராம மகாவித்தியாலயமாக செயல்படுகின்றது எனலாம்.

சமய வளர்ச்சியில் பல பெரியார்கள் பெரும்பணியாற்றி உள்ளார்கள். அதில் குறிப்பிடக் கூடிய முறையில் பணியாற்றியவர்கள் பிரபல வர்த்தகர் சிற்றம்பலம் அவர்கள், நால்வர் மட இயக்குனர் செல்லப்பா சாமியார், பெருங்குள முத்துமாரி அம்மன்கோவில் முன்னாள் தலைவர் திருத்தொண்டர் தில்லையம்பலம் அவர்கள், திருவாளர் அருணகிரிநாதன் என்னும் வர்த்தகர், சமூகத்தொண்டர் சிவலை நாகலிங்கம் அவர்கள். திருவாளர் அருணகிரிநாதன் என்னும் வர்த்தகர், கிராமச்சபை உறுப்பினர் திருவாளர் வீரசிங்கம் போன்ற இன்னும்பலர்

பெருந்தொண்டாற்றி ஒன்பது வட்டாரத்திலும் பதினெட்டு ஆலயங்கள் அமைத்து ஆன்மீகத்தின் தத்துவத்தையும் ஆலயவழி பாடு பற்றியும் விளக்கி மக்களை நல்வழிப்படுத்தியதின் பயனே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வேலணை என்று 1956ல் வேலணையில் நடந்த திருமறைவிழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறுமளவுக்கு பெருமைகொண்டு துலங்கியது. இதன் சிறப்பில் புத்திரன் கொண்டார் மணியகாரரும். அவரின் பரம்பரையும் சமயப்பணிக்கு உதவி உள்ளனர். வேலணையின் ஆலயங்களில் பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயமே பழமைவாய்ந்த இரட்டைப் பஞ்சாக கோவிலாகும். இது 200வருட பழமை வாய்ந்தது எனலாம்.

தமிழ்ப்பணியில் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கம் இளைஞர் அமைப்பு ஒன்று தன்பணியில் 1960ல் மூன்று நாள் முத்தமிழ் விழா நடாத்தி தமிழ் அறிவுபோட்டிகள் நடாத்தி தமிழை வளர்த்ததோடு 1962ல் திருக்குறளுக்கு விழாவும் எடுத்து இந்தியாவில் இருந்து பேரறிஞர்கள் திரு. சாலை இளந்திரையன் அவர்களையும், திருமதி கனகசவுந்தரி இளந்திரையன் அவர்களையும், டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் ஐயன் பெருமாள் கோனார் அவர்களையும் வரவழைத்து தமிழின் சிறப்புக்கு பெருமை சேர்த்தார்கள். இதனால் தமிழும் அங்கே வளர வாய்ப்பாய் இருந்தது.

வங்களாவடி என்ற பெயர் 1990ல் ஆங்கிலேயர் தமதாட்சியை நிர்வகிக்க அராலியைச் சேர்ந்த முத்தையா என்பவரை நியமனம் செய்து, தீவுப்பகுதியை நிர்வாகம் செய்ய மணியகாரராக நியமித்தார்கள். இவர் அராலியில் இருந்து வேலணைக்கு வந்து போய் நிர்வாகம் செய்தார். அதற்கு வேலணையில் காரியாலயத்தை வங்களாவடியில் அமைத்ததோடு ஆங்கிலேயர் கொழும்பிலிருந்து வந்தால் தங்கிச் செல்ல வாடிவீடு ஒன்றும் அமைக்கப்பட்டது. அதனால் தான் வங்களாவடி என்ற பெயரும் ஏற்பட்டது. தீவகத்தின் சகல நிர்வாக அமைப்புக்களும் வேலணையில் இருந்ததால் அன்றே வேலணை தீவகத்தின் மத்திய நிலையமாகிவிட்டது எனலாம்.



கிராம அரசியலில் பங்கெடுத்து கிராமத்தின் பணியை திறம்பட செய்தவர்களில் பலர் உள்ளனர். அவர்களில் வைத்தியர் சி. இராசரட்ணம் ஆசிரியர் அவர்கள், முன்னாள் கிராமச்சபை தலைவர் பு. சுப்பிரமணியம் அவர்கள் இன்னொரு கிராமச்சபைத் தலைவர்... இஞ்சினியர் சதாசிவம் அவர்கள் போன்றோரும், வர்த்தகபெருமக்களான V. மாணிக்கம் பிரதேர்ஸ் E. சண்முகம் அன் கொம்பனி தினக்குரல் பத்திரிகை இயக்குனர் எஸ்.பி. சாமி அவர்கள், பிறவுண்சன் இன்டஸ்ரீஸ் உரிமையாளர் வேலணை வீரசிங்கம் ஆகியோரோடு சமூக, சமய தொண்டில் பணிசெய்த V.P. கந்தையா ஸ்ருடியோ பி.எஸ். நாதன் போன்றோரின் பணியும் பாராட்டுக்குரியதே.

இன்று வேலணையின் வளர்ச்சிக்கு ஆதாரமான கல்விமான்களாக, உலகம் முழுக்க பரந்துள்ளார்கள் பலர். இன்னும் சிலர் மண்ணின் மைந்தர்களாக வாழ்கின்றார்கள். அவர்களில் செ. பாலச்சந்திரன் அவர்கள், பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், இ. சிவச்சந்திரன் அவர்கள் ஆகியோர் பேராசிரியர்களாகவும் மற்றும் சு. இரத்தினராசா அவர்கள் கல்விச் சேவையிலும், திருவாளர் ச. மாணிக்க வாசகம் அவர்கள், திரு மு. வினாசித்தம்பி வைத்தியர் அவர்கள், திரு. ந. ஜெகநாதன் ஆசிரியர் அவர்கள், க. சரவணபவன் தாபாலதிபர் அவர்கள் போன்றோரின் சமூக சமய சேவையிலும், நீதிபதி மா. இளஞ்செழியன் அவர்கள், நரம்பியல் வைத்திய நிபுணர் நா. யோகநாதன் அவர்கள், சட்டத்தரணி சரோஜினிதேவி இளங்கோவன் போன்றோரின் கல்வித் தகைமையாலும் வேலணை சிறப்பில் உயர்கின்றது.

தமிழ் இலக்கிய பணியில் பண்டிதர் வித்துவான் திரு. தில்லைநாதப்புலவர், பண்டிதர் இராசையா அவர்கள், பண்டிதர் பொன். ஜெகநாதன் அவர்கள், பண்டிதர் மா. மாணிக்கம் அவர்கள், பண்டிதர் பொ. கேதாரநாதன் அவர்கள், திரு. தில்லைச்சிவன் அவர்கள், திரு பொன். தியாகராஜா அவர்கள், திருமதி விக்னா பாக்கியநாதன் அவர்கள் போன்றோரின் தமிழ் இலக்கியப் பணியால் வேலணை இன்று உலகத்து மூலை எங்கணும் தமிழ்ப்பணியில் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

அரசியல் பணியால் வேலணையை உயர்த்தியவர்களில் திருவாளர்கள் சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமியைப் போல்

பெரும்பங்காற்றிய பெருமை திரு கா.பொ.இரத்தினம் அவர்களையும் திரு வே. அ. கந்தையா அவர்களையும் என்றும் வேலணை மறக்காது என்பது உண்மையாகும்.

வேலணையின் அதிமுக்கிய சிறப்பு மூன்று மதத்தினரும் ஒன்று பட்டு வாழ்வதும், கடற்கரையின் பத்து மீற்றர் தூரத்தில் நல்ல குடிதண்ணீர்க் கிணறு காட்சி தருவதும் - அத்தோடு தீவகத்தின் அனைத்துப் பகுதிக்கும் கோடைகாலத்தில் குடிதண்ணீர் வழங்கக் கூடியதாக சாட்டி மதாங்கோவில் கிணற்றில் எத்தனை பம் வைத்து அடித்தாலும் வற்றாத நீர் ஊற்றை வருடம் முழுக்க தரும் நன்னீர் கிணறு உள்ளதும், அத்தோடு சாட்டி கடற்கரை பள்ளிவாசலடி ஒரு உல்லாச பயணிகள் வரும் இடமாக பிரசித்தி பெற்று இருப்பதும் சிறப்புக்கு மெருகூட்டி நிற்பதோடு தீவகத்தின் பொதுவான அறிவகமாக வேலணை மத்திய மகா வித்தியாலயம் உயர்ந்து நிற்பதுவுமே காரணமாகும்.

இதனால் இன்று வேலணை மகுடம் சூட்டிய அரசனாய், தீவகத்தின் தலைநகராய் நிமிர்ந்து நிற்கின்றது என கூறலாம்.



# திரு. வேலுப்பிள்ளை

***(கனடா)***

கனடா, உதயன் பத்திரிகை ஏற்படுத்தித்தந்த தொடர்புகளில் திரு. வேலுப்பிள்ளை அவர்களும் ஒருவர். இவர், எங்கள் மண்ணை மட்டுமல்ல கடல் வளங்களையும் மிகவும் நேசிக்கின்றார்.

ஒரு சுவாரசியமான நாவலைப் போல இந்தக் கட்டுரை இடம் பெற்றிருக்கின்றது.

நாங்கள் அறியாத பல செய்திகளை அற்புதமாகச் சொல்லியிருக்கின்றார் திரு. வேலுப்பிள்ளை அவர்கள்.

## நீங்காத நினைவான கடற்பயணம்

ஆழிசூழ் இலங்கை எங்கள் நாடு என்பது யாவரும் அறிந்ததே. இந்த ஆழிசூழ் தீவின் வடபால் ஆழியின் நடுவே உள்ள சப்த தீவுகள் எல்லாம் எங்கள் செல்வங்கள்தானே. இதுதான் அன்று இச்சிறுவனுக்குப் பாடம் சொன்ன ஆசிரியர் புகட்டிய செய்தி. அந்த ஆழியின் நடுவே உள்ள ஏழு தீவுகளில் ஒன்றுக்காவது பயணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் இந்தப் பிஞ்சு மனதில் நீர் ஊற்றுப் போல் உருப் பெற்றுவிட்டது.

பள்ளிவிடுமுறை நாட்களில்வரும் வெள்ளிக்கிழமைகளில இச்சிறுவன் தந்தையாருடன் செய்யும் கீரிமலைப்பயணம் வழமையானது. அதிகாலையில் தோட்ட வேலைகளை முடித்துவிட்டுக் கால்நடையாகவே குறுக்கு பாதைவழி கீரிமலைக்குப் போவார்கள். புகழ்பெற்ற கீரிமலைச்

சிவன் ஆலய முன்றிலில் போனதும் தூரத்தே வடகடல் ஆர்ப்பரிப்பது கேட்கும். ஓயாத அலைகள் எல்லாம் வா வா என்று அழைக்கும் ஆர்வம் தெரியும். இந்த நிலையில் சிறுவனின் மனம் குதூகலித்துக் கூத்தாடும். ஆனால் தந்தையாருடன் கடற்கரையை அண்மித்ததும் ஒருவிதப் பயப்பிராந்திதான். கடலின் நடுவே போட்டி போட்டுக் கொண்டு ஓடும் வள்ளங்கள் இவனை கடல்பக்கம் ஈர்க்கும். இந்தச் சூழலும்தான் இவனின் சப்த தீவுகளுக்கான பயணம் மனதில் கருக்கொள்ள வைத்தது.

காலமும் நேரமும் இவன் பக்கம் கை கூடிவந்தது. இவனின் தாய்வழி பாட்டனார் மூலம்தான். இப்பாட்டனார் ஒரு பல்தொழில் தெரிந்த கமக்காரர். கமத்திற்கு உதவும் ஆடுமாடுகளின் வாழ்க்கை முறைகள் தெரிந்த அனுபவஸ்தர். வன்னியில் இருந்தும் சப்த தீவுகளில் பெரியதுமான நெடுந்தீவிலிருந்தும் மாடுகளை விலைக்கு வாங்கி வருவார். மாடுகளின் இலட்சணங்களை நன்கறிந்தவர். வன்னிமாடுகளிலும் பார்க்க நெடுந்தீவு மாடுகள் உழைப்பில் முன் நிற்பவை என்பதும் இவரின் நீண்ட கால அனுபவம். வருடத்தில் ஒரு முறையோ இரு முறையோ நெடுந்தீவுக்குப் பயணமாவார். இதனால் அந்த ஊர் மக்களின் நல்ல நண்பனாய், உறவினராய் நிலைத்தவர்.

அந்த நாட்களில் பாய்த் தோணிகள்தானே குடாநாட்டுக்கும் தீவுப்பகுதிகளுக்கும் இருந்த ஒரே ஒரு போக்குவரத்துச் சாதனம்! மாடுகள் ஏற்றி வருவதற்கும் தோணிகளில் வசதிகள் செய்திருப்பார்கள். வழமையாகப் பயணம் போகுமுன் சிறுவனின் பாட்டனார் இவனின் தாயாரான தன் ஒரே ஒரு மருமகளிடம் வந்து சொல்லிப் போவார். இப்படியான நிலையில்தான் சிறுவனின் கனவும் நனவாகும் நாளும் வந்தது. அன்று வெள்ளிக்கிழமை. சிறுவன் பாடசாலையிலிருந்து வந்ததும் பாட்டனாரைக் கண்டான். பயணம் சொல்லிப் போகத்தான் பட்டனார் வந்தார் என்பதைப் புரிந்து கொண்டு தானும் வருவதாய்க் கெஞ்சிக் கூத்தாடினான். கடந்த வாரத்தில் ஆசிரியர் சப்ததீவுகளின் மகத்துவம் பற்றிப் போதித்தது இப்போது மனதில் நிழலாடியது. தாயிடம் மன்றாடித் தகப்பனாரிடம் அனுமதி பெற்றுத் தரும்படி நச்சரிக்கத் தொடங்கினான். அந்த நாட்களில் இப்படியான நீண்ட தூரப்பயணங்களுக்குச் சிறுவர்களைப் பெற்றோர் அனுமதிப்பதில்லை.



அதிலும் இவனின் தந்தையார் ஒரு கறார் பேர்வழியானவர். தனது பயணத்திற்கு அனுமதி கிடைக்க வேண்டும் என்று எல்லாத் தெய்வங்களையும் வேண்டினார். அந்த வருடம் தன் ஊர் மாரியம்மன் கொடியேற்று விழா அன்று, தான் விரதமிருந்து சாமியோடு கோயில் வீதியில் பிரதிட்டை செய்வதாய் நேர்ந்து கொண்டான். தெய்வசங்கற்பமாய் தந்தையாரின் அனுமதியும் பெற்றாகிவிட்டது. இந்த சந்தோஷத்தை தன் சகோதரர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மாத்திரம் திருப்தியடையவில்லை. தனது பக்கத்து வீட்டு நண்பன் இராசதுரைக்கும் இரண்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டு வயலில் களைபிடுங்கும் தாய்க்கு உதவியாய் இருக்கும் செல்லத்துரைக்கும் சொன்னான். சிறுவர்கள் மத்தியில் ஏதும் ஏற்றத்தாழ்வுகள் அன்றும் இல்லை இன்றும் இல்லை என்பது ஒரு ஆழமான உண்மைதானே!

அதனால் போலும் அன்றைய இறுக்கமான சூழ்நிலையிலும் எல்லாத்தரத்திலும் இருந்த சிறுவர்கள் மத்தியில் சமத்துவமும் சகோதரத்துவமும் நீரூற்றாய் ஊடுருவியிருந்தது. சிறுவன் தன்னிடம் இருந்த ஒரு வெள்ளை அரைக் கைச்சட்டையையும் வெள்ளைசாரத்தையும் ஒரு பேப்பர் பாக்கில் மடித்து வைத்துக் கொண்டான். பாட்டனாரின் ஒற்றைத் திருக்கல் வண்டியில் புறப்படுமுன் எல்லோரிடமும் சொல்லிப் புறப்பட்டார்கள். வெள்ளைக் காளையின் கழுத்தில் வெண்கலச் சதங்கை ஒலி முன்னே செல்ல வண்டியின் கூடாரத்தின் பக்கத்தில் பொருந்திய அரிக்கன்லாம்பின் ஒளி வழிகாட்ட வண்டிப்பயணம் சித்தன் கேணி நோக்கித் தொடர்ந்தது. பாட்டனார் வீடு வந்ததும் சாப்பிட்டுப் பின் படுக்கைக்குப் போனான் சிறுவன். ஆனால் சிறுவனின் தூக்கம் தன்னிடத்தில் கடல் பயணத்தை வைத்து விட்டு எங்கேயோ போய்விட்டது. பலவித நினைவுகளின் பின் தூங்கிப் போனான்.

அதிகாலையில் எழுந்து பயணத்திற்கு ஆயத்தமானார்கள். காலை எட்டுமணிக்குச் சித்தன் கேணிச் சந்திக்கு வந்தார்கள். அன்றைய காலத்தின் கடுகதிபஸ் என்ற தட்டிவானுக்காகக் காத்திருந்தார்கள். காத்திருக்க வைக்காது பஸ்சும் வந்தது. பஸ்சில் காரை நகர் வந்ததும் பாய்தோணி காத்திருக்கும் என்ற சிறுவனின் நினைவுக்கு எதிராகத்தான்

நிலைபரம் இருந்தது. காரைநகர் கடற்கரையில் சிறு சிறு வள்ளங்கள் ஆடி ஆடி அணிவகுத்து நின்றன. இவனைப் போல் சிறுவர்கள் அவற்றின் சாரதிகளாய் வேலை செய்தது. இவனுக்கு வியப்பையும் ஆர்வத்தையம் ஊட்டியது. சிறிது நேரத்தில் இந்த வள்ளங்களில் ஒன்றில் ஏறி ஊர் காவற் துறையை அடைந்தார்கள். அங்கே இவன் மனதினால் கண்ட பாய்த்தோணி ஒன்று காத்திருந்தது. அது பென்னம் பெரிய தோணி. அதன்மேல் பனைமரம் முளைத்தது போல் நெடிய தூண்களில் பாய்போன்ற ஒருவித வெள்ளைச் சேலைகள். அவை காற்றோடு விளையாடும் ஒருவித படபடப்பு ஓசை துறைமுக கட்டிட வரம்புத் தூணில் பிணைத்து நின்ற இத்தோணியுள். பயணிகள் ஒவ்வொருவராக உள்ளே சென்றார்கள். உள்ளே மரப்பலகைகளினால் ஆன இருக்கைகளில் அமர்ந்து கொண்டார்கள். பாய்தோணி பயணிக்குமுன் சங்குச்சத்தம் போன்ற ஒரு குழலோசை அறிவிப்பு வந்தது. அதைத் தொடர்ந்து தோணி புறப்பட ஆயத்தமானவுடன் தோணித் தலைவன் போன்ற ஒருவர் ‘சின்னப்பிள்ளைகளை கவனமாய் வைத்திருங்கோ காற்று பலமாக இருந்தால் உலாஞ்சும்’ என்று எச்சரித்தார். இதைக்கேட்டதும் பாட்டனார் இவனைத் தன்னருகில் வைத்துக் கொண்டார்.

தோணியில் மக்கள் மாத்திரமின்றிப் பலவித உணவுப் பண்டங்களும், தேங்காய் மூட்டைகளும் ஏன் கோழிகள் கூட பயணித்தன. சிறிது நேரத்தில் தோணி காற்றின் உதவியால் வேகம் எடுத்தது. காற்றின் வேகம் குறையும் இடத்தில் துடுப்புக்களை பயன்படுத்துவதற்கு தோணியின் இரு பக்கங்களிலும் இருவராக நால்வர் துடுப்புக்களுடன் தயார் நிலையில் இருந்தனர். தோணியின் வால்புறத்தில் ஒருவர் ஏதோ ஒன்றை திருப்பித் திருப்பிக் கொண்டிருந்தார். அதுதான் சுக்கான் என்னும் தோணியை நேராக செலுத்த உதவும் கருவி என்றும் பாட்டனார் சிறுவனுக்கு விளக்கம் தந்தார். இப்படியாக தோணி நடுக்கடலில் செல்லும்போது தூரத்தே கடல் நடுவில் ஒரு பாரிய வீடுபோன்ற கட்டிடம் மிதப்பது போல் சிறுவன் கண்ணில் பட்டது. இதை ஆச்சரியத்துடன் சிறுவன் பார்ப்பதை அவதானித்த பாட்டனார், தம்பி அந்தக் கோட்டைதானே.. அது ஒல்லாந்தர் கோட்டை என்றும் பூதத்தம்பி கோட்டை என்றும் பின்பு ஊர் காவற்துறைக் கடற்கோட்டை என்றும் சொல்லுவோம். அது ஒரு பெரிய கதை. முன்பு உங்களுக்குக் கண்டி ராசாவின் கதை கட்டப்பொம்மன் கதையெல்லாம் சொன்னேன்தானே! அது போலத்தான் இந்தப் பூதத்தம்பி கோட்டையின் கதையும், அதுவும் ஒரு நீண்ட சரித்திர கதைதான். வீட்டை வாவன் அதையும் சொல்லிறன். இப்பொ உன் ஆசைக்குக் கடல் பயணம் நடக்கட்டும் என்றார். சிறுவனும் கடலில் தோணி ஓடும் வேகத்தில் கவனமானான்.



நேரம் செல்லச் செல்ல ஊர்கள் மறைந்து, சிறு சிறு பொட்டுக்களாய்த் தெரிந்தன. நீல வானும் நீலக்கடலும் நாங்கள்தான் இந்த உலகம் என்று கட்டியம் கூறின. கடல் காற்றும் உடலை சுற்றி தழுவியதால் ஒருவித விபரிக்க முடியாத உற்சாகமும் மன எழுச்சியும் சிறுவனிடம் காணப்பட்டது. பாட்டனாரின் பிடியிலிருந்து சிறிது சிறிதாக விலகி தோணியின் கரையில் உள்ள கைப்பிடியில் பிடித்துக் கொண்டு பரவசமானான். அளக்க முடியாத ஆழியைத் தான் பயணம் செய்யும் தோணி கிழித்துக் கொண்டு செல்வதை பார்த்ததும் துள்ளி துள்ளி கைகளை தட்டி ஆரவாரம் செய்தான். இந்தக் காட்சியையும் தோணியின் எல்லா பக்கங்களிலும் தன் பார்வையின் ஆளுமைக்கு உள்ளாக்கும் திறமை கொண்ட தோணியின் தலைவன் கவனத்தில் கொண்டார். தனது பலவருட நண்பரான சிறுவனின் பாட்டனாரிடம் உரத்த குரலில், “மார்க்கண்டண்ணே பேரனை பிடித்து வைத்திரு. அண்ணே; கடல் கொந்தளிப்பாய் இருக்கு. தோணியின் ஆட்டம் தெரியும்தானே” என்று உத்தரவும் அன்பான எச்சரிக்கையும் கலந்த தொனியில் சொன்னார். இது கேட்ட பாட்டனார் ஒரு யோசனை செய்தார். தனது தோளில் இருந்த நாலுமுழச் சால்வையைக் கயிறுபோல் முறுக்கி இவனை இடுப்பில் பிணைத்துத் தன்னுடன் வைத்துக் கொண்டார். இவனுக்கு தனது ரசனையில் தடைவந்த போதும் இருக்கையில் எழுந்து நின்று பாட்டனாரின் தோளைப் பிடித்தபடி நின்று கடலை ரசித்துக் கொண்டிருந்தான்.

இந்த வேளையில் தோணி ஒரு சோதனைக்களத்தை நெருங்கியது. எல்லோரும் பரப்படைந்தனர். “ஏழாத்து பிரிவு வருகுது. எல்லோரும் கவனமாய் இருங்கோ. காற்றும் எங்கள் பக்கம் குறைவாய்த்தான் இருக்கு. இருந்தாலும் நாகபூசனி அம்பாள் ஒருபோதும் கைவிடமாட்டார்” என்று தோணித்தலைவன் அறிவிப்பு வந்தது. எல்லார்

முகத்திலும் பயம்தான். ஆனாலும் அவர்களின் தெய்வநம்பிக்கை பெரும்பலம் வாய்ந்தது. தோணியும் ஆட்டத்துடன் தான் அசைந்தது. சிறுவனும் ஏதோ விபரீதம் விளையப் போகின்றதென்று அச்சத்துடன் பாட்டனாரை நெருங்கி பேச்சின்றி இருந்தான். எல்லோரும் தேவியின் நாமங்களை உருக்கமாய் உச்சாடனம் பண்ணி வேண்டுதல் செய்யும் போது தானும் தன் ஊர்மாரி அம்மனை வேண்டினான். தன் தாயார் அடிக்கடி சொல்லும் ஆயிரம் கண்ணுள்ள முத்துமாரித்தாய் என்ற பதங்கள் இவன் வாயிலும் தன்னை மறந்து உச்சரிப்பானது. இந்த நேரத்தில் ஆயிரம் கண்ணாள் தன் ஒரு கண்ணால் பார்த்தால் கூட போதும் என்று வேண்டினான். தன் அயலவரான ஒரு கூலித்தொழிலாளி சில காலம் மற்றவர்களினால் விசரன் என்று ஒதுக்கப்பட்டவன். அவன் சிறுவர்கள் மத்தியில் தன் கஸ்ரங்களைச் சொல்லும் போது இது என்ன என்னை ஏழாத்துப்பிரிவில் விட்டுவிட்டது என்று சொல்லிச் சிரிப்பான். இவனும் மற்ற சிறுவர்களும் சேர்ந்து சிரிப்பார்கள். இப்போது அந்த ஏழாத்துப்பிரிவு இதுதானோ என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். இப்படி பயம் கொண்ட நிலையில் தோணியில் பலர் தாங்கள் கொண்டுவந்த தேங்காய்களை எடுத்து தோணியின் முகப்பில் பொருத்தியிருந்த இரும்புச்சட்டத்தில் உடைத்து அம்மனை வேண்டினர். எல்லோர் வாயிலும் 'நாகம்மாவுக்கு அரோகரா நாகபூசனி அம்மனுக்கு அரோகரா' என்ற ஓசை எழுந்து கடல் பிராந்தியம் முழுவதும் ஆதிசக்தியின் நாமத்தின் பேரெழுச்சி பரந்து ஒலித்தது. 'வேண்டுவர் வேண்டுவதோ ஈவான் கண்டாய்' என்ற செஞ்சொல் உண்மையாயிற்று. கஸ்டமான சுழியில் இருந்த தோணி விடுபட்டு நிதானமாய்ப் பயணித்தது. நயினை அம்பாள் இறங்குதுறையில் தோணிகள் ஒதுக்கப்பட்டு இறங்க வேண்டியவர்கள் இறங்கினார்கள். மற்றையோர் வேட்டி தலைப்பிலும் சேலை முடிச்சிலும் வைத்திருந்த காசுகளில் சிலவற்றை அம்பாளின் உண்டியலில் சேர்க்கும்படி கொடுத்து நன்றிக்கடன் செலுத்தினார்கள்.

இப்படியாக அன்று பிற்பகலின் முற்பகுதியில் சிறுவனின் மனத்திரையில் நின்றாடிய நெடுந்தீவுக் கரையைத் தோணி சென்றடைந்தது. இறங்குதுறையை அண்டியதும் பிடிக்கு அகப்படாது ஓடும் காளையை மடக்கிப்பிடிக்கும் பாவனையில் கரை மேட்டில் இரண்டு மூன்றுபேர் தயாராக நின்றார்கள். தோணியில் இருந்து இரண்டு மூன்று கயிறுகள் கரையை நோக்கி வீசப்பட்டன. மிக லாவகமாக அக்கயிறுகளைக் கரையில் நின்ற மூவரும் பிடித்துக் கரையில் அதற்காக அமைந்துள்ள இரும்புத் தூண்களில் பிணைத்துவிட்டனர். இப்போது தோணி இறங்குதுறை மேடையோடு இணைந்து விட்டது. பயணிகள் யாவரும் ஊர்வந்து விட்டோம் ஊர்வந்து விட்டோம் என்று சந்தோஷத்தோடு இறங்குகிறார்கள்.



தோணி தூரத்தே வரும்போதே வந்து காத்திருந்தார், இச்சிறுவனின் பாட்டனாரின் நண்பரான திரு. கந்தையா. வழமையாகத் தோணி வரும் நேரங்களில் நன்கு பரிச்சயப்பட்டவர்தானே. அவர் நெருங்கிவந்து "அண்ணே வந்திட்டீங்களா? இன்று கொஞ்சம் சுணங்கிவிட்டது. யார் இந்த பையன்?" என்ற வினாவுடன் வரவேற்றார். பாட்டனாரும் "ஓம் ஓம் இன்று காத்துவாசியாய் இல்லைப் போல; அதனால் தோணி மெதுவாய்த்தான் ஓடியது. இது என் பேரன் கடல் பயணம் என்னும் தீவுகளில் ஒன்றையாவது பார்க்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டான். பள்ளி லீவும்தானே! அவனின் ஆசையும் தீரட்டன் அதோட உங்கள் எல்லோரையும் பார்த்த மாதிரியும் இருக்கும்தானே" என்றார். அதற்கு நண்பர் கந்தையா, "என்னண்ணே போனவருடம்தானே உங்கள் மூத்த மகனுக்குக் கலியாணம் செய்தீங்க. அதற்குள் பேரன் என்றால் எப்படி?" என்று ஆச்சரிய வினா எழுப்பினார். "இல்லையப்பா உனக்கு தெரியும்தானே அளவெட்டியில் இருக்கும் எனது மருமகளை - அந்தப் பிள்ளையின் கடைசிப் பையன்தான் இவன்" என்றார் பாட்டனார். "ஓ இப்ப விளங்குது இவன் அந்த இரும்பு மனிதர் வைத்திலிங்கண்ணன் மகனா? சரி சரி தம்பி நாங்கள் எல்லாம் நல்ல கூட்டாளிகள். வாங்கோ உங்களுக்கும் ஒரு கூட்டாளி எங்கள் வீட்டில் இருக்கிறார்" என்று சந்தோஸமாய் சொன்ன கந்தையாவுடன் பேசிக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்கள். வீடுவந்ததும் கந்தையாவின் மனைவியும் எதிர்பார்த்திருந்த விருந்தினரை வரவேற்று உள்ளே அழைத்தார். சிறுவனைப் பற்றிய விசாரணைகளுடன் கைகால் கழுவியபின் மகனும் இச்சிறுவனும் ஒரே பிராயத்தினர் என்பதால் கூச்சமின்றி பழகினர். வந்த களையும் பின் ஆகாரம் உண்ட களையும்

தீரச் சிறிது ஆறி இருந்தனர். பிரயாணம் செய்த அலுப்பும் அத்தோடு நேரமும் மாலையானதால் ஊருக்குள்போய் மாடுகளை பார்க்கும் வேலையை மறுநாள் என்று வைத்தார்கள். சிறுவனும் புதிய நண்பனும் பேசிக் கொண்டிருந்து தூங்கி விட்டார்கள்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஆகாரம் உண்டார்கள். பாட்டனார் தனது நண்பருடனும் சிறுவன் தன் நண்பன் பேச்சு துணையுடன் உள்ளூர்க்குள் மாடுகள் பார்க்க போனார்கள். போகும் வழியெல்லாம் இவனுக்கு வினோதமாய்த்தான் இருந்தது. கூட்டம் கூட்டமாய் மாடுகள் பெரும் தொகையில் சுதந்திரமாய் ஓடி ஆடி மேய்வதைக் கண்டான். தங்கள் ஊரில் ஆடுமாடுகளை கட்டிப் போட்டுத்தானே வளர்ப்பார்கள். இங்கு இப்படி காண்பது வியப்பாக இருந்தது. எத்தனை நூற்றுக்கணக்கான மாடுகளும் அதற்கு மேலாகச் சாதாரண குதிரைகளை விட உயரம் குறைந்த குதிரைகள் கூட்டமாய் தன்னிச்சையுடன் திரிந்தன. வானளாவிய பனம்தோப்புக்கள் ஒருபுறம். சிறுவனின் ஊரிலும் பனம் தோட்டங்கள் உண்டு தான். ஆனால் இப்படிச் செழிப்பாய் வளர்ந்து சூரிய ஒளியை தடுக்குமளவுக்கு இருண்ட சோலையாய் இருப்பதை இங்குதான் கண்டேன். நூற்றுக் கணக்கான பரப்பளவில் தோப்புக்கள்தான். புல்வெளியில் குளிர்ந்த சுவாத்தியமும் மனதிற்கு உற்சாகம் தரும் இடமாய் இருந்தது. பெரியவர்கள் மாடுகளை பார்த்து குறித்துக் கொண்டதும் பகல் பொழுதில் யாவரும் வீடுவந்து சேர்ந்தார்கள். பாட்டனார் இரண்டு சோடி காளைகளுக்கு விலைபேசி பணமும் கொடுத்துவிட்டார் என்பதையும் சிறுவன் தெரிந்து கொண்டான். இவனின் வீட்டில் உள்ள உழவு எருதுகள் இரண்டும் பாட்டனார் இங்கிருந்துதான் கொண்டு வந்தார் என்பது அறிந்திருக்கிறான்.

பகல்போது சாப்பாடு முடிந்ததும் இவர்கள் தன் வீடுநோக்கிய தோணிப்பயணம் ஆயத்தமானது. பாட்டனாரின் நண்பர் குடும்பம் இப்போது இச்சிறுவனின் நண்பர்களாயும் ஏன் உறவினராகியும் விட்டார்கள். அவர்கள் அன்புடன் கொடுத்த புளுக்கொடியல் பனங்கட்டி என்பனவுடன் தன் நண்பரிடமும் பெற்றாரிடமும் பயணம் சொல்லி விடை பெற்றார்கள். ஆழிபோல் அந்த ஊர்மக்களின் நட்பும் பண்பும் மிக



ஆழமானது என்று சிறுவன் அறிந்து கொண்டான். இதை அவன் என்றும் மறந்ததில்லை. பாட்டனாரின் நண்பரும் மகனும் தோணித்துறைக்கு வந்து வழியனுப்பிய காட்சி என்றும் நிரந்தரமான திரைப்படம் தான். அவர்கள் கரையில் நின்று கையசைத்த காட்சி தோணி நெடுந்தூரம் சென்றதும் சிறுவனின் மனதில் நிலைத்து விட்டது. தோணியும் வரும்போது இருந்த கஸ்ரங்கள் இல்லாது காற்றும் உதவியாய் இருந்ததால் இலகுவாய் பயணித்தது. நயினை அம்பாள் கருணையும்தான் இப்படி உதவியது என்றும் சிறுவன் நயினை அம்பாளை மனதில் வாழ்த்தினான். ஊர்காவற்துறையில் இறங்கியதும் முன்போல் வள்ளத்தில் ஏறி காரைநகர் வந்தார்கள். சிறுவன் தனது கடற்பயணகாவியத்தை தனது உறவினருக்கும் நண்பர்களுக்கும் சொல்லும் ஆவலில் திளைத்திருந்த வேளையில் சித்தன் கேணிக்குப் போகும் பஸ்சும் தயாராய் வந்தது. பஸ்சில் வந்ததும் இரவானபடியால் பாட்டனாருடன் சித்தங்கேணியில் தங்கினான். மறுநாள் பாடசாலைக்குப் போக வேண்டியதால் அதிகாலை ஐந்து மணிக்குத் திருக்கல் வண்டிப்பயணம் சிறுவனின் ஊர்நோக்கி சென்றது.

வீடுவந்ததும் பாடசாலைபோய் வந்தபின் தனது கடல் பயண விந்தைகளை எல்லோருக்கும் சொல்லி மகிழ்ந்தான். மாலையில் தனது சக நண்பர்களுடன் சிறுவனின் பின்புற வளவில் உள்ள வேப்ப மரத்திடலில் சபை கூடியது. சிறுவன் தன் கன்னிக்கடல் பயணத்தை ஒரு கதாநாயகன் பாணியில் விபரித்தான். சிறுவர்கள் அனைவரும் திறந்த கண்களும் மூடாத வாய்களுமாய் கேட்டுக் கேட்டு மகிழ்ச்சி ஏக்கம் பயம் திகில் ஆறுதல் போன்ற உணர்ச்சிகளில் திளைத்தார்கள். தாங்களும் போகலாம் என்ற ஆர்வமும் ஆசையும் அந்தப் பிஞ்சு மனங்களில் உதிக்காமல் இல்லை. அவர்களுக்கும் இச்சிறுவனின் பாட்டனார்போல் கிடைக்க வேண்டுமே. அதற்கு மேலாக அந்தப் பொன்தீவுகளில் வாழும் உண்மையான உள்ளம் கொண்டவர்களை எல்லாம் சந்திக்க வேண்டுமே.

முயற்சிப்போம், இன்னும் ஒருமுறை ஏழாத்துப் பிரிவைத் தாண்டி அந்தப் பொன் தீவுகளைப் பார்ப்போமா?

**வேலுப்பிள்ளை**

# திரு சதாசிவம் பிள்ளை

***(கனடா)***

உதயன் ஆசிரியர் நண்பர் கே.எஸ். லோகேந்திரலிங்கம் அவர்கள் பத்திரிகையில் ஒரு சிறு செய்தியாக பிரசுரிக்க அதன் மூலம் தொடர்பானவர்களில் திருவாளர் சதாசிவம் பிள்ளையும் ஒருவர். தாம் பிறந்த மண்ணை வர்ணிக்கும்போது ஒவ்வொருவரின் எழுத்துக்களிலும் ஒவ்வொரு புதுமை தெரிகின்றது.

எங்களுக்குத் தெரியாத, ஆனால் தெரிந்து கொள்ள வேண்டிய பல தகவல்கள் சதாசிவம் பிள்ளையின் எழுத்தில் புதைந்து கிடக்கின்றது.

## சொர்க்கம் கொழிக்கும் தென்மராட்சி

என் சொர்க்கமான மிருசுவில் தென்மராட்சி. தென்னையும், பலாவும், பனையும், மாவும் மலிந்து சோலையாய், செழிப்பாய், எழிலாய் விளங்கிய தென்மராட்சி. தென்மராட்சியில் ஒரு நகரம் சாவகச்சேரி. சாவகச்சேரியில் பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள், சந்தை, ஆஸ்பத்திரி, நீதிமன்றம், புகையிரத நிலையம், பஸ்தரிப்பு நிலையம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி அழகாய் நின்றது ஆரவாரமாயிருந்தது.

சாவகச்சேரியிலிருந்து கிழக்கே ஆறுமைல் தூரத்தில் இருக்கிறது, மிருசுவில். இது அழகான கிராமம். வடக்கு மிருசுவில், மிருசு என இரு பிரிவுகள் மிருசுவிலின் அயற்கிராமங்கள் - போக்காட்டி, உசன், குடமியன், கிழக்கே எழுதுமட்டுவாள். எல்லா இடங்களும் செழிப்பானவைதான்.



மிருசுவிலில் கிறிஸ்தவ தேவாலயம், சைவக்கோயில்கள், பாடசாலைகள் இரண்டு, புகையிரத நிலையம், பஸ்தரிப்பு நிலையம், சிறிய கடைகள் எல்லாமே இருந்தன. வடக்கு மிருசுவிலில் பெரிய வயல்வெளியும், உசனை அண்மித்த மிருசுவில் பகுதியில் வயல்களும் உண்டு. வடபகுதி சிறு பற்றைக்காடுகளும், தோட்டங்களும் அப்பகுதிகளில் எப்போதும் பாடும் பறவைக் கூட்டங்களும் கலகலப்பாயிருக்கும்.

ஆறுகள், நதிகள், ஏரிகள் இல்லாத இடம் என்றாலும் களைக்காத சளைக்காத எம்மக்கள் பல சிறு குளங்களையும், கேணிகளையும் வெட்டினர். தண்ணீர் கண்டனர். மிக மிக கஸ்ரமான வாழ்க்கை. தண்ணீர் ஊற்று மிக குறைவு. அண்மைக் காலத்தில் குழாய்க் கிணறுகளை வெட்டி நீர் பெற்றுக் கொள்ளும் வசதியேற்பட்டது. மணற்தரையானபடியால் இறைத்து முடிந்து நீர் ஊற அதிக நேரம் எடுக்கும். குழாய் கிணறுகளில் அந்தக் கஷ்டம் இல்லை.

மாரிகால மழையை நம்பிய வயல் என்றாலும் நெல் நன்றாக விளையும். தோட்டங்களில் காய்கறிகள், கிழங்குவகைகள், கீரைகள் விளையும். வயல் அறுவடையான பின்பு உளுந்து, பயறு, கச்சான், பயிரிடுவர். எனவே காய்கறி தானியவகைகள் ஓரளவுக்கு போதியதாக இருந்தது. கௌட என்ற தானியம் நன்றாக விளையும். இவற்றுக்கு குறையில்லை.

மாம்பழம், பலாப்பழம், கொய்யாப்பழம், கஜு, என்று சொல்லப்படும் முந்திரிகைப்பழம், குறைந்த அளவு மாதுளம்பழம், தோடம்பழம், வாழைப்பழம் இவைகள் எல்லாம் தேவையை பூர்த்தி செய்தன.

பனைகள் எங்கும் நிறைந்திருக்கும். கருமையாய், உயரமாய், ஓலைகளுடன் நிமிர்ந்து நிற்கும் அழகே தனி. தோப்புமரமோ தனிமரமோ அழகுதான். அதுவும் சோலைக்காற்று வீசும் மாதங்களில் பனை ஓலைகள் சேர்த்து எழுப்பும் ஒலி, காற்றும் ஓலைகளும் சேர்ந்து காதல்பாட்டுப் பாடுகின்றவை என்று தோன்றும்.

பனை எத்தனை விதமான பயன்கள் தந்தது. பனம்பழம், பனாட்டு, கிழங்கு, புழுக்கொடியல், கள்ளு, கருப்ப நீர் - இவைகள் மட்டுமா? ஓலை, மாடுகளுக்கு உணவாகும்; வேலியடைப்போம். ஓடியல் மா கூழ்காய்ச்சி கூடியிருந்து குடிக்கும்போது மகிழ்ச்சியோ மகிழ்ச்சி! கருப்பட்டி அதாவது பனங்கட்டி சீனித் தொழிற்சாலைகூட ஆரம்பிக்கலாம். முன்பு வல்லை வெளியில் சீனித் தொழிற்சாலை இருந்தது. எங்களூரில் பனங்கட்டி காய்ச்சுமிடம் இருந்தது. அதாவது கள்ளு சாராயம் காய்ச்சினார்கள். அயல் நாட்டுச் சாராயத்துக்கு காசு கொடுத்து வாங்கி குடித்துவிட்டு தெருவில் கிடப்பதிலும்பார்க்க நம் பனங்கள்ளு சாராயம் குடித்து தெம்மாங்கு பாடினால் தப்பா?

ஆயிரத்து தொள்ளாயிரத்தில் கொழும்பு காங்கேசன்துறை புகையிரதவீதி அமைக்கப்பட்டது. மக்கள் இந்த செய்தியை பெரிதாக வரவேற்கவில்லை. புகையிரதத்தின் என்ஜினிலிருந்து வெளியேறும் புகையால் பறவைகள் செத்துப் போய்விடும் என்று பயந்தார்கள். மேய்ச்சலுக்காக திரியும் ஆடுமாடுகள் செத்துப் போய்விடுமே அடிபடுமே என்ற பீதி. நாளடைவில் பழகிப் போய்விட்டது. என்றாலும் கிராமத்தின் உள்ளூர் பகுதிகளில் உள்ள மக்கள் புகைவண்டி வரும்நேரம் வண்டியை பார்க்க வருவார்கள். வேலிகளுக்கு மறைவில் நின்று கதியால்களை பிடித்தபடி பார்ப்பார்கள். ஏனென்றால் புகைவண்டி வரும் வேகத்துக்கு தங்களையும் இழுத்துக்கொண்டு போய்விடும் என்ற பயம். அப்படியும் ஒரு காலம்! நாளடைவில் பழகிப்போய் விட்டார்கள்.

அந்தக் காலத்தில் ஆயம் என்றொரு வரிவசூலிக்கும் முறை இருந்தது. தெருவில்போகும் வண்டிகளும் மக்களும் அதற்காக வரி கொடுக்க வேண்டும். எங்கள் வீட்டுக்கு நேரே தெருவோரத்தில் ஆயக்கொட்டிலிருந்தது. மக்கள் ஆயக்காசு கொடுத்துவிட்டு அந்த இடத்தை தாண்டி செல்வார்கள். இப்போதும் மிருசுவிலில் அந்த இடம் ஆயத்தடி என்று அழைக்கப்படுகிறது.

பல வருடங்களுக்கு முன்பே இந்த பாதையோரத்தில் பெரிய ஆலமரத்தின் கீழ் சிறிய ஒரு பிள்ளையார் கோவிலும் கிணறும் இருந்தன. காட்டுக்குருக்கள் என்ற ஒருவர் கிட்டத்தட்ட இருநூறு



வருடங்களுக்கு முன் இந்த சிறு கொட்டிலைப்போட்டு பிள்ளையாரை வைத்து வழிபட்டார். அவருடைய ஒரு சில இனத்தவர்களும் குடும்பமும் கோயிலுக்கு அண்மையில் இருந்தார்கள்.

எனது பாட்டனார் ஆயக்கொட்டிலில் இருந்து வரி வசூலித்தவர். பின், பாட்டியை மணந்து கொண்டு சிறுவீடு கட்டி வாழத் தொடங்கினார்கள். கேணிகள் குளங்களில்தான் குளிப்பது, உடுப்பு தோய்ப்பது எல்லாம் செய்வார்கள். பிள்ளையார் கோயில் கிணற்றில் குடிக்கவும் சமைக்கவும் தண்ணீர் எடுப்பார்கள். கஸ்ரமான வாழ்க்கையாக எமக்கு தோன்றினாலும் அவர்கள் அமைதியாக நிம்மதியாக ஆரவாரமின்றி சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

பாட்டன் விடாத முயற்சியுள்ளவர். பாட்டியும் அப்படிப்பட்டவள்தான். அப்பொழுது பதினாறு பதினேழு வயதில் பெண்கள் மணம்புரிந்து கொள்வர். துள்ளித்திரியும் இளமை. கள்ளமில்லாத உள்ளம் நிறைந்த கற்பனை. பெண் விடுதலை பெண் விடுதலை என்று இப்போது ஏதேதோ பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்; போராடிக் கொண்டிருக்கிறார்களாம். ஆனால் எனது பாட்டியும் பாட்டனும் எவ்வளவு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். கொக்கட்டி, நாவல், சுரபுள்ளை, கிஞ்சா போன்ற மரங்கள் வளர்ந்த காட்டுப்பகுதிகளை கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி வெட்டித் துப்புரவாக்கி தென்னம் சோலையாக்கி, மா பலா மரங்களையும் உண்டாக்கினர். புளிய மரங்களும் பனைமரங்களும் தாராளம். எங்கிருந்தோ வந்து நூற்றியம்பது பரப்பு காணிக்கு அதிபதியாகினர் என்றால் அவர்கள் வல்லமையுடையவர்கள் தான்.

பாட்டனாரின் பின்னர் என் தந்தையார் எல்லாவற்றையும் பொறுப்பேற்றார். அம்மாவும் கெட்டிக்காரி. தந்தையார் கொஞ்சம் ஆடம்பரப்பிரியர். குதிரை வண்டி, மாட்டு வண்டி, பழைய வோட்கார் இவையெல்லாம் அவரிடம் இருந்தன. தெருவோரத்தில் ஒரு கூத்துக்கொட்டகை போட்டார். நடிகர்களுக்குத்தான் கொட்டகை. பார்வையாளர்கள் வெறும் வெளியில் தான் இருப்பார்கள். சோலைக்காற்று வீசும் சுகமான நிலாக்காலங்ளில் தான் கூத்து நடக்கும். வானத்தில் பிஞ்சு

பொதியாய் வெள்ளை முகில்கள் வேகமாக எங்கோ போய்க் கொண்டிருக்கும்.

நந்தனார், பவளக்கொடி, வள்ளி திருமணம், அல்லி அர்ச்சுனன், பொதுவாக இவைகள் தான் நாடகங்கள். பபூன் செல்லையா, பபூன் இராசன், சின்னக்கோவிந்தர், பெரிய கோவிந்தர் இப்படி ஒரு நாடகக் குழு இருக்கும். அவர்கள் வந்து நாடகம் போடுவார்கள். விடியும் வரை நடக்கும். இப்போதும் அந்த நாடகக் கொட்டகை இருந்த இடத்தில் நான் உலாவும்போது பாட்டுக்கள் ஞாபகம் வரும்.

''ஏனோ எனை எழுப்பலானாய் மடமானே.
சிங்கத்தால் நான் அடைந்த
பங்கம் தீர்த்தாயே!''
(இது சாவித்திரி நாடகம்.)

''ஆலோலம் ஆலோலம்
கொஞ்சும் கிளி, குருவி, மைனாவே
கூட்டமாய் இங்கே வராதே
கவண் எடுத்து கல்லெறிவேனே''
(இது வள்ளி தினைப்புலத்தில் பாடும் பாட்டு.)

அப்புறம் வளர்ந்து படித்து கல்யாணமாகி குழந்தைகளைப் பெற்று கொழும்பில் இருந்த போதும் ஒவ்வொரு பாடசாலை விடுமுறைக்கும் கிராமத்துக்கு போவோம். நான்கு மணி பதினைந்து நிமிஷத்து கொழும்பு புகைவண்டி இரண்டே இரண்டு நிமிஷம் மிருசுவிலில் நின்று புறப்படும். அதற்கிடையில் அவதி அவதியாக இறங்கி மேற்குப்பக்கமாக நடக்கத் தொடங்குவோம். ஸ்டேசன் மாஸ்ரர் விளக்கை அணைத்துவிட்டு போய்விடுவார்.

மின்சாரம் எல்லாம் கிடையாது. நிலாக்காலம் என்றால் சந்தோஷம். இல்லையென்றால் புகைவண்டியின் பின்புறமுள்ள அந்த சிவப்பு விளக்கை பார்த்து பார்த்து போவோம். வண்டி அது போய் விடும். அம்மா அரிக்கேன் விளக்குடன் வந்து எங்களை கூட்டிக் கொண்டு போவா. கஷ்டம்தான். ஆனால் அந்த நினைவுகள் - அந்த அரவணைப்பு - அன்பு - அதற்கு நேரமில்லை.



காலம் மளமளவென்று ஓடியது. பிள்ளைகள் படித்தார்கள். சொந்த நாட்டின் பிரச்சனைகளால் வெளிநாட்டுக்கு போனார்கள். நானும் என் துணையுடன் நாங்கள் கட்டிய பெரிய அழகான வசதியான வீட்டில் மிருசுவிலில் குடியேறினோம். இந்த இடைக்காலப் பகுதியில் அழகிய வீடுகள் கிணறுகள் எல்லாமே கிராமத்தில் தோன்றிவிட்டன. அதை அடுத்து எண்பத்தாறாம் ஆண்டு மின்விளக்குகள் கூட எரிந்து ஒளிபரவத் தொடங்கின. இந்த வசதி ஏற்பட்டதும் தொலைக்காட்சி பெட்டிகள் டெக்குகள் வந்தன. கொஞ்சம் ஆரவாரமாய் அழகாய் வசதியாக இருக்க தொடங்கின.

என்றாலும் எங்கள் ஆலடிப்பிள்ளையார் கோவில் பெரிய அளவில் வளர்ச்சி பெறவில்லை. வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடக்கும். இடைஇடையே அன்னதானம். தாமரை இலையில் சோற்றை வாங்கி சாப்பிடும் போது அது அமிர்தமாகத்தான் இருக்கும். சித்திரா பௌர்ணமியன்று கஞ்சி, பால்கஞ்சி, வடலி ஓலையில் செய்யப்பட்ட பிளாவிலும் இரட்டையிலும் கஞ்சி குடிப்போம்.

அம்மன் கோயிலில் ஆனி மாதம் திருவிழா. புதிய தேனீர் கடைகள், குளிர்பானக்கடைகள், கடலை விற்கும் பெண்கள், தனி இயந்திர மூலம் பற்றைகளை மரங்களை எல்லாம் மின் குமிழ்கள் ஒளிவீசும். கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு, மேளக்கச்சேரி, பாட்டுக்கச்சேரி (முன்பு நாட்டிய விருதுகளும் இருந்தன) எல்லாம் ஒரே ஆரவாரமாய் ஊரே கோயிலடியில் ஒன்று கூடும். விடிய விடிய திருவிழா தேர் தீர்த்தம் ரொம்ப சிறப்பு.

எங்கள் ஊரில் பெரிய சாதனையாளர்கள் இருக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு தனிப்பிறவியும் உழைத்து வாழும் குணமுடையவர்கள். பெண்கள் கிடுகு பின்னுபவர்கள். பெட்டி, பாய், கடகம், முறம், திருமணை செய்வார்கள். கடுமையாக உழைக்கத் தயாராக இருந்ததால் காசுக் கஷ்டம் இல்லையென்றே சொல்லலாம்.

நாங்கள் மிக மகிழ்ச்சியாக வாழ்ந்த காலம் அது. எங்கள் வீட்டு வாசலில் ஒழுங்கையில் பெரிய வேப்பமரம். அதன் கீழ் மட்டுவில்

சரசாலை நெல்லியடி கரவெட்டிப் பகுதியில் இருந்து வந்து மட்டை, பாளை, கோம்பை ஏற்றிச் செல்ல தினம் ஒரு வண்டியாவது வந்து நிற்கும். வண்டிக்காரர்களுடன் கதைத்து தேநீர் கொடுத்து அன்பு மயமாய் வாழ்ந்த கிராம வாழ்க்கை அயலில் உள்ளவர்கள் கூட நன்றாக நடந்து கொள்ளலாம்.

ஒரு சின்ன அற்புதமான விஷயம். என் வீட்டின் பின்புறம் பரவலாய் தண்ணீர் நிற்கக்கூடியதாக ஒரு சிறு தொட்டி, அதில் மைனா, புலனி, காகம், எல்லாம் வந்து காச்மூச்சு என்று சத்தமிட்டு குளிக்கும். நாய், பூனை தண்ணீர் குடிக்கும்.

எல்லாம் முடிந்த கதையாய் வீட்டை விட்டு வெளியேற நேரிட்டது. வெளியேறும்போது எங்கள் பூனை நாய்கள் எங்களை சுற்றி வந்ததை நினைத்தால் எத்தனை சோகம். எங்கே போகிறீர்கள் என்று கேட்க அவற்றால் முடியுமா?

எனக்கு எங்கள் நாட்டைவிட்டு வெளியேற துளியும் விருப்பமில்லை. பிள்ளைகளின் கட்டாயத்தின் பேரில் வெளியே கனடாவந்து சேர்ந்தேன். கனடா வசதியான வாய்ப்பான நாடு. ஆனால் எமக்கோ அழிந்துபோய் கிடக்கும் வீடுகள் தறிக்கப்பட்ட மரங்கள் எத்தனையோ கொடுமை. என்றாலும் அங்கு போக வேண்டும்.

அகதிகள் அகதிகள்
அகிலமெல்லாம் அகதிகள்
அசுரத்தனமான அகோரமான
அடிமைத் தனத்தின் கொடிய
வார்த்தைகள்

இரக்கமற்றவர்களால்
ஏற்படுத்தப்பட்ட ஏராளமான
வார்த்தை அகதிகள்
அன்பில்லாதவர்களால் ஆக்கப்பட்ட
வார்த்தை அகதிகள்



தமிழர்கள் தலை நிமிர்ந்த தமிழர்கள்
தனிச்சிறப்புள்ள தமிழர்கள்
புலம்பெயர்ந்ததால் அகதி நிலை
இடம் பெயர்ந்ததால் அகதி நிலை
எப்படியிருக்கிறது எமது நிலை?

பாதை திறப்பு பயங்கரமான மகிழ்ச்சி
புரிந்துணர்வு உடன்படிக்கை
பொல்லாத மகிழ்ச்சி
போதையில் மிதக்கிறார் தமிழரென
பேதையர்கள் எண்ணுகிறார்கள்.

சொத்தை இழந்து நித்தம் அழுபவர்கள்
அத்தனைபேரும் எங்கு செல்வது
வெட்டப்பட்ட வேலிகள்
எரிக்கப்பட்ட குடிசைகள்
அழிக்கப்பட்ட அழகான வீடுகள்.

எந்தையும் தாயும் வாழ்ந்த ஊர்
முந்தையோர் சொந்தமாய் வாழ்ந்த ஊர்
மண்ணைப் பிரிந்து கண்ணீருடன் வாழ்ந்தோம்
வண்ணச் சிட்டுகளாய் வட்டமிட்ட சிறார்கள்
பட்ட துன்பங்கள் எவ்வளவு!

**ச. சதாசிவம் பிள்ளை**
*மிருசுவில்*



## திருமதி. சுகந்தினி - சுதர்சன்

***(யேர்மனி)***

பேச்சில் மட்டுமல்ல, எழுத்திலும் உண்மையை மறைக்காதவர். இவரது இனிமையான குரலைப் போலவே எழுத்தும் இனிமையானது.

இந்த இள வயதில் நிறைய எழுதுகின்றார். பல பத்திரிகைகளில் இவரின் கவிதைகள் பிரசுரமாகியிருக்கின்றன. A.B.C தமிழ் ஒலியின் கவிஞர்கள் சங்கமம் ஊடாக மக்களுக்கு அறிமுகமானவர். இங்கு, தான் புழுதி அளைந்து விளையாடிய மண்ணை கவிதையில் அழகுபடுத்தியிருக்கின்றார்.

## நான் பிறந்த வலிகாமம்

*வலிகாமத்தின் வடக்கிலே*
*திடகாத்திரமான ஊரதுவாம்*
*மல்லையூர் எனும் மாபெரும் பதியாம்*
*தென்னஞ் சோலையா சேற்றுக்குளிப்பு வயலா*
*பனம் தோப்பா பாங்காய் வளரும் கமுகா*
*எல்லா வளமும் சூழ்ந்தவொரு*
*பொய்கைக் குளமாய்*
*என்னூரே நலமா?*

*நேசம் மிகுந்த உறவுகளோடு*
*பாசப் பிணைப்புக்கள் அதிகமாக*
*பாடசாலைகளோ பலதரத்தில்*



*மல்லாகம் மகாவித்தியாலயமும்*
*கனிஷ்ட வித்தியாலயமும்*
*விசாலாட்சி வித்தியாசாலையும்*
*கல்வி தரும் அரும் பெட்டகங்களாக*
*என் சோதரர்களும்*
*உருபெற்று ஆசிரியம் ஆனதும்*
*இதனூடே*

*பழம்பதி விநாயகருக்கு பக்தி தொடுக்கும்*
*விழாவேளை ஊரெல்லாம் ஒன்றுகூடும்*
*வீதியெல்லாம் சந்தம்பாடும்*
*நீலியம்பனை விநாயகர் நீதி நெறிகாக்க*
*எங்கள் உறவெல்லாம் தானதருமம்*
*செய்திருக்க*
*வைரவர் ஆலயங்களும் ஆங்காங்கு*
*காவல் செய்ய*
*ஆவலாக நாங்கள் அன்று*
*ஆடிவிளையாடிய வீதிகள்*
*அருங்கனவுகள் மனதெங்கும்.*

*வீரத்திற்கும் விருப்பு கொள்ளும்*
*பெருநெருப்பு தேசமது*
*சினெப்பர் மயூரனோடு சிறைவாசன் தனையும்*
*லெப். கேணல் மதியண்ணாவையும்*
*மண்ணிற்காய் தந்துவிட்ட*
*திண்ணையல்லவோ எங்கள் ஊர்*

*நீதிக்கு ஒரு தளமாக*
*நீதி மன்றம் உண்டு*
*வைத்தியத்திற்குப் பஞ்சமா?*
*அதுவும் கொஞ்சம் உண்டு*
*பேராசிரியர்கள் அரிய பொருள்*
*தேர்ந்துரை*
*ஓராசிரியமா?! ஒரு நூறு ஆசிரியம்*

எங்களூரில்
வைத்தியரோடு வழக்கறிஞர்
நீதிபதி அதிபரோடு நீதி நெறி
நிற்கும் ஊர்.
கலைகளின் உறைவிடமாய்
காளிகோவிலடி கணகணப்பான
சிற்பக்கலை அற்புதமாய் மணம் வீசும்.

சாதிமத பேதமில்லா சாமி கோயில்காரம்
மாதா கோயில் மணியோசையும்
யேசுபாலன் ஆலயமும் அருள் பாலிக்கும்
உண்மையைக் கூறின் குடிசைவீடுகளே
குறைவெனலாம்
நிறைந்து செழித்து வளரும் போதே
அன்னியத்தால் அலைக்கழிந்தது
எங்கள் ஊர்.

கோடி கோடி அழகுகள்
மாண்பு கூறும் மரஞ்செடிகள்
கோணப்புல வைரவரின் ஆலயமோ
எங்களுக்கு ஆதிவளி மரபுகள்
பத்துநாள் அலங்காரத் திருவிழா
பந்தாய் உருண்ட வேகம்
வேனில் காலம்போல்
மகிழ்ச்சியும் அலை வெள்ளமோ!

சேதி கூறும் நினைவுகள் சொல்லில்
அடங்கா கனவுகள்
தெய்வர் வளவதனில் கால்பந்து ஆடியதும்
கிரிக்கெட் ஆட்டத்தின் கம்புகளாக
மாமரத்தின் உடலில் கோடுகள் கீறி
விளையாடியதும்
நாணி ஓடி கத்திக்கொண்டு
நினைவுகளின் அந்தம் எங்கே
ஆதியின் குகைகளிலா?



நண்பியோடு நத்தைபோல் ஒட்டிஒட்டி
நாங்கள் பேசிய கதைகளை
அவள் வீட்டு கிணற்றடி கூறுவதாய்
அவள் செப்பியபோது
அப்பிக்கொண்டது துக்கம்
சுவையாய் சுகமாய் பகிர்வாய்
பல கதைகள்
சிரிப்பே எங்கள் சிருங்காரமான மொழியாய்

வேலியோர வைரவர் வேதமாய்
எங்களோடு
நன்மையின் பாகமாய் நான்
வணங்கியே
வாயில்விட்டிறங்கி பரீட்சைக்குப் போனதும்
உன் பாதை வழியல்லவோ
தேர்வு முடிவு தேறுதலாக
பட்டப் படிப்புக்கு புள்ளி போதும் என்றதும்
துள்ளிக்குதித்த என் மகிழ்ச்சியில்
நீ பட்ட பெருமையை நானறிவேன்
என் மண்ணே

மாலைதீவு மரமதில் பாளைபூத்து சிரிக்க
பார்த்து மனம் லயித்ததும்
நாம் நட்ட குரொட்டன்கள்
நன்கு செழித்து வளர்ந்ததும்
இப்போது அது எம்மை
நலம் கேட்பதாக நானறிந்ததும்
முற்றத்து வேம்பின் முதிசமான
குளிர்காற்றை பருகியதும்
இன்னும் என் மனதில்

அம்மாவின் கைபிடித்து அசைய நடந்ததும்
அம்மன் கோயிலுக்கு விரதமென்று கூறி

மறந்துபின் சாப்பிட்டதும்
ரீயூசனால் வரப்பிந்துகையில்
பாதையோர இருளில் பார்த்து அம்மா
நின்றதும்
பாய்ந்து ஓடும் வெள்ளத்தில்
மீன்குஞ்சு மிதப்பதாய் கூற
கைகள் அளைந்து வால்பேத்தை
பிடித்து வடிவாயழகு பார்த்ததும்
நீர்ச்சிறங்கால் நித்திரையின்றி
அழுததும்
நீண்ட களிப்போடு இளமையாக
இன்னும் மனதிலே இருப்பு!

திங்களூமோ மங்களம் பொலியும்
மல்லையூராம் எங்கள் ஊர்
என்னை நினைவிருக்கா உனக்கு?
உன் மடியில் நான் தவழ்ந்து
தத்தி நடை பயின்று
பத்திரமாய் நான் படித்துவிட்ட
வித்தை கற்றுத் தந்த வித்தியாசாலை
அல்லவோ உன்மடி
கண்ணீர் விட்டு இன்று நீ
கதிகலங்கி நிற்பதும்
அன்னையே என்னருமைத்தாயே
நின்னை நான் காணவொரு
நித்திய தவம் செய்கிறேன்
உன் மடி மீண்டும் தவழ
ஓடிவரும் நாளெங்கே?

**சுகந்தினி சுதர்சன்**
*ஜேர்மனி*





# திரு. த. சதீஸ்
***(பிரான்ஸ்)***

வளர்ந்து வரும் இளம் கவிஞர். இவரின் எழுத்துக்களில் நெருப்பின் அனலும் வீசும்! தென்றலின் இதமும் தெரியும்!

அண்மையில் இவர் வெளியிட்ட 'தென்றல் வரும் தெரு' என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம் எனக்கு அறிமுகமானவர். இங்கு 'நெருப்பில் எரியும் நெய்தல்நிலம்!' என்னும் இக்கவிதை தான் பிறந்த மண்ணின் சிறப்பை, பெருமையை அழகாக விளக்குகின்றது.

## நெருப்பில் எரியும் நெய்தல் நிலம்...!

கடலைப் போலவே கடற்கரை
ஓரத்திலும் ஒரு ஆனந்தம்!

மனதை மயிலிறகால் தடவும்
தென்னம்கீற்றும்
தென்மாங்குப் பாட்டும்
இப்போதோ பிறகோ கரையை
அடைந்துவிடுவேன் என
துள்ளிக்குதித்து ஓடி வரும்
வெள்ளலைகள்..!

விஞ்ஞானத்தின் விஸ்வரூபங்களாய்
விசைப்படகுகள்....!
தண்ணீரில் தத்தளிக்கும்
தவளைகள்போல் கட்டுமரங்கள்!

தாலாட்டும் அலையோரம்
நீராடும் கடல்ப்பறவைகள்!

தென்றல் தரும் தென்னம்தோப்புகள்
பூரிக்கும் புல்வெளிகள்
ஆங்காங்கே நத்தைக் கூடுகள் போல்
மீனவர் குடிசைகள்!

கடற்கரை உலகின்
முதல் அதிசயம்..!
இயற்கை ஒருங்கிணைந்த
இன்பத் தோட்டம்!
அள்ள அள்ள அலுத்துவிடாத
ஆளமான புதையல்...!

கடற்கரை ஓரத்திலே
நண்டுகள் நடந்துசென்ற
அடிச்சுவட்டை அலைகள் வந்து
அழித்தது போல் இன்று...

அதர்மம் தனது
ஆக்கிரமிப்பை தொடங்கிவிட்டது
கோவில்கள் தெருக்கள் வீடுகள் - என
அனைத்தையும் அழித்துவிட்டு
'யார் அங்கே?'
என்று ஆணவத்தோடு கேட்கிறது!

வானத்தில் நிகழும்
இடிமின்னல் முழக்கங்களைக் கண்டு
வீட்டுக்குள் சென்று கதவுகளைப் பூட்டிக்
கொண்டு ஒளிந்து இருப்பதனால்
ஊரூராய் வந்து'எங்கே தமிழன்...?'
என்று எள்ளிநகைக்கிறான் பகைவன்...!



தலையில் இடியையும்
வயிற்றில் நெருப்பையும்
கட்டிக் கொண்டு கிடக்கும் - உன்
மண்ணின் வாசம்
வனவாசம் போனதுகண்டு - என்
சுவாசமே மாறிப் போனது..!

ஏன்???
என்ன நடந்தது - எனது
கிராமத்திற்கு...!
என்ன நடந்தது
ஆர்ப்பரிக்கும் கடலுக்கு...!
கதிரவன் ஒளியை வீசினாலும்
கண்கள் மட்டும் ஏன்
இருட்டில் மூழ்கிக் கிடக்கின்றன...?
வெளிச்சத்தை ஏதோ
விழுங்கிக் கொண்டதா...?
மண்ணில் நிலைமை
மாற மாற மனதின் நிலை
மாறிக் கொண்டே போகிறதே...!

அலைகள் ஏன்
ஆர்ப்பரிக்கவில்லை..?
கடல் ஏன் மெல்லிசையில்
பேசவில்லை...?
சாலைகள் ஏன்
மௌனம் சாதிக்கின்றன?
மோகன ராகம் பாடும்
நேரம் முகாரியா?
ஏலேலோ கேட்ட காதுகள்
ஏதேதோ கேட்கிறதே!

எங்கள் உரிமைகளையும்
உணர்வுகளையும்
உறிஞ்சிக் கொண்டது யார்?

எங்களோடு ஏன் இந்த
விரிசல் விதியே..?
ஏன் இந்த விரோதம்...!
எங்கள் சுதந்திரத்தை எங்கே
சூறையாடி சென்றுவிட்டாய்...?
ஒன்றுமட்டும் மிக
தெளிவாகத் தெரிகிறது...!
இப்போது அங்கு நடப்பது
அழிவுகள் அல்ல!
அவை சரித்திரமாகும்
சம்பவங்கள்..!
அல்லது சம்பவங்களால்
ஒரு சரித்திரம்...!

எங்கள் மண்ணில்
மகரந்தத் தொட்டிலில் தாலாட்ட
இன்பம் தவழ்ந்தோடி வருமே...!
பூபாளத்திற்கிடையிலும் ஒரு
புதுராகம் கேட்குமே!
அதைக்கூட ஏன்
இன்று நிறுத்திவிட்டாய்...?

எங்களை துன்புறுத்தியது
போதாதா...! இன்னும்
துன்பப்படுத்த வேண்டுமா?
பாடு குயிலே பாடு...!
வீசு தென்றலே வீசு!
பேசு கடலே பேசு...!

அழிந்துவிட்டது
அனைத்தும் அழிந்துவிட்டது!
குருவிக் கூட்டை குரங்குக்கூட்டம்
குலைத்தது போல் பகைவரால்
படுசேதப் பட்டுவிட்டது!

ஆசிரியர்கள் செய்ய முடியாததை
அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது



பாதகரால் வீடிழந்த பாமரமக்கள்
பள்ளிகளில் ஒதுங்குகிறார்கள்..!

மனிதர் நடந்துசெல்லும்
சாலையோரம் ஓடிக் கொண்டிருக்கிறது
இரத்த வெள்ளம்!
கடலில் இருந்து கரையைத் தேடி
ஓடிவரும் அலைகளின் ஓசையிலே
அவல மக்களின் அழுகுரல் கேட்கிறது...!

அதிசய வாழ்க்கை மீனவருக்கு
தரை என்னும் எல்லைக் கோட்டிற்கு
மேலே சென்று திரும்புவார்கள்
ஆனால் இன்றுவரை
வறுமைக் கோட்டிற்கு கீழே
வாழ்கிறார்கள்!

காலம் தாலாட்டினால்
கடல் அவர்களுக்கு காமதேனு...!
கயவர் வாலாட்டினால்
கடல் அவர்களுக்கு கல்லறை!

கரைதிரும்பினால் மீன்களை
உணவாக்கிக் கொள்வார்கள்
கரைதிரும்பாவிட்டால் மீனுக்கு
உணவாகுவார்கள்!

உணவாக்குவது அல்லது
உணவாகுவது இதுதான்
இன்றுவரை கடலோரம் கண்ணீரால்
தண்ணீரில் எழுதப்பட்ட காவியங்கள்!!!

**த. சதீஷ்**



# திருமதி பாக்கியநாதன்

*(யேர்மனி)*

சிறந்த கவிஞர் இவர். பல, கவிதைத் தொகுப்புக்களையும் கட்டுரைத் தொகுப்புக்களையும் நூலாக்கி வெளியிட்டிருக்கின்றார். இவரின் எழுத்துக்களில் பெண் அடிமைத்தனங்களை உடைத்தெறியும் கருத்துக்கள்தான் அதிகம் இருக்கும்.

இவரின் கணவரும் சிறந்த எழுத்தாளர்.

இக்கவிதை, A.B.C தமிழ் ஒலியில் கவிஞர்கள் சங்கமத்தில் 'மண்வாசனை' என்னும் தலைப்பில் பாடிய கவிதை.

## மண்வாசனை

பாவின்வாசம் மணக்கும்
பா புனையும் கவிகள் மனதிலே
பூவின் வாசம் மணக்கும்
பூவையரின் கூந்தலிலே
சேய் வாசம் மணக்கும்
தாயின் உடைகள் தனிலே



நிலமதன் வாசம் மணக்கும்
நீண்ட நாளின் பின் மழை பெய்தால்!

கவிவடிக்கும் கவிஞரிலோ
கவின் இலக்கியம் யாப்பவரிலோ
கலைகள் வல்ல அறிஞரிலோ
கல்வி மிக்க ஆன்றோரிலோ
இனமரபு பேணும் இனத்தவருள்ளே
இழையோடும் அவர்தம் கருத்துக்கள்
அன்னவர் அறியாமலே அவர்படைப்பில்
அவரவர் மண்வாசனை காட்டும்!

தத்தம் சூழல் சுற்றங்கள்
தம் வாழ்வியல் முறைகள்
நித்தம் அவர்கண்ட பிறப்பிட நிகழ்வுகள்
நேரே கண்டு அனுபவித்த அனுபவங்கள்
சித்தப் பேழையில் நிறைந்திருக்கும்
சிந்தனைக் கருவூலங்களைச்
சுத்தமுற மற்றவருக்கு கூற முயன்றால்
சுகப்பிரசவமாகும் மண்வாசனைப்படைப்பு.

கற்பூர வாசனை கழுதை அறியுமோ?
கற்காதவனுக்கு படிப்பு வாசனை புரியுமோ?
வண்டுக்கு தெரியாத பூவாசனை உண்டோ?
மண்வாசனை இல்லாத மக்களும் உண்டோ?

# திருமதி நளாயினி - தாமரைச் செல்வன்

*(சுவிஸ்)*

A.B.C. தமிழ் ஒலி வானொலியின் மூலம் அறிமுகமான கவிதாஞ்சினி இவர்.

இவர் ஏற்ற இறக்கத்துடன் கவிபாடும் பாங்கு மிகவும் அற்புதமானது.

சந்தம் மாறாது எழுதும் கவிதைகள் பாராட்டுக்குரியது. வானொலியில் கவிஞர்கள் சங்கமத்தில் பாடிய கவிதை இது.

## மண்ணின் நினைவு

அந்த புகை வண்டியில்
நட்பாய் ஓர் கரம்

என் பிரயாண சுமைகளை இறக்கி
என் குழந்தையையும்
தன் மடியில் வைத்துக்கொண்டான்.
அருகில் சிரித்த முகத்துடன்
அவன் மனைவி.
எனக்கு அவளை அறிமுகப்படுத்தி விட்டு
தன்னை அறிமுகப்படுத்தாமல்.
நான் எனக்குள்
இவன் கண்களை எங்கோ பார்த்ததாய்
நன்கு பரீட்சயமானதாய்
யார் இவன்?
நிறைய உரு மாறி இருப்பானோ?

என்னை நன்கு தெரிந்தவனாய்
எல்லாம் விசாரித்தான்.



மூளையின் ஒரு பக்கம்
இவன் பார்வையின் அலகுகள்
நிறைய இருப்பதை உணர்கிறது.
யார் இவன்?

ஞாபக புத்தகத்தில்
இவன் அலகு தட்டுப்பட்டதில்
ஓ! இவன் என் முதல் கணவன்.

அந்த புழுதி மண்ணில்
மூக்கு வடிய
கொன்றைப் பூ பறித்து
இரு மாலை கட்டி
தென்னோலை பிடுங்கி
தாலி செய்து
நானும் இவனும்
மாலை மாற்ற
அயல்வீட்டு சிறுவர் சிறுமிய..
பீப்பீப்பி; டும்டும்
என மங்கல வாழ்த்தொலிக்க
என் கழுத்தில் தாலி கட்டியவன்.

இவனுக்கு மண்ணில்
சோறு கறி சமைத்து
சிரட்டையில்
உணவு கொடுத்தவள் நான்
எனது ஐந்து வயதில்.

முதல் கணவன்
நான்
தென்னோலைத்தாலி.

**நளாயினி தாமரைச் செல்வன்**
சுவிற்சலாந்து.

# திருமதி சசி தவேந்திரன்

***(யேர்மனி)***

A.B.C. தமிழொலி தந்த நண்பர்களில் இவரும் ஒருவர்.

தான் பிறந்த நல்லூர் மண்ணின் சிறப்புக்களை சுருக்கமாக கவிதையில் தந்திருக்கின்றார். கவிஞர்கள் சங்கமத்தில் ஒலித்த இக்கவிதை இங்கும் பதிவாகுகின்றது.

## மண்ணைப் பாடுவோம்!

*செங்குருதி ஓடிச் சீறிடும் ஈழத்தில்*
*சிறப்புறு புகழைத் தக்க வைத்திடும்*
*யாழின் பெருமையை யாவர்க்கும் உரைத்திடும்*
*வடபுல நிலமாம் யாழ்ப்பா ணத்தில்*
*நம்பிக் கைதொழும் அன்பர்க் கெல்லாம்*
*நலமுடன் அருளாட்சி நிறைவாய் தந்திடும்*
*நல்லைக் கந்தன் அருளாட்சி நல்கும்*
*நல்லூர் எனது தாய்மண் ஆகும்.*

*யாழ்ப்பாண ராச்சியத்தின் தலைநகராம் நல்லூரில்*
*பறங்கிப் படையது வேரூன்ற விடாதிருக்க*
*பெருமையுடன் போராடி உயர்நீத்த மாமன்னன்*
*யாழ்ப்பாண ராச்சியத்தின் கடைசித் தமிழ்மன்னன்*
*சங்கிலியனின் வீராவேசச் சிலைகூட இன்றும்*
*முத்திரைச் சந்தியில் முத்திரை பதித்துள்ளதே*
*ஆண்ட பரம்பரையின் எச்சங்கள் இன்னும்*
*அழிந்துவிட வில்லை யங்கு.*
*சுரங்கப் பாதையுடன் ராச மாளிகையும்*
*யமுனாஏரி சங்கிலித் தோப்பு என*
*வரலாறு இன்னும் நிமிர்ந்தே நிற்கிறது.*



*மன்னர்களால் உருவான மாண்புமிகு ஆலயங்கள்*
*எம்மினிய நல்லூரில் பலவற்றைக் காணலாம்.*
*அன்னியர் அழித்தாலும் செண்பகப் பெருமானால்*
*சீரமைத்து இன்றுவரை சிறப்புடன் விளங்கும்*
*நல்லைக் கந்தனின் ஆலயமும் ஒன்றாகும்.*

*சொல்லுதமிழும் சுருதியும் சீரழிந்து போயிருக்கும்*
*ஆறுமுக நாவலர் பிறந்திரா விட்டால்*
*சைவமும் தமிழும் தழைத்திடப் போராடி*
*பைபிளையும் தமிழில் மொழிபெயர்த்த பெருமை*
*நல்லைநகர் நாவலர் பெருமானுக்கே உண்டு.*

*தன்வீட்டுக்கு செல்லும்வழிக் குறிப்பதனைப் பெரியவர்க்கு*
*பொன்பூச் சொரியும் வாசலிடைக் கொன்றை என*
*பாட்டாலே ஈராறு வயதினில் சொல்லிய*
*சின்னத்தம்பிப் புலவர் பிறந்ததும் நல்லூரில்தான்.*

*கந்தனின் கோட்டம் மட்டுமல்ல இன்னும்*
*கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கும்*
*கம்ப கோட்டம்கூட நல்லூரில் இன்றுண்டு.*
*கல்வியில் மட்டுமல்ல ஆதிகாலம் முதலே*
*யாழ்பாடிப் புகழ்பற்ற பாணர்வழிவந்த*
*இசைஞானம் கொண்டபலர் இருக்கின்றார் நம்மூரில்.*
*நீரின்றி உண்ணா நோன்பிருந்து தன்னுயிரை*
*தாயகத்து வேள்விக்கு தற்கொடையான தீலிபனின்*
*நல்லூர் மண்ணில் நடந்த (தி)யாகம்*
*நம்போராட்ட வரலாற்றின் புனித அத்யாயம்.*

*என்மண்ணின் வாசனை இன்னும்பல இருந்தாலும்*
*முத்தான சிலவற்றை முயன்றவரை தந்துள்ளேன்.*

**சசி. தவேந்திரன்**

# திருமதி விமலாவதி சிவனேசன்

***(யேர்மனி)***

தமிழில் பற்றுள்ளவர், தமிழ் மண்ணில் பற்றுள்ளவர். எழுத வேண்டும் என்ற ஆர்வம் நிறைய உள்ளவர்.

விரும்பி வந்த இந்த மண் வாசனையை இம் மலரில் பதிய வைத்திருக்கின்றார். வாழ்த்துக்கள்!

## சொந்த மண்ணின் வாசனையை சொல்லில் அடக்க முடியுமா?

மப்பு மந்தாரம் மாறாத காலநிலை
வெப்பமின்றி வெடவெடுக்கும் உடல் நிலை
தொப்பை வயிறு தோள்வலி மூட்டுவலி
தும்மல் இருமல் தீராத நோய்கள்
உப்புச்சப்பின்றி உருள்கிறது நாட்கள்
இப்படித்தான் எம்வாழ்வு இம்மண்ணில்
எப்படியோ எம் மண்ணில் இருந்த இனியவாழ்வு
இன்றைக்கு எமக்கு எட்டாத கனியாச்சு.

உப்புச் செறிந்த நீலக்கடல் அதன்
உள்ளே விழைந்து நீந்தும் கடல்
வெப்பத்தைத் தணிக்க மோர் இளநீர்
வீரத்தில்தான் நிமிர்ந்த தோள்கள்
ஊரோடு ஒன்றாக இருந்த சுற்றம்
உறவோடு இருந்த நல்வாழ்வு
இன்னும் இனிக்கிறது இதயத்தையும்
தொடுகிறது மண்ணின் வாசனையால்.

சின்ன வெங்காயத்தை எண்ணெயில்
வதக்க வந்த வாசம்
தின்னத் தெவிட்டாத எண்ணிலா
உணவுவகைகள் தந்த சுவை
பின்னிய ஓலை வீட்டின் பின்னால்



கூடியிருந்து குடித்த கூழ்
மண்ணில் புரண்ட உடல் மனதில்
நிறைந்த வாழ்வு மண்ணின் வாசனைதான்.

பச்சைப்பசேல் என்ற செந்நெல் வயல்கள்
பரந்து கிடக்கும் காய்கறித்தோட்டம்
முற்றித் தெறித்த குலை சுமக்கும் வாழை
கொப்புக் கொப்பாக காய்தொங்கும் மாமரம்
விண்ணைத்தொடும் பனை தென்னை பலா
எண்ணில் அடங்கா இயற்கை வளம்
உண்ண நல்ல உணவுண்டு உறங்க இடமுமுண்டு
ஊரும் உறவோடு ஒற்றுமையான வாழ்வுமுண்டு.

எல்லா ஊரிலும் எல்லாம் சிறந்திருக்கும்
ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொன்று மிகுந்திருக்கும்
நாவற் குழியில் பனங்கிழங்கு நாவந்துறையில் கருவாடு
சாவகச்சேரியில் மாம்பழம் சரசாலையில் பலாப்பழம்
பருத்தித்துறையில் பாற்சுறா மயிலிட்டியில் வலையில்மீன்
பலாலியிலே பயிற்றங்காய் வசாவிளானில் மரவெள்ளி
கத்தரி புடேள் வெண்டி புத்தூர் மண்ணில் நிறைந்திருக்கும்
அந்த மண்ணின் வாசனையால் அவையாவும் செழித்திருக்கும்!

சித்த வைத்தியமும் தெய்வீக வழிபாடுகளும்
வெந்த அரிசிச்சோறும் விடியல்பாடும் பறவைகளும்
பந்த பாசங்களும் பருவ காலங்களும்
பள்ளி வாழ்வும் துள்ளி விளையாடினதும்
சிந்தை தன்னைக் குளிரவைக்கும் தெய்வீகக் கலைகளும்
முந்தையர்கள் எமக்களித்த பூர்வீக பண்பாடும்
சொந்த மண்ணின் வாசனைதான் அதைச்
சொல்லில் அடக்கிவிட முடியுமோ?

**திருமதி. விமலாதேவி சிவநேசன்**

# திருமதி நிரஞ்சலா ரவிதரன்

*(நெதர்லாந்து)*

அண்மையில்தான் இவரைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது.

இவரைப் போல இன்னும் எத்தனை பேர் இலை மறை, காயாக இருக்கின்றார்கள்! அவர்களையெல்லாம் தேடிக் கண்டு கொள்ள வேண்டும்.

இவருக்கு கவிதையும் வருகின்றது. கதை சொல்லவும் வருகின்றது. தான் பிறந்த மானிப்பாயைப் பற்றி இங்கு மிக நேர்த்தியாகச் சொல்லியிருக்கின்றார்.

## மானிப்பாய்

இந்து மகா சமுத்திரத்தில் மாங்காய் வடிவில் அமைந்துள்ள அழகிய தீவு இலங்கை தீவாகும். இயற்கை வளங்கள் பல பெற்று உல்லாசப் பிரயாணிகளின் மனதைக் கவர்ந்த இலங்கைத் தீவின் வடபகுதியில் முடிபோல திகழ்வது யாழ்ப்பாண தீபகற்பமாகும். இனிய தமிழ்மணம் வீசும் யாழ்ப்பாணத்தில் மக்கள் பேசும் தமிழ் சுத்தமானது! அழகானது! இனிமையானது! பிறமொழிகளின் கலப்படம் இல்லாத சுத்தமான தமிழ் யாழ்ப்பாணத்து தமிழ்மொழி. யாழ்ப்பாணத்தில் உள்ள பல பட்டணங்களில் ஒன்று மானிப்பாய்.

மானிப்பாய் என்ற பெயர் வந்ததற்குரிய காரணத்தை நாம் ஆராய்ந்த போது புத்தகம் ஒன்றில் நான் படித்து சுவைத்த ஒரு கதை நினைவில் வந்தது. வனவாசம் செய்ய வந்த இராமபிரானிடம், சீதா பிராட்டியார் அழகிய மான் ஒன்றைக் கண்டதும் அந்த மானைப் பிடித்து தரும்படி கேட்டுள்ளார். சீதா பிராட்டிமேல் கொண்ட காதலால், இராமரும் மானை துரத்தி சென்றுள்ளார். மாயமான் இராமரின் கைகளுக்கு



அகப்படாமல் துள்ளி ஓடிச் சென்றது. இராமர் அந்த மானைப் பார்த்தே ''மானே நிற்பாய்'' என்று கூறிய இடம் தான் மானிப்பாய் என்று பெயர் பெற்றது. மானிப்பாயில் இருந்து சிறிது தொலைவில் மாரீசன் கூடல் என்றொரு இடமும் உள்ளது. இராமபிரானை ஏமாற்றி ஓடிய மானே மாரீசனாகும். இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த கதையையும் நாம் நம்பக் கூடியதாக உள்ளது. இராமாயண நாயகன் இராமனின் கால் பதிந்த இடம் மானிப்பாய். இது மானிப்பாய் வாழ் மக்களுக்கு பெருமையாகும்.

மானிப்பாய் வடக்கு தெற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் அழகிய கிராமங்களை உண்டாக்கி உள்ளது. அவற்றில் முக்கியமானது ஆனைக் கோட்டை, சுதுமலை, சன்தூலிப்பாய், உடுவில், நவாலி போன்றவை.

மானிப்பாயில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் எம்மதமும் சம்மதமே என்ற கூற்றுக்கிணங்க ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். கற்பூரமும் மெழுகுவர்த்தியும் உருகியே இனிய மணம் பரப்புகிறது. இங்கு பல இந்து ஆலயங்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் இருக்கின்றன.

மானிப்பாய் வடக்கில் அமைந்துள்ள மிகப்பிரசித்தி பெற்ற இந்து ஆலயம் மருதடி பிள்ளையார் கோவிலாகும். சித்திரை மாதத்தில் இங்கு திருவிழாக்கள் நடைபெற்று, சித்திரை வருடப்பிறப்பன்று இக்கோயிலில் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. யாழ்ப்பாண குடாநாட்டின் எல்லா பகுதியிலிருந்தும் மக்கள் இந்த தேர்த்திருவிழாவில் பங்கு பற்றி மருதடி பிள்ளையாரின் அருளைப் பெற்றுச் செல்வார்கள்.

மானிப்பாய் தெற்கில் இருக்கும் இந்து ஆலயம் வேலக்கை பிள்ளையார் கோயில். வேலை கையில் பிடித்த பிள்ளை முருகனின் ஆலயம் இது.. மற்றும் சுதுமலை அம்மன் கோயில், ஆனைக்கோட்டையில் மூர்த்தி நாயனார் கோயிலும் பிரசித்தி பெற்றவை.

கிறீஸ்தவ தேவாலயங்களில் மிகவும் முக்கியமானது ஆலடியில் அமைந்துள்ள அர்ச் அந்தோணியார் ஆலயம். கிறீஸ்தவர்கள் மட்டுமின்றி இந்து சமயத்தவர்களும் பெரும்பாலாக வந்து அந்தோணியாரின் ஆசி பெற்று செல்வார்கள். செவ்வாய்க் கிழமைகளில்

திரள்திரளாக மக்கள் காலை முதல் மாலை வரை வந்து மெழுகுவர்த்தி ஏற்றி வழிபட்டுச் செல்வார்கள். தாங்கள் வேண்டியவற்றை நிச்சயம் அந்தோணியார் நிறைவேற்றுவார் என நம்புகிறார்கள். இதைவிட ஆனைக்கோட்டையில் உள்ள அடைக்கலம் தேவாலயம். மற்றது நவாலியில் உள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயம். 1995ஆம் ஆண்டில் நவாலியில் உள்ள இந்த சென் பீற்றர்ஸ் ஆலயத்தில் அடைக்கலம் தேடிய பல மக்கள் இராணுவத்தினரின் கொடூர குண்டு வீச்சினால் பலியானதை குறிப்பிட வேண்டி உள்ளது.

மானிப்பாயில் பிரசித்தி பெற்ற பாடசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி. தமிழும், ஆங்கிலமும், சைவசமயமும் இப்பாடசாலையில் முக்கியமாக பயிற்றப்படுகிறது. சைவபரிபாலன சபையால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை காலப்போக்கில் அரசாங்க பாடசாலையானது. தற்சமயம் ஆண்களுக்கு இந்துக் கல்லூரியும் பெண்களுக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியும் உள்ளன. வேலக்கை பிள்ளையார் கோவிலிலும் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டு, சிறார்களுக்கு கல்வி புகட்டி வருகிறார்கள்.

மானிப்பாயில் பல கிறீஸ்தவ பாடசாலைகளும் உண்டு. மிசனரிமாரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை மானிப்பாய் மெமோரியல் கல்லூரி. மக்களுடைய கல்வி விருத்திக்கும் சமயத்தை பரப்பவும் இந்த பாடசாலை பெரிதும் பணியாற்றி வருகிறது.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற வாக்குப்படி மானிப்பாய் நகரில் பல ஆலயங்களும் தேவாலயங்களும் இந்து, கிறீஸ்தவ பாடசாலைகளும் உண்டு.

மதத்திலும், கல்வியிலும் எந்த இடம் போற்றப்படுகிறதோ அந்த இடத்தில் சிறந்த மதப் பற்றாளர்களும், கல்விமான்களும் தோன்றுவது இலகுவாகும். சேர் பொன் இராமநாதன் அருணாசலம் போன்ற அரசியல்வாதிகளும், முதலியார் சங்கரப்பிள்ளை, கனகசபை, தியாகராசா, செல்லமுத்து போன்றவர்களும் தோன்றியுள்ளார்கள். இவர்களுடைய பெயர்களில் வீதிகளும் உண்டு. இவர்களில் மிகவும் பிரசித்தி பெற்றவர் நவாலியூர் சோம சுந்தரம் புலவர். தமிழையும் சைவத்தையும் தன் இரு



கண்களாகப் போற்றி வளர்த்தவர் சோமசுந்தரம் புலவர். நவாலியூரில் தோன்றிய மற்றும் ஒரு கலைஞர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள். இவரது வழிவந்த மாணவர்கள் பலர் இன்றும் சிறந்த நடிகர்களாகத் திகழ்கிறார்கள்.

மானிப்பாயில் அமைந்துள்ள மிகவும் பிரசித்தி பெற்ற வைத்தியசாலை கிரீன் வைத்தியசாலை (Green - Hospital) 150 ஆண்டுகளுக்கு முன் க்ரீன் (Green) என்ற அமெரிக்கரால் ஸ்தாபிக்கப்பட்டது.

மானிப்பாய் தெற்கில் அதிகாரி செல்லமுத்து வீதியில் ஓர் அரசாங்க வைத்தியசாலை உண்டு. இந்த வைத்திய சாலையில் இலவசமாக வைத்திய சிகிச்சை அளிக்கப்படுகிறது. இலவசமாக, குழந்தை பேற்றுக்கும் ஒரு வார்டு உண்டு.

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் அட்டூழியங்கள் செய்த காலங்களில் யாழ் போதனா வைத்தியசாலை முழுவதும் மானிப்பாய் கிரீன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. இந்த வைத்தியசாலையின் தரம் மானிப்பாயின் தரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. இது மட்டுமல்ல, தெல்லிப்பளை காங்கேசன் துறை பகுதிகள் இராணுவத்தினரின் பிடியில் சிக்கியபோது தெல்லிப்பளையில் இயங்கிய மனநோயாளர் பிரிவு மூடப்பட்டு மானிப்பாய் கிரீன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. வடமாகாணம் முழுவதற்கும் மனநோயாளிகளுக்கு சிகிச்சை செய்யும் பிரிவு மானிப்பாய் கிரீன் வைத்திய சாலையில் தான் உண்டு.

மானிப்பாயின் மண் வளமும் பல பயிர்கள் செழித்து வளர உதவுகிறது. மானிப்பாயின் மண் நீரை இழுத்து வைக்கக் கூடியதாக உள்ளதால் என்றும் பசுமையாக காட்சியளிக்கிறது.

நிரஞ்சலா – ரவிரதன்
*Assen நெதர்லாந்து*

# இசிதோர் - பேர்னாண்டோ

***(பிரான்ஸ்)***

வன்னி மண்ணை பிறப்பிடமாகக் கொண்டவர் இசிதோர் பெர்னாண்டோ அவர்கள். பிறந்த மண்ணின் மீது அளவற்ற காதல் கொண்டவர்.

கவிதை, கட்டுரைகள் என அவ் அப்போது எழுதி தமது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வருகின்றார். வண்ணை சஞ்சிகைக்காக எழுதிய இந்த வன்னி மண்ணின் வாசம் இங்கும் நறுமணம் கமழ்கின்றது.

## மண் வாசனை

வாசனை என்பது மனதிற்கு மகிழ்ச்சியை, பூரிப்பை, கிலுகிலுப்பை, தருகின்றது. ஆனால் மண் வாசனை என்பது உடலுக்கும் உள்ளத்திற்கும் பேருவகை அளிப்பது.

அதனால் என்றைக்குமே அந்த உவகை ஊறிக்கொண்டே இருக்கும். அந்த வகையிலே எனது பிறப்பின், வளர்ப்பின், வாழ்வின், மையம் என்று வர்ணிக்கப்படும் (வன்னியின்) முல்லைப் பிரதேசம் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

வங்கக் கடலலைகளின் தாலாட்டு ஒரு புறம். சிறு கடலின் (நந்திக்கடல்) சில்லிட்ட குளிர்ந்த காற்று ஒரு புறம். மருத நிலத்தில் வயல்களில் இருந்து வருகின்ற மந்தமாருதம் ஒருபுறம். தென்னஞ் சோலைகளில் இருந்து வருகின்ற இளம் கீற்று ஒருபுறம். மா, பலா, வாழை, வேம்புகளில் இருந்து வருகின்ற காற்று மணமணக்கும். இப்படிப் பல இலக்கியங்களில் எடுத்தியம்பப்படுகின்ற நானிலங்ளைக்கொண்ட நிலவளத்தை முல்லைத்தீவு பிரதேசம் ஒருங்கே பெற்றிருப்பது பெரும் பாக்கியம்.



கடலும் கடல் சார்ந்த இடமும், மணல் அலையும் மணல் சார்ந்த இடமும் (குறிஞ்சி), வயலும் வயல் சார்ந்த இடமும் (மருதம்), காடும் காடு சார்ந்த இடமும் (முல்லை). சாலை தொடங்கி கொக்குத்தொடுவான்வரை நீண்டு பல குடாக்களைக் கொண்டு விளங்குகின்றது.

வங்கக் கடல் இக்கடற்கரைப் பிரதேசத்திலே இருக்கும் வெண் மலைக்குன்றுகளின் மேடைகள் இதற்கு அழகு கொடுக்கின்றன.

கடற்கரைப்பிரதேசத்தில் ஆங்காங்கு நிலத்தோடு நிலமாய்ப் படர்ந்த நாவற்காடுகள், பாலை மரங்கள், பனீச்சை மரங்கள், ஈஞ்சி, போன்றன அரிய பழங்களை அளித்திருக்கின்றன.

மீனினங்களில் நெத்தலியில் இருந்து சுறா வரை ஏராளமான மீனினங்கள். இறால் வளமோ இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய பங்கினை வகிக்கின்றது.

சாலை நந்திக்கடல், கொக்குளாய் சிறு, கடல்ப்பகுதிகள் இவையெல்லாம் இறால் வளம் பெருகுவதற்கு பெரும் வாய்ப்பாக அமைந்திருக்கின்றன.

தமிழர்களின் போராட்ட வரலாற்றில் இக்கடல் வளங்கள் மிகவும் முக்கியமாக அமைந்திருப்பது பெருமைக்குரியது. (சாலை, கடற்புலிகளின் தளமாக இருக்கின்றது.)

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலத்தைப் பார்த்தால் இதன் சிறப்பு இன்னொரு மைல் கல்லாகும். இவை திருக்கோணமலைப் பகுதியையும் முல்லைப் பகுதியையும் பிரிக்கின்ற பகுதி.

காடுவளம் ஏராளம். நில வளமும் ஏராளம். பல மலைக்குன்றுகள் இவையெல்லாம் வன்னிப் பெருநிலத்திற்கு இயற்கைப் பாதுகாப்புடன் பெரும் அரணாக விளங்குகின்றன. இதில் குறிஞ்சி மலைப்பகுதி மிகவும் சிறப்புப் பெற்றதொன்று.

87-90களில் இந்திய ராணுவம் போராளிகளிடம் பலத்த அடி வாங்கிய பிரதேசம் இது. அத்துடன் போராளிகளின் பயிற்சிப் பாசறைகள்,

தலைவர்களின் பாதுகாப்பான தேசம், என பல சிறப்புக்களைப் பெற்றது. அதனால் வன்னிப் பெருநிலத்தை தமிழர் போராட்டத்தின் பாதுகாப்பான பிரதேசம் என்றும் கூறலாம்.

வயலும் வயல் சார்ந்த இடமும், மருதம் பற்றிப் பார்ப்போமேயானால் குளம் தொட்டு வளம் பெருக்கிய வன்னி மண் ஆயிரக்கணக்கான குளங்கள் நிறைந்த பகுதி. முன்னொரு காலத்தில் பூதங்கள் கட்டிய குளங்கள் என்று ஒரு கதையும் உண்டு.

காலத்துக்கு காலம் பெய்யும் மழை நீர் வெள்ளங்கள் வாய்க்கால்கள் ஊடாக ஓடி குளத்தில் நிறைகின்றது. குறிப்பாக தண்ணி முறிப்புக்குளம், வவுனிக்குளம், முத்து ஐயன்கட்டுக்குளம் என்பன மிகப்பெரியவை. இவற்றில் முத்து ஐயன் கட்டு குளப்பகுதி, வவுனிக்குளப்பகுதி, அபிவிருத்தி செய்யப்பட்டு ஆயிரக்கணக்கானோர் குடியேற்றப்பட்டதும் யாவரும் அறிந்ததே..

காடும் காடு சார்ந்த இடமும் முல்லைப் பெரும்பரப்பில் அதிகமாக இருப்பதனால் இங்கு பருவமழை அதிகம் கிடைக்கின்றது. இக்காலங்களில் குளங்கள் நிரம்பி வழிவதோடு நிலத்தடி நீரும் அதிகம் சுரக்கும். அனேகமாக வீட்டுக்கொரு கிணறை இங்கு காணலாம்.

பாலை, முதிரை, கருங்காலி, யாவறை, வேம்பு, போன்ற வைர மரங்கள் இங்கு ஏராளம்.

இப்படி பல வளங்கள் நிறைந்தது வன்னி (முல்லை) மண். வன்னி மண்ணின் மிகப்பெரிய சிறப்பு என்னவென்றால். ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்த கடைசித் தமிழ் மன்னன் பண்டாரவன்னியன் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து கோலாட்சி செய்த மண் இந்த வன்னி மண்ணாகும். அது மட்டுமல்ல. தமிழ் போராட்ட வரலாற்றில் மாபெரும் பொக்கிஷம் (புதையல்) தான் வன்னிமண்.

வன்னியின் பொருளாதாரம் மீன் வளம், வயல்வளம், கனிவளம், (முக்கனிகளான மா, பலா, வாழை, நிறைந்தவை), சிறுதானியங்கள், காட்டுவளம், நீர்வளங்கள் எனப் பலப்பல உண்டு.



கல்வி வளத்தை எடுத்துக் கொண்டால், இங்கு விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பெரிய பாடசாலைகள் மட்டுமே உண்டு. அவைகள் கூட யாழ்ப்பாணம் போன்ற நகரப்பகுதிகளில் இருக்கின்ற மகா வித்தியாலயங்களின் தரத்திலும் குறைந்தவையே. உயர்ந்த கட்டிடங்கள் இல்லை! நூல் நிலையம், விஞ்ஞானகூடங்கள் இல்லை! பிரிக்கப்பட்ட வகுப்பறைகள்கூட இல்லை! பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பற்றாக்குறை! தளபாடங்கள், உபகரணங்கள் போன்றவற்றின் பற்றாக்குறை! இப்படிப் பல பல பற்றாக்குறைகள்.

அப்படியிருந்தும் இப்பிரதேசத்தின் மாணவர்கள் பலர் இன்று டாக்டர்களாக, பொறியியலாளர்களாக, பேராசிரியர்களாக இருக்கின்றார்கள்.

அடுத்து பக்திவளம், இங்கு இந்து, கிறிஸ்த்தவ, இஸ்லாமிய மக்கள் வாழ்கின்றார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் பல கோவில்கள். அதனால் இங்குள்ள மக்கள் விசுவாசமுள்ள பக்தர்களாக இருக்கின்றார்கள். இந்துமத கோவில்கள் - வற்றாப்பளை அம்மன் கோவில்; இது மிகப் பிரசித்தி பெற்றது. இவ் ஆலயத்திற்கு பல ஊர்களிலும் இருந்து பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் சிறப்பு மிகுந்த கோவில் ஆகும். புத்தூர் நாகதம்பிரான் கோவில். இதுவும் அதேபோன்று ஒரு புதுமையான ஆலயமாகும்.

கத்தோலிக்கர்களின் திருக்கோவில்களில் அலம்பல் அந்தோனியார் ஆலயம். இதுவும் மிகவும் பிரசித்தமானது. இவ் ஆலயத்திற்கும் பல கிராமங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடுவார்கள். இவ் ஆலய வழிபாட்டிற்காக பல நூற்றுக்கணக்கான சைக்கில்களிலும் ஏராளம் மாட்டுவண்டிகளிலும் உழவு இயந்திரங்கள், பஸ் வண்டிகள், கார்கள், என பக்தர்கள் பல கிராமங்களில் இருந்து வருகைதந்து கொண்டாடி மகிழும் திருத்தலம் இதுவாகும்.

மற்றுமொரு அந்தோனியார் ஆலயம். இது கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பிரசித்தி பெற்றது. அது புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு அந்தோனியார் ஆலயமாகும்.

ஒருபக்கம் கடல், ஒருபக்கம் வயல்வெளி, மறுபக்கம் காடு சார்ந்த பகுதி, இவைகளுக்கு நடுவிலே அமைந்து பல புதுமைகளைச் செய்து வருகின்றது இவ் அந்தோனியார் ஆலயம்.

இம் மண்ணின் நீங்கா நினைவுகளாக என் மனதினில் இன்றும் பசுமையாக இருப்பது வயல்களில் காட்டெருமை, யானை ஆகியனவற்றை விரட்டுவதற்காக ஆண்கள் பல பகுதிகளாகப் பிரிந்து இரவு முழுவதும் விழித்திருந்து மரங்களைக் கொளுத்தி அதில் குளிர் காய்ந்து சினிமாப் பாடல்களைப் பாடியபடி காவலில் ஈடுபடுவார்கள். சில சமயங்களில் மிருகங்களை யாராவது ஒரு பகுதியினர் கண்டுவிட்டால் சீட்டி அடித்து ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதும் மறக்கமுடியாதவை.

முயல் வேட்டை, பன்றி வேட்டை வன்னி மக்களுக்கு ஒரு பொழுது போக்கு. ஆனால் நகரப்பகுதியில் இருந்து பலர் கார்களில் வந்து வேட்டையாடிச் செல்வார்கள். அவர்களுக்கு சில சமயங்களில் இங்கு வாழும் அனுபவஸ்த்தர்கள் உதவியாகச் செல்வதும் உண்டு.

காலம் எங்களைப் போன்றவர்களை புலம் பெயர வைத்தாலும் இவைகளையெல்லாம் இன்றும் இரைமீட்டிப் பார்க்கும்போது எம்மை வாழவைத்த அந்த வன்னி மண்ணின் பெருமைகளே எம்மை பெருமைப்பட வைக்கின்றது.

எங்கள் வன்னி மண் எங்களின் சொந்த மண்.
வளமான வாழ்வதனை தந்த மண்.
வரலாறுகள் பல கண்ட மண்.
வந்தோரை வாழ வழி விட்ட மண்.
பெருமைக்குரிய மண்

**– இசிதோர் பெர்னாண்டோ**





**உடலால் மறைந்து, எழுத்தால் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் எழுத்தாளர் அமரர்**

## திரு அகஸ்த்தியர் அவர்கள்

அமரர் அகஸ்த்தியர் அவர்களின் 76வது பிறந்த தினம் 29.08.2002 ஆகும். அகவையில் பவழவிழாக் காண வேண்டிய அமரரை நினைவு கூரும் வகையில் லண்டனில் வாழ்ந்துவரும் அவரது மூத்த மகள் திருமதி நவஜோதி - யோகராட்ணம் அவர்கள் எழுதிய கவிதையை அகஸ்த்தியர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

### என்னுள் நீயாக...
### என்றும் இருக்கின்றோம்...

தலையில் தொப்பி...
தாவுது கழுத்தில் சிவப்பு...
தாங்கும் புத்தகங்கள் பையில்...
வலிந்து
மூச்சிழுக்கும் இதயம்...
நின்று, நின்று நடந்து வரும் காட்சி...
கைகள் வலுவிழந்து
ரணப்படுகின்றன.
ஊற்றெடுக்கும் பேனாவும்...
நடுங்குகின்றது...

ஆனால்! அவர்தம் நெஞ்சுறுதி
நினைக்கும்போது நெஞ்சு உருகுகின்றது
இதயம் குமுறுகின்றது...
கண்ணீர் பெருக்கெடுத்து
கன்னங்கள் நனைகின்றன...
நிறுத்து.. நிறுத்து என்கின்றது
உணர்ச்சி பீறும் பாசம்...
எழுத்தாளன் என்றுமே மரணிப்பதில்லையே!
என்றும் என் தந்தை மரணிக்க முடியாது... ...

கண் விழிகளை இறுக மூடினேன்
சிரிப்பலைகள் என் காதில் ஒலித்தன
அவர் உழுது விதைத்த
நூல்கள் அத்தனையுமே
என்னைப் பார்த்துச் சிரித்தன...

உமது ஒவ்வொரு படைப்பிலும்
உம்மோடு இணைந்து சிரிக்கின்றேன்
உமது ஒவ்வொரு சொல்லிலும்
உம்மை நான் உணர்கின்றேன்.

நலம்தானே! என்றேன்
வழமையான... வாஞ்சையான
புன் சிரிப்பு
உம்மோடுறைந்த பாசம்
என்னோடு நீயாக
நீண்ட துயில் கொள்கின்றேன்
என்னுள் கிளர்ந்த சோகம்
சிலிர்த்து தலை வணங்கினேன்.
என்னோடு சேர்ந்து சிலுவை சுமந்த
உமதன்னை உற்சாகமாக இருப்பாள்தானே?
உமது குடும்பம்... இல்லை! என் பிள்ளைகள்
ஏக்கமின்றி வாழ்கின்றார்களா?
என்றெல்லாம் தொடுத்து ஒலித்தது.



அன்னை நாடிழந்து... அன்னிய நாடுகளில் வந்து
அகதிகளாக அலைந்து திரிவது...
அறிவீர்கள்தானே...!
பாவம் நம் நாட்டு மக்கள்...

விடியலைத் தேடும்
கறுப்பு இரவுகள் இன்னமும் எம்
விழியோரத்தில் இருக்கின்றன...
எம் தேசத்திற்கு சுதந்திரம் கிடைக்குமா?
உறங்கிப்போன உரிமைக்கதவு திறந்திருக்கு
இருண்டுபோன எங்கள் வாழ்வில்
சூரியனின் ஒளி வீசுமா?
என்றெல்லாம் ஏங்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

கருத்துக்கள் கூற களங்கள் கேட்டீரே - உங்கள்
கல்லறையில் இருந்தபடி கருத்துக்களைக் கூறுங்கள்.
காற்றலையில் பாடும் ஊடக வளர்ச்சிகளோ
உளமார உலாவுவதால்
என் உணர்வில் ஓர் உவப்பு!
ஈழத்தின் மண்ணை இங்கிருந்து பார்க்கின்றோம்!
இலக்கிய வளர்ச்சி அங்கு
இனிதாக இதழ் விரித்து
இதமாக மணம் கமழ்கின்றது
ஆனால் நீங்களோ தனிப்பாணி!

மானிடத்தின் மனங்களுக்குள்
பொது நலம் மீட்டு
மக்களை மதித்து - அவர்
கதைகளை வரைந்து - அதை
மக்களுக்கே மீளவும் கொடுத்தாய்
ஆனால் உமது நீண்ட துயிலால் - அந்த
இலக்கிய வீதிகள் இன்று
அனாதைகளாகிவிட்டனவாம்!

நீரோ மனித இலக்கியம்
நானோ அதன் ரசிகை
என்னுள் நீங்கள்
என்றும் இருக்கின்றீர்கள்

உங்களுக்குத் தெரியும்தானே!

உங்களது பாதைகளில்
உங்களது இலக்கிய உணர்வுகளில்
உங்களோடு உறவாடுகின்றோம்.

உணர்ச்சி பீறும் பாசத்தோடு
உங்கள் செல்லக் குமாரத்தி
நவஜோதி.... உங்கள் நவஜோதி.





# பஞ்சமர்கள் படைத்த நாவலாசிரியர்

நெஞ்சில் நிறைந்து நிற்கும் –
**கே. டானியல்**

கோடி கோடியாய் நூல்கள் வரும்
தேடிடுவோம் நல்லநூல் எதுவென்று
கோடையிலே மழை போல் வரும்
டானியல் நூல் ஒன்று.

நாட்டிலே நடக்கின்ற தீண்டாமை நிலைகண்டு
தீட்டிய வாளான தன் பேனாவின் துணை கொண்டு - இவர்
ஏட்டினில் படைத்த கதைகளெல்லாம் இன்று
நாட்டினில் நாமின்று காவியமாய்ப் பார்க்கின்றோம்.

ஓலைக் குடிசைகளை மூலமாக நீ வைத்து
எழுதிய நாவல் கோபுரங்கள் இன்று
மேலைத் தேசத்தோர் இதை மொழிபெயர்த்து மட்டுமல்ல - உன்
எழுத்திற்கு அர்த்தம் தேடி அகராதிகளிலும் வதிக்கின்றார்கள்.

வாலைக் குமரிகள் உன்கதைகளில்
நாயகியாய் வந்ததில்லை - கிழிந்த
சேலைக்குள் மறந்திருக்கும் சோகத்தை புட்டு வைத்தாய்!

நாளை மலரும் சோசலிஷ நாடுகளில்
வாழும் மக்களுக்கு உன் கதையெல்லாம் குறள்களாகும்.

உண்ணாது கிடப்போர்க்கு தூக்கம் இல்லை
உணராது படிப்போர்க்கு தெளிவு இல்லை
கண்ணான கருத்துக்களை கதைகளாக்கி
காலத்தால் அழியாத காவிய மாக்கி
என்னாளும் நாம் படிக்கத் தந்தவனே
உன்னோடு நான் பழகிய நாட்களெல்லாம்
என் வாழ்வில் அவையெல்லாம் பொற் காலங்கள்.

**வண்ணை தெய்வம்**

# அமரர் கிறெகரியின் நினைவில் நனைவோம்



மண் வாசனையில் மறக்க முடியாத பலர்களில் கலைஞர்களும் இடம் பெற்றிருக்கின்றார்கள்.

திரு. கிறெகரி. தங்கராசா அவர்கள் புலம் பெயர்ந்த மண்ணில் எங்கள் மண்வாசனைக் கலைகளை பரப்பி வந்தவர். அதன் மூலம் தனது புகழையும் உயர்த்தி நின்றவர்.

இவரின் இடத்தை நிரப்ப இன்னொருவர் இன்று எம்மத்தியில் இல்லை.

மண்ணின் வாசங்களை பரப்பி வந்த அமரர் கிறெகரி. தங்கராசா அவர்களின் வரலாற்றை நான் தனி நூலாக எழுதி வெளியிட்டிருந்தபோதும் இந்த மண்வாசனை நூலிலும் பதிய வைத்திருப்பதில் ஒரு திருப்தி உண்டாகுகின்றது.

வண்ணை தெய்வம்



வரலாறு உன்னை சுமந்து நிற்கின்றது.
உன்னைச் சுமந்த வரலாற்றின் பாதையிலே
நானும் உன்னோடு சிறிது தூரம்
நடந்து வந்தவன் - அதனால் - நான்
உனக்காக தேடி எடுத்த வார்த்தைகள் இவை.

கலை உலகிற்குள் தினம் எதையோ தேடிச்
சந்தனமாய்ச் சாய்ந்து போன
நடிப்பிசைக் காவலனே! கிறெகரி தங்கராஜாவே!
நீ, நினைத்த முற்று முழுதான
அறுவடை முடியுமுன்னே!
இறப்பு என்னும் ஒற்றை வாக்கியத்தை
எழுதி முடித்த எக்காளத்தில் காலன்
உனது வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்தானோ?

சொந்த மண்ணில் நான் உன்னோடு
கை வீசி வந்த காலம் போய்
வந்த மண்ணில் நீ சித்தரித்த
நாடகக் கோலத்தில் - என்னை
பாத்திரமாக்கிப் புள்ளிக் கோலமிட்டுப் பார்த்தாய்
நீ போட்ட கோலங்களில் எல்லாம் - என்னை
புள்ளிகளாய் இட்டு அலங்கரித்துப் பார்த்தாய்.

உனது பூங்கனவு முடியுமுன்
பொற்பொழுது விடிந்தது ஏன்?
எனது மனம் உனது இழப்பை
ஏற்றுக் கொள்ளவில்லை - நண்பா
நிச்சயமற்ற நிகழ்காலத்தில் காணாமல்போன
குழந்தையாய் எண்ணித் தவிக்கின்றேன்.

நேற்றும்! இன்றும்! நாளையும்!
வாசம் புரிய வல்லவனே!
நடிப்பிசைக் காவலனே! - எங்கள்
கிறெகரி தங்கராஜாவே! - உனது
கனவுகள் இங்கே கௌரவிக்கப்படுகின்றன.
நானும் உனது கனவுகளுக்கு
சாமரம் வீசிச் செல்கின்றேன்.

# யாழ்ப்பாணச் சண்டியர்

வித்துவான் க.ந. வேலன்

சண்டை பிடிக்கிறவன் சண்டியன். நீ பெரிய சண்டியனோ? ''சண்டியனெண்டால் வாடா'' இவையெல்லாம் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ். ஒரு காலத்தில் இவர்களைக் கண்டால் பொலிஸ் பயப்படும். இவர்கள் கையிலேதான் குடாநாட்டு நிர்வாகமே இருந்தது. ஊருக்கொரு சண்டியனாவது இருப்பான்!

தமிழ்நாட்டில் இவர்கள் மூட்டை றவுடிகள்! சென்னை மும்பையில் தாதாக்கள்! கொலை, கொள்ளை இவர்களது தொழில். இவர்களில் நல்லவர்களுமுண்டு. நடப்புக் காட்ட வேணும்; மற்றவர் தமக்கு அடங்கி நடக்க வேண்டும் என்பது இவர்கள் எண்ணம்!

மதுரையில் காலேஜ் வீதி. எந்நேரமும் சன நெருக்கடி. அது ஒருவழிப்பாதை. அதில் ஒரு கனவான் குடும்பத்தோடு காரில் வருகிறார், எதிர்த் திசையில் சைக்கிளில் ஒருவர் வந்து காரோடு முட்டுகிறார். தனக்கு வழி விடவில்லையென்று காரில் வந்தவரோடு தர்க்கம் பண்ணுகிறார். எடுஎடு என்கிறார். பணம் கை மாறுகிறது. ''பார்த்துப் போ'' என மிரட்டுகிறார். பொலிஸ் பார்த்துக் கொண்டிருக்கிறது. யார் அவர்? "அவர் பேட்டை றவடிங்க!"

றவுடி என்பது ஆங்கிலச் சொல். தாதா என்பது மும்பையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. பெரியவர் என்பது பொருள். இவர்கள் எல்லாம் பெரியவர்கள்தானே. தாதா சாகேப் என்பது பெரியவர்களுக்கு அளிக்கப்படும் பட்டம். பேட்டை என்பது குறிச்சி. சைதாப்பேட்டை, உளுந்தூர் பேட்டை என்பது உதாரணம்.



யாழ்ப்பாணத்தில், 1900 - 1950 கால கட்டங்களில், இந்தச் சண்டியர்களின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்தது. தெருவிலே சந்தியிலே, மதகுகளில் இருப்பார்கள். சனம் கூடும் இடங்களான சந்தை திருவிழாக்களில் நடப்புக் காட்டுவார்கள்; வியாபாரிகளிடம் கப்பம் வாங்குவார்கள். இவர்களின் உதவியில்லாமல் கடை நடத்த முடியாது. பெண் பிள்ளகளுக்கு ஆபத்துத் தான். ''டேய்!'' என்று கூப்பிட்டால் பள்ளிக்குப் போகும் சிறுவர், பயத்தோடு போய் நிற்பார்கள். ''என்னடா படிக்கிறாய்? போய் பீடி வாங்கி வா!'' என விரட்டுவார்கள். காடையர் - காவாலிகள் - விடுகாலிகள் - கழிசறைகள் - ஊத்தை வாடிகள் எல்லாம் இவர்களுக்கு ஊரவர்கள் வைத்த பட்டங்கள்! இவர்களில் சிலர் நல்ல உடற் கட்டும், நிறமும், அழகும், கம்பீரமுமுடையவர்கள்; நல்ல குடும்பப் பின்னணியுடையவர்கள், உடலெல்லாம் வேல், சூலம், பெண்களின் உருவங்களை பச்சை குத்தியிருப்பார்கள். சட்டை அணிய மாட்டார்கள். சைக்கிள் தான் இவர்களது வாகனம்.

அது சரி இவர்கள் யார்? எப்படி உருவானார்கள்? யார் உருவாக்கினார்கள்? இவர்கள் எமது பிள்ளைகள், எமது அண்ணன், தம்பிகள், மாமன், மச்சான்கள், அவர்களைப் பெற்றதும் நாம்தான்! உருவாக்கினதும் நாம்தான்!

இவர்களின் பின்னணியை ஆராய்ந்தால், வறுமை - கல்வி கற்க வசதியின்மை - வேலை வாய்ப்பின்மை - உற்றார் உறவினரின் உதாசீனம் - ஏளனம் - பொறுப்பற்ற குடிகாரத் தந்தை; - இப்படி எத்தனை எத்தனையோ! நல்ல உடற் கட்டும், நுட்பமான மதியும், வீரமும், துணிச்சலும், தாரள குணமும், தியாகமும், கருணையும் நிறைந்த இவர்களிற் பலர் கொடூரமானவர்களாக, கொலைகாரர்களாக, பயங்கரவாதிகளாக மாறியதற்கு இன்றைய யாழ்ப்பாணச் சமூகமே காரணமாகும்! 'தோளுக்கு மிஞ்சினால் தோழன்' என்பது வெறும் பழமொழிதான். ஊர் மாத்திரமல்ல, கற்பிக்கும் ஆசிரியர் மாத்திரமல்ல, பெற்றோரும் அவர்களை எதிரிகளாகவே கருதினார்கள். வடிகாலில்லா, வழிப்படுத்தலில்லா காட்டாறாகப் பாய்ந்து அவர்கள் சமூக வயலை அழித்தார்கள்; அழித்தார்கள்.

யாழ், பெரிய கடையில் சில சண்டியர்கள். சிலர் குடிப்பது, புகைப்பதுமில்லை. பச்சை குத்தப்பட்ட அவர்களது முறுக்கேறிய சிவந்த மேனி, அழகாகவே இருந்தது. அவர்கள் எமது கையைப் பிடித்தால் ''அண்ணை! அண்ணை!!'' என்றுதான் கதறுவோம். அப்படி ஒரு வலிமை. சிலர் கறாளாக் கட்டை சுற்றுவார்கள்.

மிட்டாய்க் கடை என்பது இன்றைய கே.கே.எஸ். வீதியை மானிபாய் வீதி சந்திக்கும் இடம். அதில் ஒரு மிட்டாய் கடை இருந்தது. வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த ஒரு பொலிஸ் அங்கே எப்போதும் நிற்பார். ஒழுங்கை மீறுவது நமக்கு இரத்தத்தில் ஊறிப்போன உணர்வுதானே! பொலிஸ்காரனும் ஒரு சண்டியன் தான். போவோர் வருவோரைக் கூப்பிட்டு ''வலப் பக்கம் போ! இடப் பக்கம் போ!'' எனக் குறுந்தடியால் தட்டுவார்.

ஒரு நாள் ஒரு இளைஞன் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தார். பொலிசுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும் என்பது இளைஞனின் எண்ணம். அவன் தந்தைக்கு அந்த வீதியில் ஒரு கடை இருந்தது. பொலிஸ் கை காட்டினார். இறங்கிய விறுவிறுப்பில் பொலிஸ்காரன்மேல் ஓர் அதிரடிப் பாய்ச்சல், பொலிஸ்காரனுக்குள்ளே. இளைஞன் பறந்து விட்டான்! அவனுக்குப் பட்டப் பெயர் 'கடையடி மணியம்!' யாழ் மத்திய கல்லூரி மாணவன். அழகன். கால்பந்தாட்ட வீரன். பின்னாளில் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி.எஸ் மருத்துவர் டாக்டர் சுப்பிரமணியம். செக்கடித் தெரு யாழ்ப்பாணத்தார் கதிரேசன் கோவில் அறங்காவலராக இருந்து தமது 80வது வயதில் காலமானார். இவர் வழிபடுத்தப்பட்டார். இவர் எனது தமையனார். இப்படித்தான் சண்டியர்கள் உருவானார்கள். இவர்களை அரசு நினைத்ததே தவிர, வழிப்படுத்த நினைக்கவில்லை. அல்லாத பிள்ளை இல்லாத பிள்ளை எனத் தந்தை கைவிட்டனர். நடுச்சாமத்தில் கோடிக் குள்ளாலை வீட்டுக்கு வந்து தாயாரிடம் சோறு வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் போவார்கள், பாவம் அந்தத் தாய்மார், காந்தி கூடத் தன் முரட்டுத்தனத்தால் தனது மூத்த மகனைக் குடிகாரராக, முரடனாக ஆக்கிவிட்டாரே!

**வித்தியாசமான சண்டியர்**

இவர் பிறந்த ஊர் வயாவிழானில் உள்ள கல்லடி. உரும்பராயில் திருமணம் செய்து வாழ்ந்தவர். இவர் வித்தியாசமான சண்டியர். புத்திஜீவி. அறிவுப் போராளி. வரகவி. தான்தோன்றிக் கவிராயர், தம்மை மதிக்காதாரைத் தாம் மதிக்காது மிதித்து வாழ்ந்தவர். சட்டத்துக்கு புது விளக்கம் கொடுத்து சட்டத்தை மீறுவார். சிலேடை கை வந்தவர் கோர்ட்டும் கச்சேரியும்தான் இவர் வாழ்க்கை!



''உனக்கு என்ன வேலை?'' என்று நீதிவான் கேட்டார், குற்றவாளிக் கூண்டில் நின்ற கல்லடி, ''கோச்சிக்கு ஆள் கூட்டுற வேலை!'' என்றார், அந்தக் காலத்தில் கொழும்புக்குப் புகை வண்டி கிடையாது. குதிரை கோச்சுத்தான் வாகனம். அதற்குப் பிரயாணிகளைச் சேர்த்துக் கொடுக்கும் கல்லடி, கோச்சிக்கு ஆள் கூட்டுற வேலை என்றதில் என்ன தவறு? இப்படி அவரின் அறிவுலகச் சண்டித்தனம் எத்தனையோ, அவற்றைத் தனியாகத்தான் எழுத வேண்டும். என் மாணவப் பருவத்தில் இந்த மேதையை நான் அறிவேன். புகழ்பெற்ற வயாவிழான் மணியம், சாரங்க பாணி, மலையகத்தில் வாழ்ந்த சட்டத்தரணி கே.வி. நடராசா இவரது புதல்வர்களாவர். சுதேச நாட்டியம் என ஓர் இதழ் நடத்தினார். நம்மவரின் நாட்டியத்தைக் கிண்டல் செய்தார்! நல்ல நகைச்சுவையாளர்.

யாழ் நகரில் இப்போது இருக்கும் வின்சர் தியேட்டர், அந் நாளில் தகரக் கொட்டகை! ஒரு மண்டபம்! ஒரு கூத்துக் கொட்டகை. கிட்டப்பா சுந்தராம்பாள் காதல் அரும்பிய இடம். எஸ்.வி. சுப்பையா பாகவதர், தியாகராஜ பாகவதர் கூத்தாடின இடம். கூத்தும் கோவில் திருவிழாக்களும் தான் பொழுது போக்கு. பேசும் படம் எனும் சினிமா வராத காலம். இந்த நிகழ்ச்சிகளை நடத்துபவர்களுக்குச் சண்டியர்கள் தேவைப்பட்டார்கள். அந்தத் தகரக் கொட்டகையின் உரிமையாளர் துரைராசா. கூத்துக்காரர். சின்ன மேளக்காரரை இந்தியாவிலிருந்து வரவழைப்பதுதான் அவரது தொழில். குடியும் கூத்தியும் சேர்ந்து கூத்தாடும்!

பாதுகாப்புக்குச் சண்டியர்களின் உதவி தேவைதானா? பால்வினைத் தொழிலும் (Sexual trade) அமோகமாக நடைபெற்றது. அக்கால யாழ்ப்பாணத்தை நட்டுவன் சுப்பையா, கனகி புராணம் எழுதிக் காட்டியுள்ளார். கனகி அக்காலத்துப் பிரபலமான பொதுமகள்.

இந்தச் சூழலில் இருந்தவர் கடையடிக் கணேசன்! சுமாரான உயரம்; பொது நிறம்; கம்பீரமான தோற்றம். ஆகாயத்தில் துள்ளி எழுந்து இரண்டு கால்களையும் சுழற்றி அடித்து எதிரியைத் தாக்குவார்! எதிரி நிலைகுலைந்து போவான். நான் நேரில் பார்த்திருக்கிறேன். அது ஓர் அழகு. அவர்தான் நமது புரூஸ்லி! அவரது தாயார் ஆச்சிக்குட்டி. வைத்தியரான என் தந்தையிடம் உதவிகள் பெற்றிருக்கிறார். கரிய நெடிய உருவம். கொட்டடியில் வாழ்ந்து வந்தவர். பெரிய கடையில் கணேசன் இட்டதுதான் சட்டம்.

**சங்கானைத் துரையன்**

கடையடி மணியனைப் போல அழகானவர்; நல்ல சிவலை. மலேசியாவிலிருந்து வந்திருந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலமும் தெரியும். பச்சை குத்தப்பட்ட சிவந்த உடம்பைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு முன்னால் கார் வைத்திருந்தார். மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோவில் திருவிழாவில் சின்ன மேளம் சனம் விலத்துவது இவர்தான்! முன்னாள் உடுவில் எம்பி தர்மலிங்கம் அக்கால மைனர். சின்ன மேள ரசிகர்! சிகரட்டும் கையுமாய், பட்டு வேட்டி நிலந்தோய நிற்பார். அந்தக் கோயிலுக்கு ஒரு மனேச்சர். சேனாதிராசா என்று பெயர். வேற்றூர்ச் சண்டியர்களும் வந்து, சின்ன மேளத்தால் சண்டை பிடிப்பர். இந்தச் சண்டையில் பெரிய சண்டியனாகக் கருதப்பட்ட பண்டாரக்குளத்து முத்தன் கொல் பட்டு விட்டான். ''பண்டாரக் குளத்தடி முத்தனைக் கொண்டானே சேனாதிராசன்'' என்பது ஒரு நாட்டுப் பாடல். இதனோடு சம்பந்தப்பட்டவன் சங்கானைத் துரையன். அவர் தாயை மம்மி என்று அழைப்பதைக் கேட்டிருக்கிறேன். இவர் தான் அக் காலத்துக் காதல் மன்னன். மானிப்பாய் ஆஸ்பத்திரி தாதிகள் அடிக்கடி காணாமல் போய்விடுவார்கள்!

இவர்களைத் தவிர கடைச் சண்முகத்தான். மாடன் செல்லத்துரை இருவரும் குறிப்பிடத் தக்கவர்கள். இந்தக் கோடி வழி, நேற்று வாழ்ந்த கொட்டடி தெய்வேந்திரம் வரை நீண்டது! ஜீ.ஜீ. பொன்னம்பலம் - சாம் சபாபதி போன்ற சட்டத்தரணிகள் தம் அரசியலுக்கு இவர்களைப் பயன்படுத்தினார்கள். துரையப்பா காலத்தில் தெய்வேந்திரம் மாநகர



சபை உறுப்பினராகி - உதவி மேயராகவும் உயர்ந்துவிட்டார். தமிழ் காங்கிரசும், பின் வந்த தமிழரசுக் கட்சியும், இந்தச் சண்டியர்களை உருவாக்கிவிட்டது. யாழ்ப்பாணத்துக்கு எஸ்.பி.ஆக வந்த சொய்சா சண்டியர்களை முற்றாக ஒழித்ததாக கூறுவார்கள். அதில் அவ்வளவு உண்மையில்லை! அவர்கள் தோன்ற வேண்டிய தேவை குறைந்துவிட்டது என்பதுதான் உண்மை.

காரணம், எதுவாக இருந்தாலும், ஓர் ஐம்பதாண்டு காலம் அவர்கள் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது என்னமோ உண்மை. பொலிஸ் செயலற்றுக் கிடந்தது. இக்காலத்தில் பண்டாரக்குளத்து முத்தன், இளவாலை முக்கொலை, வல்லை வெளிக் கொலை முதலிய படுகொலைகள் நடந்துள்ளன. கொல்ல அவர்களும், வழக்கை வெல்ல சட்டத்தரணிகளும் இருந்தார்கள். கேட்க வேண்டுமா, சண்டித்தனத்தை!

நாம் பிறந்த தேசத்திற்கு வெளியே பல நாடுகளில் இலட்சக்கணக்கான எமது தமிழ் உறவுகள் சிதறுண்டு வாழ்ந்து கொண்டிருந்தாலும் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்கள் நட்சத்திரக்கூட்டத்திற்கு மத்தியிலே ஒளிவிடும் சந்திரனைப் போல! ஒரு சிலரே அந்தந்த நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழறிஞர்கள் மற்றைய நாடுகளைவிட லண்டனில் ஒரு சிலர் அதிகமாகவே வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

அப்படியாக லண்டனில் வாழ்ந்து வரும் பாண்டித்தியம் பெற்ற தமிழ் அறிஞர்களில் வித்துவான் க.ந.வேலன் அவர்களும் ஒருவர்.

லண்டனில் இருந்து வெளிவரும் ''புதினம்'' பத்திரிகையில் 'நெஞ்சினிலே' என்னும் தலைப்பில் ஊர் நினைவுகளை தொடராக எழுதி வருகின்றார்.

அந்தத் தொடரில் இவர் எழுதிய ''யாழ்ப்பாணத்து சண்டியர்'' என்னும் இப்பகுதியை ''யாழ்ப்பாணத்து மண் வாசனை''யில் பதிய வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

# கீரிமலை

## கவிஞர் பாவை ஜெயபாலன்

'தீர்த்தக் கரை மாதிரி சனம்' பெருந்தொகை சனத்தொகைக் கூட்டத்துக்கு குறியீடாக ஊரில் நீண்ட காலம் நிலவி வந்த உவமான சொற்றொடர். அது ஆடி அமாவாசை தோறும் கீரிமலைக் கடற்கரையில் கூடும் சனத் திரளில் இருந்து எழுந்த தொடர். தந்தையை, தந்தை வழி முன்னோர்களையும் ஆடி அமவாசை தோறும் நினைவில் நிறுத்தி, அவர்களின் ஆத்ம சாந்திக்காக எள்ளுத் தண்ணி இறைத்து பிராமணர்களுக்கு அரிசி காய் கறி, தட்சணை கொடுத்து பிதுர்க் கடன் செலுத்துவதில் எம்மவர்களுக்கு நம்பிக்கை விசுவாசம்!

வலி வடக்குப் பாடசாலைகள் அன்று விசேட விடுமுறையாக இருக்கும். ஏனைய பாடசாலைகள் கந்தோர்கள் எல்லாமே யாழ் குடாநாடு பூராவும் வரவு குறைவாக செயல் இழந்து விடும். மாவிட்டபுரம் தேர்த் திருவிழாவை முதல் நாள் தரிசிக்க... மாவை முருகனும் கீரிமலை நகுலேஸ்வரர் பெருமானும் ஒருங்கு கூட்டி கீரிமலைக் கடற்கரை முற்றத்தில் ஆடி அமவாசை அன்று கலந்து கொள்ள.. காற்றோடிக் காயும் சேர்த்துக் கறி சமைத்து, சைவம் வந்து, சங்கு ஊத, விருந்தினர்க்கும் பரிமாறி, இரவு தீர்த்தம் முடித்து, தச்சன் காட்டு வீதி வழியாக, மாவிட்டபுரம் நோக்கி, அலங்கார விளக்குகளுடன் பவனி வரும் மாவை முருகனின் கண் கொள்ளாக் காட்சியைக் கண்டு மகிழ... முதல் நாள் யாழ்தேவியிலும் மெயில் வண்டியிலுமாக வந்து இறங்கும் வெளியூர் பணியாளர்களும் உட்பட ஒவ்வொருவரும் கலந்து மகிழும் திருவிழாக்கள் அல்லவா இவை! நகுல முனிவரின் கீரிமுகம் நீங்கிய நகுலேஸ்வரம், உப்புக் கரிக்கும் கடல் அருகே நந்நீரைச் சுரக்கும் கேணி கொண்ட கீரிமலை, மாதவபுர வீர வல்லி என்ற இளவரசியின் குதிரை முகம் நீங்கிய மாவிட்டபுரம், அந்த அரசியால் மாவிட்டபுர ஆலயத்தைக் கட்டி எழுப்பக் கருங்கல்லும், விக்கிரகங்களும் கடல் வழியாக கப்பலில் கொண்டு வரப்பட்டு, தரை இறக்கப்பட்ட கயாத்துறை என்ற காங்கேசன்துறை பூர்வீக புராண வரலாறுகளுடன் தொடர்புடைய பழைய ஊர்கள்! அந்த ஊர்களில் ஒன்றிவிட்ட சைவ தமிழ் கலாச்சாரப் பாரம்பரியங்கள், எளிமையே வடிவமாக பக்தி ததும்பும் மாவை முருகன் ஆலயம், அந்த ஊர்களில் ஆலயம் கொடியேறி இருபத்தைந்து தினங்களும் உற்சவ காலங்களில் கமழும் பக்தி மயம். மெழுகிய குந்துகள்; நித்தம் சாணம் காணும் முற்றங்கள்; வீதிதோறும் பக்திக் கோலத்தோடு வீதிகளில் படையெடுக்கும் பக்தர்கள்; தேர்த் திருவிழாவின் முதல் நாள் இரவே நேர்த்தியை நிறைவேற்ற, 'அரோகரா' கோஷத்தோடும் உடுக்கு ஓசையோடும் தார் வீதிகளில் உருண்ட பிரதிஷ்டை செய்து வரும் பக்தர்கள்! மேள தாளத்தோடும், அலங்காரக் கோலத்தோடும், வீதிகளைக் கடக்கும் காவடி ஆட்டங்கள்; வாயில் வேலும் பாம்பும் உடல் எங்கும் செதில்களாக, முதுகு பின் தொடை தசை நார்களை இழுக்கும் கொளுக்கிகளோடு, ஆடும் துலாக்களில் தொங்கி வரும் தூக்குக் காவடி..... திருவிழாக்கள் தோறும் வெளி வீதிகளை நிரப்பி, தொடராக நிற்கும் மணி, அணி, பொம்மைக் கடைகள், கடலைக் கடைகள், சன நெருசலில் பெற்றோரைத் தவற விட்டு அழும் பிள்ளைகள்; சங்கிலி அறுப்பு; சைக்கிள் களவு என அந்த இனிக்கும் நினைவுகள் எல்லாமே கனவாய், பழங்கதையாய் போனவைதானா? அல்லது சமாதானம், சமூக நிலை, புனர் நிர்மாணம் என்பன இடிபாடுகளை நிவர்த்தி செய்து, மீண்டும் எமக்கு இந்த இனிய நாட்களை மீட்டுத் தருமா? பதில் காலத்தின் கையில்தான்!

பாவை - ஜெயபாலன் அவர்களை அனேகமானவர்கள் கவிஞராக மட்டுமே அறிந்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் இவர் கவிஞராக மட்டுமல்லாது சிறந்த எழுத்தாளராகவும், ஊடகவிலாளராகவும்,

இருப்பதோடு மட்டுமன்றி லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் வானொலி ஒன்றில் அறிவிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.

லண்டனில் இருந்து வெளிவரும் ''புதினம்'' பத்திரிகையில் ''நினைவில் நிற்கும் ஊர் நினைவுகள்'' என்னும் உரை நடைச் சித்திரத் தொடரில் யாழ் மண்ணிற்குச் சிறப்புச் சேர்க்கும் ''கீரிமலை'' ஸ்தலத்தைப்பற்றி எழுதிய இப் பகுதியை நாம் யாழ்ப்பாணத்தைப் பற்றி தொகுத்துள்ள இந்த ''யாழ்ப்பாணத்து மண் வாசனை''யில் பதிவு செய்ததில் மகிழ்ச்சியே.





## சமர்ப்பணம் - II

பிறந்த மண்ணில்
ஆட்சியாளர்களின்
அரக்கத்தனம்!
புலம்பெயர்ந்த மண்ணில்
எம்மவர்கள் மத்தியிலும்
அரக்கர்கள்!

மண்ணின் வாசங்களை
அனைவரும் முகரவென
உருவாக்கப்பட்ட - இந்த
மண்வாசனையில்

பெண்ணின் பருவத்தைத்
தொட்டுவிடும் நேரத்தில் - எம்
கண்ணிரண்டையும் - எம்
கை, விரல்களே குத்தியது!

இன்னொருமுறை எம்மால்
பார்க்க முடியாமல்ப்போய்
எம் நெஞ்சங்களில் எல்லாம்
தஞ்சம் கொண்டிருக்கும்
நிதர்சனி - ஸ்ரீதரனுக்கு இந்நூல்

# வண்ண வரிகள் – II

அன்பிற்கினிய வாசகர்களுக்கு மீண்டும் வணக்கங்கள்.

இனி வரப்போகும் மண்வாசனையின் இரண்டாவது பகுதி மீண்டும் தனது மேக ஊர்வலங்களை மேளதாளங்களுடன் ஆர்ப்பாட்டமாக ஆரம்பிக்கின்றது.

விதைகள் தரமானதாக இருந்தாலும் விளைவிக்கும் மண்ணிற்கு உரமும், நீரும், உரிய நேரத்தில் கிடைக்காது போனால் தரமான விதைகளும் முளைக்காமலேயே போகும். ஆனால் நெஞ்சினில் ஆர்வமும், நினைவினில் ஆவலும், மனதினில் உறுதியும் இருந்துவிட்டால்! நினைத்ததை முடித்து விடலாம்.

அதற்கு சரியான உதாரணம் இந்த நூலை உருவாக்குவதற்கு நான் எடுத்துக் கொண்ட முயற்சி.

மண்வாசனையின் முதலாவது பகுதியில் எழுதியிருப்பவர்கள் அனைவரும் தாங்கள் பிறந்த மண்ணின் சிறப்புக்களை, பெருமைகளை, அழகாக எழுதியிருந்தார்கள். இனி நீங்கள் படிக்கப் போகின்ற இந்த இரண்டாவது பகுதியோ! இதில் எழுதியிருப்பவர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய அரிய பகுதி.

மனிதர்கள் எல்லோருக்கும் ஒரு பெயர் இருக்கின்றது. மனிதர்களுக்கு மட்டுமா? மரங்களுக்குப் பெயர் இருக்கின்றது. பறவைகள் பாம்பினங்கள் மீனினங்கள் பூக்கள் மட்டுமல்ல காத்துக்குக்கூட வாடைக்காற்று, (சோழகக்காற்று என்றுதான் யாழ்ப்பாணத்தில் சொல்லுவார்கள். அப்படியே இருக்கட்டும்.) தென்றல்காத்து என்று பெயர்கள் இருக்கின்றன. அந்தப் பெயர்களுக்கு ஒவ்வொரு காரணமும் இருக்கின்றது.



பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பெயர்கள் வைக்கும்போது ஏதோ ஒரு காரணத்துடன்தான் பெயர்களை வைக்கின்றார்கள். தெய்வங்களின் பெயர்களை வைக்கின்றார்கள். அந்த தெய்வத்தின் கருணையால் பிறந்த பிள்ளை என்னும் அவர்களின் நம்பிக்கையாக இருக்கலாம். அல்லது அந்தத் தெய்வங்களைப் போல சிறப்புடையவர்களாக வரவேண்டும் என்ற ஆதங்கமாகவும் இருக்கலாம். உலகத் தலைவர்களின் பெயர்களை வைக்கின்றார்கள். தங்களுடைய பிள்ளையும் வருங்காலத்தில் பெரிய தலைவனாக வரவேண்டும் என்ற ஆசையாகக்கூட இருக்கலாம்.

இருந்தாலும் சிலருக்கோ பெயர்கள் பொருத்தமில்லாமலேயே அமைந்துவிடுகின்றது. நெப்போலியனின் பெயரைக் கொண்டவன் பயந்தாங்கொள்ளியாகவும்(!) காந்தியின் பெயரைக் கொண்டவன் கள்ளனாக, கொலைகாரனாகவும்(!) இருப்பதை நாம் பார்த்திருக்கின்றோம். இவர்களையெல்லாம் விரல்விட்டுத்தான் எண்ண முடியும்.

பாரிஸில் வாழ்கின்ற எனது நண்பர் ஒருவருடைய மகளுக்குப் பெயர் தமிழரசி, பதினைந்து வயதாகும். அந்தப்பிள்ளைக்கு சரியாக தமிழ் பேசவே வராது! இது புலம்பெயர் நாடுகளில் பலருடைய வீடுகளில் காணக்கூடியதே.

பறவைகள் மிருகங்கள் பிராணிகளைக்கூட நாம் வீடுகளில் வளர்க்கும்போது அவைகளுக்கு ஒரு செல்லப் பெயர் வைத்து அழைப்பதை எல்லா வீடுகளிலும் காண்கின்றோம். ஆனால் இன்று எம்மவர்களில் பலர் நாகரீகமான பெயர் என்ற போர்வையில் தங்களது பிள்ளைகளுக்கு எவருக்கும் எளிதாக வாயினுள் நுழைய முடியாத பெயர்களையெல்லாம் வைத்துக்கொள்கின்றார்கள்.

இருப்பினும் ஒவ்வொருவருக்கும் ஒரு பெயர் உண்டு. பெயர் என்பது எமது அடையாளமாகும். அது போலவே நாட்டிற்கு ஒரு பெயர், நாட்டில் உள்ள நகரங்கள், கிராமங்கள், ஊர்கள், இவைகளுக்கெல்லாம் வெவ்வேறு பெயர்கள். இருக்கின்றன.

இவைகள் எல்லாம் ஒரு அடையாளத்திற்காக வைக்கப்பட்டவை என்று பொத்தம் பொதுவாக சொல்லிவிட முடியாது. இந்த ஊர்ப்பெயர்களையெல்லாம் ஆராய்ச்சி செய்தால் அந்தப் பெயர்களுக்கெல்லாம் ஒரு அர்த்தம் இருப்பதை, காரணம் இருப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

அவைதான் இனி நீங்கள் படிக்கப்போகின்ற இந்த இரண்டாவது பகுதியானது. எங்கள் தமிழீழ மண்ணில் இருக்கின்ற ஊர்களுக்கு பெயர்கள் உருவானதற்கான காரணங்களை பலர் ஆராய்ந்து எழுதியிருக்கின்றார்கள். இவைகள் கண்டிப்பாக நாம் தெரிந்திருக்க வேண்டியவை.

ஊர்களுக்கு இப்படியான பெயர்கள்வர இவைகள்தான் காரணங்கள் என்பதனை இந்த நூலில் பதியவைப்பதற்கு ஆதாரமாக ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் எழுதிய யாழ்ப்பாண வைபக கௌமுகி என்ற நூலில் இருந்தும், கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் எழுதிய ஈழத்து இடப்பெயர்வு ஆய்வு என்ற நூலிலிருந்தும் இன்னும் சில அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்தும் இங்கு பதிய வைத்திருக்கின்றேன். இதில் என்னுடைய பங்கு இவ்வளவுதான்.

கோடைகாலத்தில் வற்றிப்போன குளங்கள் எல்லாம் ஆகாயத்தை ஆசையோடு பார்ப்பதைப்போல ஊரில் வாழ்ந்த காலங்களில் எங்கள் ஊர்களின் வாசங்களை முகர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமில்லாமல் வாழ்ந்த நான் இன்று ஊரின் ஆணிவேர்களையெல்லாம் தேடிப்பிடித்து இந்த மண்வாசனை என்ற நூலை உருவாக்கியிருக்கின்றேன்.

தன்னிடமுள்ள நீரையெல்லாம் மேகம் மழையாகப் பொழிந்துவிட்டபோதும்! மீண்டும் கடலில் இருந்தும், பூமியில் இருந்தும், நீரைப் பெற்றுக் கொள்வதைப் போல பலரின் எழுத்துக்களால் தொகுக்கப்பட்ட இந்த நூல் வருங்காலங்களில் அவர்களின் சந்ததியினருக்குக்கூட ஒரு கல்வி நூலாகவும் அமையலாம்.

அப்படி ஒரு காலம் வரும் என்பது எனது நம்பிக்கை.



இந் நூலில் சிற்சில குறிப்புக்கள். வாசகங்கள் சில இடங்களில் மீண்டும் மீண்டும் வருவது போலத் தோன்றலாம்!?

கூறியதைத் திரும்பக்கூறல் குற்றம் என்பார்கள். எனினும் இந்தப் புத்தகத்தைப் பொறுத்தவரை அவை தேவைகளை ஒட்டியே கூறப்பட்டிருக்கின்றது என்பதை மனதில் இருத்திப் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வண்ணவரிகள் இரண்டை நிறைவு செய்து கொண்டு மண்வாசனையின் பகுதி இரண்டிற்குள் செல்ல வழி விடுகின்றேன்.

நேசமுடன் உங்கள்
**வண்ணை தெய்வம்**

# மண்ணின் பெயர் வரலாறு

**கும்பளை**

கும்பல் - அளை > கும்பளை; கும்பி + அளை > கும்பளை. கும்பல் = குவியல், கூட்டம்; கும்பி = குவியல், நரகம், சேறு, யானை (தமிழகராதி 96) அளை = சிறு வாய்க்கால். எனவே கும்பளை என்பது சிறு வாய்க்கால்கள் நிறைந்துள்ள இடம் என்பது பொருள். இவ்வூர் அளவெட்டியின் வடக்கேயுள்ளது. அளவெட்டி என்பதும் வடிகால்கள் வெட்டப்பட்டுள்ள இடம் எனப் பொருள் தருவதாகும். இவ்விரு இடங்களும் அயல் ஊர்களாக அமைந்திருப்பதும் சொற்பொருள் அடிப்படையில் ஒப்புடையதாகக் காணப்படுகின்றன.

இப்பகுதிகளில் கழனிகளிலே தேங்கி நிற்கும் மழைநீர் வடிந்தோடும் பொருட்டுப் பல அளைகள் (கால்வாய்கள் வெட்டப்பட்டு, அவை வழுக்கியாற்றுடன் தொடுக்கப்படுதல் வழக்கம். இக்காட்சியின் வெளிப்பாடாகவே கும்பளை, அளவெட்டி என்பன காரணப் பெயர்களாகத் தோற்றம் பெற்றன.

**தும்பளை**

தும்பு + அளை = தும்பளை. இங்கு அளை என்பது வாய்க்கால், ஓடை என்ற பொருளில் வந்துள்ளது. முன்பு இவ்வூரிலே தும்புக் கைத்தொழில் முதன்மை பெற்றிருந்தது என அறியப்படுகிறது. தேங்காய் மட்டையிலிருந்து (கோம்பை) தும்பைப் பெறுவதற்கு முதற்படியாகத் தேங்காய்மட்டையை நீரில் ஓரிரு வாரங்களுக்குப் போட்டு ஊறவைக்க வேண்டும். இதன் பொருட்டுச் சிறு ஓடைகளை வெட்டி நீர்பாய்ச்சி அவற்றினுள் தேங்காய்க் கோம்பைகளைப் போட்டு வைப்பது வழக்கம். இந் நிலையிலே தும்பு அளைகள் (ஓடைகள்) பல இங்கு காணப்பட்டமையால் இவ்விடத்திற்குத் (தும்பு+அளை) தும்பளை எனக் காரணப்பெயர் அமைவதாயிற்று. இவ்வூர் மக்களின் பொருண்மியத்தை நிர்ணயிக்குந் தொழிலாகத் தும்புக் கைத்தொழில் இருந்தது. அம்மக்கள் எந்நேரமும் தும்பை அளைந்து தொழில் புரிந்தமையாலே தும்பு + அளை = தும்பளை எனக் காரணப்பெயர் பெறுவதாயிற்று என்று விளக்கம் கூறப்படுதலுமுண்டு.



வடமராட்சிப் பகுதியிற் பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள ஒரு பெரிய ஊர் தும்பளை.

**அல்லாரை**

அல்-ஆரை = அல்லாரை. இது கச்சாய்ப் பகுதியில் அமைந்துள்ளது. கச்சாயில் கோட்டையும் துறையும் அமைந்திருந்தன. அத்தோடு கச்சாய் தொல்லியற்றளமாகவும் கருதப்படுகிறது.(இரகுபதி : 1983). இப் பின்னணியில் அதன் அயற்பதியாகிய அல்லாரை என்பது கோட்டை (ஆரை) அல்லது பாதுகாப்பு அற்ற இடம் என்ற பொருளில் இப்பெயர் வழக்குப் பெற்றிருக்கலாம்.

அல்லாரை = ஒருவகை மரம். எனவே மரப் பெயரடியாகவும் இவ்விடப் பெயர் ஆக்கம் பெற்றிருக்கலாம். மல்லாகம் என்ற ஊரிலும் அல்லாரை என்ற குறிச்சிப் பெயருண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கல்லாரை**

கல் + ஆரை = கல்லாரை. கல் அரண் அல்லது கற்பாறை உள்ள இடம் என்ற பொருளில் இப்பெயர் ஆக்கம் பெற்றுள்ளது. மல்லாகம் பகுதியில் இவ்விடம் அமைந்துள்ளது.

**பாலாவி**

கச்சாய்ப் பகுதியிலும், பூநகரிப் பகுதியிலும் பாலாவி என்ற இரு இடங்களுள் கச்சாய் ஊருக்குக் கிழக்கே பாலாவி என்ற இடம் அமைந்துள்ளது. பால் + ஆவி = பாலாவி. இங்கு மந்தை வளர்ப்பு பெரிதும் காணப்படுகின்றது. ஆனால் குளம் எதுவும் இங்கில்லை. பண்டைநாள் முதலாக இங்கு பால் மாடுகள் நிறைந்து காணப்பட்டதால் இப்பெயரேற்பட்டதென்பர். இவ்வூருக்குத் தெற்கே கடற் பகுதி உள்ளது. சூரிய வெப்பத்தினால் கடல் நீரானது ஆவியாகி மேலெழுகின்ற காட்சி மாலை வேளையிலே தினமும் இங்கு இடம்பெறும். பால் போன்ற ஆவி

மேலெழுமிடம் என்ற காரணப் பெயராக பாலாவி என்ற இடப்பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம்.

**உப்பாறு, திருவையாறு**

உப்பாறு, திருவையாறு என்ற இரு இடங்களும் கரச்சிப் பகுதியில் அமைந்துள்ளன. கண்டி + யாழ்ப்பாணம் பெருஞ்சாலையின் 157 ஆம் மைல்கல்லின் கிழக்குப் பகுதியில் திருவையாறு அமைந்துள்ளது. இங்கே திருவையாறு எனப் பெயருடைய குளம் ஒன்றுள்ளது. அக்குளப்பெயரினால் இவ்விடமும் வழங்கப்படுவதாயிற்று. தமிழகத்து திருவையாறு என்ற இடத்திற்கும் இவ்விடத்திற்குமுள்ள தொடர்புகள் ஆராயப்பட வேண்டும்.

**தொண்டைமானாறு**

தொண்டைமான் + ஆறு = தொண்டைமானாறு. ஆறு = என்பது ஆறு, வழி, பக்கம், பயன், சமயம், அறம், உபாயம், வீதம், இயல்பு, தணிதல், அடக்குதல் எனப் பல பொருள் தரும் சொல்லாகும். (த.லெ.1 : 259) தொண்டைமானாறு என்ற இடப்பெயரை நோக்கும்போது தொண்டைமான் வெட்டுவித்த நீர் வழியே தொண்டைமானாறு எனப் பெயர் பெறுவதாயிற்று. இது வல்லிநதி என்ற பெயருடன் வழங்கியதாகவும் அறியப்படுகிறது (வல்வை ந. நகுலசிகாமணி : 1997 : 11) தொண்டை நாட்டையாண்ட தொண்டைமான்களுக்கும் இத் தொண்டைமானாற்றுக்கும் தொடர்பு கூறப்படுகின்றது. வட்டுக்கோட்டையிலுள்ள ஓரிடமும் தொண்டைமான் தோட்டம் என வழங்கப்படுகிறது.

**ஊரணி**

ஊர் + அணி = ஊரணி. ஊர் மக்கள் அணிதிரண்டு நின்ற நிலையில் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறுப. தமிழகத்திலுள்ள எழும்பூர் தற்போது எக்மூர் என்று அழைக்கப்படுகிறது. எழும்பூர் என்பது எதிரிகளுக்கு எதிராக அணிதிரண்டு எழுந்த ஊர் என்று பொருள் தரும் பெயராகும். அது போன்றே ஊரணி என்பதும் எதிரிக்கு எதிராக அணி திரண்டெழுந்த ஊர் என்ற நிலையில் இடப்பெயர் ஏற்பட்டது என்பதில் பொருள் பொதிந்து காணப்படுகிறது. ஊரணி என்பது ஆரணி என்பதன் திரிபாகலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. இது தொடர்பாக தாவீது அடிகள் (1970 : 13-14) கூறும் கருத்து ஈண்டு நோக்கத் தக்கதாகும்.



**கந்தரோடை**

கந்தர் + ஓடை = கந்தரோடை. யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகப் பழைய தொல்பொருட்சான்றுகள் அகப்பட்டுள்ள தொல்லியல் தளம் இதுவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நடுவே யாழ்நகரில் இருந்து வடமேற்கே ஆறு மைல் தொலைவில் கந்தரோடை அமைந்துள்ளது. இது மிகப் பழைமை வாய்ந்த ஊராகும். கந்தன் வழிபாட்டோடு தொடர்புடைய ஓடைக் காணி அல்லது கந்தர் என்பவருக்குச் சொந்தமான ஓடைக்காணி அல்லது கந்தர் என்பவரது ஆணைக்குட்பட்ட ஓடைக்காணி என்றும் இதற்கு பொருள் கூறலாம். இதன் பழைய பெயர் கதிரைமலையாகும்.

**தனங்களப்பு > தனங்கிளப்பு**

தனக்காரர் + களப்பு = தனங்களப்பு > தனங்கிளப்பு. களப்பு > கிளப்பு என மாற்றம் பெற்றுள்ளது. தனக்காரர் என்போர் யானை கட்டுவோர் ஆவர். ஆனையிறவிலிருந்து பத்து மைல் தூரத்தில் இவ்விடம் அமைந்திருப்பதும், பண்டை நாளில் இங்கு யானை வணிகம் நடைபெற்றமையும் கருத்திற் கொள்ளத் தக்கன. களப்பு என்ற பெயரீறு பெற்றிருப்பதற்கு ஏற்ப இவ்வூரில் நீர்நிலைகளும் அமைந்து காணப்படுகின்றன.

**ஆவரங்கால்**

இப் பெயரை ஆவரம் + கால் எனவும், ஆ + அரங்கு + ஆல் எனவும் பிரித்துப் பொருள் கூறுவர். அச்சு வேலி என்ற இடத்திற்கு அருகிலுள்ள ஓரிடம் ஆவரங்கால். இது வளமான மருதநிலத்து ஊராகும். ஆவரங்கால் என்பதை ஆ + வரம் + கால் எனப் பிரித்துப் பசு வரம் பெற்ற இடம் எனப் பொருள் கொள்வாருமுளர். வேறுவிதமாக இதனை ஆ + அரங்கு + ஆல் எனப் பிரித்து, பசுக்கள் களைப்பு ஆறும்

ஆலமரத்தடி என்றும் பொருள் கூறப்படுகிறது. தெலுங்கு நாட்டிலே வரங்கால் என்ற ஓரிடமுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது (Rog hain : 1982 : 80) கால் என்பதற்கு வழி எனப் பொருள் கொண்டு ஜே.பி. லூயிஸ் (1917:46) ஆவரங்காலுக்கு விளக்கம் கொடுத்துள்ளமை நோக்கத்தக்கது. இங்கு கேவளை (கோவளை) என்ற காணிப் பெயர் வழங்குகின்றது. அப்பகுதியிற் பசுபதீஸ்வரன் கோயில் உள்ளது. இப்பெயர்த்தோற்றத்தில் தெலுங்குத் தொடர்பு உள்ளது எனவும் நோக்கலாம்.

**அக்கராயன்குளம்**

அக்கராயன்குளம் என்பது ஆட்பெயரால் அமைந்த இடமாகும். இது, குளத்தையும் அக்கராயன் ஆற்றின் வடிநிலப்பரப்பையும் நடுநிலையமாகக் கொண்ட குடியிருப்பாதலால் இக் குளப் பெயரடியாக இடப்பெயர் அமைந்துள்ளது. இங்கு வளம் செறிந்த நெல் வயல்கள் உள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகப் பெரிய குளங்களாக இரணைமடுக்குளம், அக்கராயன் குளம் ஆகிய இரண்டையும் குறிப்பிடலாம். யாழ்ப்பாணம் கண்டி பெருஞ்சாலையில் முறிகண்டிக்கு மேற்கே 6 மைல் தூரத்தில் அக்கராயன் குளம் அமைந்துள்ளது. 1896 ஆம் ஆண்டளவில் இக் குளத்திலிருந்து சுமார் 1679 ஏக்கர் நெல்வயல்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டுள்ளது. (J.P. Lewis, 1896 : 205)

இங்கு மிகப் பழைமை வாய்ந்த ஒரு பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. சோழர் ஆட்சி ஈழத்தில் நிலவிய போது நடைபெற்ற வன்னிப் பகுதிக் குடியேற்றத்தில் தொடர்புடையவர்களாகக் காணப்படும் அக்கராயன், பல்லவராயன், கனகராயன், மல்லவராயன் முதலிய தலைவர்களின் பெயர்களால் அமைந்த குடியேற்றங்களில், கனகராயன் தலைமையிலான குடியேற்றத்தையும், இங்கு குளந்தொட்டு வளம் பெருக்கிய செய்திகளையும் கனகராயன்குளம் என்ற பெயர் தாங்கியுள்ளது.

**கந்தன்குளம்**

இது கிளிநொச்சிப் பகுதியிலுள்ளது. கந்தன் என்னும் ஆட்பெயரால் அமைந்த இடமாகும்.



**சுண்டிக்குளம்**

சுண்டி + குளம் எனக் குளம் ஈற்றுப் பெயருடையதாக இவ்விடம் அமைந்தாலும் இங்கு குளங்களில்லை. பதிலாகச் சுண்டி மரங்கள் (கண்டல் - கண்டைமரம்) நிறைந்த பள்ள நிலம் என்ற பொருளில் இவ்விடப்பெயர் தோன்றியுள்ளதெனலாம். யாழ்ப்பாண மாவட்டத்தின் கிழக்குக் கரையோரத்தில் ஆனையிறவுக் கடனீரேரியின் முடிவில் சுண்டிக்குளம் அமைந்துள்ளது.

**சேந்தான்குளம்**

சேந்தான் + குளம். இது கடற்கரை ஓரத்து ஊராகும். இங்கு குளம் இல்லை. தமிழகத்திலுள்ள சேந்தான் குளத்து மக்கள் இங்கு வந்து குடியேறியபோது இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சேந்தான்குளத்தின் ஒரு பகுதி சேந்தான் புலம் என்று வழங்கப்படுகிறது.

**தவசிகுளம்**

இது கொடிகாமம் பகுதியிலுள்ள ஒரு சிறு பகுதியாகும். தவசி என்ற பெயரினர் ஒருவர் இங்கு வாழ்ந்து. குளம் ஒன்றை வெட்டுவித்தார். அவர் பெயரால் இடமும் குளமும் வழங்குவதாயின. ஞானவைரவர் கோயில் ஒன்றும் இங்குள்ளது.

**புங்கன்குளம்**

புங்கை + குளம் = புங்கங்குளம். புங்கு எனப்படும் புங்கை மரமும் குளமும் சேர்ந்த நிலையில் இப்பெயர் ஏற்பட்டுள்ளது. இது அரியாலையின் எல்லைப் பகுதியாகும்.

**புதுக்குளம்**

புதிய + குளம் = புதுக்குளம் என்ற நிலையில் இப்பெயர் வழங்கலாயிற்று. இது கரச்சி - ஊரியான் பகுதியில் அமைந்துள்ளது.

**வன்னேரிக்குளம்**

இது பூநகரிப் பிரிவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள வன்னேரிக் குளத்தை மையமாகக் கொண்ட குடியிருப்பு இடமாகும். இங்கு 1953 இல் குடியேற்றத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது.

**சித்தன்கேணி**

இது சங்கானைக் கிராமசேவகர் பிரிவில் இடம்பெறுகிறது. சித்தன் என்னும் சித்தர் ஒருவர் இவ்விடத்தில் சில காலம் வாழ்ந்தமையால், அவர் பெயரால் கேணிப்பெயர் வழங்கி பின்பு அவ்விடத்தையும் சுட்டுவதாயிற்று எனப் பின்னாளில் விளக்கம் கூறுவர் (ஆ. முத்துத்தம்பி : 1933 : 48) தொல்புரத்தை அடுத்து இப்பகுதி காணப்படுவதற்கு பண்டைநாளில் இங்கு நிலவிய கோட்டை நாகரிக வாசிகள் பயன்படுத்திய கேணிப் பரப்பிலே பிற்றை நாளிற் சித்தன் என்பவரது தொடர்பு காரணமாகச் சித்தன்கேணி ஆயிற்று என்றுங் கருதப்படுகிறது.

**செட்டிக்கேணி**

செட்டி - கேணி. செட்டிமார் வாழ்ந்த நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. தென்மராட்சி பகுதியில் செட்டிக்கேணி வளம் நிறைந்த ஓரிடமாகும்.

**மருதங்கேணி**

மருது + அம் + கேணி = மருதங்கேணி. மருதமரமும் கேணிகளும் முதன்மை பெற்ற நிலையில் மருதங்கேணி என்று இடப்பெயர் தோற்றம் பெற்றுள்ளது. பச்சிலைப் பள்ளிப் பகுதியில் இவ்வூர் அமைந்துள்ளது. இதனூடாகப் பருத்தித்துறை + வெற்றிலைக்கேணி தெரு செல்கிறது. இதன் கிழக்கே கடல் வளமும், மேற்கே மருதவளமும் சிறந்து காணப்படுகின்றன. இங்கு மருத மரங்கள் பல்வேறு இடங்களிலும் செழித்து நிற்கின்றன. சிறுகுளங்கள் பலவுங் காணப்படுகின்றன. மருதடிப்பிள்ளையார் என்ற ஒரு கோயிலும் உள்ளது. இவ்வூரில் நடைபெறும் பூசைப் பேத்தி என்ற வழிபாட்டின் சிறப்பியல்புகள் ஆராய்ச்சிக்குரியனவாகும்.

**ஊர்காவல்துறை**

ஊர் + காவல் + துறை = ஊர்காவல்துறை எனவும், ஊர் + ஆ துறை = ஊராத்துறை எனவும் சொற்பொருள் புலப்படும் வகையில் பிரித்து விளக்கம் கூறப்படுகின்றது. எவ்வாறு நோக்கினும் இவ்விடப்பெயர் தூயதமிழில் ஆக்கம் பெற்றிருத்தல் உறுதியாகின்றது. ஊரா (ஊர் + ஆ) + ஊர்ப் பசு எனப் பொருள்படும். ஊரா மிலைக்கக் குருட்டா மிலைக்கும்... என நாலாயிரத் திவ்வியப்பிரபந்த திருவிருத்தப் பாடலடியில் அச் சொல்லாட்சி பயின்று வருகின்றமையும் கருத்திற் கொள்ளத்தக்கது. (த.லெ. 500)



இவ்விடத்தில் பசுப்பண்ணை வளம் இருந்திருக்கிறது. அதன் காரணமாக இதற்கு ஊராத்துறை என்று பெயரிட்டனர் என்பதிலும் பொருளுண்டு. காராம்பசு என்ற தொடரும் ஈண்டு நோக்கற்பாலது. அன்றியும் இதன் அயலிலுள்ள நெடுந்தீவுக்குப் பசுத்தீவு என்ற பெயர் வழங்கியதால், இதனை அதனினின்றும் வேறுபடுத்திக் காட்ட ஊராத்துறை என்றனர் போலும்.

**காங்கேசன்துறை**

காங்கேயன் + துறை = காங்கேசன் துறை. இதன் வடக்கே பாக்குநீரிணைக்கடல், தெற்கே மாவிட்டபுரம், கிழக்கே மயிலிட்டி, மேற்கே கீரிமலை என்பனவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

மாருதப்புரவீகவல்லி என்னும் சோழநாட்டு இளவரசி தன் குதிரைமுகம் நீங்கியதன் கைமாறாக மாவிட்டபுரத்தில் கோவில் கட்டுவதற்கு வேண்டிய பொருட்களைத் தந்தையாகிய சோழ மன்னனிடமிருந்து வருவித்தாள். அப்பொருட்களைக் காங்கேயன் என்பவன் கப்பலில் கொண்டு வந்து கசாத்துறை என்ற இடத்தில் இறக்கினான். இதுவே காங்கேயன் வந்திறங்கிய துறையாகையால் இது அன்றுமுதல் காங்கேயன்துறை என வழங்கப்படுதவாயிற்று என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. (1939:21) முருகனுக்குக் காங்கேயன் என்றும் பெயருண்டு. எனவே காங்கேயனது திருவுருவச்சிலை கொண்டு வந்து இறக்கப்பட்ட துறை என்பதால் காங்கேயன் துறை என்ற பெயரையும் பெறுவதாயிற்று. மாங்கொல்லை, தையிட்டி முதலிய பல குறிச்சிப் பெயர்களும் இங்கே வழக்கிலுள்ளன.

**கொழும்புத்துறை**

யாழ்ப்பாண மாநகரசபையின் எட்டாம் வட்டாரமாக அமைந்த இடமே கொழும்புத்துறை. யாழ்ப்பாணத்துக்கு மிக அண்மித்து விளங்கும் துறை இதுவே. முன்பு கொழும்புக்குச் செல்லும் பாய் மரக்கலங்கள் (Schooner) இவ்வூர் துறையிலிருந்து சென்றதால் கொழும்புத்துறை என்ற பெயர் இதற்கு ஏற்பட்டதென இவ்வூர் மக்கள் கூறுவர். வரலாற்று நூல்களில் காணப்படும் சான்றுகளும் அவர்களின் கருத்துக்களை ஒத்துள்ளன.

**நாவாந்துறை**

நாவாய் + துறை = நாவாந்துறை. நாவாய் என்பது பழந்தமிழ்ச் சொல் என்பதை புறம் : 126: 15 நற்றிணை : 295 : 6, மதுரைக்காஞ்சி : 81, 321 முதலிய சங்கச் செய்யுள்கள் சான்றுபடுத்துகின்றன. எனவே இவ்வூர் பழந்தமிழர் குடியிருப்பிடமாக இருந்திருக்க வேண்டும். பண்டைக் காலம் முதலாக வணிக நோக்குடன் நாவாய்கள் வந்து சென்ற இடம் என்ற அடிப்படையிலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இப்போது மீன்பிடித்துறையாக இது பயன்படுகிறது. இது யாழ் மாநகரசபையின் கடற்கரையோரப் பகுதியாகும்.

**பருத்தித்துறை**

இலங்கையின் வடகரையில் துறைமுகமும், நகரும் இணைந்த இடமாக பருத்தித்துறை அமைந்துள்ளது. இவ்விடம் பருத்தித்துறைமுனை, முனை என்றும் வழங்கி வந்திருக்கிறது. இலங்கையின் புவியமைப்பின் அடிப்படையில் வடக்குத் தெற்காக முறையே பருத்தித்துறைமுனையையும் தெய்வேந்திரமுனையும் நேர்கோடாகக் கொண்டு அளவிட்டு இலங்கையின் நீளம் 270 மைல்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் காலங்களில் இத் துறைமுக நகர் சிறந்து விளங்கியமைக்குச் சான்றாக அக்காலக் கட்டிட இடிபாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன. அத்துடன் இதன் அண்மையில் உள்ள முனையில் அவர்கள் கட்டிய வெளிச்ச வீடு அமைந்திருப்பதும் இதற்குச் சான்றாகும்.



**வல்வெட்டித்துறை**

வடமராட்சியில் அமைந்துள்ள வல்வெட்டித்துறை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் பிறப்பிடம் ஆதலால், உலகின் பார்வையைக் கவருமிடமாக விளங்குகிறது.

வல் + வெட்டி + துறை என்ற சொற்கள் தரும் விளக்கத்தின் அடிப்படையில் இவ்விடப் பெயர்விளக்கத்தை ஆராயலாம். யாழ்பாடிப் பாணனுக்கு மணற்றி என்ற இடம் வாலசிங்க மகாராசனால் பரிசாக அளிக்கப்பட்டது. யாழ்பாடி மணற்றியில் (யாழ்ப்பாணத்தில்) வந்து குடியேற முற்பட்டபோது, தான் அழைத்து வந்த ஐந்துவகைத் தேவர்குலத் தலைவர்களுள் ஒருவனாகிய வல்லித்தேவன் என்பவனை இப்பகுதியில் குடியமர்த்தினான். இந்த வல்லித்தேவனுக்கு அளிக்கப்பட்ட இடம் வல்வெட்டித் துறை எனப் பெயர் பெற்றதென யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவ் வல்லித்தேவனுக்கு ஆடு, மாடுகள் பட்டியாக இருந்தன என்றும், இவ்விடத்தில் பட்டிகள் கட்டுந்துறை இருந்தமையாலும் இவ்விடம் (வல்லி + பட்டி + துறை) வல்லிபட்டித்துறையாக வழங்கி வந்து, காலப்போக்கில் வல்வெட்டித்துறை எனப் பெயர் பெறுவதாயிற்று என்று கூறுவாருமுளர்.

**இரணைமடு**

இரணைமடு என்பது குளத்தையும் குளம் அமைந்துள்ள பகுதியையும் சுட்டும் பெயராக வழங்குகிறது. இரணை = இரட்டை இவ்விடத்திலுள்ள இரு குளங்கள் வாய்க்கால்களின் மூலம் தொடுக்கப்பட்டிருப்பதால் இதனை இரணைமடு (இரட்டைக்குளம்) என்றனர். இக்குளத்தில் இரண்டு அணைகள் காணப்படுவதால் இரணைமடு எனக் குளத்திற்கும், பின்பு இவ்வூருக்கும் இப்பெயர் ஏற்படுவதாயிற்று. இவ்வூரில் இடம்பெறும், சகல நடவடிக்கைகளும் இக்குளத்தின் நீரை நம்பியே நடைபெறுவதால் இரணை மடு எனக் காரணப் பெயர் பெற்றதென்பர்.

**விசுவமடு**

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் 10ஆம் 13ஆம் மைல் கற்களுக்கிடையில் விசுவமடுக் குளத்தினை நடுவணாகக் கொண்டு

இவ்விடம் அமைந்துள்ளது. 1966இல் இங்கு இளைஞர் குடியேற்றத் திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. குளத்தின் பெயர் இடத்தையும் சுட்டுவதாயிற்று. விசுவர் என்ற ஆட்பெயரடியாக இப்பெயர் வந்திருக்கலாம் என்பர்.

**இணுவில்**

இணு +வில் = இணுவில். இணு + மூங்கில். இங்கு மூங்கில் அடர்த்தியாக இருந்த நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இணுங்குதல் = ஒடித்தல் (தமிழகராதி : 34) எனவே இணுவில் என்பது உடைந்த குளம் எனப் பொருள்படும். யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை சாலையின் 4 ஆம் கட்டையடியைச் சூழவுள்ள பகுதியே இணுவில். இதனூடாக வலிகாமத்தின் பல இடங்களுக்கும் செல்லும் தெருக்கள் அமைந்திருப்பதால் இவ்வூர் நடுநிலையமாகவுள்ளது. இவ்வூர், இணுவை இணுவையமபதி என்றும் வழங்கப்படுகிறது.

**உடுவில்**

உடு - வில் = உடுவில். உடு = நட்சத்திரம். உடுவில் வயல்வெளிகளாற் சூழப்பட்ட அழகிய ஊராகும். இவ்வூர்ப் பெயர் விளக்கம் மேலும் ஆராயப்பட வேண்டியுள்ளது. இவ்வூர் கந்தரோடை, சுன்னாகம், இணுவில், மானிப்பாய் ஆகிய ஊர்களின் நடுவே அமைந்துள்ளது.

**கணுவில்**

இது நெல்லியடிப் பகுதியிலுள்ள ஓரிடம். பண்டை நாள் முதலாக வடமராட்சியில் புகழ்பெற்று விளங்கும் வல்லிபுற ஆழ்வார் கோயிலின் செல்வாக்குக் காரணமாக இவ்விடம் கண்ணன் பதி என வழங்கிப் பின்னாளில் கண்ணாவில் > கண்ணுவில் > கணுவில் எனத் திரிந்து பெயர் பெறுவதாயிற்று என்பர்.

**கூவில்**

கூவல் > கூபம். கூபம் என்பது = கிணறு. நீரூற்று என்று பொருள் தரும் சொல்லாகும். கூவல் என்பதே கூவில் எனத் திரிந்தது எனக்



கொள்வதில் தவறில்லை. தெல்லிப்பளைக்கு வடக்கே இவ்விடம் அமைந்துள்ளது.

கூடல் என்பது பனஞ்சோலையைக் குறிக்கும் சொல்லாகும். கூவிலிற் பனஞ் சோலைகள் நிறைந்து காணப்படுகின்றன. இதனடிப் படையில் கூடல் என்ற சொல்லே நாளடைவில் கூவில் எனத் திரிந்திருக்க வேண்டும்.

**கெருடாவில்**

கருடன் > கெருடன் > கெருடா + வில் = கெருடாவில் கருடப் பறவையை வழிபட்ட இடம், பின்னாளில் கெருடாவல் எனப் பெயர் பெறுவதாயிற்று. வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் கெருடாவில் என்ற இரு இடங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. பண்டை நாள் முதலாக வட, இலங்கையில் பொன்னாலை கிருஷ்ணன் கோயிலும், வல்லிபர ஆழ்வார்கோயிலும் புகழ்பெற்று விளங்கலாயின. அப் பின்னணியில் கருடன் முதன்மை பெற்று, இவ்விடங்கள் கருடன்வில் எனப் பெயர்பெற்று, பின்னாளில் கெருடாவில் எனத் திரிபடைந்து வழங்கியிருக்கலாம். பருத்தித் துறையிலிருந்து கடற் கரையோரமாகப் பொன்னாலைக்குச் செல்லும் வழியில் வல்வெட்டித் துறைக்கு மேற்கே இரண்டு மைல் தொலைவில் கெருடாவில் அமைந்துள்ளது.

**கெல்லாவில்**

கல்லுதல் = தோண்டுதல்; கல்லா = தோண்டப்படாத; குளத்தின் அணைக்கட்டை அதன் நீர்ப் பெருக்குத் தோண்டாத, துளைத்து உடைக்காத குளம் எனவும் பொருள் குறிக்கும்.

இது மாதகல் பகுதியிலுள்ள ஓரிடம். கல்லாவில் > கெல்லாவில் என திரிந்து வழங்கிற்று. பேச்சு வழக்கில் அகரம் எகரமாகத் திரிதல் பொதுவானதாகும்.

**கொக்குவில்**

கொக்கு -வில் = கொக்குவில். கொக்கு என்பது பறவை, மாமரம், குதிரை, செந்நாய், மூலநட்சத்திரம் என்ற பொருள்களைச் சுட்டும் சொல்லாகும் (தமிழகராதி : 104) கொக்குவிலின் வடக்கே நந்தாவில் என்ற

பெருங்குளம் ஒன்று அமைந்துள்ளது. இக்குளத்தில் நிறைந்து காணப்பட்ட கொக்குகள் இவ்வூர்ச் சோலைகளிலும் தங்கியமையால் கொக்குவில் எனப் பெயர் பெற்றது எனக் கொள்ளுதல் பொருந்தும். கொக்குவிலின் அயற்பதியாக ஆனைக்கோட்டை அமைந்துள்ளது.

**கோண்டாவில்**

கொக்குவில் பதிக்கு வடக்கு எல்லையில் கோண்டாவில் அமைந்துள்ளது. கோண்டா - வில் = கோண்டாவில். தெலுங்கு நாட்டில் விஜயநகர மன்னர் ஆட்சிக் காலத்தில் ரெட்டிகள் வாழ்ந்த இடமாகக் கொண்டவீடு என்ற ஊர் விளங்கிற்று. இவ்வூர் அங்கே குண்டூர் மாவட்டத்திலுள்ளது. மேலும் தெலுங்கு நாட்டில் நல்கொண்டா நாகார்ச்சுனாகொண்டா, கொல் கொண்டா முதலிய இடங்களும் காணப்படுகின்றன. (H. Roghair : 1982 : 189) இப்பெயர்களில் கொண்டா என்ற சொல் பின்னொட்டாக அமைந்திருத்தல் நோக்கத்தக்கது.

கொண்டா > கோண்டா என மாறி, வில் என்பதுடன் இணைந்து கோண்டாவில் என்ற பெயர் தோற்றம் பெற்றதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

**சுருவில்**

சுரு + வில் = சுருவில். சுரு < சுரி. சுரி = வளைவு, சேறு. வேலணைத்தீவின் தென்மேற்குப் பகுதியிற் சுருவில் அமைந்துள்ளது. இத் தீவின் தென்மேற்குமூலையில் வளைவான இடத்தில் சுருவில் அமைந்திருப்பதால் இடத்தின் அமைவு நோக்கி இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். மேலும் இவ்விடத்தில் சேறு செறிந்த பகுதிகள் காணப்படுவதால் நிலத்தியல்பு கருதியும் சுருவில் என்ற பெயர் வழங்கப்பட்டிருத்தல் இயல்பே. இங்கு சிவன்கோயில், ஐயனார்கோயில், மாதாகோயில் என்பனவும் அமைந்துள்ளன.

**நந்தாவில்**

இது கொக்குவில் பதியின் வடக்குப்புறமாக அமைந்துள்ளது. நந்தாவில் என்ற பெயருடைய ஒரு பெரிய குளமுள்ளது. கோயில்களில் நந்தாவிளக்கு ஏற்றுதல் பற்றிய செய்திகள் கல்வெட்டுக்களிற் பெரிதும்



காணப்படுகின்றன. நந்தாவிளக்கு என்பதற்கு அணையா விளக்கு என்பது பொருள். அதேபோன்று நந்தாவில் என்பதும் வற்றாத குளம் என்பதாகும். இதே பொருள் கொண்டதாக வற்றாப்பளை என்ற இடம் வன்னிப் பகுதியிற் காணப்படுதல் நோக்குக.

**நுணாவில்**

நுணா+வில் = நுணாவில். நுணா = மஞ்சணாறி மரம்; தணக்கு மரம், நுணல் = தவளை: நுணவை = எண்ணோலை, மா: (மதுரைத்தமிழ்ப் பேரகராதி : 2: 74) சாவகச்சேரி நகரின் மேற்குப் புறமாக நுணாவில் அமைந்துள்ளது. இங்கு நுணாமரங்கள் பெரிதும் காணப்பட்ட நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. மறவர் நுணாவில் என்ற குறிச்சிப் பெயரும் இங்கு உள்ளது. மறவன் புலத்து மறவர்கள் சென்று குடியேறி வாழ்ந்த பகுதி இப்பெயரைப் பெற்றிருக்கலாம்.

**மட்டுவில்**

நீர்மட்டமாக அல்லது மட்டுமட்டாக (சிறிதளவு) நிறைந்து நிற்கும் குளம் என்ற பொருள் விளக்கமும் இப் பெயருக்குக் கூறலாம். சிறுசிறு குளங்கள் பல இங்கு காணப்படுதலும் குறிப்பிடத்தக்கது. மட்டு = தேன். இவ்வாறே மட்டக்களப்பு என்பதற்கும் மட்டு - களப்பு எனப் பிரித்து தேன்பாயும் களப்பு, மட்டமான களப்பு எனப் பெயர் விளக்கம் கூறப்படுதலும் நோக்கத்தக்கது. மட்டுவில் முன்னர் பெருங்காடாக இருந்த வேளையில் இங்கு பெரிய அளவிலே தேன் சேகரிக்கப்பட்டதென்றும், அதனால் தேன் நிறைந்த இடம் என்ற பொருளில் மட்டுவில் பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர்.

**முழங்காவில்**

முழங்கால் - வில் = முழங்காவில் எனப் பெயர் வழங்குவதாயிற்று. இங்குள்ள பள்ள நிலங்களில் முழங்கால் அளவு நீர் எப்போதும் நிறைந்திருப்பதால் இப் பெயர் தோன்றிற்று என்று கூறுப. ஆயினும் முழங்கா என்பதற்கு ஒலிக்காத எனப் பொருள் கொண்டு ஒலியலையற்ற நீர்நிலை உள்ள இடம் எனக் கொள்ளவும் அங்குள்ள இயற்கைநிலை வாய்ப்பாக உள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்குப் பூநகரியூடாகச் செல்லும் நெடும்சாலையில் பூநகரிக்குக்குத் தெற்கே முழங்காவில் அமைந்துள்ளது. இது நீர்வளம் செறிந்த ஓரிடமாகும்.

**கட்டுடை**

கட்டு - உடை + கட்டுடை. இது மானிப்பாய் மேற்கில் அமைந்துள்ளது. இங்கே கிராய் என்ற குளம் ஒன்றுள்ளது. குளத்தின் அணைக்கட்டு உடைந்து நீர் பெருக்கெடுத்து ஓடிய இடம் என்ற நிலையில் இப்பெயர் தோன்றியுள்ளது. வழுக்கையாறுக்குரிய நீர்மட்டம் மாரிகாலத்தில் பெருக்கெடுத்து மல்லாகம், அளவெட்டி முதலிய ஊர்களினூடாகப் பாய்ந்து, சண்டிலிப்பாயைக் கடந்து அராலிக்கடலை நோக்கி ஓடி வருகிறது. இந்த ஆற்று வெள்ளத்தை சண்டிலிப்பாய் மக்கள் ஒரு காலத்தில் தடுத்து, நிறுத்தி அணைகட்டி நீர்ப்பாய்ச்சலுக்குப் பயன்படுத்தி வந்தனர் என அறியப்படுகிறது. அந்த அணைக்கட்டு பின்னாளில் உடைந்து நீர்ப்பெருக்கு எற்பட்டது. அதனால் இவ்விடம் கட்டுடை எனப் பெயர் பெறுவதாயிற்று. கட்டுடையின் ஒரு பகுதி இடிகுண்டடி எனப் பெயர் பெறும். முன்னர் இங்கு இடி, மின்னல் தாக்கி ஒரு பெருங்குழி ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

**கட்டுவன்**

வலிகாமம் வடக்கு, மயிலிட்டி தெற்கு கிராமசேவகர் பிரிவிலுள்ள கட்டுவன் என்ற ஊரின் பெயர் கட்டுவன், குட்டுவன், குட்டுவனூர் என வழங்குகிறது. பண்டைய தமிழகத்தைச் சேர்ந்த குட்ட நாட்டு மக்கள் இங்கு வந்து குடியேறியபடியால் குட்டுவனூர் என்ற பெயர் வந்ததென்பர். குட்டுவனரே கட்டுவன் ஆயிற்று என்பர்.

**நாயன்மார்கட்டு**

நாயன்மார் + கட்டு = நாயன்மார்கட்டு. கட்டு = கட்டிடம். நல்லூருக்குக் கிழக்கே முத்திரைச் சந்தைக்கு அடுத்து அமைந்துள்ள நாயன்மார்க்கட்டு என்ற இடத்திலே தமிழரசர் காலத்தில் 63 நாயன்மார்களுக்கு சிலை எழுப்பி, மடங்கள் கட்டப்பட்டு, வழிபாடு



நடைபெற்றுள்ளது என்பதை யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூல் சான்றுபடுத்துகின்றது.

**புன்னாலைக்கட்டுவன்**

பொன் + ஆலை + கட்டுவன் = பொன்னாலைக்கட்டுவன் > புன்னாலைக்கட்டுவன் என மருவி வழங்கியிருக்கலாம். இது ஊரெழுவுக்கும் வசாவிளானுக்கும் இடையில் அமைந்த ஓர் இடமாகும். இப் பெயர் விளக்கம் மேலும் ஆராயப்பட வேண்டியதாகும்.

**கள்ளியங்காடு**

கள்ளி + அம் + காடு = கள்ளியங்காடு. இது நல்லூருக்கு அருகேயுள்ள ஓரிடமாகும். தமிழரசர் காலத்திலே பரநிருபசிங்கனுக்குரிய ஊர்களில் ஒன்றாக இது இருந்திருக்கிறது. (யாழ்ப்பாண வைபவமாலை - 56) பரநிருபசிங்கன் சிறந்த மருத்துவன் ஆவார். அவருடைய மருந்துத் தோட்டமே கள்ளியங்காடு. ஆயுள் வேத மருத்துவ மூலிகைச் செடிகளில் கள்ளியும் ஒரு சிறந்த மூலிகை. அதில் நாற்பது வகையான கள்ளிச் செடிகள் உள்ளன என அறியப்படுகிறது. எனவே அம் மூலிகைச் செடிகள் வகை வகையாக இங்கே வளர்ந்து காணப்பட்டமையால் கள்ளியங்காடு என இவ்விடம் பெயர் பெறுவதாயிற்று.

சங்கிலியின் தோப்பு எனக் கூறப்படுமிடமும் இங்கேயே அமைந்திருக்கிறது. அத் தோப்பின் நுழைவாயிற் கோபுரம் இன்றும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை சாலை அருகே காணப்படுகின்றது. தமிழரசர் காலத்துப் பழைய கட்டிட அழிபாடுகளின் அடித்தளங்களும் தென்படுகின்றன. தமிழ் மறவர் மரபில் வந்தோர் இங்கு வாழ்கின்றனர். இவர்கள் தமிழ் அரசர் காலத்து மெய்க்காப்பாளராக இருந்தனர் என அறியப்படுகிறது.

**பள்ளன்காடு**

இது ஆனைக்கோட்டையிலுள்ளது. நிலத் தோற்றத்தால் இது பள்ளமாகவும், வயற்பிரதேசமாகவும் காணப்படுகின்றது. காக்கைத் தீவில்

நடைபெற்ற அகழ்வாய்வுச் சான்றுகளை கொண்டு, பள்ளங்காடும் பண்டைய கற்காலக் குடியிருப்புப் பகுதியாக இருந்தது எனக் கூறப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் முதன் முதலாக சாயச்சீலை தயாரிப்பதற்குரிய சாயம் இங்கேயே தயாரிக்கப்பட்டது என்பர். இதற்குரிய இடமாகப் பள்ளன்காடு காணப்பட்டது. இங்கு வாழ்ந்த மக்கள் அதற்குரிய வேர்களைக் கொத்திக் கொடுப்பதற்கு நியமிக்கப்பட்டனர்.

**சுண்டிக்குழி**

சுண்டி + குழி = சுண்டிக்குழி. சுண்டி என்பதற்கு = தொட்டால்வாடி (தொட்டாற்சுருங்கி) சுச்சு, நீர்ச்சுண்டி, சுக்கு என்பன பொருளாகும். (தமிழ் அகராதி : 196) சுண்டிக்குழி முன்னர் பள்ள நிலமாக இருந்த போது நீர்தேங்கி நிற்க, அங்கு சுண்டிச் செடி செறிந்து காணப்பட்ட நிலையில் இப்பெயர் (சுண்டி + குழி) ஏற்பட்டிருக்கலாம்.

**நாவற்குழி**

நாவல்+ குழி = நாவற்குழி. இவ்விடம் கைதடிக்குத் தெற்கே அமைந்துள்ளது. இது மரப்பெயரடியாக பிறந்த பெயர் ஆகும். நாவல் மரத்திற் குழிநாவல் என்ற ஒருவகையுண்டு. அம் மரப் பெயரடியாகப் பிறந்தது. குழிநாவல் என்ற பெயர் (குழி நவால் > நாவல்குழி) முன் பின்னாகத் திரிந்து நாவல் குழியாக மாறிற்று என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விடத்திற்குச் சம்பகுண்டம் என்ற இலக்கியப் பெயருமுண்டு. இது நாவற்குழி என்பதன் வடமொழியாக்கமாகும். நாவல் மரங்களும் பள்ளங்களும் நிறைந்த இடம் என்ற அடிப்படையில் நாவல் குழி = நாவற்குழி எனப் பெயர் ஏற்பட்டதென்றும் கருதலாம். இதன் புவியமைப்பும் மரஞ்செடிகளின் வளமும் இக் கருத்தைச் சான்றுபடுத்துகின்றன.

**அனலைதீவு**

இது ஊர்காவல்துறைக்கு வடபால் ஏழு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. கடல் குமுறி எழும் நேரங்களில் தீவகம் அலைகளால் அழிவறாவண்ணம் நாற்புறமும் இயற்கையாகவே கற்பாறைகள் அணை போன்றமைந்துள்ள காரணத்தால் இத்தீவிற்கு அணைத் தீவு என்னும்



பெயர் ஏற்பட்டது. அதுவே நாளடைவில் அணைலதீவு > அணலதீவு > அனலைதீவு என வழிமுறையாக மருவி வழங்கிற்று என்று ச. சதாசிவம் பெயர் விளக்கம் கூறுகிறார் (1979 : பக் : 70-76). அனல் + தீவு = அனல் தீவு > அனலைத்தீவு என மாற்றம் பெற்றதெனவும் இப் பெயர்த் தோற்றத்திற்கு விளக்கம் கூறுவாருமுளர்.

**இரணைதீவு**

பூநகரிப் பகுதியிற் குமுளமுனைக்கு மேற்கே பெரியதீவு, சிறுதீவு என்ற இரு தீவுகள் அருகருகே காணப்படுகின்றன. அவ்விரு தீவுகளையும் ஒன்றாகக் குறிக்கும் பெயரே இரணைதீவு என்பதாகும். இங்கு மீன்பிடித்தொழிலே முதன்மை பெற்றுள்ளது. இவ்விடத்தில் வாழும் மக்களுக்கும் வலைப்பாடு என்ற ஊர் மக்களுக்கும் சமூக - சமய அடிப்படையில் மிக நெருங்கிய ஒருமைப்பாடுகள் காணப்படுகின்றன. (இரணைமடு இடப்பெயர் விளக்கம் பார்க்க பக் : 203)

**எழுவைதீவு**

ஈழ் > எழு > எழுவை + தீவு = எழுவைதீவு. ஈழ், எழு என்னும் சொற்கள் அழகு, எழில் என்னும் பொருள் குறிப்பன. எனவே எழுவைதீவு என்பது அழகிய தீவு எனப் பொருள் தருகிறது. எழுவைதீவு என்ற பெயர்க்காரணம் பற்றி மேலுஞ் சில விளக்கங்கள் காணப்படுகின்றன. எழு என்பது ஒருவகை முட்செடி. இதனைக் கணையமரம் என்கிறது தமிழகராதி (பக். 59). எழு மரங்கள் இங்கு செறிந்து காணப்பட்டமையால் எழு + தீவு > எழுவைத்தீவு எனப் பெயர் ஏற்படுவதாயிற்று என ஊகிப்பதும் தவறாகாது.

**காரைதீவு (காரைநகர்)**

சப்த தீவுகளில் ஒன்றாகிய காரைதீவு, 12.09.1923 ஆம் திகதி முதலாக அரச ஒப்புதலுடன் காரைநகர் என்ற பெயரால் வழங்குகின்றது. 1887இல் பதிப்பிக்கப்பட்ட தட்சிணகைலாச புராணத்திலும் காரைநகர் என்ற வழக்கு இடம் பெற்றிருத்தல் கவனிக்கத்தக்கதாம். இத்தீவு தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் 2 கி.மீ. நீளமுள்ள பாலத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் காரைதீவு என்ற பெயரில்

மூன்று ஊர்கள் காணப்படுவதால், அவற்றிலிருந்து இதனைப் பிரித்துக் காட்டவும், பாலத்தின் மூலம் இத்தீவு இணைக்கப்பட்டதன் காரணமாகவும் இதற்குக் காரைநகர் எனப் பெயர் மாற்றம் செய்தனர். பண்டை நாளில் இங்கு காரைச் செடிகள் காணப்பட்டமையால் இத்தீவு காரைதீவு எனப்பெயர் பெறுவதாயிற்று.

**கச்சதீவு**

இது நெடுந்தீவுக்குத் தென்மேற்கே 12 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது கற்றரையாகவே காணப்படுவதால் மக்கட் குடியிருப்பு இங்கில்லை. ஆயினும் மிகப் புகழ்பெற்ற புனித அந்தோனியார் தேவாலயம் இங்கு அமைந்துள்ளது. பங்குனி, சித்திரை மாதங்களில் இத்தேவாலயத்தில் ஆண்டு தோறும் திருவிழா நடை பெறுகிறது. விழாக் காணச் செல்வோர் குடிநீர் உட்பட அனைத்துப் பொருட்களையும் தம்முடன் எடுத்துச் செல்வது வழக்கமாகும்.

கச்சதீவு என்ற பெயர் எவ்வாறு வந்ததென்பது புதிராகவே இருக்கிறது. கச்சை + தீவு = கச்சதீவு. கச்சை என்பது = கயிறு, அரைக்கச்சு, யானைக்கழுத்திலிடுகயிறு, உடற்றழும்பு, வார், சட்டை எனப் பொருள் தரும் சொல்லாகும். கச்சைக் கொடியோன் கன்னன் ஆவான். பாரதக் கதையுடன் தொடர்புடையதாக மணிபல்லவம் (நயினாதீவு) அமைவதால் கச்சதீவுக்கும் பாரதக்கதைக்கும் தொடர்புண்டா என்பதும் மேலாய்வுக்குரியதாகும். இராமாயணத்துடன் தொடர்புடையதாக, அனுமார் சஞ்சீவிமலையைத் தூக்கி கொண்டு வரும்போது சிதறிய ஒரு கற்பாகமே கச்சைத்தீவென நாட்டார் வழக்கிற் கூறப்படுகிறது. மேலும் வவுனியாவிலுள்ள கச்சுக்கொடி, யாழ்ப்பாணத்திலுள்ள கச்சாய் என்ற இடப்பெயர்களும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுக் கூட்டங்களின் இறுதியில் இத்தீவு அமைந்திருப்பதாலும் இது கச்சை > கச்ச தீவாயிற்று என்றும் கூறப்படுகிறது.

**காக்காதீவு**

இது பூநகரிப்பகுதியில் வலைப்பாடு என்ற இடத்திற்குத் தென்மேற்கே அமைந்த ஒரு சிறு தீவாகும். இங்கு மீன்பிடித் தொழில் நடைபெறுகிறது. இங்கு கூடும் காகக் கூட்டங்களின் காரணமாக இப்பெயர் வந்ததென்பர் (தகவல் : நீலகண்டர் கந்தசாமி. பொன்னவெளி).



**நயினாதீவு**

இத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே சுமார் பதினெட்டு மைல் தூரத்தே அமைந்துள்ளது. இதன் மறு பெயர்களாக நாகதீவு, நாகத்தீவு, நாகநயினார்தீவு, நயினார்தீவு நாகதீபம், நாவல்தீவு, பூந்தோட்டம், சம்புத்தீவு, மணிபல்லவர், மணி-பல்லவத்தீவு, மணிநாகதீவு, பிராமணர்தீவு, மணித்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம் எனத் தமிழிலும் நாகதிவயின என சிங்களத்திலும் ஹார்லெம் என டச்சுமொழியிலும் வழங்கப்படுகின்றது. இப்பெயர்கள் வழங்கப்பட்டமைக்கு மரபு வழியாகக் கூறப்படும் பல்வேறு காரணங்களும் விளக்கங்களும் இங்கே ஆராயப்படுகின்றன.

(நாகதீவு : நாகர்களின் ஆதிக்குடியிருப்பாலும், நாக வழிபாட்டாலும், நாகங்கள் பெரிதும் வாழ்ந்தமையாலும் நாகதீவு எனப்பெயர் ஏற்பட்டிருத்தல் இயல்பே.)

**குறிஞ்சாத்தீவு**

இது ஆனைஇறவுக்கும் இயக்கச்சிக்கும் இடையேயுள்ள ஓரிடமாகும். இங்கு உப்பளம் அமைந்துள்ளது. குறிஞ்சாச் செடிகள் செறிந்து காணப்பட்ட நிலையில் இப்பகுதிக்குக் குறிஞ்சாத்தீவு எனப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**கேரதீவு**

யாழ்நகரிலிருந்து சங்குப்பிட்டியூடாகப் பூநகரிக்குச் செல்லும் சாலை கேரதீவின் ஊடாகவே செல்கிறது. இத்தீவு மறவன் புலவுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையே அமைந்துள்ளது. சேர நாடு, கேரளம் என மாறியது போன்று சேரதீவு, கேரதீவு ஆயிற்றோ என்பதும், இப்பகுதியில் சேரர் குடியேற்றம் இடம் பெற்றிருந்ததா என்பதும் ஆய்வுக் குரியனவாகும்.

**நெடுந்தீவு**

யாழ்ப்பாணக்குடாநாட்டின் தென்மேற்குத் திசையிலே அமைந்துள்ள நெடுந்தீவு, யாழ்ப்பாணத்தில் இருந்து ஏறக்குறைய இருபது

மைல்களுக்கு அப்பாலும், இராமேஸ்வரத்திலிருந்து இருபது மைல் தொலைவிலும், பூநகரியிலிருந்து நேர்மேற்கே பதினாறு மைல் தூரத்திலும் அமைந்துள்ளது. இத்தீவு கிழக்கு மேற்காக 5 மைல் நீளத்தையும், வடக்குத் தெற்காக 5 மைல் அகலத்தையும் கொண்டுள்ளது. இது, தலைத்தீவு, பசுத்தீவு, பால்தீவு, அபிஷேகத்தீவு, தயிர்த்தீவு, அவுசதலோகய, மருந்துமாமலைவனம் முதலான பெயர்களால் பண்டை நாள் முதலாக அழைக்கப்பட்டு வருகின்றது. இவை யாவும் காரணப் பெயர்களாகும். நெடுந்தீவு என்ற சொல்லின் வருமொழி முதலில் வரும் நெடும் என்பது இத்தீவின் நீளத்தைக் குறிப்பிடவில்லை. நெடுந்தீவானது, யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நெடுந்தொலைவில் இருப்பதையே குறிப்பதாகும். தீவுக் கூட்டங்களுள் மிகவும் (நெடும்) நீளமான தீவு வேலணைத் தீவு என்பது குறிப்பிடத்தக்கது.

**பாலை தீவு**

பாலை என்பது = பாலைநிலம், இருள்மரம், முள்மகிழ், காட்டிருப்பை, காட்டலரி (த.லெ.5:2631) எனப் பல்வேறு பொருள் தருஞ்சொல்லாகும். பயனற்ற நில அமைப்புக் கொண்டது என்ற பொருளில் இத்தீவுக்குப் பாலைதீவு எனப்பெயர் ஏற்படுவதாயிற்று.

பூநகரிப் பகுதியின் மேற்குக் கடலிலுள்ள இரணை தீவுக்குப் பக்கத்திலுள்ள தீவுகளில் பாலைதீவும் ஒன்றாகும். இங்கு மக்கள் குடியிருப்பில்லை. மீன்பிடிப்போர் இங்கு வந்து தங்கியிருந்து மீன் பிடிப்பதுண்டு.

**சிறுத்தீவு**

இது இரணை தீவுகளில் ஒன்றான சிறிய தீவாகும். இப்பெயருடைய இன்னொரு சிறுத்தீவு யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதிக்கு மேற்கே அமைந்துள்ளது. இங்கு ஒரு சில குடும்பத்தினர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வாழ்கின்றனர் (தகவல்: ஊட்டின் மனுவேற்பிள்ளை, குருநகர்). மண்டைதீவுக்கு அருகில் இத்தீவு அமைந்திருப்பதாலும், அதனிலும் இது சிறிதான தன்மையாலும் ஒப்பு நோக்கிலே சிறுத்தீவு எனப்பெயர் பெற்றுள்ளது.



**புங்குடு தீவு**

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுகளின் நடுநிலையாக விளங்குவது புங்குடுதீவு. யாழ்நகரிலிருந்து செல்லும் 18 மைல் நீளமுள்ள பெருஞ்சாலையின் மூலம் இத்தீவு யாழ் நகருடன் இணைக்கப்பட்டுள்ளது. குடாக்கள், முனைகள் என்பன அமையப் பெற்ற இத்தீவின் சுற்றளவு 21 மைல்களாகும். இது கிழக்கு மேற்காக 5.5 மைல் நீளமும், வடக்குத்தெற்காக 3 மைல் அகலமுங் கொண்டு தோற்றமளிக்கிறது. புங்குடுதீவு என்ற பெயர்த் தோற்றத்திற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன:

அ) தமிழகத்திலுள்ள ‘பூங்குடி’ என்னும் ஊர்ப்பெயரைப் புங்குடு தீவுடன் தொடர்புபடுத்தி பெயர் விளக்கம் கூறப்படுவதுமுண்டு. முஸ்லீம் படைஎடுப்பு தமிழகத்தில் ஏற்பட்ட போது, அங்குள்ள பூங்குடி ஊரினர் படையெடுப்பாளர்களது கொடுமைகளிலிருந்து தமது கன்னிப் பெண்களைப் பாதுகாக்க வேண்டி அவல நிலையில் இங்கு தப்பி ஓடிவந்து குடியேறினர். அதனால் இத்தீவு ‘பூங்கொடி’, ‘திருப்பூங்கொடி’ எனும் பெயர்களைப் பெறுவதாயிற்று. இவ்வகையில் பூங்கொடித்தீவு என வழங்கி, அது காலப்போக்கிற் புங்குடுதீவு என மருவிற்றென்பர்.

ஆ) இங்கு செல்வம் செழித்திருந்தமையால் ‘பொன்னகையூர்’ என்ற பெயர் வழங்கிற்றென்றும் கூறுவர்.

இ) இங்கு ‘புயங்கு’ என்ற ஓரினமரங்கள் நிறைந்து காணப்பட்டமையால் இது ‘புகங்கதீவு’ என வழங்கிப் பின்பு அது புங்குடுதீவு என மருவிற்று என்றுங் கருதுகின்றனர்.

**வேலணை**

யாழ்நகரிலிருந்து தீவுகளைத் தொடுத்துச் செல்லும் சாலையின் மூலம் வேலணைத்தீவு குடாநாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது ‘லைடன் தீவு’ எனவும் வழங்கப்படும். நான்கு மைல் நீளமும் மூன்று மைல் அகலமுங் கொண்ட இத்தீவின் உட்பகுதிகளாக அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, சரவணை, நாரந்தனை, கரம்பொன், சுருவில், ஊர்காவல்துறை ஆகியன அமைந்துள்ளன.

வேல் - அணை = வேலணை. வேல் அணைந்த இடம் என்பது இதன் பொருள். இதன் அயற்பதியாகிய சரவணை (சரவணன் - அணை = சரவணை) என்பதும், சரவணன் (முருகன்) அணைந்த (எழுந்தருளிய) இடம் எனப்பொருள் தொனித்தலும் நோக்கத்தக்கன. மேலும் செருத்தனை, சிற்பனை முருக மூர்த்தி கோயில், சோழாவத்தை முருகமூர்த்தி கோயில், வங்களாவடி முருகன் கோயில் என்பனவும் இப்பகுதியில் முருக வழிபாடு (வேல் வழிபாடு) முதன்மை பெற்றிருந்தலையும், அதனால் முருக வழிபாட்டுடன் தொடர்புடையதாக இடப்பெயர்கள் ஆக்கம் பெற்று வழங்கி வந்திருத்தலையும் அறியக் கூடியதாகவுள்ளது. மேலும், பண்டை நாளில் வேலன் என்ற தலைவனின் பொறுப்பில் வேலணையூர் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு வேலனால் நிருவகிக்கப்பட்டு வந்தமையினால் வேலணை எனப்பெயர் பெற்றதென்பர்.

**மண்டைதீவு**

மண்டை - தீவு = மண்டை தீவு. மண்டை = தலை. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுகளுக்குத் தலையாய தீவாக இது விளங்குவதால் மண்டைதீவு எனப் பெயர் பெறுவதாயிற்று. இத்தீவு தலைத்தீவு என்றும் வழங்கப்படுகிறது. தமிழர் பண்பாட்டில் இடம்பெறும் பாணர்களின் வரிசையில் மண்டைப்பாணர் என்போர் ஒரு வகையினராவர். மண்டைப் பாணருக்கும் இத்தீவுக்கும் தொடர்புண்டோ எனவும் ஆராய்தல் தகும். சிங்களத்தில் 'மண்டை' என்பது ஆமணக்கைக் குறிக்குமென்றும், அதனடியாகத் தோன்றிய 'மண்டை தீவயின' என்ற சிங்களப் பெயரே தமிழில் வழங்கிற்று என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

சங்கு - பிட்டி = சங்குப்பிட்டி. இது பூநகரிப் பகுதியிலுள்ள ஓரிடமாகும். யாழ்ப்பாணம் பூநகரிப் பாதையில் இவ்விடம் அமைந்துள்ளது. இப்பகுதிக் கடலில் முன்னர் பெருமளவில் சங்கு பிடிக்குந் தொழில் நடைபெற்றிருக்க வாய்ப்புண்டு. அதன் காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**சிறுப்பிட்டி (வலி.கி.80.2)**

சிறு + பிட்டி = சிறுப்பிட்டி. யாழ்ப்பாணத்துக்கு வடக்கே எட்டு மைல் தொலைவிற் புத்தூருக்கும் நீர்வேலிக்கும் இடையே இவ்வூர் அமைந்துள்ளது. முன்பு இவ்விடம் சிறிய பிட்டியாகக் காணப்பட்டது என்றும், காலப்போக்கிலே குடியிருப்புப் பகுதியாக இது மாறியுள்ளது எனவும் கூறுவர்.



**உடுப்பிட்டி**

உடு + பிட்டி = உடுப்பிட்டி. இவ்வூரின் தெற்கும் மேற்கும் வயல்வெளி. கிழக்கே கரணவாய். வடக்கே வல்வெட்டி ஆகியன அமைந்துள்ளன. உடுப்பிட்டியின் அமைவிடம் திடலாகவும் அதன் எல்லைப்புறம் உடுவடிவிற் (நட்சத்திரம்) காணப்பட்டமையாலும் இப்பெயர் வந்ததெனலாம்.

**அல்லைப்பிட்டி**

அலை + பிட்டி = அலைப்பிட்டி > அல்லைப் பிட்டி எனப் பெயராக்கம் பெற்றதெனக் கூறப்படுகிறது. கடல் அலைகள் மோதுமிடம் என்பது இதன் பொருள். வேலணைத் தீவின் தென் பகுதியில் அல்லைப்பிட்டி அமைந்துள்ளது. இத்தீவின் எல்லையோரம் திடலாக அமைந்திருந்தமையால் 'எல்லைப்பிட்டி' எனப்பெயர் ஏற்பட்டு, பின்னர் அது அல்லைப்பிட்டி எனத் திரிபடைந்திருக்கலாம்.

**மணற்காடு**

மணல் + காடு = மணற்காடு. காடு = குவியல், மிகுதி என்பனவற்றை வெளிப்படுத்துஞ்சொல். இது வல்லிபுரத்திற்குத் தென்கிழக்கே கடற்கரையோரமாக அமைந்துள்ள இடம். மணல் வெளிகளும் சிறு பற்றைகளும் காணப்படுவதால் மணற்காடு என்று பெயர் பெற்றுள்ளது. மணல் நிறைந்து பரந்து காணப்படும் நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இங்கு மீனவர்களின் சிறு குடில்களே காணப்படும். இவை மணல் மேடுகளால் மறைக்கப்பட்டு விடுவதால், அடிக்கடி குடிசைகள் புதிது புதிதாக அமைக்கப்படும். இங்கே கத்தோலிக்க தேவாலயம் ஒன்று மணலால் புதையுண்டதாகக் கூறப்படுகிறது.

**மண்கும்பான்**

மண் + கும்பம் + ஆன் > மண்கும்பான். இது வேலணைத்தீவின் கிழக்கேயுள்ள ஒரு பகுதியாகும். இங்கு காலத்திற்குக் காலம் வீசிவரும்

பெருங்காற்றாற் பெரியளவிலான மண் குவியல்கள் ஏற்படலாயின. அதன் காரணமாகவே இப்பெயர் அமைவதாயிற்று. இதன் தென்கரையில் துறைமுகம் இருந்ததாகவும், இங்குள்ள 'கப்பலடி' என்ற பெயர் துறைமுகத்தினை நினைவூட்டுவதாகவும் காணப்படுகிறது.

**கீரிமலை**

காங்கேசன் துறையிலிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவிற் கடற்கரையோரமாகப் புனித நீரூற்றுத்தலமாகக் கீரிமலை அமைந்துள்ளது. இங்கு முன்னர் காடு இருந்ததென்றும், கீரிகள் அதிகம் காணப்பட்டன என்றும், அதனால் இவ்விடத்திற்குக் கீரிமலை என்ற பெயரேற்பட்டதென்றும் கூறப்படுகிறது. ஆடி அமாவாசை நாளன்று பல நூற்றுக்கணக்கானோர் இந் நீரூற்றில் தீர்த்தமாடி பரவசமடைகின்றனர்.

**சுதுமலை**

சுது + மலை = சுதுமலை. மலை என்று கூறுவதற்குரிய பின்னணியாக மலையோ, மண்மேடுகளோ, மணற்றிடலோ இவ்வூரிற் காணப்படவில்லை. சுது என்பது சிங்களத்தில் வெள்ளை எனப்பொருள்படும். சுவாமி ஞானப்பிரகாசர், சுல் என்பதற்கு = வெள்ளி: சுள் > சுள்ளு > சுது > சுடு = எரி என்று பொருள்கள் கூறுகின்றார். சுள் > சுள்ளு > சுது என்பதற்கு = ஒளி செய்தல் என்ற பொருளுங் காணப்படுகின்றது. எனவே இவ்விடத்துடன் தொழில் அடிப்படையில் இவ்விடப் பெயரின் பொருளறிய வேண்டியுள்ளது. சங்கு + அளை > சங்களை என்ற வயற் பகுதிப் பெயரும் கோயிலை அடுத்துக் காணப்படுகின்றது. சங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த இடங்கள் வெள்ளைக் குவியல்களாகக் காணப்பட்டபோது, சுது (வெள்ளி) மலை என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**முறிகண்டி**

முறி + கண்டி = முறிகண்டி. கண்டி என்பதற்கு நீர் நிலத்திலிருந்து பிறீட்டு மேலே பாய்தல் என்ற பொருளுமுண்டு. முறிகண்டி = என்பதற்கு நிலம் பிளந்து மேலே நீர் பீறிட்டுப் பாய்ந்த இடம் எனவும் பொருள்



கூறப்படுகிறது. கிளிநொச்சிக்குச் சிறிது தூரத்தே யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலையின் 151ஆம் மைல் கல்லுக்கு அருகில் தெருப்பிள்ளையார் கோயில் கொண்ட இடமாக இது அமைந்துள்ளது. இத் தெருவால் செல்லும் அனைவரும் இக்கோயிலடியில் தரித்து நின்று வழிபாடியற்றி அப்பாற் செல்வது வழக்கம். இக்கோயிலிலிருந்து உள்நோக்கி 8 மைல் தூரத்தில் பழையமுறி கண்டி என்ற ஓரிடமுண்டு. அங்கு இப்பெயரால் குளமும் ஒரு கோயிலுமுள்ளன. இப்பகுதி பண்டை நாளில் யானைகள் நடமாட்டமுடைய காடாகவே திகழ்ந்தது.

**கொடிகாமம்**

தென்மராட்சிப்பகுதியிற் சாவகச்சேரிக்குக் கிழக்கே 6 மைல் தொலைவில் கொடிகாமம் அமைந்துள்ளது. இதனூடாக யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலையும், கச்சாய் + பருத்தித் துறைத் தெருவும் செல்கின்றன. தென்னந்தோப்புக்களும், மாஞ்சோலைகளும், பனந்தோட்டங்களும் நிறைந்த மணற்பூமியாக இவ்வூர் காணப்படுகிறது. இதன் எல்லைப்புறங்களில் வயல் வெளிகள் உள்ளன. திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள் கூடும் பெரிய சந்தையும், பேருந்து தரிப்பு நிலையம், புகையிரத நிலையம், அஞ்சல் அலுவலகம் முதலான பல வசதிகளும் அமைந்துள்ளன.

இப்பகுதியிலே முன்பு பெருந்தொகையாகக் கமம் செய்யப்பட்டமையினால் எண்ணிக்கையடிப்படையில் கோடிகமம் என்ற பெயர் ஏற்பட்டு, காலப்போக்கில் கோடிகமம் > கொடிகாமம் ஆயிற்று என்பாருமுளர். கூட்டமாகச் சேர்ந்து (கோஷ்டியாக) கமஞ் செய்த இடம் கோஷ்டி + கமம் > கோடிகமம் > கொடிகாமம் ஆயிற்று என்றும் விளக்கம் கூறப்படுகின்றது.

**அளவெட்டி**

அள + வெட்டி = அளவெட்டி. அள் = செறிவு, கூர்மை. அள் > அள்ளல் + சேற்றின் குழம்பு. அளறு = நீர் சேறு மனச்சாந்து (பாட்டுந் தொகையும் : 1958 : 34 : சூடாமணி நிகண்டு : 105). அளறு + வெளி > அளவெட்டி. வெடி > வெளி (சொற்பொருள் விளக்கம் எனும் அகராதி

: 1960 : 283) வெடி > வெட்டி வெடி என்பதில் இடைநிலை மெய் இரட்டித்து வெட்டியாயிற்று. வெளிநாடு என அழைக்கப்பட்ட பகுதியின் அரசன் வெளி அரசன் > வெடி அரசன் எனப் பெயர் பெற்றிருத்தலும் ஈண்டு நோக்கற்பாலது. அளவெட்டி வழுக்கையாற்றைச் சார்ந்து பசுமையான ஈரலிப்புப் பகுதியாகக் காணப்படுவதால் இது அளறு + வெடி அல்லது அளறு + வெளியாக இருந்து அளவெட்டியாயிற்று எனக் கொள்வது பொருத்தமாகும்.

**சுன்னாகம்**

சுல் + நாகம் = சுன்னாகம். சுல் + நாகம் என்பதில் சுல் > சுல்லு = வெள்ளி, வெள்ளை எனவும்; நாகம் = மலை. கற்பாறை எனவும் சொற்பொருள் தருதல் நோக்கற்பாலது. சுன்னாகம் பகுதியில் வெள்ளைக் கற்பாறை செறிந்து காணப்பட்டமையால் நிலவியல்பு குறித்துப் பண்டைத் தமிழர் இவ்விடத்துக்குச் சுன்னாகம் எனப் பெயர் வழங்கியிருத்தல் இயல்பானதே. இப் பெயரைச் சுண்ணாகம் என எழுதுவதுமுண்டு. அவ்வாறாயின் சுன்னம் > சுண்ணம் + அகம் = சுண்ணாகம் எனப் பெயர்த் தோற்றம் அமைந்திருக்கலாம். சுண்ணக் கற்களுள்ள இடம் என்பது இதன் பொருளாம்.

**மல்லாகம்**

மல்லர் + அகம் = மல்லாகம். யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் சுன்னாகத்துக்கு வடக்காக இவ்விடம் அமைந்துள்ளது. மல்லர்கள் குடியிருந்த இடம் என்பது இப் பெயர்ப் பொருளாகும். தோட்டக்காணிகள் செறிந்த செம்பாட்டு நிலப்பகுதியாக மல்லாகம் விளங்குகிறது. இங்கு ஆங்கிலேயர் காலம் முதலாக மாவட்ட நீதிமன்றமும் இயங்கி வருகிறது. இங்குள்ள சோழியங்கட்டை என்ற குறிச்சிப் பெயர் சோழர் கால்த் தொடர்பைக் காட்டுகின்றது.

**அரியாலை**

அரி + ஆலை = அரியாலை. நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில், யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஒரு பிரிவாக அரியாலை அமைந்துள்ளது. யழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலை இதனூடாகச்



செல்கிறது. அரி > அரிதல். இங்கு முன்பு மரமரிவோர் பெரிதும் வாழ்ந்திருக்கலாம். அதன் தொடர்சியாக இன்றும் மரம் அரியும் ஆலைகள் சில அரியாலையிற் காணப்படுகின்றன. எனவே தொழிலை அடிப்படையாகக் கொண்ட ஆலை ஈற்றுப் பெயராக இவ்வூர் ஆக்கம் பெற்றுள்ளமை பெறப்படுகிறது.

அரியாலை என்ற பெயர் எப்படி வந்தது? என்பது பற்றி இன்னும் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமைகள் இருக்கவே செய்கின்றன. அரி + ஆலயம் > அரியாலை என வழங்கிற்று என்று கூறுவர். தொடக்கத்தில் இங்கு விஷ்ணு ஆலயம் இருந்திருக்குமா என ஆராய்தல் பயன்தருவதாகும். அரியாலை முனையிலுள்ள கோயிலிலிருந்தே இந்த ஊர்ப் பெயர் பிறந்தது என்பதைப் பலர் ஏற்றுக் கொள்கின்றனர்.

**இளவாலை**

இளவாலை என்ற பெயர்க்காரணி ஏனைய ஆலை ஈற்று இடப்பெயர்களைவிட, முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறது. இவ்வூர் மிகவும் வளமான இடமாகவும், வாழைத் தோட்டங்கள் நிறைந்த பகுதியாகவும் அமைந்துள்ளது. வாழையினங்களில் இலை வாழை என்ற ஒரினமுண்டு. இந்த இடத்தில் இலைவாழை நன்கு செழித்தோங்கியமையாற் பொருளாகுபெயரால் இலைவாழை என்ற பெயர் இவ்விடத்திற்கு ஏற்பட்டு காலப்போக்கில் அது இலைவாழை > இளவாலை என லகரம் > ளகரமாகவும், ழகரம் > லகரமாகவும் மாற்றங்களுக்குட்பட்டு இளவாலை என்ற இடப்பெயராக வழங்குகின்றது.

**ஏழாலை**

ஏழு + ஆலை = ஏழாலை. தோட்டக் காணிகள் நிறைந்த வளமான இடம் ஏழாலை. இங்கே பெருங்கிணறுகள் தோண்டப்பட்டு அவற்றிலிருந்தே தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. ஏழாலையில் மிகச்சிறந்த நன்னீர்க் கிணறுகள் உள்ளன. ஒரே நேரத்தில் நீர் இறைக்கும் ஏழு இயந்திரங்கள் (மனித வலுவால் அல்லது எருதுமாடுகளால் இயக்கப்படுவது) பூட்டப்பட்ட பெருங்கிணறுகள் அவ்வூரில்

இருந்திருக்கலாம். அந்நிலையில் (ஏழு + ஆலை) ஏழாலை என்ற பெயர் இவ்வூருக்குச் சூட்டப்பட்டிருக்கலாம். ஆயினும் இப்பெயர்க் காரணம் மேலும் ஆய்வுக்குரியதாகும்.

கோயில்களை அடிப்படையாகக் கொண்டு இப்பெயர் வழங்கிற்றென்றே இவ்வூர் மக்கள் கூறுவர். இங்கு புங்கடி அம்மன் கோயில், அம்பலவாணேசுவரர்கோயில், அத்தியடிப் பிள்ளையார் கோயில், அத்தியடி முருகமூர்த்திகோயில், பெரிய தம்பிரான் கோயில், வீரபத்திரர் கோயில், வயிரவர் கோயில் என ஏழு கோயில்கள் அமைந்துள்ளன. இந்த ஏழு ஆலயங்களும் ஒரே சூழலில் இருந்தமையால் ஏழாலயம் என்ற பெயர் வழங்கி வந்து, காலப்போக்கில்அப் பெயரிலுள்ள (ஏழ் + ஆலயம்) ஈற்று அம் அசை கெட்டு, ஏழாலை என மருவி வழங்கிவரலாயிற்று.

**சரசாலை**

சரசு + ஆலை = சரசாலை. இவ்வூர் சாவகச்சேரியிலிருந்து வடகிழக்கே மூன்று மைல் தொலைவிலுள்ளது. இராமாயணத்துடன் தொடர்புபடுத்தி இவ்விடப் பெயருக்கு விளக்கம் கூறுவர். இராம, இராவணப் பெரும்போரின் போது இராமனுடைய படைகள் சரங்களைச் சேகரித்து வைத்த சாலையாக இவ்விடம் விளங்கியமையாற் சரசாலை எனப் பெயர் ஏற்பட்டதென்பர். மேலும், இங்கு மரங்கள் செறிந்து சருகுகள் பெருகிக் காணப்பட்டதால் சரசர என்ற ஒலி நிலையில் இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர்.

**சில்லாலை**

சில் + ஆலை = சில்லாலை. யாழ்ப்பாணத்திலிருந்து வடமேற்கே பத்து மைல் தொலைவில் சில்லாலை அமைந்துள்ளது. இப் பெயர்த்தோற்றத்திற்குப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆலை என்பதற்குக் கரும்பு நெரிக்கும் சாலை என்றும் ஒரு பொருள் உண்டு (பாட்டும் தொகையும் : 38). இங்கு டச்சுக்காரர் காலத்தில் கருப்பஞ்சீனி செய்யும் சிறு ஆலைகள் இருந்ததாகவும் அதனால் இவ்விடம் சில்லாலை எனப் பெயர் பெற்றதெனவும் கூறுவர்.



**பொன்னாலை**

பொன்+ ஆலயம் = பொன்னாலயம் > பொன்னாலை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்குமூலையின் கரையோரமாக அமைந்த பழைமை சான்ற பதியே பொன்னாலை. கி.பி 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹோகில சந்தேஸ என்ற சிங்கள தூது இலக்கியத்தில் வட இலங்கையிற் பொன்னாலையிலும் வல்லிபுரத்திலும் பழைமை மிக்க விஷ்ணு கோயில்கள் இருந்தமை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் பற்றிய புராணச் செய்திகள் ஸ்கந்தபுராணத்து தட்ஷிண கைலாச மான்மியத்திலும் கந்த புராணத்திலும் இடம்பெற்றுள்ளன. கந்தபுராணத்திற் குறிப்பிடப்படும் பொன்னகர், பொன்னின் நாடு என்பன இப் பொன்னாலையையே குறிக்குமென்பாரும் உளர்.

**மீசாலை**

மீ + ஆலை = மீயாலை > மீசாலை. சாவகச்சேரிக்குக் கிழக்கே மீசாலை அமைந்துள்ளது. மீசு + ஆலை = மீசாலை. உயர்ந்த மரச்சோலைகள் உள்ள இடம் என்றும், (மீசாலை, மாசாலை) மாசாலை = மாமரச் சோலைகள் நிறைந்து காணப்படும் இடமென்றும் விளக்கம் கூறப்படுகின்றது. இக் கருத்துக்களைச் சான்றுபடுத்தும் வகையில் தென்மராட்சிப் பகுதியிலே மா, பலா, தென்னை முதலிய மரங்கள் இன்றும் சோலையாக வளர்ந்து காட்சி தரும் இடமாக மீசாலை விளங்குவதைக் குறிப்பிடலாம். இங்கு மாவடிப்பிள்ளையார் கோயில் ஒன்று உள்ளது. இங்கு ஒவ்வொரு காணியிலும் மாமரம் நிற்கக் காணலாம். மாம்பழமும் அதிகம் பெறப்படுகிறது. வெள்ளை மாவடி, கரும்பு மாவடி, பாண்டிக்கேணி (பாண்டி = ஒரு வகை மாமரம்) ஆகிய குறிச்சிப் பெயர்கள் மா மரத்தை முதனிலையாகக் கொண்டு பெயர் பெற்றிருத்தலும் நோக்கற்பாலது.

**நல்லூர்**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள முருக வழிபாட்டிடங்களுள் பழையனவாகவும் பெருமை மிக்கனவாகவும் திகழ்வன நல்லூர், மாவிட்டபுரம், சந்நிதி ஆகியனவாகும். நல்லூர் கந்த சுவாமி கோயிலை

நடுவணாகக் கொண்ட இடமே நல்லூர். இதன் வடக்கே சட்டநாதர் கோயிலும், கிழக்கே வெயிலுக்கந்த பிள்ளையார் கோயிலும், மேற்கே வீரமாகாளி அம்மன் கோயிலும், தெற்கே கைலாசநாதர் கோயிலும் எல்லைக் காவல்நிலைக் கோயில்களாக அமைந்துள்ளன.

இது யாழ்ப்பாண அரசின் தலைநகராக விளங்கியமையாலும், இங்கே புகழ் வாய்ந்த முருகன்கோயில் காணப்படுவதாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகச் சிறந்த ஓரிடமாக நல்லூர் திகழ்கிறது. நல்ல + ஊர் என்பதே நல்லூராக அழைக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

**பாசையூர்**

பாசி + ஊர் = பாசியூர் > பாசையூர். யாழ்ப்பாண மாநகரசபை எல்லையின் தென்கிழக்கே யாழ்ப்பாணக் கடலின் ஓரமாக பாசையூர் அமைந்துள்ளது. இவ்வூரின் எல்லையில் பரவைக்கடல் அமைந்திருப்பதால் ஆங்காங்கே கடற்கரை ஓரங்களிற் பாசிகள் படர்ந்திருத்தல் இயல்பே. அந்நிலையில் பாசி + ஊர் = பாசியூர் > பாசையூர் என்று வழங்கியிருக்கலாம்.

பாசை + ஊர் > பாசையூர் என்ற அடிப்படையிலும் விளக்கம் கூறப்படுகிறது. Pass (Passo - sense of cases of quay or village) என்ற போர்த்துக்கேயச் சொல்லிலிருந்தே பாசையூர் என்ற பெயர் தோன்றிற்று என்கிறார் சுவாமி ஞானப்பிரகாசர் (1919: 75:77). இங்கு கத்தோலிக்கரே பெரும்பான்மையோராக வாழ்கின்றமை அவரது கருத்தைப் பொருளுடையதாக்குகின்றது.

**சாவகச்சேரி**

சாவகர் + சேரி > சாவகச்சேரி. சாவகம் > சாவகர். சாவகம் என்பது யாவா, சுமாத்திரா ஆகிய இடங்களைக் குறிக்கும் வரலாற்றுச் சொல்லாட்சியாகும். பண்டைய வரலாறு பற்றி எழுதிய தொலமி (Ptolemy கி.பி. 150) யாவாவைச் சிறிய சாவகம் என்றும், சுமாத்திராவைப் பெரிய சாவகம் என்றும் குறிப்பிட்டுள்ளார். மலாயாக் குடாநாட்டுத் தீபகற்பங்கள் அனைத்தும் பண்டு சாவகம் என அழைக்கப்பட்டன. சாவகநாட்டிலே



பண்டைத் தமிழர் பண்பாடு நன்கு நிலையூன்றியிருந்தமையை அங்குள்ள மொழி, சமயம், கட்டிடம் முதலிய கூறுகள் வெளிப்படுத்துகின்றன. அரசியல் - வணிகம் என்பவற்றினால் இத்தகைய தொடர்புகள் ஏற்பட்டிருக்கலாம் (O.W. Wolters. 1967) முற்காலத்தில் சாவகர் வந்து குடியேறிச் சேரியாக வாழ்ந்த இடம் சாவகச் சேரி ஆயிற்று.

**வண்ணார்பண்ணை**

வண்ணம் + ஆர் + பண்ணை எனவும்; வண்ணார் பண்ணை எனவும் இவ்விடப் பெயரைப் பிரித்து நோக்கலாம். வண்ணார் என்பதற்கு வண்ணந்தீட்டுவோர் (Painters), சலவைத் தொழிலர் எனப் பொருள் காணலாம்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் சாயம் போடுவோர் நல்நிலையில் வாழ்ந்திருக்கிறார்களென்பதை அக்கால வருமானத்துறையை நோக்கின் புலனாகும். தமிழ் அரசர் காலத்தில் அரச பணியின் பொருட்டுப் பல்வேறு தொழிலடிப்படையிலான தொழில்சார் மக்கள் நல்லூர் அரசிருக்கையின் அயலூர்களில் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களுக்குக் குடிமனைகளும் கோயில்களும் தனித்தனியாக இருந்திருக்கின்றன. இப்பின்னணியில் அரச பணியாளர்களாகிய வண்ணக்காரர் (வண்ணம் தீட்டுவோர்) வாழ்ந்த இடமே வண்ணார்ப்பண்ணை என்க. இவ்வூர் யாழ்நகரின் ஒரு பகுதியாதலால் செட்டிமார்களின் குடியிருப்புகளும் பெரிதும் அமையலாயின. அவர்களுக்கு உரிமையானது வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலாகும். இதனைச் செட்டியார் சிவன் கோயில் என்றும் கூறுவர்.

**கோப்பாய்**

கோ + பாய் = கோப்பாய். கோ = அரசன்; பாய் இருக்கை, அரசிருக்கை, இருப்பிடம். எனவே கோப்பாய் என்பது அரசர்களின் இருப்பிடம் என்ற பொருளில் தோற்றம் பெற்ற இடப்பெயராகும். யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பெருஞ்சாலையில் சுமார் ஆறு மைல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. நல்லூரிலிருந்து கோப்பாயினூடாக இராசவீதி செல்கின்றது. படைகளும்,

அரச சுற்றத்தினரும் புடைசூழ மன்னன் உலாவரும் சாலை இராசவீதி என வழங்கிற்று. யாழ்ப்பாணத்துத் தமிழ்மன்னன் முதலாம் சங்கிலி (கி.பி. 1519-1560) கோப்பாயில் தற்பாதுகாப்புக்காகச் சிறிய கோட்டை ஒன்றை அமைந்திருந்தான் என்பது வரலாற்றுச் செய்தி. அங்கு அரசனது கோட்டை அமைத்திருந்தமையால், (கோ+ பாய்) அரசிருக்கை என்ற பொருளில் கோப்பாய் என்ற பெயர் வழங்கிற்று.

**சண்டிலிப்பாய்**

சண்டி + இலுப்பை + பாய் = சண்டிலிப்பாய். சண்டி இலுப்பை என்ற இரு வகை மரங்களின் பெயர்கள் இணைந்து இடப்பெயர் ஆக்கம் பெற்றிருக்கலாம். வயலும் வயல்சார்ந்த இடமும் கொண்டது இவ்வூர். இங்கு சண்டி மரங்களும் இலுப்பை மரங்களும் பெரிதும் காணப்படுகின்றன. பண்டை நாளிற் பெருநகராகத் திகழ்ந்த கந்தரோடையை நோக்கிச் சென்ற நெடுஞ்சாலையிற் சண்டியும் இலுப்பையும் இணைந்து நின்று நிழல் கொடுத்த இடம் என்ற பொருளில் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றிருக்கலாம்.

**மானிப்பாய்**

மானி + பாய் = மானிப்பாய். மாணி என்பதன் திரிபே மானி ஆகும். மானி = மானமுள்ளவர், மாமன், மானியம் என்ற பொருள் குறிக்கும் சொல்லாகும். மானியம் என்பது இறையிலி நிலம். மானியக்காரன் = கிராமத்தில் இனாம் நிலம் முதலியவற்றின் பரம்பரைப் பாத்தியத்திற்குரியவன் (த.லெ. 3191) என்ற அடிப்படையிலும் இப்பெயர் ஆக்கம் பெற்றிருக்கலாம். மானிப்பாயில் பண்டை நாளிற் பிராமணக் குடியிருப்பு பெரிதாக இருந்ததாகக் கூறப்படுகிறது. மானி என்பது பிராமணரையும் பிரமச்சாரியையும் குறிக்கும் சொல்லாக வழங்கியுள்ளது.

**ஆடியமடம்**

ஆடியபாதன் + மடம் > ஆடியமடம். இது கொக்குவில் ஊரின் ஒரு பகுதியாகும். இங்கு ஆடியபாதன் என்பவரால் நிறுவப்பட்ட மடமே ஆடியமடம் ஆகும். அப்பெயர் இவ்விடத்தையும் குறிப்பதாயிற்று. இங்கு முருகன் கோயில் கட்டப்பட்டு இவ்விடம் புதுக் கோவிலடி என இப்போது வழங்கப்படுகிறது. இவ்விடத்திலிருந்து கிழக்கு நோக்கி ஆடியபாதம் வீதி செல்கிறது.



**கந்தர்மடம்**

யாழ்ப்பாண மாநகர சபையின் ஒரு பகுதியாக கந்தர் மடம் அமைந்துள்ளது. இங்கு பல்லாண்டுகளுக்கு முன்பாக கந்தபுராண மடம் அமைந்திருந்ததென அறியப்படுகிறது. அம்மடத்திற்குரிய காணிகள் இங்கே உள்ளன. இங்கே கந்தபுராண வீதி இடம்பெற்றுள்ளது. கந்தர்மடத்திலேயுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னர் கந்தபுராண மடத்துப் பள்ளியாகவே செயற்பட்டது. தென்னிந்தியாவிலே கந்தபுராண அரங்கேற்றம் இடம்பெற்ற அதே காலத்தில் இங்கும் கந்தபுராணப்படனம் நடைபெற்றிருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் தொடங்கப்பட்ட இம் மடம் பின்னர் ஆறுமுகநாவலர் காலத்தில் கந்தர் மடத்துப்பிரபு என்பவரால் பேணப்பட்டதாகக் கூறுவர். இம் மடத்தின் பெயராலேயே கந்தர்மடம் என்ற இடப்பெயர் ஏற்பட்டதாக அவ்வூர் கா.சி. குலரத்தினம் அவர்கள் கூறுவர். இவற்றைவிட இங்கு பழைய மடங்களாகச் சிவகுருநாத குருபீடம் என்னும் தேவாந்தமடம், செல்லப்பிள்ளையார்மடம், சன்னியாசி மடம் என்பன இருந்தன எனவும் கூறப்படுகிறது. இங்கு அரசவெளி என்ற ஓரிடம் இருப்பதும் நோக்கத்தக்கது.

**செட்டியாமடம்**

செட்டியார் + மடம் = செட்டியாமடம். இது அராலி வடக்கில் அமைந்துள்ள ஓரிடம். இங்கு முன்னர் செட்டிமார் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களாற் கட்டப்பட்ட மடம் ஒன்று இருந்ததாகவும் கூறுவர். இவ்வூருடன் இணைந்த பகுதியாக நாகேந்திரா மடம் என்ற இடமும் காணப்படுகிறது.

**மருதனாமடம்**

இது ஒரு பழம் பதியாகும். இங்கு மருதயினார் என்னும் அறப்பணியாளர் ஒருவரால் வழிப்போக்கர்கள் தங்கிச் செல்ல மடமும்,

கிணறும், சுமைதாங்கியும் அமைக்கப்பட்டிருந்தன என்றும், அவரது பெயரால் அம் மடம் வழங்கிற்றென்றும், பின்னர் அம் மடத்தின் பெயரால் இவ்விடமும் பெயர் பெற்றதென்றும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணம் + காங்கேசன்துறை பெருஞ்சாலை இவ்வூரினூடாகச் செல்கிறது. இங்கே சேர். பொன். இராமநாதன் அவர்களால் மகளிர்க்கெனத் தனியாக இராமநாதன் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியின் ஒரு பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி (Ramanathan Academy of Fine Arts) அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆனைக்கோட்டை**

பேச்சு வழக்கில் யானை > ஆனை என வழங்குவதுண்டு. ஆனை + கோட்டை = ஆனைக்கோட்டை வணிகநோக்கமாக யானைகள் கொண்டுவரப்பட்ட அல்லது யானைப் படைகள் தங்கியிருந்த இடம் என்ற பொருளிலேயே இப்பெயர் வழங்கியிருக்கின்றது. ஆனைக்கோட்டை என்பதற்கு யானைகளின் கூட்டம், தொகுதி, நெருக்கம் எனப் பொருள் கொள்ளலாம்.

**வட்டுக்கோட்டை**

வட்டு + கோட்டை = வட்டுக்கோட்டை. வட்டு = என்பது சூதாடுகருவி, திரட்சி, திரண்டபொருள். நீரெறி கருவி வகை, விளையாட்டுக்கருவி, கண்டசருக்கரை, முள்ளி, சிறுதுளி முதலியவற்றைக் குறிக்கும் சொல்லாகும் (த.லெ : 6 : 3471) தொல்புரம் பகுதியிற் பண்டைநாளிற் கோட்டையும் அரண்களும் அமைந்திருந்தனவெனக் கருதப்படுவதால், வட்டுக்கோட்டையும் புறநகர் அமைப்புப் பெற்றிருந்த ஓரிடம் எனக்கருதலாம். வட்டுடைவீரர் சூழ்ந்திருந்த இடம் வட்டுக்கோட்டை ஆயிற்று.

**குருநகர்**

யாழ்ப்பாண மாநகரசபையின் தெற்குப் பகுதியில் 1.5 மைல் தொலைவில் அமைந்துள்ள கடலோரப் பகுதியே குருநகர். கரையூர் என்பதே இதன் பழைய பெயர். அப்பெயர் இன்றும் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தின் அமைவிடம் நோக்கி இது கரையூர்



எனப்பட்டது. இப்பெயர் மாற்றப்பட்டு குருநகர் எனப் புதுப்பெயர் வைக்கப்பட்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் குருகுலத்தார் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்களாதலாற் குருநகர் என்ற காரணகாரியத் தொடர் கருதி இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

குருநகரில் றெக்ளமேஷன் (Reclamation) புதுக்குடியிருப்பு என்ற இரு புதிய குடியிருப்புப்பகுதிகள் அமைந்துள்ளன. குருநகரின் தென்கிழக்கே ஓர் இறங்குதுறை இருக்கிறது.

**சுளிபுரம்**

சோழர்புரம் என்பது > சோழிபுரம் > சுளிபுரம் என மருவிற்றென்பர். இப்பெயரைச் சிலர் சுழிபுரம் எனவும் எழுதுவர். இங்கு முன்பு சோழர் வழிவந்தோர் வாழ்ந்தனர் என்றும், அதனால் இவ்வூர் சோழிபுரம் என வழங்கிற்றென்றும், காலப்போக்கில் அப் பெயர் சிதைந்து சுளிபுரமாயிற்று என்பதும் இவ்வூர் மக்களின் மரபு வழிக் கருத்து. மிகப் பரந்த இடத்தையுடைய இவ்வூர் சுளிபுரம் கிழக்கு, சுளிபுரம் மேற்கு என இரு கிராமசேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. காட்டுப்புலம், பனிப்புலம், பண்ணாகம், கல்லை வேம்படி, காளுவன், பெரியபுலவு, றாத்தலடி, வறுத்தோலை என்னும் இடங்கள் சுளிபுரத்தின் உட்பிரிவுகளாக உள்ளன.

**மாவிட்டபுரம்**

காங்கேசன்துறைக்கு அண்மையில் மாவிட்டபுரம் அமைந்துள்ளது. மாவிட்டபுரம் என்பதற்குக் குதிரைமுகம் விடுபட்ட நகர் எனப் பொருள் கூறுவர். மாருதப்பிரவீகவல்லி என்னும் சோழ அரச குமாரியின் கதையோடு இவ்விடப்பெயர் இணைந்துள்ளது. இக் கதை, மரபுவழிக் கதையாக வழங்கி, வையாபாடல், கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை முதலிய வரலாற்றிலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளது.

**திருநெல்வேலி**

யாழ்ப்பாண நகருக்குக் கிழக்கே இரு மைல் தொலைவில் திருநெல்வேலி அமைந்துள்ளது. இதன் அயற் பதிகளாக கொக்குவில்,

கோண்டாவில், நல்லூர் ஆகியன காணப்படுகின்றன. நல்லூர் உதவிஅரச அதிபர் பிரிவில் இவ்வூர் இடம் பெற்றுள்ளது. திரு + நெல் + வேலி = திருநெல்வேலி. தமிழகத்திலுள்ள திருநெல்வேலி என்ற இடத்திலிருந்து வந்த மக்கள் இங்கு குடியேறியபோது இப்பெயரை இட்டு வழங்கினர் என்பது மரபு. திருநெல்வேலியின் கிழக்கே குளமும் வயலும் காணப்படுகின்றன. தமிழகத்துத் திருநெல்வேலிச் சூழல் போன்றே இங்குள்ள புவி அமைப்பும், வளம் செறிந்த காணிகளும் காணப்படுதலால் ஒப்புமை நோக்கியும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**நீர்வேலி**

இவ்வூரின் கிழக்கெல்லையிலே தொண்டைமானாற்றையும் செம்மணியையும் இணைக்கும் ஆற்றுப்படுக்கை காணப்படுவது நீர்வேலி என்ற பெயர் ஏற்படக் காரணமாயிற்று. இங்கு வாய்க்கால்தரவை என்ற இடமும் வாய்க்கால்தரவை ஆலயமும் அமைந்துள்ளமை பண்டை நாளில் நீர்நிலையால் இவ்விடம் பெயர் பெற்றுள்ளது என்பதை மேலுஞ் சான்றுபடுத்துகின்றது.

**நெல்லியடி**

நெல்லி + அடி = நெல்லியடி. நெல்லி மரத்தை முதனிலையாகக் கொண்டு இப்பெயர் தோற்றம் பெற்றுள்ளது. இது பருத்தித்துறைக்குத் தெற்கே அமைந்துள்ள ஒரு பரந்த பகுதியாகும். இங்கே பட்டினசபை ஆட்சிமன்றம் அமைந்துள்ளது. இதன் வட்டாரங்களாக வதிரி, முருகையன் கோவில், மருதடி, நுணுவில், கலட்டி என்பன அமைந்துள்ளன. நெல்லி மரத்தை முதனிலையாகக் கொண்டே இப்பெயர் தோற்றம் பெற்றதெனலாம்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கே 42மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். 1984 ஆம் ஆண்டு முதல் போக்குவரத்துப் பாதையினால் இணைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி வணிக மையமாகவும் நிருவாக மையமாகவும் வளர்ச்சிபெற்று வருகிறது.



நொச்சி மரத்தை அடிப்படையாகக் கொண்ட இடப்பெயர்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் நொச்சிமுனை, வவுனியாவில் நொச்சிக்குளம், அனுராதபுரப் பகுதியில் நொச்சியாகம் முதலிய பல இடங்கள் நொச்சி மரப் பெயர்களால் வழங்குகின்றன. இப்பெயர் பண்டைத்தமிழரின் திணைநிலை வாழ்க்கையுடன் இணைந்ததாகும். மருத நிலத்திடையே காணப்படும் ஊர் மனைகள் நொச்சி எனப்படும். அவ்வகையிற் கிளிநொச்சிப் பகுதி குளமும் வயலுஞ் செறிந்து வளம்மிக்க மருதத்திணையாக விளங்கியிருக்கிறது. அதனிடையே காணப்பட்ட குடியிருப்பை நொச்சி என்றழைத்தனர். இங்கு சோலைகள் அயலாகக் காணப்பட்ட நிலையிற் கிளிகள் கூடுதல் இயல்பே. அதனால் கிளிகள் சேர்ந்து காணப்பட்ட நொச்சி கிளிநொச்சி என அழைக்கப்படுகின்றது.

**ஆனைக்கோட்டை**

யாழ்ப்பாணத்திலிருந்து வடமேற்கே 6 மைல் தொலைவில் ஆனைக்கோட்டை அமைந்துள்ளது. மிகப் பெரியதான அவ்வூரின் உட்பிரிவுகளாக சாவற்காடு, முள்ளி, கூழாவடி, பள்ளங்காடு, பறையன்கடவை, சாண்டாகடவை, உயரப்புலம் ஆகிய இடங்கள் அமைந்துள்ளன. ஆனைக்கோட்டையின் பழைய பெயர் மணற்றிடல் எனக் கூறுவாருமுளர்.

**ஆனையிறவு**

யாழ்ப்பாணக் குடாநாடும் ஈழத்தின் பெருநிலப்பரப்பும் கடலிலிருந்து பிரிபடாவண்ணம் தொடுத்து நிற்கும் பகுதி ஆனையிறவாகும். இது யாழ்ப்பாணத்திலிருந்து 32 மைல் தொலைவில் யாழ்ப்பாணம் + கண்டிப் பெருஞ்சாலையில் அமைந்துள்ளது. யானை > ஆனை + இறவு >, ஆனையிறவு. இறவு என்பதற்கு = எல்லை, வீட்டிறப்பு என்ற கருத்தும் உள்ளது. ஆனையிறவுக்குத் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வணிக நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்ட யானைகளுக்கு இறை (வரி) அறவிடப்பட்ட இடமே (யானை + இறை) = யானையிறை > ஆனையிறவு எனப் பெயர் பெற்றதென அமையும்.

**ஊரெழு**

ஊர் + ஏழு = ஊரேழு > ஊரெழு என இப்பெயர் வழக்குப் பெற்றிருக்கலாம். ஏழு இடங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து குடியேறியிருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. எழுச்சியுள்ள மக்கள் வசிக்கும் ஊர், ஊரெழு என்ற கருத்துமுண்டு. போர்க் காலங்களில் இவ்வூர் மக்கள் ஒன்றாக அணி திரண்டெழுந்து (ஊர் எழுதல்) போருக்குச் சென்றிருக்கலாம். அதனால் ஊரெழு என்ற காரணப்பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். அவ்வகையில் ஊர் என்பது ஈண்டு இடவாகுபெயராகும்.

**சரவணை**

சரம் + அணை = சரவணை; சரவணன் + அணை = சரவணை. சரவணப் பெருமானின் சரம் (வேல்) அணைந்த (தங்கிய) இடம் எனவும், சரவணன் எழுந்தருளிய இடம் எனவும் தெய்வநிலை சுட்டியதாகவும் இவ்விடப்பெயருக்கு விளக்கம் கூறலாம். இங்குள்ள கதிர்வேலாயுத சுவாமிகோயிலும் இக்கருத்தைச் சான்றுபடுத்துகிறது.

**நாரந்தனை**

இது வேலணைத் தீவின் ஒரு பகுதியாகும். ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் யாழ்ப்பாண அரசு 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பகுதி தீவுகள் அனைத்தையும் உள்ளடக்கியிருந்தது. ஊர்காவல்துறையில் வீரசிங்கன் தலைமையில் நாற்படையும் வைக்கப்பட்டிருந்தன. ஊர்ப்புறக்காவற் படைத்தளபதியாக நாராயணன் நியமிக்கப்பட்டான். அவனுக்குக் கீழ் வேலன் என்பவன் தானைத் தலைவனாக்கப்பட்டான். நாராயணன் தானையும் அவனது ஆட்சியும் நிலைபெற்றிருந்தவிடம் நாரந்தனை எனவும், வேலன் தானை இருந்தவிடம் வேலணை எனவும் வழங்கிவருகின்றன.

**அராலி**

யாழ்ப்பாணத்திலிருந்து 5 மைல்தொலைவில் வடமேற்கே அராலி அமைந்துள்ளது. அரா + லி = அராலி என்பதற்குப் பாம்பினிடம்



நாகமல்லிக்கொடி என்னும் பொருள்களுள்ளன (த.லெ.1:1220). இங்கு தாழை மரங்களும் அலரிச்செடிகளும் மலிந்து காணப்படுகின்றன.

அறலியைக் குறித்த அறலியகம் என்ற சிங்களச் சொல்லின் சிதைவே அராலி என பி.சி. நடராஜா, 1955 ஸ்ரீலங்கா மார்ச் இதழில் அராலி என்ற கட்டுரையிற் குறிப்பிட்டிருந்தார். அறா என்பது ஒருவகை மீன். இங்கே அந்நாட்களில் இவ்வகை மீன் பெரிதும் கிடைத்ததாலோ அல்லது அலரிச் செடி அதிகமாக இருந்ததாலோ இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். அராலி கடற்கரையோரத்து ஊராகும். பண்டைநாளில் இது கடலால் அரிக்கப்பட்டது என்பதும் உண்மையே. மன்னாரில் அரிப்பு என்ற இடமுண்டு. அராவுதல், அரவுதல் என்றால் கூராக்குதல், தேய்த்தல் என்பது பொருளாம். எனவே இப் பின்னணியில் கடலலையால் அரிக்கப்பட்ட இடம் அராலி எனப் பெயர் பெற்றிருத்தலும் இயல்பானதே.

**நவாலி**

நவாலி, மானிப்பாய் பகுதியில் அமைந்துள்ளது. இது கடற்கரை ஓரத்தில் அமைந்திருப்பதால் சிப்பி, ஊரி என்பன விளைகின்றன. இங்கு உப்பளமுமுண்டு. நவாலியில் இயற்கையாலமைந்த ஆழமான ஒரு பெரும் பள்ளமுங் காணப்படுகிறது. இப்பள்ளம் 1905இல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இங்கு நவ ஆலயங்கள் இருந்தமையால் நவஆலயம் + இ = நவாலியாயிற்று என்றும், ஒன்பது செக்கு ஆலைகள் இருந்தபடியால் நவ + ஆலை = நவாலை > நவாலி ஆயிற்று என்றும் மரபு வழியாகக் கூறப்படுகிறது.

**பலாலி**

பல் + ஆலி = பலாலி. பலா + ஆலி = பலாலி. இதன் அயலில் மயிலிட்டி அமைந்துள்ளது. மயில்கள் பலவாகக் கூடி நின்று ஆலிக்குமிடம் பலாலி என்றாயிற்றென்பர். நா. சிவபாதசுந்தரனார். பலாலி என்பது மயில்களுக்காகி, பின் இடத்தைச் சுட்டியதால் இது இரு மடியாகு

பெயராகும். யாழ்ப்பாண மாவட்டத்தின் வானூர்தித் தளம் இங்கு அமைந்துள்ளது.

**புலோலி**

புலவர் + ஒலி > புலோலி. பருத்தித்துறைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பெரிய இடம் புலோலி. இங்கு பண்டைநாளில் புலவர்களின் ஒலி முழங்கியமையால் இப்பெயரேற்பட்டதென்பர். பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள புலோப்பளை (பக் 246) என்ற இடப்பெயர் விளக்கம் ஈண்டு நோக்கத்தக்கது. மன்னார் மாவட்டத்தில் புலவர்குடியிருப்பு என்ற ஓர் இடப்பெயருள்ளமை நோக்கற்பாலது. இக்கூற்றைச் சான்றுபடுத்தும் வகையில் இங்கு கல்விச் சான்றோர்களாக பலர் வாழ்ந்திருக்கிறார்கள். புலோலியில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் பிறந்துள்ளனர். யாழ்ப்பாணத்துச் சிங்கை ஆரியச்சக்கரவர்த்திகளால் இவ்வூர் புலவர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டது என்றும் கூறுவர்.



பிரியாலயம் துரைஸின் ''நீதியின் சோதனை'' சின்னத்திரைப் படத்தில்



அதே படத்தில் பிரியாலயம் துரைஸ் உடன் வண்ணை தெய்வம்



திருமணக் கலாமன்றத்தின்
'களங்கம்' நாடகத்தில்
கைப்பாஸ் என்னும்
பாத்திரத்தில் வண்ணை
தெய்வம்.



யாழ்ப்பாணத்து ஈழநாடு
பத்திரிகையில் நீண்டகாலம்
ஆசிரியராக கடமையாற்றிய மூத்த
பத்திரிகையாளர் திரு. கோபு
A.B.C. தமிழ் ஒலி கலையகத்திற்கு
வருகை தந்த போது அவருடன்
வண்ணை தெய்வம்.



கவிஞர் மா.கி. கிறிஸ்ரியனின்
''சங்கிலியன்'' நாடகத்தில்
ஜாக்சன் துரையாக வண்ணை
தெய்வம்.



தனது 24 வயதில் யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபத்தில்
மேடையேற்றிய 'சாவுக்கு சவால்'
நாடகத்திற்கு நாடகத் தந்தை
கலையரசு சொர்ணலிங்கம்
தலைமை தாங்குகின்றார். அருகில்
வண்ணைதெய்வம்.



வண்ணை தெய்வம் 50வது பிறந்த நாளில் குடும்ப உறவுகளுடன்



வண்ணை தெய்வம் 'கொந்தல் மாங்காய்' நூல் வெளியீட்டு விழாவில் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் எஸ்.எஸ். குகநாதன் உரையாற்றுகிறார். அமர்ந்திருப்பவர்கள் வண்ணை தெய்வம், திரு. சி. காராளபிள்ளை, கவிஞர் அருந்ததி, தமிழன் ஆசிரியர் எஸ்.கே. காசிலிங்கம், முகத்தார் யேசுரட்ணம்.



யேர்மனி டோட்முண்ட் நகரில் மணிமேகலைப் பிரசுரத்தின் புத்தகக் கண்காட்சியுடன் 23 நூல்களின் வெளியீட்டு விழா இடம் பெற்றது. அந்த விழாவில் எழுத்தாளர், டாக்டர் இந்திரகுமாருடன் வண்ணை தெய்வம்.



'கொந்தல் மாங்காய்' வெளியீட்டு விழாவில் தமிழாலயம் புத்தகசாலையின் அதிபரம் பார்ஸ் ஈழநாட்டின் தற்போதைய நிர்வாக ஆசிரியர் பாலச்சந்திரன் அரசின் அறிவாலயம் புத்தகசாலையின் அதிபர் எஸ். சிவதாஸ் ஆகியோருடன் வண்ணை தெய்வம் தம்பதிகள்.



பாரிசில் மணிமேகலை பிரசுர புத்தகக் கண்காட்சியை நடத்தி, 13 புத்தகங்களின் வெளியீட்டு விழாவில் வண்ணை தெய்வம் உரையாற்றுகின்றார். நடராச கண்ணப்பு, ரவி தமிழ்வாணன், வண்ணை தெய்வம் ஆகியோர் அருகில்.



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி




யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி



சிதைந்து கிடக்கும் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா




இராணுவத்தினரின் ஆகாயக்குண்டு வீச்சால் சிதைக்கப்பட்ட அடைக்கலமாதா ஆலயம்




யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முக வாசல்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விடுதி



யாழ் இந்து ஆரம்ப பாடசாலை



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஒரு தோற்றம்.



யாழ் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு






யாழ்ப்பாணம் பேருந்து நிலையம்



யாழ்ப்பாணம் மத்திய மீன் சந்தை



எமது தேசியத்தின் கற்பகதரு




கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் தோற்றம்



கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் தோற்றம்



கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் தோற்றம்




வேம்படி இந்து மகளிர் கல்லூரி




யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி




கலட்டி வண்ணாங்குளத்திற்கு மிக அருகாமையில் உள்ள
கலட்டி அம்மன் கோவில்



வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் (நாச்சிமார்) கோவில்




யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகில் உள்ள முனியப்பர் கோவில்




1974ம் வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த ஒன்பது தியாகிகளின் நினைவுத் தூபி.





கோமாதா குலமாதா எனப் போற்றுவார்கள் தமிழ் மக்கள். எங்களது குடும்பத்தில் தாங்களும் உறவுகளாக வாழ்ந்த பசுவும், கன்றும்.



யாழ்ப்பாணத்தின் சொத்தான கற்பகத் தருக்கள் (பனை மரங்கள்)



எங்கள் யாழ் மண்ணில் பனை மட்டுமல்ல தென்னையும் குலை, குலையாகச் சொரியும்



தென்னையோடு சேர்ந்து பப்பாளியும் பச்சைப் பசேலென....





சந்ததிகளைப் பெருக்கி குலை, குலையாய் பழங்களைத் தரும் வாழை



தோற்றத்தில் முரட்டுத்தனமாக இருந்தாலும் களை, களையாக இனிமையான பழங்களைத் தரும் முக்கனிகளில் ஒன்றான பலாப்பழம்.



யாழ் மாநகர எல்லையோடு இருக்கும் தலையாழி வைரவர் ஆலயம்



கலட்டிப் பிள்ளையார் கோவில்



யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்




ராணுவத்தினரின் குண்டு வீச்சினால் சிதைந்துபோன யாழ் றீகல் திரையரங்கம்



திட்டமிட்டு அழிக்கப்பட்ட யாழ் பொது நூலகம்



புனரமைக்கப்படும்போது



புதுப்பிக்கப்பட்ட நூலகத்தின் முன்னழகு




புதுப்பிக்கப்பட்ட நூலகத்தின் பின்னழகு



புல்லுக்குளமும் அதன் பின்னே தெரியும் மணிக்கூட்டுக் கோபுரமும்



பராமரிப்பற்றுக் கிடக்கும் யாழ் விளையாட்டரங்கம்



யாழ்நகர் மத்தியில் உள்ள
வண்ணை சிவன் கோவில்

மறைந்த தமிழர் விடுதலைக்
கூட்டணியின் தலைவர்
தந்தை செல்வா அவர்களின்
நினைவு தூபி







இங்கே காணப்படும் படங்களில் பிரான்ஸ் T.R.T. தமிழ் ஒலி வானொலி நிலைய இயக்குனர் நவா, நிகழ்ச்சித் தயாரிப்பாளர் வண்ணைத் தெய்வம், மற்றும் ஏனைய கலைஞர்களோடு ''உதயன்'' ஆர்.என். லோகேந்திரலிங்கம், பண்பாட்டு இயக்க கனடாக் கிளைத் தலைவர் திரு. வேல் வேலுப்பிள்ளை ஆகியோர் நிற்பதையும் திரு. வேல் வேலுப்பிள்ளையை வண்ணைத் தெய்வம் அவர்கள் பேட்டி காண்பதையும் காணலாம்.



யாழ் - முனியப்பர் ஆலயத்திற்குப் பின்னால் தெரியும் தொலை தொடர்பு நிலையம்



1991ஆம் ஆண்டு பிரான்சில் தினமும் இரண்டு மணி நேரம் ஒலித்த பாரிஸ் முத்தமிழ் மன்றத்தின் தமிழீழ வானொலியில் அறிவிப்பாளராக பணியாற்றியபோ



இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர்
வண்ணை தெய்வம் தம்பதிகள்

## நான் இறவாதிருப்பேன்!

வண்ணை தெய்வம்

பிறந்த மண்ணை பிரிந்தவன்தான்! - ஆனாலும்
மறந்தும் என் தாய் மண்ணை மறந்தவனில்லை
சிறந்த தமிழ்ப்பேச்சு என் தாய் மண்ணில்தான்
பிறக்கும் புது நாடும் எம் தாய் மண்ணேதான்.

பிறந்த என் தாய் மண்ணுக்கு நான் என்ன செய்தேன்?
உறங்கும் வேளையிலும் இதையே நினைப்பேன்.
பிறந்தது என் கனவில் சிறந்ததோர் கருத்து - நான்
பிறந்த மண்ணின் வாசங்களை பதிவாக்க முயன்றேன்,

கன்றும். பசுவும் அம்மா என்றழைக்க
கோழியும். குஞ்சும் முற்றத்தில் குறு குறுக்க
நாயும். பூனையும் எம் மடிகளில் புரண்டுருண்ட - அந்த
நாட்கள் மீண்டும் திரும்பிடுமா? திரும்பவும்!

எழில் நிறைந்த கலை விழாக்கள்! மனம் நிறைந்த திருவிழாக்கள்!
ஆடல்கள். பாடல்கள். அருமையான நாடகங்கள்!
ஊடல்கள். கூடல்கள். உறவுகளின் பாசங்கள்!
மேடைகள் எங்கும் கருத்தான பேச்சுகள்! - இவையெல்லாம்
நாளைய எம் சந்ததிக்கு யார் வந்து சொல்லி வைப்பார்?

பொல்லாத காலன் எப்போதும் வரலாம்! - நான்
இல்லாமல் போகும் நாள் இன்றோ! நாளையோ? - இல்லை
இன்னும் சில மாதங்களிலோ! வருடங்களிலோ?
என்றோ ஒருநாள் இறப்பது இயற்கைதானே, அன்று என்
மூன்று பிள்ளைகளும் அப்பாவிற்காய் அழுவார்கள் - நான்
மூன்று முடிச்சுப் போட்டவள் ஒப்பாரி வைத்திடுவாள்.

இரண்டு மூன்று நாட்களில் உறவுகள் மறந்திடுவார்!
இரண்டு மூன்று மாதங்களில் பிள்ளைகளும் மறந்திடுவார்!
இரண்டு மூன்று வருடங்களில் மனைவியும் மறந்திடுவாள்!
இவ்வளவுதான்! நான் வாழ்ந்த சுவடுகள் முற்றாக மறைந்து விடும்

அதற்கு முன்னர் - நான்
பிறந்த மண்ணுக்கு சிறப்பொன்று சேர்ப்பதற்காய்
பிறந்ததுதான் இந்த யாழ்ப்பாணத்து மண் வாசனை - இனி. நான்
இறந்தாலும் என் பெயர் இறவாது வாழும் - யாழ்
மண்ணின் வாசங்களை தமிழ் உறவெல்லாம் பரவவிட்ட - இந்த
வண்ணையின் பெயர் இனி இறவாது வாழும்.

# நன்றிகள்

★ எனது நீண்டநாள் இலட்சியமாக இருந்த எம் மண்ணின் மரகதங்களை நூலாக்கி அனைவரையும் முகரவைக்க வேண்டும் என்ற எனது முயற்சிக்கு தங்களது பத்திரிகைகளில் விளம்பரம் செய்து உதவிய கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு ஆர்.என். லோகேந்திரலிங்கம், லண்டன் புதினம் பத்திரிகை ஆசிரியர் திரு. ஈ.கே. ராஜகோபால், மற்றும் பிரான்ஸ் A.B.C. தமிழ்ஒலி வானொலி ஆகியவற்றுக்கும்;

★ வாழ்த்துக்கள் வழங்கிச் சிறப்பித்த மதுரகவி இளவாலை அமுது (லண்டன்), முல்லை அமுதன் (லண்டன்), கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரை (யாழ்ப்பாணம்), கவிநாயகம் கவிஞர் கந்தவனம் (கனடா) ஆகியோருக்கும்;

★ இந் நூலுக்குச் சிறப்புச் சேர்க்க மண்வாசனை சொல்லும் புகைப்படங்களை யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்தனுப்பிய திரு- திருமதி. ஈஸ்வரானந்தன் - சியாமளாதேவி தம்பதிகளுக்கும், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் புகைப்படத்தைத் தந்துதவிய திருமதி ராணி - தங்கராஜா (அவுஸ்திரேலியா) அவர்களுக்கும்;

★ எழுத்துப் பிழைகளை இறுதியாகப் பார்த்து சரிசெய்த பத்திரிகையாளர் S.K. காசிலிங்கம் அவர்கட்கும்;

★ அட்டைப்படத்தை எம் எண்ணம்போல கணனியில் வடிவமைத்த கிருஸ்ணா அச்சகத்தைச் சார்ந்த ஓசை மனோ (பிரான்ஸ்) அவர்களுக்கும்;

★ தாம் வாழ்ந்த ஊர்களின் சிறப்புக்களை ரசனை குன்றாது எழுதியிருக்கும் மண்ணின் மைந்தர்களுக்கும்;

★ அவர்களின் கையெழுத்துப் பிரதிகளை கணனியில் பதித்துத்தந்த சகோதரி சாந்தினி - வரதராஜன் (யேர்மனி) அவர்களுக்கும்,

★ நாம் ஐரோப்பாவில் இருந்துகொண்டு புத்தகத்தின் அமைப்புக்கள் பற்றிக்கூற அதேபோல மிக அழகாக நூலை வடிவமைத்து அச்சிட்ட சென்னை மணிமேகலை பிரசுரத்தாருக்கும்;

★ இந்த நூலை பணம் கொடுத்து வாங்கி படித்து பாதுகாத்து வைத்திருக்கும் உங்களுக்கும்

எனது உளம் நிறைந்த நன்றிகள்.

வண்ணை தெய்வம்



## மண் வாசனை

உணவும், உறைவிடமும், பாதுகாப்பும் இல்லாத பயணம்.
பயம், பசி, பட்டினி, பிரிவுத் துயர் நிறைந்த நீண்ட பிரயாணம்.
முன் பின் கண்டு கேட்டறியாத நாட்டில் தஞ்சக் கோரிக்கை.
குளிர் கூடாரம் அடுத்த இடத்தில் குடியிருப்பு.

புதிய சுவாத்தியம்
புதிய மொழி.
குளிர்ப்பெட்டி உணவு.

கம்பளிப் போர்வைக்குள்ளே முடங்கிக் கொண்டு கிடந்தாலும்
கண்களில் இருந்து கொட்டிச் சொட்டும் நீர்த்துளிகள்!
ஏன்?
இதய மடிப்புக்குள் தொலைந்த ஊரின் நினைவு உலை, கொதித்துக்
கொண்டிருக்கிறது. அதுதான் மண் வாசனை.

எங்கள் வீடு, ஆடு மாடு, கைக்குட்டி, முன்றத்து மாமரம், எங்களூர்க் கோவில் குளம், கைதடி, புளியமரம், ஆலமரம், இடிந்த வீடுகள், வாசற்படிப் பெருமை, வழக்கு முடியோடா, சமிகள், தேர்ப்பாளர், வைத்தியர், நாட்டுக் கூத்து, தவில் வயிப்பு, திறந்த வெளி அரங்கு, திருவனங்கள், வாசனை நிறைந்த காப்பாடு, கலகம் எல்லா இசையுடன் புவிப்படையும் சேர்ந்து....... எல்லாம் நினைவுத் திரையில் வந்து எட்டிப் பார்க்கின்றன.

இவற்றில் பல இன்று மண் மேடாய் மாறிவிட்டன.
இவை நூல் வடிவில் வர வேண்டும். மற்றோரும் இந்தப் பட்டியலைத் தொட்டுச் சுவைக்க வேண்டும்.

இத்தனையும் சண்முகம் தெய்வத்தின் இதயத் திரையில் உருப்பதிந்தவை.
அவர் ஒரு எழுத்தாளர்; சிந்தனைச் செல்வர், இலக்கியவாதி.
சாதனை படைத்த கதாசிரியர். அவருடைய எழுத்து முற்றத்தில்
குலை போட்ட வாழையின் மண்வாசனை ஒரு கப்பல் வாழை.

சுவையிலும் தரத்திலும் பயனிலும் இதன் கனிகள் சிறந்தவை.

இவண்,
புலவர்மணி — அமுது —